# ஆவணம்

இதழ் 12 சூலை 2001



**தமிழகத் தொல்லியல் கழகம்**

*தஞ்சாவூர்*

# ஆவணம்

இதழ் 12

# AVANAM

VOL. 12

சு. இராசகோபால்
பதிப்பாசிரியர்

தமிழகத் தொல்லியல் கழகம்
தஞ்சாவூர்

2001

ஆவணம்: 12 (2001)

*Avanam*, Journal of the Tamil Nadu Archaeological Society Thanjavur

© தமிழகத் தொல்லியல் கழகம்

---


## தமிழகத் தொல்லியல் கழகம்

### செயற்குழு

| | |
|---|---|
| தலைவர் | கொடுமுடி ச. சண்முகன், சென்னை |
| துணைத்தலைவர் | செ. இராசு, ஈரோடு |
| | கரு. இராசேந்திரன், மேலப்பனையூர் |
| செயலர் | கா. ராஜன், தஞ்சாவூர் |
| இணைச்செயலர் | சு. இராஜவேலு, சென்னை |
| பொருளாளர் | பா. ஜெயக்குமார், தஞ்சாவூர் |
| பதிப்பாசிரியர் | சு. இராசகோபால், சென்னை |
| செயற்குழு உறுப்பினர் | நடன. காசிநாதன், சென்னை |
| | ஏ. ஏகாம்பரநாதன், சென்னை |
| | ஜி. சேதுராமன், மதுரை |
| | மங்கையர்கரசி வீரராகவன், விழுப்புரம் |
| | ஆறுமுக சீதாராமன், தஞ்சாவூர் |
| | சொ. சாந்தலிங்கம், மதுரை |
| | ப. புஷ்பரட்ணம், இலங்கை |
| | ந. வெங்கடேசன், வில்லியனூர் |

### பதிப்புக் குழு

எ சுப்பராயலு, தமிழ்ப்பல்கலைக்கழகம்
ப. சண்முகம், சென்னைப் பல்கலைக்கழகம்
கோ. விசய வேணுகோபால், பாண்டிச்சேரி பிரஞ்சு நிறுவனம்.


---

அச்சிட்டோர் : அலமு பிரிண்டிங் வொர்க்ஸ்,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | வெள்ளியணைக் கல்வெட்டு<br>*சு. இராசவேலு* | 1 |
| 2. | நெலப்பள்ளி வாணர் வீரக்கல்<br>*சூ. சுவாமிநாதன்* | 2 |
| 3. | அம்பலூர் நடுகற்கள்<br>*சு. இராசவேலு* | 3 |
| 4. | கொரட்டி நடுகல்<br>*ம. காந்தி, ப. வெங்கடேசன்* | 5 |
| 5. | ஆசூர் கல்வெட்டுகள்<br>*சி. வீரராகவன்* | 6 |
| 6. | திருமால்பூர் தூண் கல்வெட்டு<br>*ம. காந்தி* | 9 |
| 7. | பெரிய வேலியநல்லூர் கல்வெட்டு<br>*க. ஈஸ்வரன்* | 10 |
| 8. | மானாமதுரைக் கல்வெட்டுகள்<br>*வெ. வேதாசலம்* | 12 |
| 9. | நாகை நல்லூர் வணிகக் கல்வெட்டு<br>*கி. ஸ்ரீதரன்; நாக. கணேசன்* | 14 |
| 10. | சேலம், நாமக்கல் மாவட்டக் கல்வெட்டுகள்<br>*வெ. இரா. துரைசாமி* | 15 |
| 11. | ஜகதாப் மோட்டூர் கல்வெட்டு<br>*சு. இராசவேலு* | 21 |
| 12. | மாதனூர் நடுகல்<br>*ஆ. பத்மாவதி* | 22 |
| 13. | நாலூர் ஸ்ரீவல்லப பாண்டியன் கல்வெட்டு<br>*வெ. வேதாசலம்* | 23 |
| 14. | ஒழிந்தியாம்பட்டு திரு அரசிலி ஆளுடையார் கோயில் கல்வெட்டுகள்<br>*கோ. விசயவேணு கோபால், ஆ. துரைரங்கம்* | 24 |
| 15. | ஆதனூர் கல்வெட்டுகள்<br>*ப. வெங்கடேசன், ப. பூபாலன்* | 28 |
| 16. | நெல்லிக்குப்பம் கல்வெட்டு<br>*கோ. கிருட்டிண மூர்த்தி* | 30 |

17. இராசாப்பட்டி கல்வெட்டுகள் 32
*கரு. இராசேந்திரன்*
18. அருப்புக்கோட்டை மீனாட்சி சொக்கநாதர் கோயில் கல்வெட்டுகள் 35
*சொ. சாந்தலிங்கம்*
19. பேரையூர் மொட்டை மலைக் கல்வெட்டு 37
*பொ. இராசேந்திரன், சொ. சாந்தலிங்கம்*
20. இலுப்பூர் கல்வெட்டுகள் 39
*கரு. இராசேந்திரன்*
21. திட்டைச்சேரி கல்வெட்டு 46
*கொடுமுடி சண்முகன்*
22. ஊராட்சிக்கோட்டை மலைக் கல்வெட்டு 47
*அ. பழனியப்பன்*
23. திருவோத்தூர் வேதபுரீசுவரர் கோயில் கல்வெட்டுகள் 48
*ச. கிருஷ்ணமூர்த்தி*
24. போசளர் புதிய கல்வெட்டுகள் 52
*இல. தியாகராஜன்*
25. சொக்கேசர் கோயில் கல்வெட்டுகள் 54
*சொ. சாந்தலிங்கம்*
26. ஓங்கூர் சித்திரமேழி விடங்கர் கல்வெட்டு 56
*கோ. உத்திராடம்*
27. நார்த்தாமலைக் கல்வெட்டு 58
*சு. இராசகோபால்*
28. சின்னத்தாமல்செறு நடுகற்கல்வெட்டு 59
*ம. காந்தி, ப. வெங்கடேசன்*
29. பள்ளி கொண்டாப்பட்டுக் கல்வெட்டு 60
*இல. தியாகராஜன்*
30. முண்டீசுவரமுடையார் கோயில் கல்வெட்டுகள் 61
*மா. செந்தில் செல்வக்குமரன், சொ. சந்திரவாணன்*
31. கன்னியா குமரி மாவட்டத்தில் புதிய கல்வெட்டுகள் 66
*தே. கோபாலன்*
32. மேல்பட்டாம்பாக்கம் கல்வெட்டு 75
*கோ. கிருட்டிணமூர்த்தி*
33. ஆறுமுகநேரி கல்வெட்டு 76
*த.த.தவசிமுத்து*
34. கரிசல்பட்டிக் கல்வெட்டு 77
*சீ. இலட்சுமணன்*
35. அரபிக்கல்வெட்டடுன் குமிழி 78
*கி. ஸ்ரீதரன்*

36. தமிழ் மொழி பெயர்ப்புக் கல்வெட்டு 79
*க. பன்னீர் செல்வம்*
37. ஆர்க்காடு தோப்கானா பகுதி கோயில் கல்வெட்டுகள் 80
*து. துளசிராமன்*
38. ஆமூர் மதகுக்கல்வெட்டு 82
*நாக. கணேசன்*
39. சைதாப்பேட்டை கரும்பாடி அம்மன் கோயில் கல்வெட்டு 83
*க. ஈஸ்வரன்*
40. ஆத்துமேடு இசுலாமியக் கல்வெட்டு 85
*நாக. கணேசன்*
41. விளாங்குறிச்சி நீர்ப்பாசனக் கல்வெட்டு 86
*ச. இரவி*
42. தூரன் குலச் செப்பேடு 87
*செ. இராசு*
43. சின்னநல்ல காலக்கதோழ் உடையார் பட்டயம் 90
*ச. செல்வராஜ்*
44. இராமகிரிகோயில் செப்பேட்டுச் சாசன நகல் 92
*மா. சந்திரமூர்த்தி*
45. சிவகங்கை தருமர் கோயில் செப்பேடு 94
*ந. வள்ளி*
46. ஏழுவன் கோட்டை செப்பேடுகள் 97
*மா. சந்திரமூர்த்தி*
47. மூன்றாம் திருவேங்கடப்பிள்ளை கூறும் ஆனந்தரங்கப்பிள்ளையின் முப்பத்தி மூன்று நாட்குறிப்புக் கோப்புகள் 100
*ஓர்சே. மா. கோபால கிருஷ்ணன்*
48. பார்வதிபுரம் தர்மசாலை ஆவணங்கள் 109
*கோ. உத்திராடம்*
49. பெண்ணைக் கரையில் சிந்துக்காசு 115
*சுகவன முருகன்*
50. யவனர் பொற்காசு 116
*ஐ. இராமசாமி*
51. தமிழகக் காசுகள் அண்மைக் காலக் கண்டுபிடிப்புகள் 117
*ஆறுமுக சீதாராமன்*
52. சங்ககாலக் காசுகளில் சின்னங்கள் 123
*சு. கணேசன்*

53. தண்டங்களில் நாணயங்கள் 125
*மா. பவானி*
54. இலங்கைப் பெருங்கற்படை மட்பாண்டங்களில்
பீடத்துடன் கூடிய சுவஷ்திகா 130
*ப. புஷ்பரட்ணம்*
55. மகாபலிபுரம் அண்மைக் காலக் கண்டுபிடிப்பு
காலக் கணிப்பில் ஒரு மறு ஆய்வு 134
*ப.தெ. பாலாஜி*
56. தியாகதுர்க்கம் சமணச் சான்றுகள் 136
*ஏ. ஏகாம்பரநாதன்*
57. தமிழ்மொழிக்கல்வெட்டுகளில் அயல் மொழிச் சொற்கள் 137
58. தி.ந. சுப்பிரமணியன் அறக்கட்டளைச் சொற் பொழிவு
– வட்டெழுத்து வரலாறு 139
*நடன. காசிநாதன்*
59. செய்தித் திரட்டு 156
60. புதிய வெளியீடுகள் 163
61. தமிழகத் தொல்லியல் கழக கருத்தரங்கு அறிக்கை 178
கட்டுரையாளர்கள் 183
தணிக்கையறிக்கை 187

The Publication of this issue is partly financed by a generous grant from ICHR. However the ICHR is not responsible for the contents of this issue.

Editor

# 1. வெள்ளியணைக் கல்வெட்டு

சு. இராசவேலு, சென்னை.

இடம் : கரூர் மாவட்டம், கரூர் வட்டம், வெள்ளியணை ஊருக்கு தென்கிழக்கில் அமைந்துள்ள பெரிய ஏரியின் வடமேற்கு மூலையில் அமைந்துள்ள பாறை.

காலம் : எழுத்தமைதியில் கி.பி. 6 ஆம் நூற்றாண்டு.

செய்தி : சோழிக அரையன் என்ற பட்டமுடைய அகணிதன் குளம்வெட்டித் தன் பெயரைக் குளத்திற்கு வைத்துள்ளான். இக் கல்வெட்டில் மெய்யெழுத்துகளுக்கு புள்ளி இடடப்பட்டுள்ளது.

1 ஸ்ரீ சோழிக அரையந்
2 அகணிதன் குளம்.



இக்கல்வெட்டைக் கண்டறிவித்த கரூர் சமூக வரலாற்றுச் சங்கச் செயலர் திரு. இல. பரணன், திரு புவனேந்திரன் ஆகியோருக்கும் முனைவர் புலவர் இராசு அவர்களுக்கும் நன்றி.

# 2. நெலப்பள்ளி வாணர் வீரக்கல்

சு. சுவாமிநாதன், மைசூர்.

இடம் : சித்தூர் மாவட்டம், புங்கனூர் வட்டம், நெலப்பள்ளி கிராமத்திலுள்ள வயலில் நடப்பட்டுள்ளது.

காலம் : எழுத்தமைதியில் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு.

செய்தி : மாவலிவாணவிச்சாதிரரான புழலமரையர் மகன் ஸ்ரீகண்டைய்யன் முதல் வேட்டையில் சேதடியாரின் மகனான இந்தப்பன் என்பார் புலியுடன் போரிட்டு, அப்புலியுடன் தானும் மாண்டதைத் தெரிவிக்கின்றது. இதற்காக நிலக் கொடை (மண்) தரப்பட்டுள்ளது. முகப்பு வேட்டை என்ற தொடருக்கு நேருக்கு நேர் (முகத்திற்கு முகம்) என்று ஆண்டறிக்கையில்[1] பொருள் கொள்ளப்பட்டுள்ளது. இத்தொடருக்கு முதல் வேட்டை என்று பொருள் கொள்வது பொருத்தமாகும்.

1 ஸ்ரீ மாவலிவாணவிச்சாதிரரான
2 புழலம்மரையர் மகன் ஸ்ரீ கண்
3 டைய்யன் முகப்பு வேட்டையில் சேதடியார்
4 மகன் இந்தப்பன் அவர் கோயிற்றமன் புலிகுத்தி
5 ய்ப் புலியுந் தானுமுடனேய் பட்டான் இதுக்குக் கு
6 டுத்த மண்ணழித்தான் க[ங்]கையொ–
7 [டுகு] மரியிடை[ய்]ச் செய்த பாவங் கொள்
8 வான்.

[1] *இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கை*, 1913, எண். 244.

# 3. அம்பலூர் நடுகற்கள்

சு. இராசவேலு, சென்னை.

## 3:1

இடம் : வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம் அம்பலூர் பேருந்து நிலையத்திற்கு பின்புறம் உள்ள தென்னந் தோப்பு.

காலம் : எழுத்தமைதியில் கி.பி. 9ஆம் நூற்றாண்டு.

செய்தி : இரண்டு நாய்களுக்காக எடுக்கப்பட்ட நடுகல். நடுகல்லின் மேற்பகுதி உடைந்து கல்வெட்டின் தொடக்கம் சிதைந்துள்ளது. கல்வெட்டிற்குக் கீழே இரண்டு பன்றிகளுடன் சண்டையிடும் இரண்டு நாய்களின் புடைப்புச் சிற்பங்கள் உள்ளன. அம்பலூரைச் சார்ந்த கோவந் என்பவரின் நாய்களான முழகனும் வந்திக்கா கத்தியும் பன்றிகளைக் கொன்று இறந்தமை.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ... ந... அம்ம...
2 ற் கோவந் நாய் முழகனும் வந்திக்கா
3 கத்தியும் சேரிடு... தநிப் பன்றி
4 கொன்று செத்
5 தந



## 3:2

இடம் : *அதேயிடம்*

காலம் : *முதலாம் இராஜராஜ சோழன், யா.25 (கி.பி 1010).*

செய்தி : *கைகளில் வாளும் கேடயமும் கொண்டுள்ள வீரனின் உடம்பில் அம்புகள் தைத்துள்ளன. நடுகல்லின் பின்புறம் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. வீரனின் உருவத்திற்கு மேல்பகுதியில் கல்வெட்டுள்ளது. ஐம்புழுரங்க நாட்டில் உள்ள அம்மலூர் எனப்படும் விக்ரமாதித்ய சதுர்வேதி மங்கலத்தில் நடந்த தொறுப்பூசலில் ஒற்றிபோடன் என்கின்ற ஒருழகிலப்பர் ஒட்டன் என்பவர் எருமைக் கூட்டங்களை மீட்டு இறந்தமையைக் கூறுகிறது.*

1 ஸ்ரீ கோராஜ கேசரிபந்ம
2 ரான ஸ்ரீ ராஜராஜ [ராஜ]தே₃வ
3 ர்க்கு யாண்டு 25 ஆவது ஐ
4 ம்புழு[ர]ங்க நாட்டு அம்மலூரா
5 கிய விக்ரமாதித்ய சதுர்வேதி மங்
6 கலம் மேலெருந்து தொறு கொண்டு
7 போக தொறு இட்டுபட்டான் இவ்வூ
8 ர் வண்ணான் ஒற்றி போடனாகிய
9 ஒருழகிலப்பர் ஒட்டன்

## 3:3

இடம் : *அதேயிடம்*

காலம் : *11ம் நூற்றாண்டு முதல் நடுகல்லின் (3:2) அருகில் இந்நடுகல் இருப்பதால் இராஜராஜ சோழன் காலத்தியதாகக் கருதலாம்.*

செய்தி : *சுத்தமல்லி சதுர்வேதி மங்கலத்தைச் சார்ந்த இரவிமோடன் திருநீலகண்டன் என்பவர் தொறுப்பூசலில் இறந்த செய்தி கூறப்பட்டுள்ளது.*

1 ஸ்வஸ்தி ஸ்ரீ சுத்தமலி
2 சதுர்வேதி மங்கலத்து
3 இரவி மோடன் திரு நீ
4 ல கண்டன் எருமை
5 நலெபரி பட்டாந் தொ
6 று

# 4. கொரட்டி நடுகல்

ம.காந்தி, வேலூர்;

ப. வெங்கடேசன், காவேரிப்பாக்கம்.

இடம் : வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் - ஊத்தங்கரைச் சாலையில் கொரட்டி ஊரில் அமைந்துள்ள மாரியம்மன் கோயிலுக்கருகில் உள்ள கற்பலகை.

காலம் : வலியடக்கியார், யா:7, எழுத்தமைதியில் கி.பி.9-ஆம் நூற்றாண்டு.

செய்தி : கீழ்ப்பகுதியில் வீரனின் உருவமும் மேல்பகுதியில் கல்வெட்டும் பொறிக்கப்பட்டுள்ளன. ஆறுகுழுகூர் ஊரின்மேல் காடுவெட்டிப் படை தொடுத்த போரில் கோயிற்றமன் வாணிக வாணிளவரையர் போரிட்டு இரண்டு குதிரைகளையும், குதிரை வீரரையும் கொன்று தானும் இறந்தான். அதற்காக நெத்தோர்ப்பட்டியாக நிலம் வழங்கப்பட்டுள்ளது.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ வலியடக்கியார்க் கேழாவது
2 வலியடக்கியார் போவூர் நாடைந்நூறு பூமி
3 யுமாள காடு [வெ] வட்டிப் படை ஆறு[கு]முகூர் மேல்
4 வந்தெறிந்த ஞான்று வலியடக்கியார் கோ
5 [யி] ற்றமன் வாணிக வாணிளவரையன் இரண்டு
6 குதிரையும் மேலாரையும் குத்திப்பட்டான் நெ
7 த்தோர்பட்டி



# 5. ஆசூர் கல்வெட்டுகள்

சி. வீரராகவன், விழுப்புரம்.

## 5:1

இடம் : விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் வட்டம், ஆசூர். அங்காளப் பரமேஸ்வரி கோயில் நுழைவாயிலில் தரையில் உள்ள கற்பலகை.

காலம் : எழுத்தமைதியில் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு.

செய்தி : ஆசூர் ஏரிக்கு நாகன், உலகன், சாத்தன் ஆகிய மூவரும் தூம்பு செய்தது.

1 [ஸ்வஸ்தி] ஸ்ரீ மக்க
2 பேர்காண
3 ம்.. சைமாரிம
4 க்கள் நாகனும்
5 உலகனும் சாத்
6 தனும் மூவரும்
7 செய்யத் தூ[ம்பு]

## 5:2

இடம் : அதே ஊர். மாரியம்மன் கோவில் அருகே துண்டு கற்பலகை.

காலம் : இராசகேசரி பன்மர் யா:3, கி.பி. 9-ஆம் நூற்றாண்டு.

செய்தி : முல்லைக் குலமாண்ட ஆளுடையான் பற்றியது. பொருள் தெளிவாகவில்லை.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ
2 கோ ராஜகேஸரிய...
3 க்கு யாண்டு 3 வது தென்
4 கரை விளாநாட்டு முல்லைக்குடி
5 முல்லைக் குல மா[ண்]டான் ஆ[ளு]டை
6 யான் வடத்தியான் பராந்தக [பல்]
7 லவரையன் ப...

## 5:3

இடம் : அதே ஊர். திருவாலீஸ்வரர் கோவில். மகாமண்டபம், கிழக்குச் சுவர்.

காலம் : இராசநாராயண திருமல்லிநாதன் சம்புவராயர். யா.19 (?); (கி.பி. 1356)

செய்தி : பல வரிகள் மூலம் கிடைத்த வருவாயைக் கொண்டு திருஆலந்துறை நாயனார்க்கு பூசையும், திருப்பணியும் நடத்த வேண்டி அரசன் விடுத்த ஆணை.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ சகலலோக சக்கரவத்தி ஸ்ரீ
2 இராசநாராயணன் திருமல்லிநாதன்
3 சம்புவராயந் கோலியபெருநல்லூர்... ஆசூரில்
4 உடையார் திரு ஆலந்துறை உடைய நாயனார்
5 கோயில் தானத்தார்க்கு இன்னாயனார் திரு
6 மடைவிளாகம் நாற்பாற் கெல்லையிலும்
7 உள்ள பல காசாயக்குடி மக்கள் பேரில் கடமை உள்
8 ளிட்ட பல முதல் பதினெட்டாவது வரையும் .. வர்
9 கொண்டு போந்த இது தவிர முதல் பத்தொன்பதாவது
10 முதலுக்கு நாயனார்க்கு பூசைக்கும் திருப்பணிக்கும் குடுத்த
11 அளவுக்கு வேண்டும் பல காசாயக்குடி மக்களையும் ஏற்றி
12 ... இவர்கள் பேரில் கொள்ளும் கடமை சூலவரி வா'
13 சல் பணம் பேர்க் கடமை நூலாயம் ஆயம்
14 உள்ளிட்ட பல வரிகளும் சபையோரும்
15 ஆகக் கொண்டு சந்திராதித்தவரையும் பூசையும்
16 திருப்பணியும் தர மூவ[ர்] நடத்திப் போகவும் சொன்
17 னோம் இப்படி செய்க. உ. இவை வாணாதராயன் எழுத்து.
18 இவை திருவெழுத்து.

## 5:4

*இடம் : அதே இடம்.*

*காலம் : வீர புக்கண உடையாரின் மகன் (பெயர் தெரியவில்லை) சகம் 1301 (கி.பி. 1379).*

*செய்தி : வன்னிய நாயக்கமாரால் திருவாலந்துறை கோயிலின் பூசைக்கும், திருப்பணிக்கும், தேவரடியார்க்கும், நிவந்தங்களுக்கும் 4 மா நஞ்சை நிலம் சர்வமானியமாக விடப்பட்டது.*

1 ஸ்வஸ்திஸ்ரீ மஹாமண்டலேசுரன் அரிராய விபாட பாஷைக்குத் தப்புவராய கண்ட வீர ஸ்ரீ பொக்கன உடையார் குமார ... உடை...
2 மாக முழுவது வீராராச்சியம் பண்ணா நின்ற சகாப்தம் ஆயிரத்து முன்னூற்று ஒன்றின் மேல் செல்லா நின்ற பவ வருஷம் சித்திரை மாத 13 நாள் பூர்வ
3 பக்ஷத்து துதிகையுஞ் சனிக்கிழமையும் பெற்ற கார்த்திகை நாள் உடைய வாசலில் வன்னிய நாயக்கமாரால் இராகுத்த மணி...
4. இராகுத்த நாராயண சிங்கன், இராகுத்த. வேசாபூ... சிங்கன் இராய ராகுத்த முகத்து கண்ணாடி ஐயவ ராகுத்த கண்டவ பொத்தியார்
5. வாரதீசுரன் ஆடல் தேவிநாயக்கர் மகனார் பெருமாணாக்கரும் தம்பியார்... க்கப்ப நாயக்கரும் கோலியப் பெருநல்லூர்
6. பற்று ஆசூரில் நாயனார் திருவாலந்துறை உடைய நாயனார்க்கும்

பூசைக்கும் திருப்பணிக்கும் தேவரடியார்க்கும் பலபடி நிவந்தச் சீவிதத்

7. துக்கும் நாட்டளவு கோலால் அளந்து விட்ட நஞ்சை நிலம் 4 மா இன்னிலம் நாலு மாவுக்கும் திருச்சூல ஸ்தாபரமும் பண்ணி சர்வமான்னிய இறை

8. யிலி ஆகவிட்ட அளவுக்கும் சந்திராதித்தவரையுஞ் செல்லக் கடவதாவும் மேல் வரும் வரிகளும் இம் மரியாதி நடத்திக் குடுத்தவன் கால் என் தலை மேலே.

## 5:5

இடம் : *மகா மண்டபம், கிழக்குச் சுவர், வாயிலின் இடதுபுறம்.*

காலம் : *இராசநாராயண சம்புவராய திருமல்லிநாதன் (கி.பி. 1379–1406).*

செய்தி : *இவ்வூர் கோயில் வித்துவான்களில் ஒருவர் சம்பந்தப் பெருமாள் படிமத்தை அமைத்தது.*

1 ஸ்வஸ்திஸ்ரீ ஆசூர் திருவாலந்துறை உடைய நாயனார்
2 ஸ்வஸ்திஸ்ரீ இராசநாராயண சம்புவராய திருமல்லிநாதன்
3 திருவாசலில் வித்துவான்களில் பெரும்பற்ற புலியூர்
4 தில்லை பெருமாள் கற்பக நயன் எழுந்தருளப்
5 பண்ணின சம்பந்தப் பெருமாள் நாயனார்
6 வரதராசந் தன்மம்.



5:2 ஆசூர் ராஜகேஸரிகல்வெட்டு

# 6. திருமால்பூர் தூண் கல்வெட்டு

ம.காந்தி, வேலூர்.

*இடம் : வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், திருமால்பூர். (தற்பொழுது வேலூர் அரசு அருங்காட்சியகத்தில் உள்ளது).*

*காலம் : பார்திவேந்திராதிவர்மன், யா: 5 (கி.பி. 961).*

*செய்தி : சம்பமூலை ஊரில் சுப்ரமண்ய தேவர்க்கு பகலில் இரண்டு நொந்தா விளக்குகளும் இரவில் ஒரு நொந்தா விளக்கும் எரிப்பதற்கு விளத்தூர் கிழவன் பட்டனமதியர் என்பவர் நிலம் அளித்தது.*

1 ஸ்வஸ்திஸ்ரீ கோப்பார்திவேந்திரா பந்
2 மக்கி யாண்டு 5 ஆவது தாமர் கோட்ட
3 த்து தந்கூற்று சம்பமூலை ஊரோம் இவ்
4 வூர் விளத்தூர் கிழவன் பட்டனமதியர்
5 முறை எங்கள்ளூர் ஊருடை பெருமாளா
6 ன ஸுப்ரஹமன்ய தேவர்க்கு வைத்த நொந்தா வி
7 ளக்குப் பகல் இரண்டும் இரவு ஒன்றும் சந்ரா
8 தித்ய வரை எரிப்பதக்கு வைத்த பூமி வாணிய
9 சேரி தும்பின் கால் வழி வாணியன் நெரிகண்ணா
10 ற்று தடிநால் குழி எழுநூறும் இறையிழித்து
11 க் குடுப்பதாக விளத்தூர் கிழவன் பட்டனமதி
12 யர் முறை பக்கல் இறையித்துக் கொண்டு இப்பூமி
13 யிறையிழிச்சி சிலாலேகை சேது குடுத்தோம்
14 அசம்ப மூலை ஊர் ம...றன்று சொநோம்
15 திருபாணை மறுத்தார் ...ண்டமும் படு கெங்கையி
16 டை குமரியிடை செய்த பாவத்தில் படுவோம
17 னோம் ஊரோம் இ... பந்மாஹெஸ்வரரகைக்ஷ

---

இக் கல்வெட்டை வெளியிட அனுமதியளித்த தமிழ்நாடு அரசு அருங்காட்சியகங்கள் துறைத் தலைவர், முனைவர் ரா கண்ணன், இ.ஆ ப., அவர்களுக்கு நன்றி.

# 7. பெரியவேலியநல்லூர் கல்வெட்டு

க. ஈஸ்வரன், சென்னை.

இடம் : *திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம், பெரியவேலியநல்லூரில் சிவன் கோயில் அருகில் உள்ள குன்றில் உள்ள பாறை*

காலம் : *முதலாம் இராசராச சோழன், யா.10. (கி.பி.995).*

செய்தி : *வேலியநல்லூர் மகாதேவர்க்கு அஞ்சாறு போசன் வேங்கடவன் நப்பய்யனும் அவன் தம்பி எகுயதேவனும் ஒவ்வொரு நந்தாவிளக்கு வீதம் இரண்டு நந்தா விளக்குகளுக்கு 180 ஆடுகள் கொடுத்துள்ளனர்.*

1 ஸ்வஸ்தி ஸ்ரீ திருமகள் போல
2 பெருநிலச் செல்வியுந் தனக்கேயுரிமை பூண்
3 டமை மணக்கொள காந்தளூர்ச்சாலை கலம
4 றுத்தருளி வேங்கை நாடுங் நுளம்பபாடியு
5 ங் கங்கபாடியுங் தடிகபாடியுங் குடமலை நாடுங் கொல்ல
6 முங் கலிங்கமு மெண்டிசை புகழ்தர ஈழமண்டலமும்
7 யேழரை யிலக்கமுந் திண்டிறல் வென்றித் தண்டார் கொண்டத் தன்னெழில்
8 வளரூழியெல்லா யாண்டுந் தொழுதகை விளங்கும் யாண்டே செழியரை தே
9 சுகொள் ஸ்ரீ கோராஜராஜகேஸரி பந்மரான ஸ்ரீ ராஜராஜ தேவற்கு யாண்டு 10 ஆ
10 வது ஜெயங்கொண்ட சோழமண்டலத்து காலியூர்க் கோட்டத்து காலியூர் நாட்டு வெ
11 வளிய நல்லூர் மஹாதேவர்க்கு இவ்வூரஞ்சாறு போசன்
12 நப்பய்யன் ஒரு நந்தாவிளக்குக்கு வைத்த ஆடு தொண்ணூறு
13 இவன் தம்பி எகுயதேவன் ஒரு நந்தாவிளக்குக்கு வைத்த
14 ஆடு தொண்ணூறு இநந்தாவிளக்கு இரண்டும் இ
15 வ்வூர் ஸ்ரீ கோயிலுடையார் கைக்கொண்டு இவ்வூர் மகாதேவர்
16 க்கு முட்டாமல் எரிப்பதானோம்
17 முட்டில் முட்டின நாளில் ப
18 டி யிரட்டி எரிப்பதாக இப்பரிசு
19 வைத்தோம் இதம்மம் ரக்ஷிப்பார் ஸ்ரீ
20 பாததூளி எங்கள் தலைமேலன
21 அறமறவற்க அறமல்லதுணையி
22 ல்லை இவ்விளக்கு எரிய கொள்ளு நாழி
23 ஒன்றினால்...

24 வெளிய நல்லூர் திருக்கோயிலுடைய சி$_0$
25 வப்$_3$ராமனரோம் இவ்வூர் ஊரார்க்கு ஒட்டுக்கு
26 டுத்த பரிசாவது யெங்களுடைய [பிடிஇனால்]
27 ... தவிர்ந்தோம் வெளியநல்லூர் ஊரோ
28 ம் ஸ்ரீ கோயிலுடைய[ார் கணக்கிலுந்] தவி
29 ந்தோம் ஊ...
30 காட்டில் நிசதம் கால் பொன் மன்ற ஒட்
31 டிகுடுத்தோம் ஊரோம்.

# 8. மானாமதுரைக் கல்வெட்டுகள்

வெ. வேதாசலம், மதுரை.

## 8:1

இடம் : *சிவகங்கைமாவட்டம், மானாமதுரையில் சிவன்கோயிலின் எதிர்புறம் வைகையாற்றைத் தோண்டியபோது, கிடைத்த கற்றூண்.*

காலம் : *முதல் இராசராசன் யா: 14 (கி.பி. 999).*

செய்தி : *திருக்குமரமங்கலத்துச் சுப்பிரமணியப்படாரர்க்கு அவ்வூரைச் சார்ந்த சேந்தன்செங்கோடன் என்பவனின் மனைவி பூதனம்பியம்மை விளக்கெரிப்பதற்காக ஆழாக்குநெய் நாள்தோறும் அளிப்பதற்காக, இருபத்தைந்து ஆடுகளை தானமாகத் தந்தமை.*

1 ஸ்வஸ்திஸ்ரீ காந்தளூர்சாலை கல
2 மறுத்து வேங்கை நாடுங் கங்க
3 பாடியுந் தடிகைபாடியும் நுளம்ப
4 பாடியும் கொண்ட கோ இராசராச கேச
5 ரிபன்மக்கு யாண்டு 14 ஆவது தே
6 வதானந் திருக்குமரமங்கலத்
7 து சுப்பிரமணியப் படாரர்க்கு இவ்வூர்
8 சேந்தன் செங்காடன் அ
9 கமுடையாள் பூதனம்பி
10 யம்மை வை[ச்]ச விளக்கு
11 ஒன்றுக்கு அடுத்த சா
12 வாமுவா செமரி வெள்ளா
13 டு 25 இருபத்தஞ்சுங்
14 கொண்டு நித்தம் ஆழாக்கு
15 நெய் அட்டுவதான கு
16 டி நக்கம் படாரன்

## 8:2

இடம் : *அதேகல், பின்புறம்.*

காலம் : *சடையவர்மன் ஸ்ரீவல்லபன் யா: 5 (கி.பி.1019).*

செய்தி : *பாண்டிய நாட்டின் வடபகுதியில் இவனது கல்வெட்டு கிடைப்பது இதுவே முதன்முறையாகும். கருங்குடிநாட்டுத் திருக்குமாரமங்கலத்துச் சுப்பிரமணியபட்டாலகர்க்கு அவ்வூர் பட்டாலகன் நாராயணனான கருங்குடிநாட்டுக் கோன் சுந்தரபாண்டியன் என்பவன் மேநெட்டூர் பூவன்..ன்*

புலியனைச் சார்த்தி திருநந்தாவிளக்கு ஒன்று அளித்துள்ளதைக் கூறுகிறது.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ
2 ஸ்ரீ கோச்சடைய [பன்மரா].
3 ன உடையார் ஸ்ரீவல்லவதேவற்
4 கு யாண்டு 5 ஆவது பாண்டி ம
5 ண்டலத்து கருங்குடிநாட்டு தே
6 வர்தானந் திருக்குமாரமங்கல
7 த்து ஸுப்$_3$ரமண்ய பட்டாலகர்க்கு மே
8 னெட்டூர் வெள்ளாளன் பூவன்...ன்
9 புலியனைச் சாத்தி இவ்வூர் பட்டாலக
10 னாராயணனான சுந்தரபாண்டியக் க
11 ருங்குடி நாட்டுக்கோன் வைச்ச
12 திருநுந்தா விளக்கு

# 9. நாகைநல்லூர் வணிகக் கல்வெட்டு

கி. ஸ்ரீதரன், திருச்சி;
நாக. கணேசன், கரூர்.

இடம் : திருச்சிராப்பள்ளி மாவட்டம், தொட்டியம் வட்டம், நாகை நல்லூரில் உள்ள குளத்தருகே.

காலம் : கி.பி. 10–ஆம் நூற்றாண்டு.

செய்தி : 200 செ.மீ உயரம், 80 செ.மீ அகலம் கொண்ட கல்லின் மேற்புறம் 7 வரிகளில் கல்வெட்டும், அதற்கு கீழே சேணத்துடன் கூடிய குதிரையைச் சுற்றி 11 படைக் கல புடைப்புச் சிற்பங்களும் உள்ளன.

1 ஸ்வஸ்திஸ்ரீ
2 கொற்றவன் கோ
3 முந்நூற்றுவரு
4 க்கு மூத்தாரோம்
5 மக்களோம் ஐம்
6 பெருங்குழுவுக்கு
7 செங்க.....



கல்வெட்டு பற்றிய தகவல் தந்த திரு.எஸ். தாமோதரன், (இயக்குநர், கிராமாலயா, திருச்சி) இதைப் படியெடுத்துதவிய ப. இராசேந்திரன், இதைப் படிக்க உதவிய முனைவர் சு. இராசகோபால், தொல்லியல் துறை, சென்னை ஆகியோருக்கு நன்றி.

# 10. சேலம், நாமக்கல் மாவட்ட கல்வெட்டுகள்

*வெ. இரா. துரைசாமி, நாமகிரிப்பேட்டை.*

## 10:1

*இடம் : சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், கல்ராயன் மலையில் கருமந்துறைக்கு வடக்கில் 3 கி.மீ. தொலைவில் உள்ள சின்னமாங்கோடு கெக்குப் பாறைக் காட்டில் உள்ள பாறை.*

*காலம் : முதல் இராசேந்திர சோழன், யா:15. (கி.பி. 1027).*

*செய்தி : சடையதேவ அணம்பிக்கன் செய்வித்த செக்கு.*

ஸ்வஸ்தி ஸ்ரீ கோப்பரகேசரிவன்மராரகிய ஸ்ரீ ராஜேந்திர சோழதேவற்கு.. திருவெழுத்திட்டுச் செல்லா நின்ற யாண்டாவது பதினைஞ்சாவது மிலாடாகிய சனநாதவளநாட்டு வெண்காட்டு மாலத்துறவிநாட்டுச் சிறுமாங்கோடு சடய தேவனெஅணம்பிக்கன் இடுவித்த செக்கு.

## 10:2

*இடம் : சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், நரசிங்கபுரம் சிவன்கோயில் கருவறை மேற்குச்சுவர்.*

*காலம் : சகம் 1456 (கி.பி. 1534?).*

*செய்தி : பொன்பரப்பின சோழீச்வரமுடையார்க்கு இரட்டியப்ப நாயக்கர் நிலம் விட்டமை.*

1. சுவதி ஸ்ரீ மஹாப் பிரதாப மஹாமண்டலேச்வரந் ஸ்ரீ வீரப்பிரதாப கிருஷ்ண தேவ மஹாராயர் பிறுதிவி ராச்சியம் பண்ணி அருளா நின்ற சகாந்தம் 1456 இதன் மேல் செல்லா நின்ற தாரண சம்வத்ரத்து மகர நாயற்று அபர பக்ஷத்து அமாசையும் ஆதித்திய வாரமும் பெற்ற திருவோண... அய்யன் காரியத்துக்கு
2. கடவர் இரட்டியப்ப நாயக்கர் நரசிங்கபுரம் தம்பிரானார் பொன்பரப்பின சோளீசுரமுடைய நாயனாற்கு சுவதேவதானமாகச் சேற்ந்த இரட்டியப்ப நல்லூர் எல்லையிலும் பெரியேரி கீழ் நன்செயிலும் காணியபிஷேகத்து பூசைக்கும் தானமாகக் குடுத்தோம்.

## 10:3

*இடம் : சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், நரசிங்கபுரம் சிவன் கோயில் கருவறை மேற்குச் சுவர்.*

*காலம் : கிருஷ்ண தேவராயர், சகம் 1456 (கி.பி. 1534?)*

*செய்தி : இரட்டியப்ப நாயக்கர் பொன் பரப்பின சோழீசுரமுடையாற்கு பூசைக்கு நிலம் தானமாகக் கொடுத்தமை.*

1 சுவதி ஸ்ரீ மஹாப் பிரதாப மஹாமண்டலேச்வரந் ஸ்ரீ வீரப்பிரதாப கிருஷ்ணதேவ மஹாதேவராயர் பிறுதிவிராச்சியம் பண்ணி அருளாநின்ற சகாற்தம் 1456 இதன் மேல் செல்லா நின்ற தாரண சம்வத்சரத்து மகர நாயற்று அபர பக்ஷத்து அமாவாசையும் ஆதித்திய வாரமும் பெற்ற திருவோண... அய்யன் காரியத்துக்கு

2 கடவர் இரட்டியப்ப நாயக்கர் நரசிங்கபுரம் தம்பிரானார் பொன்பரப்பின சோளீசுரமுடைய நாயனாற்கு சுவதேவதாதனமாகச் சேற்ந்த இரட்டியப்ப நல்லூர் எல்லையிலும் பெரியேரி கிழ் நன்செயிலும் காணியபிஷேகத்து பூசைக்கும் தானமாகக் குடுத்தோம்.

## 10:4

*இடம் : சேலம் மாவட்டம் பேளூர் அருகில் உள்ள குறிச்சி ஊரில் மாரியம்மன் கோவிலருகில் உள்ள கற்பலகை.*

*காலம் : வேங்கடபதிராயர், சகம் 1579 (கி.பி. 1657?).*

*செய்தி : திருமலை நாயக்கருக்குப் புண்ணியமாக கொண்டப்பய்யன் இரட்டைக் குறிச்சி கிராமத்தை பேளூர் தான்தோன் றீச்வரர்க்குத் தேவதானமாகக் கொடுத்தது.*

***முன் பக்கம்***

1 ஸ்வஸ்திஸ்ரீ மன் மக
2 ாமண்டலேச்வரன்
3 ராசாதிராசர் ராச பர
4 மேசுரன் ராச மிரக்க
5 டன் ராச கெம்பீ
6 ரன் மஹாப் பிரதாநரான ஆ
7 னை கொந்த வேங்கடபதி ர
8 ாயர் பிறிதிவிராச்சியம்
9 பண்ணி அருளா நின்ற க
10 ாலத்தில் மஹாமந்பிரதானர
11 ான விசுவநாத திருமலை
12 நாயக்கர் வாசலு பிரதா
13 நமான ராமப்பய்யன் வ
14 ாசல் பிறதாநமான கொண்
15 டப்பய்யன் மணி[ய]த்தில் ச
16 ாலிவாஹந சகாப்தம்
17 1579 இதின்மே
18 ல் செல்லாநின்ற வெ
19 குதானிய வருஷம் அற்ப
20 சிமீ 7உ விஜயதசமியும்
21 சோமவாரமும் பெற்ற ந
22 ாளில் மகாமண்டல
23 த்து வெளியூர் னாட்டு வெ
24 ளியூரில் உடையார் த
25 ாந்தோணீச்சுரமுடை
26 யதம்பினாக்கு திருமலை நாய
27 க்கரையன் புண்ணியமா
28 க கொண்டப்பையன் குடுத்
29 த பரிசாவது இண்டைக்
30 குறிச்சியாந கிறாமத்தில் நஞ்
31 சையும் புஞ்சையும் நாற்
32 பாங் கெல்லையும் தேன்
33 படு வரையும் மீன்படு சு
34 னையும் மேல் னோக்கின
35 மரமும் கீள் னோக்கின கி
36 ணறும் மற்றும் எ

***பின்பக்கம்***

37 ப்பேர்ப்பட்ட பல உரிமைக
38 ளும் இன்னாயனாற்கு பூதா
39 நமாக குடுத்தோம். இந்த
40 கிராமத்தை சந்திராதித்தவர்
41 வரையும் நடத்திவர க
42 டவராகவும் இத்தை னோக்கி

43 நவனுக்கு கெங்கைய
44 ாடின பலனும் அச்வமேத
45 யாஹம் பண்ணின பலனும் ஸ
46 ாயுஜ்ய பதவியும் பெறு
47 வார்கள் இதுக்கு அஹித
48 ம் பேசினவன் கெங்கை
49 கரையிலே பிராமண
50 ரையும் காராம்பசு
51 வையும் தத்தம் மாதா பி
52 தாவையும் கொன்ற
53 தோஷத்திலே போக
54 கடவராகவும்

## 10:5

இடம் : *சேலம் மாவட்டம், சேலம் வட்டம், கருப்பூர் ஸ்ரீ கைலாசநாதர் கருவறை தெற்குக் குமுதப்படை.*

காலம் : *மூன்றாம் இராசராசன் (கி.பி. 1244).*

செய்தி : *பொன்பரப்பீச்வரமுடையார் கோயிலில், ஸ்ரீருத்திரரும், ஸ்ரீமாகேச்வரரும், பல மண்டலத்துத் தேசாந்திர தருமவீரபத்திரரும், மற்றும் பலரும் கூடி கருப்பூர் உய்யக் கொண்ட நாயனார்க்கு விளக்கெரிக்க நெய் கொடுத்தமை.*

1 ஸ்வஸ்திஸ்ரீசண்டேசுவரனோலை சாகரஞ்சூழ் வையகத்து கண்டீச்சுவரன் கருமமாராய்க பண்டேய் அறஞ்செய்தான் செய்தானறங் காத்தான் பாதந் திறம்பாமற் சென்னிமேல் வைத்து ஆதித்தனடித் திருபுவனச்

2 சக்கரவத்திகள் ஸ்ரீ இராசராசதேவற்கு யாண்டு 26வது சேலஞ் சுற்றிய சேரநாட்டுப் பொன்பரப்பியில் நாயனார் பொன்பரப்பீச்சுரமுடையார் கோவிலில் சேரமான் பெருமாள் திருக்காவ

3 ணத்து சிரிருத்திரரும் சிரிமாகேச்சுவரும் பலமண்டலத்து தேசாந்திரத் தரும் வீரபத்திரரும் ததகம்வெட்டிகளும் கூடல்பிறிகளு மூலசேதிகள் நம்பிமபிள்ளுந் தொண்டும் பிசகுப் பெற்றாருங் கவரிபிணாப்பிள்ளை

4 களும் பொற்கோ... கைக்கோளரும் மற்றும் மேமாற்கத்துக்குக் கடவாருந் நிறைவற நிறைந்து குறைவறக் கூடி இந்த நாட்டுக் கருப்பூரில் உடையார் உய்யக் கொண்ட நாயனாற்கு அறங்குடுத்த பரிசாவது இந்த கருப்

5 பூரில் ஆட்டுத்திறந்தால் ஆட்டைக்கு ஒரு ... நெய்யுங் குடுப்பதாகவும் இவர்களாட்டு விளாகத்து ஆடு கொண்டா ருண்டாகில் சிவத்துரோகிகள் பட்டதும் சிரியர்ச்சினை சேர்க்க நாயனாராணையும

6 றுத்தார் பட்டது படுவார்களாகவும் வைகத தங்கப் புலரப்பேர் மாகேச் சுரவர்கனாச் சோறிட்டு வருவார்களாகவும் இப்படி அருளில் நாற்பத்தெண்ணாயிர சிரிகரணத்தானெழுத்து நன்றாக

## 10:6

இடம் : *சேலம் மாவட்டம், சேலம் வட்டம், கருப்பூர். ஸ்ரீ கைலாச நாதர் கோயில், கருவறை மேற்குக் குமுதப்படை.*

காலம் : *போசள வீரராமநாததேவர். யா:14. கி.பி. 1269.*

செய்தி : *கருப்பூர் ஸ்ரீ உய்யக் கொண்ட நாயனார்க்குக் குளமூக்கைச்*

*சேர்ந்த பரமன் திருத்தாவி நந்தா விளக்கெரிக்கக் கொடுத்த நிவந்தம். கல்வெட்டு முடிவு பெறவில்லை.*

1 ஸ்வஸ்தி ஸ்ரீ சக்கரவத்திகள் ஸ்ரீ போஜல வீரராமநாததேவற்கு யாண்டு பதினாலாவது சேல நாட்டில் கருப்பூரில் நாயனார் உய்யக் கொண்ட நாயனார்க்கு குளமூக்கில் பரமன் றிருதாவியேன் நாயனார்க்குத் திரு

2 நுந்தா விளக்குக்கு விட்ட பட்ட தறையொன்றும் இந்த திருநுந்தா விளக்கு சந்திராதித்தவரை செல்லக்கடவது இந்த...

## 10:7

இடம் : *மேற்சுட்டிய கோயில் வாயில்முன் கிடக்கும் துண்டுக்கல்.*

காலம் : *18 ஆம் நூற்றாண்டு.*

செய்தி : *கைலாச நாதர் கோயில் கட்டப்பட்டமை குறித்து. பிற்காலத்தில் திருப்பணி செய்ததையே கோயில் கட்டியதாகக் கூறப்பட்டுள்ளது.*
*யுவ வருஷம் கருப்பூர் கயிலாயநாதர் கோயில் நகரத்து ஆவுடைசெட்டி உள்ப்பட்டார் கட்டின பேர்*

## 10:8

இடம் : *சேலம் மாவட்டம், சேலம் வட்டம், வீராணம் அருகில் பெருமானூர் பெருமான் கோயில் தீபத் தம்பத்தைச் சுற்றி வைக்கப்பட்டுள்ள துண்டுக் கற்கள்.*

காலம் : *முன்றாம் இராசராசன். யா:20 (கி.பி.1238).*

செய்தி : *குமரீச்வரமுடையார் கோயிலில், பலமண்டலத்து ஸ்ரீ மாகேச்வரரும், தேசாந்திரிகளும் இருந்து திருப்பணிக்குப் பொருள் கொடுத்தமை.*

1 ஸ்வஸ்திஸ்ரீ திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ இராசராச தேவற்கு யாண்டு

2 20ஆவது சேலநாட்டு வீராணத்து உடையார் குமரிசரமுடைய நாயநார்

3 கோயில் நாற்பத்தெண்ணாயிரவன் திருமண்டபத்து நிறைவற நிறைந்து குறை

4 றவறக் கூடி இருந்த பல மண்டலத்து ஸ்ரீ மாகேசுரரும் பலமண்டலத்து தேசாந்தி

5 ரிகளு இருந்து இவ்வூரில் மன்றாடிகளு...

6 ... ங்களுக்கு இட்டுவருகிற பிச்சை இந்...

7 ... திருப்பணிக்கு முடலாக குடுத்தோம் இந்த...

8 ... வானமாறகத்துக்கும் தேசாந்திரிகளுக்கும்...

## 10:9

இடம் : *சேலம் மாவட்டம், சேலம் வட்டம், வெலாரிப்பாளையம் (திம்மநாய்க்கன்பட்டி அருகில்) குட்டைக் கரை அரச மரத்தடியில் உள்ள நடுகல்.*

காலம் : கி.பி.12–ஆம் நூற்றாண்டு.
செய்தி : ஆண், பெண் நின்ற நிலையில் சிற்பம் உள்ளது. மேல் பகுதியில் கல்வெட்டு உள்ளது. சிறுபாக்கத்தைச் சேர்ந்தவன். வாணகோவரையர்களின் படைத்தலைவன்.

1 சிறுபாக்க முடையான் சாமந்தன்

## 10:10

இடம் : சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், பெரிய சோரகை சிவன் கோயில் தெற்குக் குமுதப்படை.
காலம் : போசள வீரராமநாதன். யா:17. (கி.பி. 1272.)
செய்தி : ஆந்தை இளமன் முதலி என்பார் பிராநீச்வரமுடைய நாயனார்க்குத் திருக்கற்றளிசெய்வித்தார். திருப்பணிக்கும். பூசைக்கும், நந்தவனத்திற்கும் ஊர்த்தலைவர்கள் கூடி முந்நூற்றைம்பது குழிநிலம் தந்துள்ளனர்.

1 ஸ்வஸ்திஸ்ரீ சகலபுவன சக்கரவத்தி போசள வீரராமனாத தேவற்கு யாண்டு 17 ஆவது கொங்கான வீரசோழமண்டலத்து வடபூவாணிய நாட்டு சோறகையில் முதலிகளில் ஆந்தை இளமன் முதலியேன் னாயனார் பிராநீச்சரமுடைய நாயனாற்குத் திருக்கற்றளி திருப்பணி செய்வித்தேன்

2 இளமன் முதலியேன் இன்னாயனாற்கு அமுது படி சாத்துப்படி திருப்பணிக்குடலாக ஊரு முதலிகளோம் தெற்கில் வாசலிற் சிற்றேரியில் ஏரி கீழ் நஞ்செய் நிலம் திருநாமத்துக்காணியாக விட்டகுழி நூற்றைம்பதும் சோறகையில் ஊரேரிச் சமுத்திரமென்று பேர்பட்ட எரியில் நன்செயாக ஏரிக்கீழ் விட்ட குழி இருநூறும் புன்செய் நெ

3 ட்டம் பனபட்ட கொல்லையும் நாற்பாலெல்லைக்கு ... பர் கிழக்கெல்லை புளியம் மடைக்கும் மேற்கும் மேற் கெல்லை செருவிடையிட்டேற்கு கிழக்கும் வடக்கெல்லை ஆரியூர் இட்டேற்கு தெற்கும் தெற்கெல்லை இரண்டாவது செருவிடை இட்டேற்கு வடக்கும் இக்கொல்லைக்கு இதெல்லையாகவும்

4 இத்தன்மஞ் சோறகையில் நாயனார் பிராநீச்சரமுடைய நாயனார்க்கு திருநந்தவான... திருத்தோப்புக்கு கிழக்கெல்லை கழனியான வேளார்தோட்டத்துக்கு மேற்கும் தெற்கெல்லை கழனிக்கு வடக்கும் இ மேற்கெல்லை அகமுக்கு கிழக்கும் வடக்கெல்லை காரியாக் கிணற்றுக்குத் தெற்கும் தோப்புக்கு இதெல்லையாகவும் இன்னாயனாற்கு திருநாமத்துக் காணியாக விட்டோம் இச் சோறகையின் ஊரவரும் முதலிகளும்

## 10:11

இடம் : *நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், கொல்லிமலை அரியூர்நாடு, மேல் கலிங்கம் சோழமுடையார் கோயில் அருகில் உள்ள செக்கு.*

காலம் : *12 ஆம் நூற்றாண்டு.*

செய்தி : *இவ்வூர்ச் சிவன் கோயிலுக்கு அறப்பள்ளி சாத்தன் கொடுத்த செக்கு.*

ஸ்வஸ்திஸ்ரீ இச்செக்கு உள்ளூர் மாதேவர்க்கு குடுத்தேந் அறப்பள்ளி சாத்தநாற்

## 10:12

இடம் : *நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், கொல்லிமலை திண்ணனூர் நாடு வாசலூர்ப் பட்டி தோட்டம்.*

காலம் : *12 ஆம் நூற்றாண்டு.*

செய்தி : *வாயலூருடையான் (வாசலூர்) பன்றி சாத்தன் கொடுத்த செக்கு.*

ஸ்வஸ்திஸ்ரீ வாயலூருடையாந் பந்றி சாத்தன் செக்கு

## 10:13

இடம் : *நாமக்கல் மாவட்டம், நாமக்கல்வட்டம், மங்கலத்தை அடுத்துள்ள துத்திக்குளம் ஊரின் இடுகாட்டருகில் உள்ள பெரிய செக்கு.*

காலம் : *12 ஆம் நூற்றாண்டு.*

செய்தி : *அறப்பள்ளிக் கமலப்பாவை என்பவள் கொடுத்தசெக்கு.*

ஸ்வஸ்திஸ்ரீ ஆலத்தூர் மாதேவர்க்கு அறப்பளிக் கமல பாவை இடுவித்த செக்கு

## 10:14

இடம் : *நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், கல்யாணியில் தர்மகர்த்தா தோட்டத்துப் பாறையின் செக்குக் கல்வெட்டு*

காலம் : *மூன்றாம் குலோத்துங்கன் யா:10 (கி.பி. 1188).*

செய்தி : *பருத்திப் பள்ளி போத்தன் போத்தனான எழுகரை நாட்டு அரையன் அமைத்த செக்கு.*

1 ஸ்வஸ்திஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு பத்தாவது கொங்கான வீரசோழ

2 மண்டலத்து கலியாணி ஊரவர் பருத்திப்பள்ளி போத்தன் போத்தனான எழுகரைநாட்டு அரையன் செக்கு.

---

ஆய்வுக்கு உதவிய ஈரோடு செ. இராசு அவர்களுக்கு நன்றி

# 11. ஜகதாப் மோட்டூர் நடுகல் கல்வெட்டு

**சு. இராசவேலு, சென்னை.**

இடம் : தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம், ஜகதாப்மோட்டூர் கற்பலகையின் உட்பகுதி.

காலம் : *இராசேந்திர சோழதேவர். யா: 5 (கி.பி.1017).*

செய்தி : *விஜையராஜேந்திர மங்கலத்திலுள்ள தகடூர் நாட்டைச் சார்ந்த கங்க நாட்டின் புல்லமங்கலம் ஊரைச் சார்ந்த அவனமச்சி பள்ளி என்பவரின் மகன் சாமுண்டன் பாம்பு கடித்து இறந்தமை மற்றும் சாமுண்டனின் மனைவி விச்சக்கந் என்பவள் உடன்கட்டை ஏறிய செய்தி. ஆண் உருவமும் பெண் உருவமும் புடைப்புச் சிற்பமாக நின்ற நிலையில் கைகளை பிடித்தவாறு கற்பலகையில் செதுக்கப்பட்டுள்ளன. பக்கப் பலகைக் கற்களில் ஒன்றில் கல்வெட்டு உட்புறமாக செதுக்கப்பட்டுள்ளது. இறுதிப்பகுதி சிதைந்துள்ளது.*

1 ஸ்வத்திஸ்ரீ இரட்டபாடி ஏழரை இலக்கமுங் கொ
2 ண்டு கொல்லாபுரத்து ஜயத்தம்ப நாட்டி
3 ப் பேராற்றங்கரைக் கொப்பத் தாகவ மல்
4 லனை ஐஞ்சுவித்தருளி அவந் ஆனை கு
5 திரை பெண்டிர் பண்டாரமகலப்பட்டவித்து
6 வீரஸிங்காசநத்து வீற்றிருந்தருளிந கோ
7 ப் பரகேசரி பந்மரான உடையார் ஸ்ரீ ராஜே
8 ந்தர தேவர்க்கு யாண்டு ஐஞ்சாவது
9 விஜைராஜேந்திர மண்டலத்துத் தகடூர்
10 நாட்டுக் கங்க நாட்டுப் புல்லமங்கலத்து
11 அவனமச்சி பள்ளியில் இவந் மகந் சாமுண்
12 டந் பாம்பு கடிச்சு செத்தாந் இவந் மணவா
13 ட்டி விச்சக்கந் தீபாஞ்சாள் அவள் ம...
14 ண்ப... மாக நட்...

---

இக்கல்வெட்டு ஆய்விற்கு உடன் வந்து உதவிய ஓய்வு பெற்ற பள்ளி ஆசிரியர் காவேரிப்பட்டணம் திரு. துரைராஜ் அவர்களுக்கு நன்றி.

# 12. மாதனூர் நடுகல்

ஆ. பத்மாவதி, சென்னை.

*இடம் : வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், மாதனூர் மலையடிவாரம்.*

*காலம் : விஜயராஜேந்திரன் (இரண்டாம் இராசேந்திரன்) யா:9. (கி.பி. 1061).*

*செய்தி : உத்தமநிதிச் சித்திரமேழி பெரியநாட்டையன் என்பான் தும்பை என்ற ஊரில் ஆநிரைகளை மீட்டு இறந்தது.*

1 ஸ்வஸ்தி ஸ்ரீ
கோப்பரகேசரி பற்மரான
2 உடையார் ஸ்ரீ விசைய
ராசேந்த்ர தேவற்கு யா
3 ண்டு ஒன்பதாவது சயங்
கொண்ட சோ
4 ழ மண்டலத்துப் பெ
5 ருமபாணப்பா
6 டிக் கீழடை
7 யறை நாட்டுத்
8 தொப்பாலத்
9 திருக்குமரந்
10 தை ஆ
11 ந உத்
12 தம நி
13 திச் சி
14 த்திர
15 மேழி
16 பெ
17 ரிய
18 நாட்
19 டை
20 யன்
21 இவந் ம
22 றுப
23 ை
24 ட..
25 ட்ட தும்
26 பை எறி
27 ச்சு பெ
28 தாறு
29 கொ
30 டு போகா நிற்க தொ
31 று மீட்டு பட்டார்

உத்தம நிதி அபையம்

# 13. நாலூர் ஸ்ரீவல்லப பாண்டியன் கல்வெட்டு

*வெ. வேதாசலம், மதுரை.*

இடம் : *விருது நகர் மாவட்டம், நரிக்குடிக்கு அருகில் அமைந்துள்ள நாலூர் நடுவிலுள்ள திடலில் அவ்வையார் கல் என்ற தனிக்கல்.*

காலம் : *(சடையவர்மன்) ஸ்ரீவல்லபன் யா: 4, (கி.பி.1105).*

செய்தி : *அம்பலக்கூத்தன் சூரியதேவநான சேதிராயருக்கு கங்கைகொண்டான் இராசேந்திரசோழனான சோழவிச் சாதரப் பேரயன் அளித்த நிலஉரிமை பற்றிய இசைவுத் தீட்டு. இவற்றின் பரப்பு தொடர்பாக குறைகள் சொல்வதில்லை என்பது உடன்பாடாகும்.*

1 ஸ்வஸ்திஸ்ரீ சிவல்ல
2 வ தேவற்கு யாண்டு நா
3 லாவது அம்பலக் கூத்
4 தன் சூரியதேவநான சே
5 தியராயர்க்கு கங்கை கெ
6 ாண்டாந் இராசேந்திர
7 சோளநாந சோளவிச்ச
8 ாதரப்பேரரயனேந் சம்ம
9 தித்துத் தீட்டுக் குடுத்த
10 பரிசாவது யாண்டு நா
11 லாவது முதல் விட்ட ஊர்
12 களும் விட்ட பற்றுமல்லது
13 ....
14 ராகவும் இ... வல்ல
15 து இனியொன்றும் சொல
16 ப்பேனாகவும் சம்மதித்து
17 த்தீட்டுக் குடுத்தேன் க
18 ங்கைகொண்டாந் இராசேந்
19 திர சோளனேந் அம்பலக்
20 [கூ]த்தன் சூரியதேவனா
21 ந சேதியராயர்க்கு இப்ப
22 டி அல்லது செல்வாந் த
23 ங்ளம்மைக்குத் தானே
24 மிணாளன் அம்பலக் குத்
25 தந் சூரியதேவநாந சே
26 திராயனே கங்கை
27 கொண்டாந் இராசேந்தி
28 ர சோளணாந சோளவிச்
29 சாதிரப்பேரயனுக்கு யா
30 ண்டு நாலாவது முதல்
31 விட்ட ஊர்களும் பற்றுகளும்
32 இனி இவை ஏதேனும் ஏ
33 ற்றச்சுருக்கம் சொலப்பேணாக
34 ச் சம்மதித்துத் தீட்டு குடுத்
35 தேன் அம்பலக் குத்தந் சூ
36 ரிய தேவனாந சேதியராயனே
37 னந் கங்கைகொண்டான்
38 இராசேந்திரசோளனாந சோ
39 ள விச்சாதிரப் பேரயனுக்
40 கு இப்படி அல்லது செல்
41 வாந் தங்களம்மைக்குத் த
42 ாநே மிணாளன்

# 14. ஒழிந்தியாம்பட்டு திரு அரசிலி ஆளுடையார் கோயில் கல்வெட்டுகள்

கோ. விசயவேணுகோபால்,
ஆ. துரைரங்கம், பாண்டிச்சேரி.

ஒழிந்தியாம்பட்டு என்ற சிற்றூர் பாண்டிச்சேரி – திண்டிவனம் நெடுஞ்சாலையிலுள்ள திருச்சிற்றம்பலம் என்னும் ஊருக்கு வடக்கே ஆறு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. திருஞானசம்பந்தர் தேவாரத்திலும், கல்வெட்டுக்களிலும் திரு அரசிலி என இவ்வூர் குறிக்கப்படுகிறது. இவ்வூரிலுள்ள திரு அரசிலி ஆளுடையார் கோயிலில் பல கல்வெட்டுக்கள் உள்ளன. இவற்றுள் 5 மட்டும் அச்சாகியுள்ளன. (1902 : 194–198) தற்போது அடையாளங் காணப்பெற்று அச்சாகாத கல்வெட்டுக்கள் பதின்மூன்று உள்ளன. இவற்றுள் 7 சோழர் காலக் கல்வெட்டுக்கள்; 5 பாண்டியர் கல்வெட்டுக்கள்; 1 இராச நாராயணச் சம்புவராயரின் கல்வெட்டு. இங்குச் சோழர் காலக் கல்வெட்டுக்கள் ஆறும் முதன் முறையாக வெளியிடப்படுகின்றன.

## 14:1

இடம் : மகாமண்டபம் வடக்குச் சுவர்.
காலம் : விக்கிரம சோழன். யா: 7, (கி.பி. 1125).
செய்தி : திரு அரசிலி ஆளுடையார்க்கு முத்தூற்றுக் குடிப்பள்ளி நெங்கெணிப் பெரி அரையன் அம்மை அப்பன் மருந்தான் சேதிராயன் நந்தா விளக்கொன்றெரிப்பதற்காகத் தொண்ணூறு ஆடுகள் விட்டமை.

1 ஸ்வஸ்திஸ்ரீ பூமாதுபுணர புவிமாது வளர நாமாது விளங்க ஜயமாது விரும்பத் திருபத
2 மலர் மன்னவர் சூட மன்னியவுரிமையால் மணிமுடிசூடிச் செங்கோல் செந்று தி
3 சைதொறும் வளர்ப்ப வெங்கலி நீங்கி மெய்யறந்தழைப்ப கலிங்கமிரியக் கட
4 கரி நடாத்தி வலங்கொளாழி வரையாணை நடாத்தி இருசுடரளவும் ஒருகுடை நிழற்
5 கீழ் வீரஸிம்ஹாஸனத்து முக்கோக்கிழாநடிகளொடும் வீற்றிருந்தருளிய
6 கோப்பரகேசரி பந்மரான திருபுவநச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ விக்கிரம சோழ தேவற்
7 கு யாண்டு ஏழாவது திருஅரைசிலி ஆளுடையாற்கு முந்நூற்றுக் குடிப்பள்ளி செங்கே
8 ணிப்பெரி அரையன் அம்மை அப்பன் மருந்தான் சேதிராயன் வைத்த திருநந்தா

9 விளக்கொன்றுக்கு விட்ட ஆடு தொண்ணூறு அறமறவற்க இது பந்மாயேச்சுவர ர

10 க்ஷை.

## 14:2

*இடம் : கருவறை வடக்குச் சுவர்.*

*காலம் : விக்கிரம சோழன், யா: 9 (கி.பி. 1127).*

*செய்தி : பெருவெம்பூர் நாட்டு அரசிலி தேவர்க்கு வாணராய முத்தரையன் அரை விளக்கு எரிப்பதற்காக 45 ஆடுகள் விட்டமை.*

1 ஸ்வஸ்திஸ்ரீ பூமாது புணரப் புவிமாது

2 வளர நாமாது விளங்க ஜயமாது விரும்

3 பத் தன்னிரு பதுமலரடி மன்னவர் சூட மன்னி

4 ய உரிமையில் மணிமுடி சூடிச் செங்கோல்

5 சென்று திசைதொறும் வளர்ப்ப வெங்கலி நீக்கி

6 மெய்யறந் தழைப்ப கலிங்க மிரியக் கடகரி

7 நடாத்தி வலங்காளாழி வரை யாழி நடாத்தி

8 எரிசுடரளவும் ஒருகுடை நிழற்கீழ் வீரஸிம்ஹா

9 ஸனத்து முக்கோக்கிழாநடிகளொடு

10 வீற்றிருந்தருளிய கோபரகேசரி பந்மரான திருபுவனச்

11 சக்கரவர்த்திகள் ஸ்ரீ விக்கிரம சோழ தேவற்கு யா.

12 ண்டு 9வது ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து ஒ

13 ய்மானாடான விஜைய ராஜேந்த்ர சோழ வளநாட்டு பெருவெம்

14 பூர்நாட்டு திருவரசிலி ஆளுடையார்க்கு இன்னாட்டு

15 குயில்குலகாலபுரத்திருக்கு வலையன் கடியாறனுக்காக வாண

16 ராய முத்தரையன் வைத்த திரிநந்தா விளக்கு அரை அரையாலாடு நாற்ப

17 த்தைஞ்சு சாவாமூவாப் பேராடாக இது பந்மாஹேஸ்வர ரக்ஷை

## 14:3

*இடம் : கருவறை வடக்கு அதிட்டான முப்பட்டைக் குமுதம்.*

*காலம் : இரண்டாம் குலோத்துங்கன், யா: 4 (கி.பி. 1137).*

*செய்தி : ஆலாலசுந்தர தேவர்க்கு முன்பு தேவதானம் இல்லை என்பதால் தன் 4-ஆம் ஆட்சியாண்டில் கீழ்ப்பாக்கம் எனும் ஊரில் ஆயிரக்கலநெல் வரும்படிக்காக நீர்நிலம் வழங்கியதோடு செம்பியந் வெண்பாடு எனும் பெயரை நீக்கிப் பழம் பெயரான திரு அரசிலி எனும் பெயரை மீண்டும் வைத்து ஆணையிட்டமை.*

1 ஸ்வஸ்திஸ்ரீ பூமேவு வளர் திருப்பொன்... யின்செல்வி எண்டிசை விளங்க நிருபர் வந்தி றைஞ்ச நீ

2 ணில மடந்தையை திருமணம் புணர்ந்து சீர்வள... இயல்பினிலெய்த வெண்குடை நிழல்ச் செங்கோலொச்சி வாழி பல்

3 லூழி யாழி நடப்ப செம்பொன் விரஸிம்ஹாஸனத்து... குலோத்துங்க சோழதேவர் விக்கி...புரத்துக் கோயி

4 ற் பற்றால் அபிஷேக மண்டபத்து முத்து பந்தல்... து ஒய்மாநாடான விஜை [யராஜேந்த்ர வளநாடான திரு] அரசிலியான செம்பியந் வெண்பாட்டில் மாதேவர் ஆலாலசுந்தரதேவர்க்கு முன்பு தேவதானம் இல்லையன்றும் இத்தேவர்க்கு ஆயிரக்கல நெல்லுக்கு இவ்வூர் தேவதாந இறையிலியா

5 க இட்டுச் செம்பியந் வெண்பாடெந்நும் பேர்தவிர்த்... காயிலில் பிடாரர் நாற்பத் தெண்ணாயிர நம்பியைக் காட்டித் திருவீதி நம்பி நமக்குச் சொந்நமையில் ஒய்மாநாடான விஜெயராஜேந்த்ர வளநாட்டுத் திரு அரசிலியான செம்பியன் வெ

6 ண்பாடு நீர்நிலம் பத்தொன்பதே கால் புஞ்சை நிலம் நாற்ப ... நூற்றெழுபத்தறு கலநே முக்குறுணியும் செம்பிய வெண்பாடெனும் பேர் தவிர்த்து பழம்படியே திரு அரசிலியெந்நும் பெயராக்கி இந்நாட்டுக் கீழ்ப்பாக்கத்து இட்ட நீர் நிலம் ஒன்பதே இரண்டு மா அரைக்கா

7 ணிக் கீழ் முக்கால முற்றும் புஞ்சை நிலம் இருபத்து ஒ... னூற்றிருபத்து முக்கலநெ இருதூணிக் குறுணியும் ஆலாலசுந்தரதேவர்க்கு வேண்டும் நிவந்தங்களுக்கு இறுப்பதாக யாண்டு நாலாவது முதல் தேவதாந இறையிலியாக வரியிலிட்டுக் குடுப்பது இப்படி திருவாய்மொ

8 ழிந்தருளிநார் இவை வில்லவராயன் எழுத்து.

## 14:4

*இடம் : கருவறை மேற்கு அதிட்டான முப்பட்டைக் குமுதம்.*
*காலம் : இரண்டாம் குலோத்துங்கன்(?) யா: 4 (கி.பி. 1137).*
*செய்தி : நஞ்சை, புஞ்சை நில அளவுகளும் (குறியீடுகளில்) ஸ்ரீகரண நாயகம், ஸ்ரீகரணமுகவெட்டி, முதலானோர் கையொப்பிமிட்டுள்ளனர். முற்றுப்பெறாத கல்வெட்டு.*

1. ஸ்வஸ்தி ஸ்ரீ தேவதாந இறையிலி
2. ம்பியர் தவிர்த்து பழம்படியே திரு அரசிலியெந்நும் பியரால் மாண்டு நாலாவ.... வரிசைப்படி
3. லம்... புஞ்சை நிலம் 25 இவ்வூர்ப் புஞ்சை உட்பட... 50 இவை புரவரி [ஸ்ரீகரண] நாயகம் இவை... புரவரி ஸ்ரீ
4. கரண நாயகம் கூடலூர் கிழவந் எழுத்து இவை புரவரி ஸ்ரீ கரண நாயகம் ஸ்ரீ கரணமுக வெட்டி வருக்க குடையாந் எ...

## 14:5

*இடம் : மகாமண்டபம், தெற்குச் சுவர், இடது பக்கம்.*
*காலம் : இரண்டாம் குலேத்துங்கன் யா: 8+1 (கி.பி. 1142).*

*செய்தி : கல்வெட்டு முற்றுப்பெறவில்லை. பொற்குலக் கொடி என்னும் பட்டத்தரசி குறிக்கப்படுகிறாள்.*

1 பொற்குலக்கொடி செம்பியந் கிழாநடி ஒருங்குடநமர்ந்திருப்ப அருள்புரி சிமையப் பொற்கோட்டிமையப் பாவையுஞ் சி...
2 கோவிராசகேசரி பந்மான திருபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு எட்டாவதின் எதிராமாண்டு
3 நாட்டு ஆங்கூர் நாட்டு ஆக்கூர் திருத்தான்றீஸ்வரம் முடையார் கோயிலிற் குலோத்துங்கசோழ திருவெடுத்துக் கட்டியிலே வெ...
4 ... நங்கள் நடைசெலுத்தாயிருக்க ஜயங்கொண்ட சோழ மண்டலத்து ஓய்மா நாட்டுத் திருவரசிலி மஹாதேவர் கோயிலிற் காணி...
5 டு பிரஹ்மதெயம் ஸ்ரீ த்ரிபுவநமஹாதேவி சருப்பேதி மங்கலத்து சாத்த மங்கலத்து...

## 14:6

*இடம் : மகாமண்டபத் தெற்குச்சுவர்.*

*காலம் : சோழர்.*

*செய்தி : தில்லை நாயக நம்பி என்பவன் ஜயங்கொண்ட சோழ வளநாட்டு ஆக்கூர் நாட்டு திருக்கடவூர் ஸ்ரீ காலகாலதேவர் கோயிலில் உள்ள திருக்குளத்தில் மூழ்கிச் சத்தியம் செய்து கொடுத்தமையையும் வேறெதுவும் கூறில் அரசனின் திருவாணையை மறுத்தவர் படும் தண்டத்தைப் பெறுவதாக குறிப்பிடுகிறது. கல்வெட்டு முழுமையாக இல்லை. மேலேயுள்ள கல்வெட்டின் (14:5) தொடர்ச்சியாகலாம்.*

1 இல்லை என்று ஜயங்கொண்டசோழவளநாட்டு ஆக்கூர் நாட்டு திருக்கடவூர் ஸ்ரீ
2 காலகாலதேவர் கோயிலில் திருக்குளத்திலே முழுகி ஸத்த்யஞ் செய்யக் கடாவேநாகவும் இப்
3 படி அல்லது இவ்வொன்பது நாளுஞ்சுட்டி மற்றொன்றுஞ் சொல்லப் பெறாதேநாகவும் சொன்னேனாகில் திருவாணை மறுத்தார்ப்
4 பட்ட தெண்டப்படக் கடாவநாகவுஞ் சம்மதித்து இப்பெற்றி நம்பியே இத்தில்லை நாயக நம்பியேன் இவன் இப்படியே ஸத்த்யம் ப
5 ண்ணுவநாகிற் கண்டு இவ்வொன்பது நாளுஞ் சுட்டி மற்றொன்றுஞ் சொல்லக் கடவேநல்லாதேநாகவும் சொன்னேனாகில் தி
6 ருவாணை மறுத்தார் பட்ட தண்டப்படக் கடவேநாகவும் இப்படி ஸத்தியஞ்... இவை...

---

# 15. ஆதனூர் கல்வெட்டுகள்

ப. வெங்கடேசன், காவேரிப்பாக்கம்;
ப. பூபாலன், இராணிப்பேட்டை.

## 15:1

இடம் : திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், ஆதனூர், சுயம்புநாத ஈசுவரர் கோயில் கருவறைக்கு தென்பகுதியிலுள்ள கற்பலகை.

காலம் : விக்கிரம சோழன் யா.7 (கி.பி. 1125).

செய்தி : கல்வெட்டு முழுமையாக இல்லை. அரண்மனையைச் சேர்ந்தவர்களான கோயிற்றமர்க்கு இறை கொடுத்தமை.

1 பூம... ணரப்புவி... வளர நா.. விளங்க ஜயமாது விரும்பத்த
2 ண்ணி... பதமலர் மன்னவர் சூட... வுலிமையால் மணிமுட்டி சூடிச்செங்கோல்...
3 சென்று ... நீங்கி மெய்யறந்தழை கலிங்கமிரியக்
4 கடமலை... திரிய இருசுட... டை நிழற்ற விஜ
5 யாபி... வீற்றிந்தருளிய... பரகேசரிவன்மரான திரி
6 புவன.. விக்ரம சோழ,... டு ஏழாவது ஜயங்கொண்ட சோழ மண்டல
7 த்து பல்குன்றக் கோட்டது மெய்யூர் நாட்டு ஆதநூர் ஊ... ஸ்ரீ விக்ரம
8 வித... ரு ராச... த்தும செருப்பள்ளி திருச்சிற்றம்பல
9 முடையாந கிரமநவித்த... சம்பந் தோணிஸ்வரமுடையாநும் தூளிகிழார்
10 பொநம்பலந்... நுளம்புழாந் வாழ்முரி நம்பியும் ஊர் தண்
11 டல் கண்ணனத்தயுங்.. எங்களுக்குக் கோயிற்றமர் கிறைக்கு நூறு

## 15:2

இடம் : திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், ஆரணி சுயம்புநாத ஈசுவரர் கோயில் கருவறைக்கு வடபகுதியிலுள்ள துண்டுக் கற்பலகை.

காலம் : விக்கிரம சோழன்(?) (கி.பி 12 நூ.ஆ).

செய்தி : கல்வெட்டு முழுமையாக இல்லை. திருத்தோணீசுவரத் தேவர்க்குத் தேவதானமாக நிலம் விட்ட செய்தி.

1 காத வெ... டத்து மற்[கொ]ரு பெற்றியில்லாமையில்
2 இவ்வூர்த் திருத்தோணீஸ்வருடைய மகா$_3$ தே$_3$வர்க்குத் திரு
3 மண்டபஞ் செய்கைக்கு திருமேநி வார்க்கைக்கு ஸ்ரீமாகே$_3$
4 ஸ்வரர் இருந்து கூடி முதலாந ஸ்ரீபண்டாரத்து ஸ்ரீமாகே$_3$ஸ்வரர்

5 கங்காணிப்படி ஆதிதாஸ சண்டெ$_{3}$ஸ்வரர் பக்கல் நாங்கள்
6 தே$_{3}$வர்க்கு தே$_{3}$வதானமாக விடுகிற நிலத்துக்கு வேண்டுங் சய
7 மறக்கொண்டு விட்ட நிலமாவது அழிஞ்சிற் செறுவுட்பட தெ
8 ந்பாற்கெல்லை கோகுளங்குண்டிற் தெந் வரப்புக்கு வடக்
9 கும் மேற்பாற்கெல்லை ஏரிகளர்க்கு கிழக்கும் வடபாற்கெ
10 கல்லை மேட்டுத் தூம்புக்குத் தெற்கும் கீழ்பாற்கெல்லை
11 வதிக்கு மேற்கும் இந்நாற் பாற்கெல்லையுட்பட நிலம் எற்ற

# 16. நெல்லிக்குப்பம் கல்வெட்டு

கோ. கிருட்டினமூர்த்தி, அனந்தபுரம்.

*இடம் : கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், நெல்லிக் குப்பம், கைலாசநாதர் கோயில்.*

*காலம் : விக்கிரம சோழன், யா: 10 (கி.பி1128).*

*செய்தி : சோழகுலவல்லி நல்லூரில் அமைந்துள்ள கைலாசநாதர் சிவன் கோயிலுக்கு இவ்வூரைச் சேர்ந்தவர்கள் திருநந்தா விளக்குக்காக நிலக் கொடை அளித்துள்ளனர்.*

1 ஸ்வஸ்திஸ்ரீ பூமாது புணரப் புவிமாது வளர நாமாது விளங்க ஜயமாது தன்னீடு பதமலர் மன்னவர்... சூட மந்நிய....

2 ரிமையால் மணிமுடி சூடிச் செங்கோல் சென்று திசைதொறும் வளர்ப்ப வெங்கலி நீக்கி மெய்யறந்தழைப்பக் கலிங்குடை நிழற்ற வீற்றி

3 ரியக்கடல் மலை... ப்ப வலங் கோளாழி வரை யாழி நடாத்தி இருசுடர் ...ஹாஸனத்து

4 க்கோக்கிழானடிகளொடு விற்றிருந்தருளிய கோபரகேசரி பந்மரான சக்கரவர்த்திகள் ஸ்ரீவிக்கிரம சோழ தேவற்கு யாண்டு 10 பத்தாவது

5 ராஜராஜ வளனாட்டுப் பட்டான்பாக்கைனாட்டு சோழகுலவல்லி நல்லூர் ஊரோம் [எ]ழுத்து எங்களூர் ஸ்ரீ கயிலாஸமாந ராஜேந்திர

6 சோளிஸ்வரமுடையார் கோயிலில் தேவகன்மிகளும் ஸ்ரீ மாஹேஸ்வரக் கண்காணி செய்வார்களும் ஊர் கண்காணி செய்வார்.

7 களும் கண்டு இத் தேவர்க்கு திருநந்தாவிளக்கு ....

8 றக்கும் காடுகாள் கோயிலுக்கு வட

9 பால் வீதியில் தெற்கில் வாய்காலுக்குப் போகிற வழிக்கு கிழக்குப் பந்நிரு கோல் நீக்கிற கிழக்கு

10 ... இரண்டு இதிலெ வைக்கோல் திரட்டிப் பசுவுக்கிட விட்ட நிலம் 2 மா அம்பலத்திற் கீழைத்தோட்டதிறைக்க விட்ட நிலம் 2மா ஆகநில

11 ... றுமாவும் விட்ட பரிசாவது சோழலத்தேரிவதிக்கு கங்கை கொண்ட சோழவாய்க்காலுக்கு வடக்கு இரண்டாங் கண்ணாற்றுச் சதுரத்துத் தெற்மிடந்த ஆறுமாவிலை

12 ற்கடைய நிலம் 3மா இந்நில மூன்று மாவுங் களபப் பதிநொன்றாந் தரத்திலெ கிடந்தமையில் இது அருலோடொக்க நீர் நிலமாகச் சீயமுழார் உய்யவ

13 பிள்ளை திருத்துவித்துக் கொண்டாலும் எங்களூர் விரிவிலெ யிறுக்கிலும் மடக்கிலெ யிறுக்கிலும் பத்திரண்டாந் தரத்திலெ இறுக்கக் கடவிதாகவும் இம்

14 னை இரண்டு நொக்கி வந்தது எப்பேர்ப்பட்டதும் இறுக்கக் கடவ

தல்லாதித்தாகவும் இப்படி சந்திராதித்தவற் செல்லுவதாக ஸம்ஹதித்து விட்டோஞ் சோழகுல... இறை இறுத்துக் குடுக்கக் கடவோமாகவும் ஸம்மதித்தொ...ர் ஊர்க் கணக்கரோம்

---

ஆய்வின் போது உதவிய பேராசிரியர் கோ. விசய வேணுகோபால் (பிரஞ்சு இந்திய பண்பாட்டுக்கழகம், புதுச்சேரி) அவர்களுக்கு நன்றி.

# 17. இராசாப்பட்டி கல்வெட்டுகள்

***கரு. இராசேந்திரன், மேலப்பனையூர்.***

## 17:1

*இடம் : புதுக்கோட்டை மாவட்டம் இராசாபட்டி சிவன் கோயில்.*
*காலம் : மூன்றாம் குலோத்துங்கன் யா: 17 (கி.பி.1195).*
*செய்தி : கோயிலுக்கு தேவதானமாக அளிக்கப்பட்ட நிலங்கள் பற்றியது.*

1 ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவநச் சக்கரவத்திக ளீழமுமதுரையும் பாண்டியந் முடித்தலையுங் கொண்டருளிய ஸ்ரீகொலோத்துங்க சோழ தே
2 வற்கு யாண்டு 17ஆவது இரட்டபாடி கொண்ட சோழ வளநாட்டுறத்தூர் கூற்றத்து கோனாட்டுச் சா... சாணக்சீசுரமுடைய னாயனாற் கிவ்வூர் அரையகள்
3 பிக்ஷுகுவால பிள்ளையாற்கு வியாபாரி பூண்டியுடையான் பெரியாந்களு நாய
4 னாற்கு தேவதானமாகத் திருக்கை மலருதகம் பன்னின வயலாவது
5 எங்கள் காணியாய் னாங்களனுபவித்து வருகிற மங்கல...
6 செய்க்கு கிழக்கு மலட்டாற் கெல்லை கிழக்கோடிய வாய்க்காலுக்கு தெற்கு...
7 னோக்கின மரமுங் கீணோக்கின கிணறும் உடும்போடியாமை...
8 ... வை தலைவார்யந் செய்க்கு வடக்கு ஆக இசைந்த பெருநான் கெல்லைக்குட்பட்ட
9 ... உள்ளிட்டார் சக்தி வயலுக்கு கிழக்கும் வடபார் கெல்லை பார் துடவைக்கு தெற்கு
10 ... சேந்த பெருனாங்கெல்லைக்குட்பட்ட நிலம் அநனாடாசான...
11 மேனோக்கின மரமுங் கீணோக்கின கிணறும் உடும்போடியாமை..

## 17:2

*இடம் : மேலது.*
*காலம் : மூன்றாம் குலோத்துங்கன் யா: 11 (கி.பி. 1189).*
*செய்தி : எதிரிலிப் பெருமாள் இவ்வூர் சிவன் கோவிலுக்கு நில தானம் கொடுத்தமை.*

1 ஸ்வஸ்தி ஸ்ரீ திருபுவனச் சக்கரவத்திகள் ஈழமு மதுரையும் பாண்டியந் முடித்
2 தலையும் கொண்டருளிய குலோத்துங்க சோழ தேவர்கு யாண்டு 11ஆவது...

3 ... பாடிகொண்ட சோழவளநாட்டு உறத்தூர் கூற்றாத்து தெந்கோந்னாட்டு... சாணக்கீசிரமுடைய நாயனா

4 ற்கு சாரஅரையந் த[ன்னன்ன]திரிலாப் பெருமாளான குலோத்துங்கசோழக் கடம்பயராயரே[னன்]

5 இன் *நாயனார்க்கு இறையிலி தேவதானமாமாகத் திருக்கை* மலரில் உதகம் பண்ணிக் குடுத்...

6 ங்க...க பொதிந்து வருகிற மங்கலம் குள[த்துக்கு] பெருநான் கெல்லைக்குட்பட்ட

7 மேல்நோக்கிய மரமும் கிழ்நோக்கிய கிணறும் உடும்போடி யாமை தவழிய மற்றும் எ

8 ப்பேர்பட்ட கடமை குடிமையும் பூஜைக்கும் திருப்பணிக்கு முடலாக நான்.

9 ...

## 17:3

*இடம் : மேலது.*

*காலம் : மூன்றாம் குலோத்துங்கன் யா: 18 (கி.பி.1196).*

*செய்தி : எதிரிலிக் கடம்பராயன் சரணாக்கீசுவரமுடைய நாயனார் கோவிலுக்கு பூசை திருப்பணிக்கு அளித்த நிலக் கொடை.*

1 ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவநச் சக்கரவத்திகளீழமு[ம்] மதுரையும் பாண்டியந் முடித்தலையுங் கொண்டருளிய கு

2 லோத்துங்க சோழதேவற்கு யாண்டு 18வது, இரட்டபாடி கொண்ட சோழவளநாட்டு உறத்தூர் கூற்றத்து தென்கோனாட்டு சார

3 சரணாக்கீசுவரமுடைய னாயனாற்கு இன் னாட்டு சாரஅரையன் தன்ன [ன் எதிரில]ாப் பெருமாளாந குலோத்துங்க சோழக்

4 கடம்பராயநேந் பெருமாள் *சீபாதத்து* விண்ணப்பத்திட்டு போகவிட்ட அருளிச் செயற்படி சாரவயல் புரவின்படி

5 நிலத்தில் இன்னாயனர் தேவதாந நிலத்தில் பழந்தேவதானமாய் வருகிற நிலமுந்திருநாமத்து காணியாக நாயநார்..

6 விலை கொண்டுடைய நிலமும் குடி மக்கள் பலரும் திருக்கை மலரில் நீர் வார்த்து குடுத்த நிலமும் ஊர் ஒழுகின்படி அகவ

7 யல் நம்பன் வயக்கலும் தேவன் வயக்கலும் கொடுமுடுக்கு தடிஇர ண்டும் பறிகாலும் பிச்ச தேவந் வயக்கலும் தேவந் வயக்கலும் பறிகாலும் தொத்துபுரதுரை...ணும்

8 சலக்குறையும் நகரத்தாந் வயக்கலும் ...சிங் நெடுங்கனும்...ம், இதன் கிழக்கு தேவ...

9 ாம் இதன் மேற்கு முடுக்கு பறிகாலும் மேற்கு து...

10 வயலும் மாஞ்செயும் குறுக்கத்தி துடவையும் கல்லதுடவையும் கு.. துடவையும் பாதிரிச் செயும் உத்திநி ..

11 மை நங்கை வயக்கலும் தெங்கந் திருனந்தவானமும் பொந்...ா... வயக்கலும் சிறு... வயக்கலும் ...ச் செ

12 யும் கூத்தறிகுளமும் மணவயக்கலும் உள்ளிட்ட நிலம்... வயல் புரவுக்குள் பட்ட ஏர் அகவாய்கு...

13 ச்ச வயல்தடி நிலம் சாவப ஆக நிலம்... இன்னிலம் அரையேழும் மாவரையால் வந்த பசான கடமை விளைந்த நிலத்தால்

14 வந்தந விரைக்கடமை அற்பசி குறுவை மற்றும் னெல் கடமையால் வந்தநவும் கீழிறையால் வந்தன பயிர் உள்ளிட்ட கடமையால் வந்த

15 னவும் இறையிலி அந்தராயங்களால் வந்தனவும் கூட்டிக்கொணடு பெருமாள் திருமேனிக்கு னன்றாக சந்திராதித்தவர் பூசை செல்லவும் தி

16 ருப்பணிக்குடலாகவும் அருளிச்செயற்படி கல்வெட்டி குடுத்தேந் குலோத்துங்க சோழக் கடம்பராயநேந் இது பன்மாஹேஸ்வர ரகைஷ

## 17:4

*இடம் : மேலது.*

*காலம் : குலசேகரன் யா: 34 கி.பி. 13 நூற்றாண்டு .*

*செய்தி : கோயில் தேவகன்மி, கோயில் கணக்கர், ஊரார் ஆகியவர்கள் கூடி கோவிலைச் செப்பனிடுவதற்காக முயற்சி எடுத்தமை.*

1 ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ குலசேகர தேவற்கு யாண்டு 34 வது துலா ஞாயி...

2 திங்கட்கிழமையும் பெற்ற உத்திரத்து நாள் கோனாடான கடலடையாதிலங்கை கொண்ட சோழவளநாட்டு உறத்தூர் கூற்றத்து காருடையார் சாணக்கீ...

3 ஆதி சண்டேசுர தேவரருளா.. சீமாகேசுர கண்

4 ணி தேவகன்மி கோயில் கணக்கு சீகாரியஞ்செய்வார்... ஊரா யிசைந்த ஊரோமுங் கூடிப் பார்த்து இக்கோயில்

5 பெருமாள் மண்டபத்திலு அரசு உள்ளிட்ட ....

6 .... எழுந்து கல்லு சரிந்து மேமண்டபங்கள் விழுகையில் அழிவு சோரவேனுமென்று எங்களில் விசாரிக் ....

7 பார் ஒருத்தரில்லாதபடியினாலே இன்னாயனார் ....

---

# 18. அருப்புக் கோட்டை மீனாட்சி சொக்கநாதர் கோயில் கல்வெட்டுகள்

சொ. சாந்தலிங்கம், மதுரை.

## 18:1

இடம் : விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை சொக்கநாதர் கோயில் அர்த்த மண்டப தென்சுவர் மேல்மட்டம்.

காலம் : முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் யா: 8 (கி.பி. 1223).

செய்தி : தென்னிலங்கை வளஞ்சியரில் சேகல் சேவகத் தேவன் அருந்தவஞ் செய்த நாச்சியாரை (உமை) எழுந்தருளுவித்தமை.

1 ஸ்வஸ்திஸ்ரீ சோணாடு வழங்கியருளி
2 ய சுந்தர பாண்டிய தேவற்கு யாண்டு 8
3 வது இடத்துவளி விக்கிரமபாண்டியந்
4 பெருந்தெருவில் தென்னிலங்கை வளஞ்சி
5 யரில் சேகல் சேவகத் தேவனான இலுப்பை
6 யூர் கிழவன் அருந்தவஞ்செய்த நாச்சியாரை எ
7 ழுந்தருளுவித்தான்.

## 18:2

இடம் : அதேவூர், அதே கோயில், அர்த்தமண்டப தென்சுவர், முதல் கல்வெட்டின் கீழ்.

காலம் : குலசேகரதேவர் யா: 13+5 (கி.பி. 1207–1208).

செய்தி : திருவாயில் நிலைக்கால் செய்தது.

1 ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடைய பன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள்
2 ஸ்ரீ குலசேகர தேவற்கு யாண்டு 13வதின் எதிர் 5வது வெண்பில் நா
3 ட்டுச் செங்காட்டிருக்கை இடத்துவளி நாயனார் குறள் மாணி
4 ஈஸ்வரமுடைய நாயனார் திருமடைவிளாகத்தில் கைக்கோளரில்
5 குழைஞாரன் சங்கனான புரவரிமாராயன் இன்னாயனர் கோயிலில் அத்த
6 மண்டபத்தில் திருவாயில் திருனிலைக்கால் வெட்டிவித்தான் இது இவ
7 ன் தன்மம் ஸ்வஸ்திஸ்ரீ

## 18:3

இடம் : கருவறை மேற்குத் தேவகோட்டத்தின் தென்புறச் சுவர்.

காலம் : சோணாடு வழங்கியருளிய சுந்தரபாண்டியன் யா: 8 (கி.பி. 1223–24).

*செய்தி : லிங்கபுராண தேவரை எழுந்தருளுவித்தமை .*

1 ஸ்வஸ்திஸ்ரீ சோணாடு வழங்கி
2 யருளிய சுந்தரபாண்டிய தேவற்கு
3 யாண்டு 8வது இடத்துவளி வீ
4 ரபாண்டியன் பெருந்தெருவிற்
5 தென்னிலங்கை வளஞ்சியரிற்
6 சேகல் சேவகத் தேவனான இலுப்பை
7 யூர் கிழவன் இலிங்கபுராண தே
8 வரை எழுந்தருளுவித்தான்.

## 18:4

*இடம் : அர்த்தமண்டபம் வடக்குச் சுவர்.*
*காலம் : சுந்தரபாண்டியன் யா: 15 (கி.பி. 1230–31).*
*செய்தி : துர்க்கையாரை எழுந்தருளுவித்தமை.*

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவ
2 னச் சக்கரவத்திகள் சோ
3 ணாடு முடி கொண்ட சோ
4 ழபுரத்து வீராபிசேக
5 ம் பண்ணியருளிய சுந்தர
6 பாண்டிய தேவற்கு யா
7 ண்டு 15 வது உடையார்
8 குறழ் மாணிச்சுவரமுடை
9 ய நாயனார் கோயில் து
10 ற்கையாரை எழுந்தரு
11 ளுவித்தான் ரெட்டை அ
12 ழகனான இடத்து
13 வளி தட்டான்.

---

# 19. பேரையூர் மொட்டை மலைக் கல்வெட்டு

பொ. இராசேந்திரன்; சொ. சாந்தலிங்கம், மதுரை.

*இடம் : மதுரை மாவட்டம், பேரையூர் மொட்டை மலை மல்லிகார்ச்சுனர் கோயிலின் பின்புறம் உள்ள திறந்த வெளிப் பாறைப் பகுதி.*

*காலம் : முதலாம் சடையவர்மன் வீரபாண்டியன் யா: 27 (கி.பி.1280).*

*செய்தி : கடுங்கோமங்கலத்து ஊரார் முத்துடையார் விக்கிரம சிங்க தேவனுக்கு நிலமும் குளமும் விற்பனை செய்துள்ளனர். அதனை வாங்கிய அவன் இங்குள்ள சிவன் கோயிலுக்குத் தேவதானமாக வழங்கினான்.*

1 ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடைய பன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள்
2 கொங்கீழமுங்கொண்டு கொடு வடுகு கோடழித்து கங்கை
3 வடவெல்லை காவிரி கைக்கொண்டு ..ஞ்செ
4 காற் தென்கரை தங்கு புனற் சடையோன் புலியூரி
5 ருந்து வீராபிசேகமும் விசையாபிசேகமும் பண்ணி
6 யருளிய வீரபாண்டிய தேவற்கு யாண்டு 27 ஆவது செங்
7 குடி நாட்டு கடுங்கோமங்கலத்து ஊராயி
8 சைந்த ஊரோமும் மேற்படியூர் முத்துடையார்
9 கிரமவித்தன் விக்கிரம சிங்கதேவற்கு இவ்வூர்மேல்
10 மங்கல கருங்குளம் நாயனார் திருநெற்சுரமுடைய
11 நாயனார்க்கு இது தேவதானமாகக் கொண்டி
12 ட்ட குளத்துக்குச் சூழெல்லை வேடற்கரைக்கு
13 மேற்கும் தெற்கு மடப்புறத்துக்கு மேற்கும் இதன னால்
14 கெல்லை செங்குளத்துத் தேவதானத்துக்கு வடக்கும்
15 மேலெல்லை உத்தம நத்தத்துக்கு கிழக்கும் இதன் மேற்கு
16 நீரோடு காலுக்குக் கிழக்கும் வடவெல்லை வைலுக்கு தெற்கும்
17 யிவ் விசைந்த பெருநான் கெல்லைக்குட்பட்ட குளமு
18 குளக்காலும் மற்றும் எப்பேற்பட்டனவும் கீணோக்கின கிண
19 றும் மேனோக்கின மரமும் பண்ணையும் பண்ணைக்காலும்
20 காலுள்பட்டி தொழக்காலும் நந்தமும் நத்தப் பாழும் மற்று
21 மெப்பேற்பட்டனவும் எம்மிலிசைந்த விலைப் பொருளுக்கு
22 விலைக்குறவிற்று பொருளறக் கொண்டு விற்று விலை செய்
செய்தி : *கல்வெட்டுள்ள கல்லின் மறுபுறம் வேல் பொறிக்கப்பட்டுள்ளது. கும்பினியார் ஆட்சியில் மலையாளம் இரண்டாம் பட்டாளத்தில் பணிபுரிந்த இரணியல் ஊரைச் சேர்ந்த ராமன்பிள்ளை என்பவரின் நினைவாக இச்சுமைதாங்கிக் கல் நடப்பட்டுள்ளது.*

1 998 வருஷம்

2 மார்கழி மாசம்

3 21சுக்குறவார

4 த்தில் பினனாகு

5 ளம் காட்டில்
6 மலையாளம் ரெண்டா
7 ம் பட்டாளத்தி
8 ல் முந்திய கும்பி
9 னியில் அமரே]ர]
10 இரணியல் ராமன்
11 பிள்ளைக்கு வே
12 லாயுதம் துணை

## 31:10

*இடம் : கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை வட்டம், புத்தேரி எனும் ஊரில் அரசு மேனிலைப் பள்ளிக்கருகிலுள்ள குத்துக்கல்.*

*காலம் : கொல்லம் 1042 (கி.பி. 1867).*

*செய்தி : மாதேவன்பிள்ளை என்பவர் தர்மம் செய்திருப்பது தெரியவருகிறது.*

1 1042
2 கார்த்திகை மாதம் 29
3 வடச்செ]ரி]
4 புத்தேரி
5 மாதெவன்
6 பிள்ளை... சான
7 ...க
8 தர்மம்

## 31:11

*இடம் : புத்தேரி- இறச்சகுளம் சாலையில் வலப்புறமுள்ள குத்துக்கல்.*

*காலம் : கொல்லம் 1048 (கி.பி. 1878)*

*செய்தி : சங்குபிள்ளை ராமலெட்சுமி தர்மத்தைக் குறிப்பிடுகிறது.*

1 1048
2 அல்ப்பி
3 சி மாதம் 7 தேதி
4 புத்தேரி
5 சங்கு பி
6 ள்ளை ராமலெ
7 ச்சிமி உ
8 தர்மம்

## 31:12

*இடம் : கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம் திருப்பதிகாரத்திலுள்ள திருவாழ்மார்பன் கோயிலில் உள்ள பித்தளை திருவாசி.*

*காலம் : கொல்லம் 1063 (கி.பி.1888), வைகாசி மாதம் 15ம்தேதி.*

*செய்தி : இக்கோயிலுக்கு சிவஞானபிள்ளை என்பவரால் திருவாசி செய்தளிக்கப்பட்டுள்ளது.*

1 1063 வருடம் வை.
2 காசி மாதம் 13உ சுக்கி
3 ற வாரமு பவுற்ண
4 மியும் கூடிய தினத்தில்
5 மெ ...
6 றச்ச ]ன்]தொ. சம்பிற
7 தி சிஞானம் பிள்
8 ள சகாயம் ஈசுரமூற்
9 த்தி ஆசாரியால் பணிப
10 கூரது உ

## 31:13

இடம் : கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், இளையநயினார்குளம் கிராமத்தில் நாகர்கோவில் – ராஜாவூர் சாலையின் இடப்புறத்தில் பத்தாயபிறைக்கு எதிரே உள்ள சுமைதாங்கிக் கல். இரு குத்துக்கல் மட்டும் காணப்படுகிறது. மேலே இருந்த கல் தற்போது இல்லை. இவ்விரு குத்துக்கற்களுள் ஒன்றில் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது.

காலம் : கொல்லம் 1086 (கி.பி.1911).

செய்தி : பெருமாள்பிள்ளை என்பவர் மரித்ததின் நினைவாக அவரின் இரண்டாம் நாள் காரியமான காடாத்து நிகழ்வுக்குப்பின் அன்னாரது மகன் ராமசாமி என்பவர் நல்லூரைச் சார்ந்த தட்டான் விளையில் ஏமக்கால் நட்டார்.

1 1086
2 வருடம் மார்
3 கழி10 தியதி
4 சாமம் மரித்
5 தது பெ
6 குமான்ப்
7 பிள்ளைக
8 ாடாச்சி
9 நிறுத்தி
10 னது நல்
11 லூரைச் சே
12 ர்ந்த கத
13 ட்டான் வி
14 ளையிலிரு
15 க்கும் ஏம
16 கால் நட்]ட]ா
17 ல்மேற்படிமக
18 ன் ராம
19 சாமி நா
20 பா

---

செந்தீ நடராசன், பாலா(நாகர்கோவில்). ஆரல்வாய்மொழி அறிஞர் அண்ணா கல்லூரி, பேரா அ.கா பெருமாள் ஆகியோருடன் கல்வெட்டு 1 கண்டுபிடிக்கப்பட்டது. செந்தீ நடராசன் தகவலளித்தன் பேரில் கல்வெட்டுகள் 9,13 கண்டுபிடிக்கப்பட்டன.

# 32. மேல்பட்டாம்பாக்கம் கல்வெட்டு

**கோ. கிருட்டினமூர்த்தி, அனந்தபுரம்.**

*இடம் : கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம். கடலூர்–பண்ருட்டி நெடுஞ்சாலையில் சுமார் 13 கி.மீ தொலைவில் உள்ள மேல்பட்டாம்பாக்கம் ஊரில் சிவன் கோயில் விதானம்.*

*காலம் : கிருஷ்ணதேவராயர், சகம் 1438, (கி.பி. 1516)*

*செய்தி : 152 x 38 செ.மீ உள்ள பலகைக் கல்லில் முதல் நான்கு வரிகள் பெரிய எழுத்துக்களால் செதுக்கப்பட்டுள்ளன. முதல் இரண்டு வரிகள் சிதைந்துள்ளளன. கடைசி வரியும் அழிந்துள்ளது. இடையில் உள்ள வரிகளில் சில எழுத்துக்கள் சிதைந்துள்ளன. சந்திர நயினார், பட்டாம்பாக்கம் செங்கழுநீர் செல்ல பிள்ளையார்க்கு அவல்புறமாக 500 குழிநிலத்தைக் கொடையாக அளித்துள்ளார்.*

1 ... சகா
2 த்தம்1438
3 மேல்
4 செல்லா நின்
5 ற தாது வருஷத்து
6 கும்ப நாயற்று பூ
7 றுவ பக்ஷத்தி சு
8 க்கிற வாரமும் மக
9 மும் பெற்ற நாள்
10 கிருஷ்ணதேவ மக
11 ராயர் காரியத்துக்
12 கு கடவ கரணிக்க
13 மங்கரசயந் தன்
14 ம்மாக சந்திரநயி
15 னார் விட்ட பட்டா
16 ன்பாக்க வளநா
17 ட்டு சோழகுல வ
18 ல்லி பற்று மேல்
19 ப்பட்டாம்பாக்[க]
20 ம் செங்கழு நீர்
21 செல்லப்பிள்ளை
22 யார்க்கு அவல்பு
23 றமாக விட்ட ம
24 கண்டியான க
25 ரை தாங்கல் குழி
26 நஞ்சை ...15
27 தினையன் பாக்க
28 ம் நஞ்சை குழி
29 ... ஆக குழி
30 500 இந்த குழி
31 அந்நூறும் அவல்
32 புறமாக சந்திர அ
33 வரையும் செ
34 லுத்த கடவது ஆ[க]
35 நிலம் இதுக்கு யா
36 ர் ஒருவர் அகித
37 ம் நினைத்தவர்
38 கள் கெங்கைக்
39 கரையில் காராம்
40 பசுவை கொன்.

---

பேராசிரியர். விசய வேணுகோபால் உதவியுடன் இக்கல்வெட்டு அறியப்பட்டது.

# 33. ஆறுமுகநேரி கல்வெட்டு

த.த. தவசிமுத்து, ஆறுமுகநேரி.

இடம் : தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், ஆறுமுகநேரி, திசைக்காவல் தெருவில் உள்ள குருநாதசாமி கோயில் வளாகத்தில் முண்டகசாமி என்று வழிபடப்பெற்று வரும் வெள்ளைக்கல்.

காலம் : சகம் 1582 (கி.பி. 1660).

செய்தி : 120 செ.மீ. உயரம், 45 செ.மீ. அகலம், கொண்ட கல்லின் மூன்று பக்கங்களில் கல்வெட்டுள்ளது. எழுத்துக்கள் பல இடங்களில் பொரிந்துள்ளன. தொடர்ச்சியாகக் கல்வெட்டின் பொருளை அறிய முடியவில்லை. அசுப நாட்டுக் கணக்கப்பிள்ளையால் மேற்கு ஆறுமுகநேரியில் மூன்று விளை நிலம் கொடையாகத் தரப்பட்டுள்ளது.

**முதல் பக்கம்**

1 சகாப்த
2 ம் 15
3 80உ
4 மேல்செ
5 ல்லா நின்
6 ற கொல்
7 லம் 840
8 வருடம்
9 ற்பிசி...
10 ...
11 ...
12 சுப யோ
13 க சுபகர
14 ணமும்செ
15 பற்ற ரேவ
16 தி நாள்ச்
17 செய்த தன்
18 மசாதன
19 ம்மாவது

**இரண்டாம் பக்கம்**

20–24 ...
25 ர்விசாக
26–28 ...
29 விட்டது
30 கு புண்ணி
31 யக்ஷேத்
32 ம் ஊர் அள
33 வு வெட்ட

**மூன்றாம் பக்கம்**

34 அசுப நா
35 ட்டுப் கண
36 க்கப் பிள்
37 ளயள் புண்
38 ணியமா
39 கவும் கட்ட
40 ளையிட்ட
41 மடத்துக்கு
42 த் தெற்கு பல
43 ாத்து எ
44 ல்லைக்கு வட
45 க்கு வி
46 ளை மூன்று
47 மேற்கு அறு
48 முகனேரி

# 34. கரிசல்பட்டிக் கல்வெட்டு

***சி. இலட்சுமணன், சிங்கம்புணரி.***

*இடம் : சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம் கரிசல்பட்டி கைலாச நாதர் கோவில் கற்பக்கிரகத்தின் தென்சுவர்.*

*காலம் : விசுவாவசு வருடம் (கி.பி. 1745) பங்குனி மாதம் 15ஆம் நாள்.*

*செய்தி : பொம்மயநாயக்கர் கயிலாசநாதர் பூசைக்கு நிலம் வழங்கியது.*

1 விசுவாவசு வருஷம் பங்குனி மாதம் 12 கயிலாச நாதற்கு பூசைக்கு
2 பொம்மய நாயக்கர் வீரொசு பொம்
3 மைய நாயக்கதனம்மாக வராப்பூர் க
4 ளமும் வயலும் அதில் சேந்த புஞ்சையு
5 கட்டளையிட்டோம். சந்திராதித்தள் வரையும்
6 நடத்திவரவும் இதற்கு யாதொருவர் அகிதம்
7 பண்ணினவர்கள் கெங்கைக் கரையில்
8 காராம் பசுவைக் கொன்ற தோஷத்தில்ப்
9 போகக்கடவும் உ திருக்கொடுங்
10 குன்றத்து நம்பிமாரில் காதுகைய் பட்டர்
11 யிள பட்டர் உள்ளிட்டார் இந்நிலம் புஞ்சையும்
12 ...யும் பற்றிக் கத்திரிக்கொண்டு சந்திராதித்தவர்
13 ரை அனுபவிக்கக் கடவார்களாகவும்

# 35. அரபிக் கல்வெட்டுடன் குமிழி

**கி. ஸ்ரீதரன், திருச்சி.**

இடம் : திருச்சிராப்பள்ளி மாவட்டம், நாவலூர் குட்டப்பட்டு ஊரில் உள்ள பெரியகுளம், பாப்பான்குளம் என்னும் இரு குளங்களில் காணப்படும் கல்வெட்டு.

காலம் : ஹிஜிரி ஆண்டு *1166* கி.பி. *1746*.

செய்தி : குமிழிகளில் அரபி எழுத்தில் கல்வெட்டுள்ளது. ஹிஜிரி அரபி எண்களில் உள்ளது. ஆண்டுக்கு கீழே பத்ரே ஆலம் என்ற எழுத்துக்களும், புடைப்புச் சிற்பமாக முழுநிலவின் சிற்பமும் உள்ளன. பத்ரே ஆலம் என்ற இசுலாமியர் இக்குமிழிகளை அமைத்திருக்கலாம்.



---

கல்வெட்டு குறித்து தகவல் தந்துவிய திரு. வெ. சுபாஷ்சந்திரபோஸ் (திருச்சி), படியெடுத்து உதவிய திருவாளர்கள், ப. பூபாலன், க.ஈசுவரன், ச. நடராசன், (தொல்லியல்துறை) ஆகியோருக்கு நன்றி.

# 36. தமிழ் மொழிபெயர்ப்புக் கல்வெட்டு

*க. பன்னீர்செல்வம், மைசூர்.*

*இடம் : பாண்டிச்சேரி, டியூப்ளே சிலை.*

*காலம் : மூன்றாம் நெப்போலியன் (1808-73).*

*செய்தி : இலத்தீன் மொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட கல்வெட்டு. விஜய நகர மன்னன் கிருஷ்ணதேவராயரின் காலத்தில் தேவதாசி ஒருத்தியால் குளம் வெட்டப்பட்டது. இந்த நல்ல செயலைப் பாராட்டி மூன்றாம் நெப்போலியன் காலத்தில் பராமரிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.*

1 இத்தென்னாட்டைப் பார்க்க முந்நாளில் ராயவேலூரிலிருந்து கிருஷ்ணாராயருமவர் மந்திரி

2 அப்பாஜி ஐயரும் சீமைப்பிரதாபராய் வரும்போது வில்வநல்லூரிலிறங்கினார்கள் அங்கே தெகத்திலோர்

3 வினோதத்தையுடைய உய்யகுண்ட விசுவராய முதலியாரென்றொருவர் உழவர்கரையிலிருக்கிறதை

4 கேள்விப்பட்டு அவ்வாச்சிரியத்தை போய்பார்த்து முத்திரியர்பாளையத்து வழியாய் மாலை நேரத்திற் செல்லும்போது

5 அவ்விடத்தில் ஆயியென்னுமோர் தாசியின் சிறந்த மாளிகையில் தோன்றிய அகில தூபதீபங்களைக் கண்டிஃதோர்

6 ஆலையமென்றெண்ணிக் கரங்குவித்தர்கள் இதைக் கண்டோர் அது ஓர் தாசி வீடென்று சொல்லவே அவ்

7 விருவரும் என்ன பாவமென்று கோபித்து இதற்கு விமோசமாக அம்மாளிகையையிடித்து அவ்விடத்தில்

8 ஓர் கிணருங் குளமுந் தோண்ட வேண்டு மென்ன இதைக் கேட்ட அந்த ஆய்யியென்பவளவர்கள்

9 பாதத்தில் வீழ்ந்து தன்பொருளைக் கொண்டே அத்திருப்பணியை நிறைவேற்றிக் கொள்வதற்கு

10 உத்தரவு பெற்று அக்கிணத்தையுங குளத்தையுஞ் தோண்டுவித்தாள் ஆந்நாள் முதற்கொண்டதற்கு

11 ஆயிக்குளமென பெயர் வழங்கி வருகின்றது

12 அம்மேலான செய்கைக்கோர் சம்பாவனையாக மகாராயர் 3-வது நப்போலயோம்

13 அவளிந்த ஜலமாளிகையில் எந்நாளுரு மிளப்பாற விடந் தந்தருளினார்

14 உக்கரமூர்த்தி ஆசாரி

---

இ க. 1936-37 : 179 இக்கல்வெட்டை வெளியிட அனுமதி அளித்த இயக்குநர் (கல்வெட்டு) அவர்களுக்கு நன்றி

# 37. ஆர்க்காடு தோப்கானா பகுதி கோயில் கல்வெட்டுகள்

து. துளசிராமன், ஆர்க்காடு.

## 37:1

இடம் : வேலூர் மாவட்டம், ஆர்க்காடு, தோப்கானா பகுதியில் உள்ள கெங்காதரீஸ்வரர் மண்டபத்தின் கிழக்கு வாயிலின் மேற்புறம்.

காலம் : சகம்: 1818(கி.பி. 1896).

செய்தி : ஆர்க்காடு சந்திரபானு அக்கிரஹாரத்தில் ஒரே திருச்சுற்றுள் அமைந்துள்ள உள்ள சிவாலயம் மற்றும் விஷ்ணுவாலயம் ஆகியவற்றுக்கு ரவி, மதி, மணி, அரி அரன் ஆகியோர் வழங்கிய நில தானம்.

1 சொஸ்தி ஸ்ரீ சாலிவாகன வருடம் 1818 மன்மத ஆர்க்காடு சந்திரபானு அக்குறஹாரத்தில் வீத்திருக்கும் சிவாலயம் விஷ்ணுவா

2 லயத்திர்க்கு பன்டாக மேற்படி தாலுக்கா 66-நெ பின்னபாடியில் சன்மாந் ந.செ. 126 நெ.யே 10.16.68 நெ. 2.82.77 நெ. 2.00. பு.செ. 177.நெ யே 130.

3 17 நெ. தாழனூரில் 155 நெ. சன். மா. யே-1.38. யின் னிலங்களின் வரும்படியில் தீர்வை கட்டி மிகுதியை கெங்காதரேஸ்வரன் அன்னபூர்ணி

4 அம்மாள் வினாயகர் நவகிரக சமஸ்த பிம்பங்களுக்கு நித்திய தூப தீப நைவேத்திய குருக்கள் பன்டாரம் சிப்பந்தி சிலவுக்காக பாகம் முக்காலும் வருதராஜ

5 பெருமாள் பெருந்தேவி தாயார் சிலவுக்கு பாகம் காலுமாக... கையொப்பமிட்டவர்கள் சுயார்சித்தளம் குடுத்து கிரயத்துக்கு வாங்கி தேவாலய கை

6 ங்கரியங்களுக்கு. றவி-மதி-மணி-விண்-ஹரி அரன் உரிய தானம் செயிது விட்டோம். னாங்களும் எங்கள் வார்ஸகளும் நடத்திவரும் கைங்கரி

7 யங்களில் வித்தியாசமாவது அசரத்தை யாவது நேரிடும் பக்ஷத்தில் தகுந்த பொறுப்புள்ள யாறாவது ஜாயன்டாயிருந்து நடத்த யாறுடைய ஆசேஷபமும் யிறாது.

## 37:2

இடம் : வேலூர் மாவட்டம் ஆர்க்காடு தோப் கானா பகுதியில் உள்ள வரதராச பெருமாள் கோயிலின் வலப்புறச் சுவரில்

காலம் : கி.பி. 1905.

செய்தி : மேற்படி கோயிலுக்கு ஆர்க்காட்டிற்கு அருகிலுள்ள முப்பது வெட்டி கிராமத்தைச் சேர்ந்த முத்தப்ப செட்டியார் குமாரர்கள் முருகேசசெட்டி, நரசிம்மசெட்டி, அப்பாதுரை செட்டி ஆகியோர் அளித்த நிலதானம்.

1 ஸ்ரீராம ஜெயம்
2 1905 வருடம் அக்டோப
3 ர் மாதத்துக்கு விஸ்வா
4 வசு வருடம் புரட்டாசி
5 மாதம் 22 தேதி சித்தூர் ஜி
6 ல்லா ஆற்காடு தா
7 லூக்கா – 11–நெ. மாங்கா
8 டு கிராமத்தில் நஞ்சை 4
9 நெம்–0–0–12க்கு தீர்வை
10 ரூ 0–6–9–12 நெம் மேற்படியூர்
11 4நெம்–நஞ் –0–8–0க்கு
12 தீர்வை ரூ 4–8–0க்கு யி
13 ண்டாண்டு தீர்வை
14 வ ரூ 2.12.0 இந்த நெ
15 ம்பருள்ள முக்கா
16 ணி நிலத்தை ஆற்
17 காடு புது தெருவு சந்த
18 ர பானு லாலா அக்ரார
19 த்தில் இருக்கும் ஸ்ரீ
20 வரதராஜ பெருமாள் பெ
21 ருந் தேவி தாயார் தீப
22 தூப நிவேத்தியத்திற்
23 கு ஆக முப்பது வெட்டி
24 வாழி முத்தப்ப செட்டி
25 யார் குமாரர்கள் முருகே
26 ச செட்டி நரசிம்ம செட்டி
27 அப்பாதுறை செட்டி
28 யெங்களால் விடப்ப
29 ட்ட தர்மம் மேற்படிசொ
30 த்து – யெங்களுக்கு
31 ம் யெங்கள் வார்சுக
32 ளுக்கும் யாதொரு பாத்
33 தியமும் கிடையாது.

---

தோப் கானா: ஆர்க்காடு நவாபுகள் காலத்தில் பீரங்கிப்படை இருந்த இடம் (தோப்–பீரங்கி கானா–இடம்) சந்திரபானு லாலா என்பவர் ஆர்க்காடு நவாப் முகமதலி வாலாஜா (கி.பி. 1749–1795) காலத்தில் இப்பகுதியின அரசு அதிகாரியாவார். ஆர்க்காட்டிற்கு வடக்கே இவர் பெயரில் லாலாப்பேட்டை என்னும் ஊர் உள்ளது சந்திரபானு அக்கிரகாரமும் அவர் பெயரில் உள்ளது

# 38. ஆமூர் மதகுக் கல்வெட்டு

நாக. கணேசன், கரூர்.

இடம் : திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், திருச்சி-சேலம் நெடுஞ்சாலையில் உள்ள ஆமூர் மதகு.

காலம் : கி.பி. 1879 - ஆம் ஆண்டு ஆனி மாதம் 10-ஆம் தேதி திங்கள் கிழமை.

செய்தி : நீர் வரும் பாதையில் கீழிருந்து 2.20 மீட்டர் உயரத்தில் பத்து வரிகளில் பொறிக்கப்பட்டுள்ளது கல்வெட்டின் வரிகள் கற்களால் மறைக்கப்பட்டுள்ளது. கல்லணைக்கு மேற்கே வாய்த்தலை (மதகு) கட்டப்பட்டமை.

1 ... லி வாகன சகாத்தக...
2 ... கலிபித்தக ...
3 ... ஆனி மாதம் கய திங்கள் கி ...
4 ... திகை அ[ரு] உத்திராட நட் ெ...
5 ... [சி] வருயெதிர் நாம் யெடு...
6 ... [னா] கிறசை வாகறணம் அரு ...
7 ... சத்திரி மேல்ல இ...
8 ... [ம்] யிந்த சுபதினத்தில் சிை ...
9 ... கணத்தில் சாத்தி வேளை ...
10 வாயித்தலை கட்டின ...

தகவல் அளித்த அமூர் அரசு உயர்நிலப்பள்ளி மாணவர்கள் ஜெ. லெனின், ஜெ. ஏங்கெல்ஸ், ராஜ்குமார் ஆகியோருக்கு நன்றி

# 39. சைதாபேட்டை கரும்பாடி அம்மன் கோயில் கல்வெட்டு

க. ஈஸ்வரன், சென்னை.

இடம் : சென்னை, சைதாபேட்டை, வாணியர் தெரு, கடும்பாடி அம்மன் கோயில் பக்கத்தில் ஒரு வீட்டில் உள்ள கல்வெட்டு.

காலம் : 2.9.1897.

செய்தி : சைதாப்போட்டையைச்சார்ந்த முனியப்ப செட்டியார் மற்றும் அவரது மணைவி கடும்பாடி அம்மனுக்கு சாயங்கால பூசை மற்றும் திருவிழாக்களுக்காக நான்கு வீடுகளைக் தானமாக அளித்தது, இத்தான சாசனத்தை சைதாப்பேட்டை துணைப்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ளனர்.

1 1897 வருடம் செப்டம்பர் மாதம் 2க்கு சரியான
2 ன ஏவிளம்பி வருடம் புரட்டாசி மாதம் 6உ செங்கல்பட்டு டிஸ்
3 டிரிக்ட் சைதாப்பேட்டை சப்டிஸ்டிரிக்ட் கஸ்பா சை
4 தாபேட்டையில் திருக்கோயில் கொண்டெழுந்தரு
5 ளியிருக்கும் கரும்பாடி சின்னம்மன் தேவஸ்தானத்திற்கு
6 சைதாப்பேட்டை வாணுவத் தெருவில் இருக்கும் வாணுவ...
7 ... தம் வர்த்தக ஜீவனம் கடமந்தை மகாரிஷி கோத்திரம்
8 சைதாப்பேட்டை வெங்கிடாசல செட்டியார் குமாரர்... முனியப்ப
9 செட்டியார் 1 மேற்படி பாரியாள் தாயம்மாள் 2 நாங்கள் இருவ
10 ரும் யேகோபித்து மனபூர்த்தியாய் எழுதி வைத்த தர்மசாச
11 னம் என்னவென்றால் எங்களுடைய சொந்தமான அ
12 டியில் கண்ட வீடுமனைகளை மேற்படி தேவஸ்தானத்தி
13 ற்க்கு சாயங்கால படித்தரமும் கத்திரி வுட்சவமு
14 ம் நவராத்திரி வுட்சவ முதலியவை நடத்துவதற்கும் தா
15 னமாக கொடுத்து விட்டோம் மேற்படி அலுவலை நடத்து
16 வதற்கு மேற்படி ... வந்தான தர்மகத்தாவையும் சைதை வா
17 ணுவ தெருவிலிருக்கும் கிராமத்தாரில் சிலரையு
18 ம் டிரஸ்டிகளாக நியமித்திருக்கிறோம் சொத்துக்
19 களை சைதாப்பேட்டை சப்ரிஜிஸ்டர் ஆபிசில்
20 மேல் கண்ட தேதியில் ரிஜிஸ்டர் செய்து டிரஸ்
21 டிகளிடம் ஒப்படைத்துவிட்டோம்.– சொத்துக்கள் வி
22 வரம். 1 சைதாப்பேட்டை வாணுவத்தெருவு 1. நெம்பர் வீ
23 டு 2 மேற்படி வாணியத் தெரு 28 நெம்பர் வீடு 3 ...
24 யநாம் செட்டி தெரு 14 நெம்பர் வீடு. 4 பெரியபேட்டை
25 வண்ணார் தெருவு. 35 நெம்பர் வீடு இப்படிக்கு

26 சைதாப்பேட்டை மேற்படி சொத்தின் டிரஸ்டிகள்
27 நந்தவரம் கன்னியப்ப செட்டியார்.
28 4 வைதாப்பேட்டை தேசப்ப செட்டியார்.
29 தேவஸ்தான தர்மகர்த்தா
30 பாலசுப்பிரமணியன் செட்டியார்
31 ஆரணி. கோவிந்து செட்டியார்.
32 முனியப்ப சேட்டியார்
33 தாயம்மாள்

---

# 40. ஆத்துமேடு இசுலாமியக் கல்வெட்டு

நாக. கணேசன், கரூர்.

இடம் : கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி வட்டம், பாளையம்–அரவக்குறிச்சி சாலையில் குடகனாற்றின் மேற்கரையில் பாலத்தின் தென்புறம் உள்ள பாறை .

காலம் : கி.பி. 18–ஆம் நூற்றாண்டு.

செய்தி : பாறையின் மேல்பகுதியில், மூன்று வரிகளில் உருது மொழிக் கல்வெட்டும், கீழ்ப்பகுதியில் ஐந்து வரிகளில் தமிழ்க் கல்வெட்டும் காணப்படுகின்றன. அஸ்சையது அப்துல் ஹாதி சாயிபு என்பவர் நரசிங்கபுரம் ஊருக்கருகில் பள்ளிவாசலுக்கு மாநியமாக நிலம் வழங்கியது. நேர்வழி காட்டுபவரான அல்லாஹ்வின் அடிமை சையது என்பது இதன் பொருள். அஸசையது அப்துல் ஹாதி என்பவர் பள்ளிவாசலில் மதப்போதகராக இருந்ததோடு பள்ளிவாசலுக்கு நில மாநியமும் வழங்கியுள்ளார்.

1 அசரது சயிது அப்துல் [நித்] ஹாதி சாயி
2 ப்பு யவர்கள் பள்ளிவாசலுக்கு
3 விட்ட [மாநியம்] நா[எ]ல் நரசிங்
4 கபுரம் [எல்லை] ... ளடப்பள்ளி
5 வரைக்கும்.

**உருதுக் கல்வெட்டு**

1 அல்லாஹ்.
2 அஸ்ஸையது அப்
3 துல் ஹாதி*



* உருதுப்பகுதியை படித்தளித்த கரூர், மௌலி அமாகம்மத் அபுல்ஹஸன் தாவூதி அவர்களுக்கு நன்றி.

# 41. விளாங்குறிச்சி நீர்ப்பாசனக் கல்வெட்டு

ச. இரவி, கோயம்புத்தூர்.

*இடம் : கோவை மாவட்டம், விளாங்குறிச்சி.*

*காலம் : 19–ஆம் நூற்றாண்டு.*

*செய்தி : வெள்ளையணன் முதலியார் மணியக்காரராக இருந்தபோது விளாங்குறிச்சியில் குடியானவர்கள் குளத்தை நஞ்சசெட்டி கற்பகம் என்பவர் வெட்டியமை.*

1 சறுவதரி வருடம்
2 மாகளி மாதம் 5 வி
3 ழங் குறிச்சி
4 குடி யானவ
5 ர்கள் குழம்க
6 ட்டின உபை
7 யம் நஞ்ச செ
8 ட்டி கற்பகம்

**கல்வெட்டின்மேல் பகுதியில்**

9 வெள்ளை யண
10 ன் முதலியார
11 வர்கள் மணியம்

# 42. தூரன் குலச் செப்பேடு

*செ. இராசு, ஈரோடு.*

*இடம் : நாமக்கல் மாவட்டம், வேலூர் வட்டம், ஐயம்பாளையம் அருணகிரிநாதர் சிற்றம்பல குருக்கள் திருமடத்தில் உள்ளது.*

*காலம் : முத்து வீரப்ப நாயக்கர், கலி 4526, (கி.பி. 1425).*

*செய்தி : பல ஊர்களில் வாழும் தூர குலப் பெருமக்கள் குமரமங்கலம் பொன்காளியம்மன் சந்நதியில் ஒன்றாகக் கூடி மகுடாசல மாணிக்கியின் மகளான நல்ல பெண்ணுக்கு 'தூரகுல மாணிக்கி' என்று பட்டமும் அளித்து அவளுக்கு வேண்டிய சிறப்புகள் தரப்பட்டதை இச்செப்பேடு அறிவிக்கிறது.*

**முதல் பக்கம்**

1 ஸ்ரீபத்திராமன் மக்கா மண்டலேசுரன் அரியரா விபாடன் பாசைக்கி
2 த் தப்புவராயகண்டன் கண்டனாடு கொண்டு கொண்டனாடு குடாதான் துலுக்க ஒட்
3 டியர்மொகரந் தவிழ்த்தான் எம்மண்டலமும் திறைகொண்டருளிய ராசதிராச
4 ன் ராசமாற்த்தாண்டன் ராசகெம்பீரன் ராசவல்லவன் அசுபதி கெசபதி
5 நவகோடி நாராயணன் ஈழமு மிலங்கையுந் திறைகொண்டருளிய
6 வாழால் வளிதிறந்தபெருமாள் பூறுவ தெட்சண பட்சிம உத்தர ச
7 த்த சமுத்திராதிபதி கெசவேட்டை கண்டருளிய ஸ்ரீவிசைய மாந
8 கரில் பிறதாபரான வீவசந்தராயர் கிஷ்ணராயர் நரசினருடைய
9 புசபெலராயர் மல்லிகாற்ச்சுனறாயர் கொங்கணராயர் வெங்கிடபதி
10 ராயர் ராமதேவமகாராயர் ஸ்ரீரங்கராயர் பிறுதிவ ராச்சியபாரம்
11 பண்ணி அருளால்நின்ற காலத்தில் விசுவப்ப கிஷ்ணப்ப முத்துவீரப்பனாய
12 க்கரய்யநவர்களுக்குச் செல்லாநின்ற கலியுக சகாற்த்தம் 4526
13 இன் மேல்ச் சொல்லாநின்ற துந்துமி வருஷம் வய்யாசிமாதம் 5தேதி குருவாரமும் கூ
14 டின சுபதினத்தில் கொங்குனாட்டில் ஸ்ரீமது முள்வாய் சூழ்ந்த குன்றத்தூர் சா
15 ங்ககிரி துற்க்கத்துக்குச் சேந்த கீள்க்கரைப் பூந்துறைனாட்டில் பூறுவீக தெட்
16 சண கயிலாச அற்தனாரீசுரர் கிறுபா கடாசஷத்தினாலேயும் இம்முடிச் சித்த
17 ம்பலசுவாமி பாதசேகரர் தென்னவன் கடகசூடாமணி சீர்வளிச்
18 செளியன் மதுராபுரிமன்னன் தெய்வப்பாண்டியன் இம்முடிக்
19 காங்கயன் இம்முடி நல்லதம்பி காங்கயன் வடகொங்குமன்னியன்

20 கொங்கினில்ப் பெருமான் குமரமங்கலம் தூறகோத்திரம் பாண்டி கவு
21 ண்டன் ராக்கியாக்கவுண்டன் குமரகவுண்டன் நல்லயகவுண்டன் விருப்ப
22 ணகவுண்டன் செட்டிக்கவுண்டன் குமரவேல்கவுண்டன் கந்தப்பகவுண்டன் பட்டிலூரில்
23 நல்லயகவுண்டன் ராசிபுரநாட்டில் சீராப்பள்ளிக் காளிகவுண்டன் பருத்திப்ப
24 ளினாட்டில் பாலமேட்டில்ப் பிடாரகவுண்டன் சேலநாட்டில் முடுதுறை
25 செங்கோடகவுண்டன் எழூர்நாட்டில் கலியாணி வேலகவுண்டன் தும்ம
26 ங்குறிச்சு நல்லிக்கவுண்டன் வாழவந்தினாட்டில் கீரம்பூரில் எட்டிக்கை
27 க்கவுண்டன் கோதையூர் காளிகவுண்டன் கீள்கரை அரய னாட்டில் இடையா
28 றை ராசாக்கவுண்டன் பெருங்குறிச்சிக் காளிகவுண்டன் காங்கயநாட்டில்
29 காங்கயத்தில் சிவமலைக்கவுண்டன் தென்கரைநாட்டில் தூறம்பா
30 டியில்ப் பழனிக்கவுண்டன் வைய்காவூர் நாட்டில் மானூரில் வேலகவு
31 ண்டன் மேல்கரை அரயனாட்டில் வெங்கம்பூரில் ராக்கியாக் க
32 வுண்டனும் மேல்க்கரைப் பூந்துரைநாட்டில் முடக்குறிச்சி
33 யில்க் குட்டையகவுண்டனும் பாசியூரில் ராக்கியா
34 க்கவுண்டனும் இந்தக் காணியாட்சியிலிருக்கும் தூ
35 ற கோத்திறத்து வேழார் னாங்களனவரும் கூடி பூந்து
36 றைநாட்டில் மோரூரிலிருக்கும் விருது மகிடாசல மாணி

***இரண்டாம் பக்கம்***

37 க்கி மகள் நல்லபெண்ணுக்கு தூறகுல மாணிக்கியெ
38 ன்று பட்டமும் கட்டி பேருங் கொடுத்தோம் செப்பேடு சாத
39 ணம் எளுதிக் கட்டளையிட்ட சுயந்திரம் பண்ணையத்து
40 க்கு ஒருமிடா கம்பு பயலாளுக்கு எட்டுவள்ளமும் கலியா
41 ணத்துக்கு ஒரு பணமும் ஒரு வள்ள அரிசியும் குமரமங்கல
42 லத்தில் நஞ்சையில் 50 குளியும் புன்செயில் ஒருமிடாக்காடும் பண்
43 ணையத்துக்கு ஒருகட்டுக் கதிரும் அரி ஒரு வள்ளம் அழிவு நாளி யி
44 ந்தப்படிக்கு னாங்களவைரும் கூடிக் கட்டளையிட்டோம். சந்திரா
45 தித்தருள்ளவரைக்கும் அனுபவிச்சுக்கொண்டு சுகத்திலே இ
46 ருக்கவும் இந்தச் சுயந்திரம் னாங்களனவரும் கூடி எளுதி கு
47 டுத்தபடிக்கு இந்த தர்மம் நடத்தி வய்க்கவும் இந்த சுயந்திரம் சந்
48 திராதித்தருள்ளவரைக்கும் தூறகுலத்தார் நடத்திவரக்கடவே
49 னாகவும் னாங்களனவருங்கூடி நடத்திவய்த்த தற்மத்தை யா
50 தாமொருவன் இசகு பிசகு பண்ணினவர்கள் கெங்கை
51 க்கரையிலே பிராமணரையும் காராம்பசுவையும் மாதா
52 பிதாவையும் கொன்ற தோஷத்திலே போகக் கடவா
53 னாகவும் இந்தப் பட்டயம் எளுதினபடிக்கு இந்
54 தத் தற்மம் பரிபாலனம் பண்ணினபேருக்கு திருவ

55 ணாமலையிலே திருக்காற்த்திகை தீபாராதனை
56 தெரிசித்த பலனும் சிதம்பரத்தில் மார்களித் தி
57 ருமஞ்சனத்தில் தெரிசித்த பலனும் மதுரையி
58 ல் ஆவணிமூலத்தில் சொக்கனாயகரையும் மீனா
59 ட்சியையும் தெரிசித்த பலனும் காசியிலே கெங்கா
60 ஸ்தானம் பண்ணின பலனும் ராமேசுரத்திலே ரா
61 மலிங்கத்தைத் தெரிசித்த பலனும் அரவகிரி அற்த்தனாரீ
62 சுரரைத் தெரிசித்த பலனும் உண்டாவதாகவும் இந்தப்படிக்கி தூறகுல
63 த்தார் னாங்களனவருங்கூடி தூறகுல மாணிக்கியென்று பட்டயமுங் குடுத்து சலு
64 கையுங் குடுத்து பொன்காளியம்மன் சன்னதியில் சந்தனம் தெளிச்சு ஒரு வரிசை உ
65 டமையும் போட்டு மிரவனை செய்து அனவரும் றாயத் தூறகுல மாணிக்கியென்று
66 பேற் விழங்கத்தக்கதாகக் கட்டளையிட்டோம். இதுக்குச் சாட்சி குமரமங்கலத்தி
67 ல் ஆதிசயிவ மறையோரில் கவுண்ணிய கோத்திரத்தில் அற்த்தனாரியய்ய
68 ன் லிங்கயன் வாழரசரில் பாண்டி குலத்தில் பாண்டிக்கவுண்டரும் விலைய
69 கோத்திரத்தில் மோளைக்கவுண்டரும் ஈஞ்சகுலத்தில்க் கந்தப்பகவுண்டரும் வி
70 ல்லி குலத்தில் வேலகவுண்டரும் பண்டாரம் நல்லபிள்ளி ஆண்டியும் ஆசா
71 ரிவகையில் விறுமக்கொல்லன் நாவிதப் பிரமன் திறிநீலகண்ட
72 ரில் வேலன் யெஞ்குடி அரசப்பலகான் தோட்டியில் செங்காளி அன
73 வர்களனரும் சாட்சி இந்தப் பட்டயம் எளுதின நன்மைக்கு
74 அரவகிரி அற்த்தனாரீசுரசுவாமி பாண்டீசுரர் பங்கயச் செல்லி வேலாயுத சு
75 வாமி கரியபெருமாள் பொன்காளியும் மலைகாவலரும் லட்சிப்பார்

---

3.1.98 ஞாயிறு அன்று திருமடத்தினர் செப்பேட்டைப் படி எடுக்க அனுமதி தந்தமைக்கு நன்றி

# 43. சின்ன நல்ல காலக்க தோழ் உடையார் பட்டயம்

*ச. செல்வராஜ், தர்மபுரி.*

இடம் : *விருத்தாசலம் கலைக்கல்லூரிப் வரலாற்றுப் பேராசிரியரிடம் இச்செப்பேடு உள்ளது.*

காலம் : *சின்ன நல்ல காலக்க தோழ்உடையார் சகம் 1445 (கி.பி. 1523)*

செய்தி : *இச்செப்பேடு மேல்பகுதி 3 வளைவுகளுடன் கூடிய 7.5×1.5செ.மீ அளவுடையது. செப்புத்தகட்டின் முன் பக்கத்தில் நடராசர், காலக்கதேவர், குரு நமச்சிவாயர் ஆகியோர் கோட்டு உருவங்களாகக் காட்டப்பட்டுள்ளனர். முன் பக்கம் 26 வரிகளும் பின்பக்கம் 9 வரிகளும் ஆக 35 வரிகளில் வாசகங்கள் உள்ளன. கடைசி வரியில் தெலுங்கில் எழுதப் பட்டுள்ளது. பெருமானது வழிபாட்டுச் செலவுகளுக்காக அரசூர் பற்றில் மேலகம்பூர் என்ற கிராமம் குருநமசிவாயர்க்கு தரப்பட்டதை இச்செப்பேடு குறிப்பிடுகிறது.*

**முன்பக்கம்**

1 ஸ்ரீ புலோக கயிலாசமாகிய சிதம்பரம் ஸ்ரீ சப
2 ா நடேசர் சன்னதானமாகிய சறுவ கட்டளைக்
3 கி சோழபுறத்து பள்ளி கொண்ட காலக்க தோழ்
4 ஓடையார் குமாறர் சின்ன நல்ல காலக்க தோ
5 ழ் உடையார் சோனாசல தம்பிரான் சந்ததியா
6 ன குறுநமசிவாயர்க்கு யெழிதிகுடுத்த தாம்ர
7 சாதன பட்டயம் சொஸ்திஸ்ரீ சாலிய வாகன சகா
8 ப்தம் 1445 மேல் செல்லா நிண்ட ஸ்ரீமுக வருடம்
9 பங்குனி மாதம் 16 தேதி சோம வாரமும் உத்திர நஷ்சத்திற
10 மும் சுக்குல பஷசமும் சுகுறத நாமயோகமும் பால
11 வாகறணமும் கூடின சுபதினத்தில் பயறணிபரவி
12 யமறுத்திரபுறீயிற்பற சுவாமி சன்னதானத்தில்
13 லிருந்து யெழுதின கோடி சூரியபிரகாச மாகிய
14 கயிலாச வாசகறாகிய நிர்மல நிர்க்குன நிரஞ்சன
15 நிறுமயலானசச்சிதாந்த சொருபமான அகில
16 ம் அண்டம் கோடி பிறமாண்டணாயகறான அனேக
17 சிங்கார மகிமையுள்ள ஸ்ரீ சபா நடேசெர் கோ
18 வில் சறுவ கட்டளை பூசை நெவேத்தியத்துக்கு
19 அரசூர் பத்து மேல்கம்பூர் கிராமம் நார்பாங்கி

20 லுள்ள நிலம் முழுமையும் சபாநடேசெர்க்கு வு
21 ட்டு சிலாசாசன சகிதமாயிறுக்கிற அந்த தற்ம
22 த்தை நடத்திக் கொண்டு வறயிந்த தற்மத்தை சே
23 ரணாசல தம்பிறான் சந்ததியில் குருநமசிவாய
24 மூர்த்தி வரையில் யிந்த தருமத்தை சிஷ்ய
25 சிஷ்ய பாறம்பறியாயி சந்திராதித்தலுள்ள வறை
26 யில் தற்மத்தை நடத்திக்கொண்டு வரவும்

***பின்பக்கம்***

27 யித்த தற்மத்தை யாதாமொறுவர் யிந்ததர்ம
28 த்துக்கு விகாதம் செயிதால் காசியிலே கெங்
29 கைக்கரையிலே காறாம்பசுவு கொன்ன தோஷத்தி
30 ற் போவார்களா லிந்த தந்மத்தை பறிபாளனம்
31 செயிதவர்கள் நிடூழி காலமும் குபேறசன்மப
32 தத்தும் மாறகண்ட ஆயிசாயிறுத்து சிதம்பற
33 த்தில் அற்த்த சாமத்து தெறிசனம் பண்ணி
34 ன பலன் கிடைக்கும்
35 ...

---

# 44. இராமகிரிகோயில் செப்பேட்டுச் சாசன நகல்

*மா. சந்திரமூர்த்தி, சென்னை.*

இடம் : *திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் வட்டம் இராமகிரி, கலியாண நரசிம்ம சுவாமி கோயிலில் உள்ள செப்பேட்டின் காகித நகல்.*

காலம் : *கலி வருடம் 4827, சகம் வருடம் 1638 (கி.பி. 1727)*

செய்தி : *தட்டைய நாட்டு இராமகிரிச் சீமையில் உள்ள கலியாண நரசிங்கசாமி கோயிலின் வழிபாடு மற்றும் ஊழியர்களது செலவுகளுக்காகத் திருக்கூர்ணம் என்ற கிராமம், இப்பகுதி நாயக்ககத்தனம் செய்த மனைசுபுலியூர் வண்ட கதிர் சாமைய நாயக்கர் குமாரன் குமறளரு சாமைய நாயக்கரால் நல்கப்பட்டது.*

***நரசிங்கம் துணை.***

சொஷத்திரி கலியுக சகாப்தம் நாலாயிரத்தி எண்ணூத்தி இருபத்தேழில் சாலியவாகன சகாப்தம் ஆயிரத்தி அருநூற்று முப்பத்திஎட்டு இதின்மேல் செல்லாநின்ற பிலவங்க வருஷம் தை மாதம் 15 தேதி பூருவ பக்ஷமும் சப்தமியும் சுவாதி நக்ஷத்திரமும் சனிவாரமும் சுபநல யோகமும் பத்திரவாகணமும் பெத்த இந்த சுபதிணத்தில் தட்டையனாடு ராமகிரி சீமையில் கலியாண நரசிங்க ஸ்வாமிக்கு குரிகுல கோத்திரம் மனசை புலியூர் லண்ட கதிர் சாமைய நாயக்கர் குமாரன் குமறளகு காமைய நாயக்கரவர்கள் இந்த சாசனம் பண்ணவிச்சு குடுத்தபடி இந்த சாசனமாவது திருக்கூர்ணம் கிராமம் எல்லை நான்கு அரவக்குரிச்சி எல்லைக்கும் கிழக்கு புங்கம்பாடி கிராமத்து எல்லைக்கும் தெர்க்கு வெள்ளோடு கிராமத்து எல்லைக்கும் மேற்கு ஆண்டிபட்டி பொம்மநாயக்க சீமை எல்லைக்கும் வடக்கு இதற்குள் சேர்ந்த நஞ்சை புஞ்சை மாவடை திட்டுத்தடல் குளங்குட்டை எப்பேர்பட்ட கீள்னோக்கிய கிணறும் மேல்நோக்கிய மரமும் கல்குத்து பருமறம் காடுகளும் ஊரடி ஊர்மந்தை ஆறோடி அளவு தானலும் உள்பட விரைப்பான இருபத்தைங்கள் காடும் சுவாமிக்கு திரிகால பூசை நித்திய உச்சபம் பக்ஷ உச்சபம் மாச உச்சபம் சமஸ்த உச்சபம் பூசை முதலானதுக்கு ஆள் மாகானம் அர்ச்சகாள் பரிசாரகம் நாச்சர் பரிகுளம் வேத பாராயினம் அணுசந்தனம் எக்கியோவீதம் பஞ்சாங்கம் திருமரினகாட்டி திருந்நாதவிளக்கு திருவிளக்கு தானதான் பெரிய மேளத்தார் உள்மேலத்தார் தாசிகள் நந்தவனம் திருவிளக்கு சகலவினி அனந்த கொத்து பரிசனங்களுக்கும் நடக்கும் படிக்கு இந்த சாசனம் பன்னிவிச்சு குடுத்தபடியனாலே இந்த தர்மம் சந்திர ஆதித்தாள் உள்ள வரைக்கும் எங்கள் புத்திர பவுத்திர களத்திராதியாய் முதல் கொண்டு நடப்பிவிச்சு கொண்டு வருவோமாகவும் இப்படி கலியான

நரசிம்மப்பெருமாள் சுவாமியரார் சன்னிதியில் சாசனம் பன்னிவிச்சு குடுத்த கிரைய தர்மத்தில் எங்கள் வங்கிஷத்திலே ஆகிலும் பறபறியில் அறாமொருவராகிலும் இந்த தர்மத்துக்கு விக்கிணம் பண்ணினாலும் அறுபதினாயிரம் வருஷம் நவறவாதி நறக்குளியில் விழுந்தான் பன்னின தர்மங்களையும் போக்கடிச்சு கொண்டு காறாயிலே கெங்கையிலே காராம்பசுவைக் கொன்ற பாவத்தை ஏத்துக் கொண்டு புத்திர மித்திர கனத்திராதிக்களையும் போக்கடிச்சு கொண்டு போவார்களாகவும் இதுக்கு ஆகாசவானி பூமாதேவி மத்திசம் சந்திராள் சூரியாள் சாச்சி இந்த சாசனன் எழுதின உண்மைக்கு சம்பிரதி ராமனாதபிள்ளை கைய் எழுத்தாணி லிகிதம் இந்த தாம்பறசாசனம் எழுதினது சின்னனாசாரி சானயன்

கணக்கர் திரு. ஆ சுப்பிரமணியப் பிள்ளை அவர்களிடமிருந்து வெள்ளைத்தாளில் எழுதப்பட்ட செப்பேட்டின் நகல் இக்கட்டுரை ஆசியரால் 1980–ஆம் ஆண்டு பெறப்பட்டது. மூலச் செப்பேடு இராமகிரி ஸ்ரீகலியாண நரசிம்ம சுவாமி கோயிலில் இருந்தாகவும், கோயில் நிர்வாகத்திற்கும் கோயில் ஊழியர்களுக்கும் நடந்த வழக்கில் மதுரை நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டதாகவும், திரும்பப் பெறப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.

# 45. சிவகங்கை தருமர் கோயில் செப்பேடு

***ந. வள்ளி, காரைக்குடி.***

இடம் : *சிவகங்கை, தருமர் கோயில்.*

காலம் : *விசையரகுநாத சசிவர்ண பெரிய உடையாத் தேவர் கலி 4839, சுகம் 1661 (கி.பி. 1738).*

செய்தி : *சிவகங்கை தர்மர் கோயிலின் பொறுப்பு திருவாரூரிலிருக்கும் வெள்ளாளரில் சவரிராஜப் பெருமாள் பிள்ளை என்பவரின் மகன் திருவேங்கடம் பூசாரி வசம் ஒப்புவிக்கப்பட்டது. கோயிலுக்கு ஆகும் செலவுகளுக்காக சிவகங்கைச் சீமையிலுள்ள அத்தனை குடிகளும், முத்திரைப்படியினால் இரண்டுபடி நெல் வீதம் கோயிலுக்கு அளக்க வேண்டும் என்றும் அதைக் கொண்டு திருவேங்கடம் பூசாரி நித்தியப் பூசையும் அக்கினித் திருநாளும் நடத்தி வரவேண்டும். இச்செப்பேட்டின் கைப்பிடிப் பகுதியில் நாமமும், சங்கும், சக்கரமும் பொறிக்கப்பட்டுள்ளன.*

**முன்பக்கம்**

1 உ சுப ஸ்ரீமன்மகா மண்டலெசுபரன் அரியரா
2 யிர தளவிபாடன் பாசைக்குத் தப்புவாயிர
3 கண்டன் கண்டனாடு கொண்டு கொண்டனாடு குடாதான்
4 பாண்டி மண்டலப் பிறதாபனாசரியன் சோள மண்டல
5 ப் பிறதிஷ்டானாசாரியன் தொண்டை மண்டலச் சண்டப்பிற
6 சண்டன் ஈளமும் கொங்கு யா[ழ்] ப்பாணப் பட்டணமும் யெம்மண்
7 டலப் பட்டணமும் மளித்துக் கெசவெட்டை கொண்டருளி
8 ய ராசாதிராசன் ராசபரமேசுபரன் ராசமாத்தாண்டன்
9 ராசகுல திலகன் அசுரராவணராமன் அந்தப்பிறகண்ட
10 ன் தாலிக்கிவேலி தரியலர்கள் சிங்கம் வடகரைப்புலி வை
11 வய்கை வளனாடன் தேவை நகராதிபன் தனுக்கோடி காவ
12 லன் தொண்டித் துரை காவலன் சேது க[ா]வலன் சேதுமூ
13 ல ரட்சதுரந்தரன் ராமனாதசுவாமி காரிய துரந்தரன்
14 சேமதலை விளங்கும் மிருதாளினான் செங்காவி கொடியா
15 ன் செங்காவிச் சிவிகையான் அனுமக் கொடி கெருடக்
16 கொடி புலிக்கொடி சிங்கக்கொடி யுடையான் இவ்வடி பா
17 வடி மிதித்தேருவார்கண்டன் முல்லை மாளிகையான் இர
18 விகுலசேந்தன் பஞ்ச காவல் பயங்கரன் பரதேசிகா
19 வலன் செம்பி வளனாடன் காகநகராதீபன் அரிபூசைசி
20 வ பூசை ஆறவம பூசை மயேசுரபூசை மறவாத வங்கிஷம்

21 அசுபதி கெசபதி நரபதி யிறனிய கெற்பர[ா]சன் ரெகுனாதச் சே
22 துபதி[ய]வர்கள்ப்பித்திராட்சிய பரிபாலனம் பண்ணி
23 அருளாநின்ற கலியுக சகாற்த்தம் சாலிய
24 வாகன சகாற்த்தம் 1641 இ
25 தன் மெல் செல்லா நின்ற சித்திராஅத்தி
26 வருடம் பைங்குனி சோமவாரனாள் சத்தமியு உத்திரநட்
27 செத்திரமும் வணி கறணமும் வரயனாம யோகமும்ங் கூடின சு
28 பதினத்தில் பாண்டி தேசத்தில் பொதிகை மாமலையான் வைய்
29 கை வளனாடன் வைய்கையாறுடையான் புனப்பிறளைய
30 னாடன் குளைந்தை நகராதிபன் முல்லை மாலிகையான் பஞ்ச கெ
31 தியினிலினியன் மும்மதயானையான் திக்கெங்குமாணை செ
32 லுத்திய சிங்கம் அனுமக்கொடி கெருடக்கொடி புலிக்கொடி
33 சிங்கக்கொடியுடையான் மும்முரசதிரும் முறைவான்மேனா
34 ...ப்புலி தாலிக்கு வேலி தளசிங்கம் இளஞ்சிங்கம் தாச்சி
35 னியத்துக்கு தற்மரை போலவும் பரிக்கி நகுலனைப் பொலவும்
36 வில்லுக்கு விசையனைப் போலவும் சொல்லுக்கு அரிச்சந்திரனை
37 போலவும் வாக்குத்தவ(றா)த கண்டன் ஆற்றுப்பாச்சிவார் சீமையாகா
38 ண அரசுநிலையிட்ட விசைய ரெகுநாத பெரிய உடையாத் தேவரவ
39 ர்கள் புத்திரன் அரசுநிலையிட்ட விசையரெகுனாத சசிவற்ன்ன
40 பெரிய உடையாத் தேவரவர்கள் திருவாலூரிலிருக்கும் வெ
41 ள்ளாழரில் சவரிராசப் பெருமாள் பிள்ளை மகன் திருவேங்கிடம்
42 பூசாரிக்குச் சிவகெங்கையில்த் தற்ம கோவில் கட்டிக்
43 குடுத்து சவுரிசாதனப் பட்டயங் குடுத்த படியினாலே ப
44 ட்டயமாவது சந்திராதித்தவரை உள்ளமட்டு சிவகெ
45 ங்கையில்த் தற்ம கோவில் கட்டிக்குடுத்து இருக்குறப
46 டியினாலே அது காரியத்துக்கு தம்மிட இராச்சியத்திலே இரு
47 க்கிற தேவதாயம் பிறமதாயம் பண்ணைக்கிறாமம் ராசாக்க
48 ள் ராவுத்தமார் மல்லக செட்டியள் சேருவைக்காரர் பாளையகா
49 றர் ஊளியகாறர் ஒண்டடிகாறர் மொவண்டமாற் மூப்ப
50 மார் செம்படவர் மாணிபம் மடப்பிறம் மணியகாறர்

***பின்புறம்***

51 குடியானபேர் அம்பலகாறர் நாட்டுக் கணக்கர் நாடு நகர
52 ங்கள் வலங்கையிடங்கை தொண்ணூத்தாறு சாதியு
53 ராமனாதபுரம்த் தற்ம்ம கோவிலுக்கு வுற்ற பிறகாறம்
54 சிவகெங்கை தற்ம கோவிலுக்கு வூட்டுக்கு ஆளு
55 முத்திரைப் படியினாலெ ரெண்டுபடி வரி வய்த்து
56 வரிக்கட்டளையாக குடுத்து வறக் கடவாராகவும் அந்தப்படி
57 வாங்கி தற்ம கோவிலுக்கு நித்தப் பூசையும் அக்கிணி
58 த் திருநாளும் கூட்டி வருவாறாகவும் யிதுக்கு
59 யாதாமொருவராயிலும் தற்மம் யெண்ணனைக்கு பரிபாலினம்

60 பண்ணி வருவாற்கு காகிநீர் கண்ணி கதிரொளி பாவன
61 சம் வரசியாறுங் கோதாபுரி மறுத்துள்ள நதியள் தெண்
62 ணில கோடி சிவபிறதிஷ்ட்டையும் கோடி பிரும்
63 ப பிறதிஷ்டையும் கோடி கண்ணிகாதானமும் கோ
64 டி அசுபமேதியாகமும் பண்ணின பலனையடைவா
65 ராகவும் இந்தப்பூசையும் அக்கினிதிருனாளும் நடத்துகி
66 ற பேற்க்கு யிகத்திலே தெய்வேந்திரப் பட்டமும் பறத்திலே
67 வைகுண்ட கயிலாசபதஞ் சேருவாராகவும் யிந்த
68 ற்ம கோவிலுக்கு யாதாமொருவர் அகுதம் பண்ணின
69 பேர் காசியிலெயும் ராமேசுபரத்தில் தெற்குள்ள புண்
70 ணிய தலத்திலும் கோடி காரா[ம்] பசுவும் கோடி தையனையும்
71 கோடி, பிராமணரையும் ங் கோடி குளைந்தையளையும்
72 கொண்ட பாவத்தையடைவாராகவும் யிந்தப்ப
73 டிக்கு சிவகெங்கை தற்ம கோவில்ச் சருவசாத
74 னப்பட்டையம் யெளுதினேன் மதுரையிலிருக்கும்
75 வெள்ளாளரில் சொக்கனாத பி[ள்]ளை மகன் ராயசம்
76 சங்கற நாறாயணன் யென் கையெளுத்து சொக்கலி
77 ங்கம் மீனாட்சி துணை உ

# 46. எழுவன் கோட்டை செப்பேடுகள்

*மா. சந்திரமூர்த்தி, சென்னை.*

*இவ்விரண்டு செப்பேடுகள் எழுவன் கோட்டையைச் சார்ந்த தானிக்காவூரணியிலிருந்து கழனிவாசல் ஊராரால் பெறப்பட்டவை. கடந்த 65 ஆண்டுகளாக காரைக்குடியை அடுத்துள்ள கழனிவாசல் திரு. பர. அழகன் குடும்பத்தார் வசம் இருந்து வந்ததாக அவரது பேரன் திரு. வி. கண்ணையா தகவல் அளித்துள்ளார். இச் செப்கேடுகளில் ஒன்று பெரியது. மற்றொன்று சிறியது. முதல் செப்பேடு 16X23 செ.மீ. அளவும் 600 கிராம் எடையுமுடையது. இரண்டாவது செப்பேடு 11X23 செ.மீ அளவும் 560 கிராம் எடையும் கொண்டது.*

### *முதல் செப்பேடு*

*இச் செப்பேடு 31 வரிகளில் தமிழில் வெட்டப்பட்டுள்ளது. எழுத்துக்கள் வரிவடிவில் கிழித்து வெட்டப்படாமல் புள்ளிகள் வடிவில் வெட்டப்பட்டுள்ளன. இச்செப்பேட்டின் முகப்பின் வலப்புறம் ஒரு வட்டத்துக்குள் இராமநாதபுரம் சமஸ்தானம் என்றும் கீழ் இடப்புறம் சேதுபதி மகாராசா என்னும் இன்றைய முத்திரை வடிவில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. செப்பேட்டில் குறிக்கப்படும் அக்ஷய வருடம் கி.பி. 1806 அல்லது 1866 ஆகலாம். சேதுபதி மன்னர் தன்னுடைய குதிரைகளைப் பராமரிக்கும் பணி செய்த பர அழகன் என்பவருக்குக் குறிப்பிட்ட சில நிலங்கள், மனைகள், குளங்களில் மீன்பிடிக்கும் உரிமை, கோயில்களில் வெட்டும் ஆடுகளில் மரியாதை உரிமை ஆகியவை வழங்கியமையை இச் செப்பேடு குறிப்பிடுகிறது. செப்பேடு இரண்டு பிரிவுகள் உடையது என்ற குறிப்பும் உள்ளது.*

## 46:1

### *பெரிய செப்பேடு*

1 அக்ஷய வருஷம் கார்திய மாதம்
2 திங்கிளமை களனிவாசல்
3 எனக்கு குதிரை பிடித்து வந்த பர அ
4 ழகனுக்கு சேதுபதி மகாராசா குடுத்த
5 செப்புப்பட்டம் என் கன்மாய் கடுமடை பா
6 சானம் பரயன் செய்அனை 6 செய் 3
7 அதை சேர்ந்த பரக்கானி அனை 9 செய் ½
8 வெட்டு செய் அனை 6 செய் 3 நெடுஞ்
9 செய் அனை 5. செய் 2½ பரச்சேரி வீட்டு இடம்
10 150 மரக்காளும் சுகந்திரமும் கய்பிச்சையும் க

11 ன்மாய் மீனும் பெரிய கன்மாய் வடகரை லிருக்கும் கருப்
12 பர் கோவிலும் (இடம் விடப்பட்டுள்ளது)
13 கோவிலூர் சமஸ்தானம் என் பாரதகுடி நடுமை
14 ட பாசனம் என் பிரம்போக்கு கிளக்கு வாய்க்காலும்
15 வடக்கு காஞ்சிறம் செய்க்கும் மேற்கு பாப்பான் செ
16 ய்க்கும் தெர்க்கு பரயன் உம்பழசெய் 7 நிலம் 3½
17 பேயாம்பட்டி கிறாமம் பரயன் உம்பழசெய் 4½
18 கருங்கெளி வயல் நடுமடை பாசானம் செய் 5
19 நிலம் 2½ பெரிய வயல் நடுமடை பாசானம்
20 பரயன் உம்பழம் அனை 9 நிலம் 4½அதை
21 சேற்ந்த முனியன் கொல்லை குருகம் 25யில
22 ங்காயம் வயல் ஏந்தல் செய் 12½
23 எளுவங்கோட்டைக்கி கட்டு கொண்டு போரதுக்கு
24 காசு 3 இந்த சிறாமத்தில் கண்டிருக்கர கோவில்
25 மானுயம் மேற்படி வெட்டுகிர கிடாயும் பர அழகரதுக்
26 கே பாத்தியம் மேல் கண்ட வகைகளுக்கு வரி
27 ரூபாய் 3¾ பட்டயம் பிரிவு இரண்டு அடங்கி
28 இருக்கிறது
29 சாச்சிகள்
30 கணக்கு சுப்பய்ய பிள்ளை
31 றாக்கப்பன் அம்பழம்

## 46:2

### இரண்டாம் செப்பேடு

*இரண்டாவது செப்பேடு 23 வரிகளைக் கொண்டுள்ளது. இச்செப்பேட்டின் முகப்பில் வலப்புறமும், கீழ்ப்பகுதியின் இடப்புறமும் முதல் செப்பேட்டில் உள்ள வாசகங்கள் முத்திரை வடிவில் உள்ளன. இதுவும் அசல் செப்பேட்டின் நகலாகவே அறிகிறோம். சேதுபதி மன்னருக்கு பரஅழகன் சக்கரக் கோட்டை கண்மாய் வெட்டிக் கொடுத்ததற்காக மன்னர் ஓ. சிறுவயல், மானகிரி, காரைக்குடி ஆகிய ஊர்களுக்கு இடைப்பட்ட பரையன் ஏந்தல் பாசன நிலங்கள். பேயன்பட்டி கிராமம், முதலிய நிலங்கள் வழங்கியமை.*

### சிறிய செப்பேடு

1 அக்ஷய வருடம் காத்திய் மாதம்
2 கோவிலூர் தேவ
3 ஸ்தானம் பாதரகுடி ப
4 ர அழகனுக்கு சேதுபதி மகாராசா குடுத்த செ
5 ப்பு பட்டயம் மேற்படி யான்
6 எனக்கு சக்கர கோட்டை

7 கன்மா வெட்டி தந்ததினால் ஒசிறுவ
8 யலுக்கும் சூக்கல்லுக்கும் குளக்கரை
9 க்கும் தெர்க்கு மானகிரி எளுகைகும் ச
10 ங்கரவத்தி கன்மாய் அய்யனும் கோவி
11 லுக்கும் வடக்கு காரக்குடி எளுகைக்கும் மேறக்கு
12 பரயநேந்தல் நடுமடை பாசானம்
13 அடங்கள் செய் 14½ சேர்
14 ந்த புளியமரம் 4யை சேர்
15 ந்த ஊரணி (உ)ம் பேயாம்பட்டி
16 கிறாமம் நடுமடை பாசானம் செய்
17 ½ கோவிலூர் நடுமடை பாசா
18 ணம் செய் 2½ கல்லூரனிக்கும்
19 வடக்கு சுடுகாட்டு திடல் சுருக்கம் 75
20 சாச்சிகள்
21 கணக்கு சுப்யா பிள்ளை
22 க்கப்ப ன பழம்

# 47. மூன்றாம் திருவேங்கடப்பிள்ளை கூறும் ஆனந்தரங்கப்பிள்ளையின் முப்பத்தி மூன்று நாட்குறிப்புக் கோப்புகள்

**ஒர்சே மா. கோபாலகிருஷ்ணன், பிரான்சு.**

ஆனந்தரங்கப்பிள்ளை நாட்குறிப்புத் தொகுதிகளை அவருடைய பழைய வீட்டில் 1846 ஆம் ஆண்டளவில் கண்டெடுத்த ஆ. கலுவா மொம்பிரென்[1] (Arthur Gallois-Montbrun) உடனே அந்நாட்குறிப்பைப் பற்றிப் பிரெஞ்சு மொழியில் ஒரு கட்டுரை வெளியிட்டார். அதற்குப்பின், ழூ. வென்சோன் (Julien Vinson) அந்நாட்குறிப்புகளின் சில தமிழ்ப் பகுதிகளையும் அப்பகுதிகளின் பிரெஞ்சு மொழியாக்கங்களையும் வெளியிட்டார். மேலும் டூப்ளெக்க - லபுர்தோனே (Dupleix - Labourdonnais) சச்சரவு காலமான 1764–1748 ஆம் ஆண்டு கட்டத்தின் பகுதிகளைப் பிரெஞ்சில் மொழிபெயர்த்து, 1894இல் பல புதிய தரவுகளை வெளிக் கொணர்ந்தார். இப்படியாக, 18ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் தென்னிந்தியாவில் மூண்ட பல போர்கள் பற்றியும், அச்சமயம் இங்கிருந்த பெரிய ஆளுநர், தமிழர் இன்னும் மற்றோர் பற்றியும் பல புதிய நோக்குகள் உண்டாகத் தொடங்கின.

19ஆம் நூற்றாண்டில் டூப்ளெக்க மறைவின் நூற்றாண்டு கொண்டாட்டத்துக்குப் பின், பிரான்சில் அதற்கு முன்பில்லாத மதிப்பு அவருக்கு ஏற்பட்டதென்றாலும், அவருடைய காலத்துப் போராட்டங்களில் வரலாறு வாரியாக ஆங்கிலேயருக்கே அதிகமான ஈடுபாடு இருந்தது என்றால் மிகையாது. இக்காரணத்தின் பலனாக போன நூற்றாண்டுக் கடைசியில் ஆங்கிலேயர் புதுச்சேரியிலிருந்த தமிழ்க் கைப்பிரதிகளை நகலெடுத்துச் சென்னைக்குக் கொண்டுபோனார்கள். முதலில், திரு ரங்காச்சாரி அவர்களின் உதவிகொண்டு, பி.பிரைசு (F. Price) ஆனந்தரங்கப்பிள்ளை நாட்குறிப்புத் தொகுதியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துச் சென்னையில் 1904ஆம் ஆண்டு வெளியிட்டார். பிறகு அவரே மேலும் இரண்டாவது, மூன்றாவது பாகங்களை முறையே 1907, 1914 ஆம் ஆண்டுகளில் பதிப்பித்தார். மற்ற ஒன்பது பாகங்களை எச்.டாட்வெல் (H. Dodwell) முறையே 1916, 1917, 1918, 1919, 1922, 1924, 1925, 1927, 1928ஆம் ஆண்டுகளில் பதிப்பித்து முடித்தார். முற்றுப்பெற்ற ஆனந்தரங்கப்பிள்ளை நாட்குறிப்பு என்று நினைக்கப்படும் இந்தப் பன்னிரண்டு பாகங்களுக்கும் பாரிசில் இருக்கும் பழைய கைப்பிரதிகளுக்கும் உள்ள தொடர்பையும் வித்தியாசங்களையும் விளக்குவதே இக் கட்டுரையில் நோக்கமாம்.

இங்கு தமிழ்ப் பதிப்பைப் பற்றியும் சில விபரங்களையும் வாசகர்களிடம் கொண்டுவருவது முக்கியமாகும். புதுச்சேரிப் பிரெஞ்சு அரசு இந்நாட்குறிப்பின் தமிழ் மூலத்தைப் பதிப்பிப்பதின் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்து அதற்கான பெரு முயற்சிகளை மேற்கொண்டது. இதன் பயனாக, 1948லிருந்து 1956 வரை, முதல் ஆறு தமிழ்ப் பாகங்கள் வெளிவந்தன. அதன்பின்னர், புதுவை மாநிலம் இந்தியாவுடன் சேர்ந்தபின், சில அறிஞர்கள் இப்பதிப்பு முயற்சியைத் தொடர்ந்ததன் பயனாக, 1963இல் 7ஆம் தமிழ்ப்பாகமும் 1978 (?) இல் 8ஆம் பாகமும் அதன்பிறகு 9ஆம் பாகமும் வெளிவந்தன.

தமிழ்ப் பதிப்பின் முதல் ஆறு பாகங்கள் முறையே ஆறு ஆங்கிலப் பதிப்புப் பாகங்களை நேராகவும் முழுமையாகவும் ஒத்திருக்கின்றன். ஆனால் இந்தத் தொடர்புமுறை, 7ஆம் பாகத்திலிருந்து சற்றே மாறியிருக்கின்றது. தமிழ் 7ஆம் பாகம், ஆங்கில VIIஆம் பாகத்தின் முன்பகுதியை மட்டும் கொண்டிருப்பதால் அதன் இரண்டாவது பகுதியாக 7–2 என்று சொல்லக்கூடிய சிறிய பின்பகுதி இன்னும் பதிப்பிக்கப்படாமல் நிற்கிறது. மேலும், ஆங்கில VIIIஆம் பாகத்தின் பின்பகுதியைத் தமிழில் 9–ஆவது பாகம் என்றவாறு அச்சடித்து வெளியிட்டிருப்பது குழப்பத்தை இன்னும் அதிகமாக்குகின்றது (சில படிகளின்மேல் மட்டும் திருத்தம் கொண்டுவரப்பட்டு 8–2 என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது).

இத்துடன் நின்றுவிட்ட இன்றைய நிலையில், ஆங்கிலப் பதிப்பளவுக்குத் தமிழ்ப்பதிப்பு முழுமையாக அச்சிடப்படவில்லை. ஆங்கிலத்தில் இருக்கும் IX, X, XI, XIIஆம் பாகங்கள் தமிழில் குறைகின்றன. மேலும் முதல் பாகம் தவிர, மற்ற பாகங்களில், அத்தியாவசியமான பல வரலாற்று விபரங்கள் கொண்ட முன்னுரையோ, விளக்கக் குறிப்புகளோ இல்லாமல் பல அச்சுப்பிழைகளோடும் பலவிடங்களில் தவறான பொருளோடும் பதிக்கப்பட்டிருப்பதால், தமிழ்ப் பாகங்களை வாசித்துணர்வது கடினமாக இருக்கின்றது. ஆய்வாளர்களும் இத்தமிழ்ப் பதிப்பையே ஆதாரமாக எடுத்துக் கொண்டுள்ளனர். ஆங்கிலம், பிரெஞ்சு அறிந்த மிகச் சில அறிஞர்களே ஆங்கிலத் தொகுதியையும். பரவலாக உள்ள சில பிரெஞ்சு மொழிபெயர்ப்புப் பகுதிகளையும் ஆதாரங்காட்டுகின்றனர்.

பல அறிஞர்கள் ஆனந்தரங்கப்பிள்ளை நாட்குறிப்பு தமிழ்ப்பதிப்பின் குறைபாடுகளை எடுத்துக் காட்டியுள்ளதின் காரணமாக, மீதி நின்ற பாகங்களை எவரும் தொடர்ந்து பதிப்பிக்காமல் விட்டனர் போலும். வேறு நல்ல முறையில் இப்பதிப்பை வெளிக்கொண்டுவர புதுவை மாநில அரசோ, தமிழ்நாடு அரசோ புதிய முயற்சிகள் இதுவரை எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை[2]. பன்னாட்டுத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகள் பல நடத்தப்பட்டாலும், இம்மாதிரியான குறைகள்

தீர்க்கப்படாமலே இருந்து, தமிழ் ஆய்வாளரின் அறிவுப்பசிக்கும் ஏக்கத்துக்கும் முடிவு ஏற்படாமலே இருக்கின்றது.

ஆக The Private Diary of Ananda Ranga Pillai என்ற தலைப்புடன்

| | |
|---|---|
| Vol. I | (F. Price, Madras, 1904) |
| Vol.II | (F. Price, Madras, 1907) |
| Vol III | (F. Price, Madras, 1914) |
| Vol. IV | (H. Dodwell, Madras, 1916) |
| Vol. V | (H. Dodwell, Madras, 1917) |
| Vol. VI | (H. Dodwell, Madras, 1918) |
| Vol. VII | (H. Dodwell, Madras, 1919) |
| Vol. VIII | (H. Dodwell, Madras, 1922) |
| Vol. IX | (H. Dodwell, Madras, 1924) |
| Vol. X | (H. Dodwell, Madras, 1925) |
| Vol. XI | (H. Dodwell, Madras, 1927) |
| Vol. XII | (H. Dodwell, Madras, 1928) |

என்ற முறையே 12 தொகுதிகள் முதலில் இருந்தன.

தமிழிலோ, பிரத்தியோகமான ஆனந்தரங்கப்பிள்ளை (யவர்களின்) தினப்படி சேதி குறிப்பு என்ற தலைப்பில் ஒன்பது நூல்கள் புதுச்சேரியிலிருந்து வெளிவந்தன.

முதல் புத்தகம் (பு.1) (புதுச்சேரி, 1948)
இரண்டாம் புத்தகம் (பு.2) (புதுவை, 1949)
மூன்றாம் புத்தகம் (பு.3) (புதுச்சேரி, 1950)
நான்காம் புத்தகம் (பு. 4) புதுச்சேரி, 1951)
ஐந்தாம் புத்தகம் (பு. 5) (அரசாங்க புத்தகசாலை, புதுச்சேரி, 1954)
ஆறாம் புத்தகம் (பு. 6) (அரசாங்க புத்தகசாலை, புதுச்சேரி, 1956)
ஏழாம் புத்தகம் (பு. 7) ( அரசாங்க பொது நூல் நிலையம், புதுச்சேரி, 1963)
எட்டாம் புத்தகம் (பு. 8) (ரோமன் ரோலாண்டு நூலகம், புதுவை, 1978)
ஒன்பதாம் புத்தகம் (பு.9) (ரோமன் ரோலாண்டு நூலகம், புதுவை, 19??)

மேற்கொண்டு தமிழ் வரிசையில் வேறு புத்தகங்கள் வெளிவராததால், தமிழ்ப் பதிப்பு ஒன்பதாம் புத்தகத்துடன் (பு. 9), தொகுதி முற்றுப்பெறாமலே இருப்பதால், தமிழ்மட்டுமே அறிந்தோர் ஆனந்தரங்கப்பிள்ளையின் நாட்குறிப்பு 1736 லிருந்து 1753 வரைக்கும் செல்கின்றது என்று நினைக்கக் கூடிய சாத்தியக்கூறும் இருந்தது.

இருப்பினும் சுமார் 15 ஆண்டுக்கு முன் வரை, புதுச்சேரியிலும் வெளிநாடுகளிலும் உள்ள சில ஆய்வாளர் தவிர மற்றவர் அனைவரும் ஆனந்தரங்கப்பிள்ளையையும் ஆனந்தரங்கப்பிள்ளையின் நாட்குறிப்பையும் முற்றிலும் மறந்து விட்டிருந்தனர். நல்ல வேளையாக, 1985ஆம் ஆண்டு Asian Educational Services (New Delhi) பதிப்பகத்தார்

ஆங்கிலப் புத்தகங்கள் பனிரெண்டையும் இரண்டாவது முறையாக அச்சடித்து வெளியிட்டனர். இவ்வெளியீடு தமிழ் வரலாற்றாராய்ச்சியுலகில் பெரியதொரு மறுமலர்ச்சியை உண்டாக்கியுள்ளது.

இத்துடன், புதுச்சேரியில் ஆனந்தரங்கப்பிள்ளையின் சந்ததியார் குடும்பம் புதியதொரு ஆனந்தரங்கப்பிள்ளை மாளிகையைக் கட்டியிருப்பதும், அவர் பெயரில் அறக்கட்டளையொன்றமைத்து, ஆண்டு தோறும் புதுவைப் பல்கலைக் கழகத்துடன் ஆய்வரங்கம் நடத்திவருவதுடன் ஆனந்தரங்கப்பிள்ளையின் பெயரை எல்லோருக்கும் நினைவுபடுத்திக் கொண்டும் வருகின்றது.

1998ல் புதுவை மாநில அரசு தமிழ்ப் பாகங்களை மறு பதிப்பு செய்து வெளியிட்டிருப்பது பாராட்டக்கூடிய தென்றாலும் முதற் பதிப்புகளில் இருந்த, குறைகள் தீர்க்கப்படாமலேயிருக்கின்றன. இருப்பினும், 1928–இல் முடிவுற்ற ஆங்கிலப்பதிப்பிலும் திருத்தம் செய்யப்படவேண்டிய பல குறைகள் இருப்பதாகத் இப்பொழுது தெரிய வருகின்றது. இந்த ஆங்கிலப்பபதிப்பின் குறை, அதற்கு மூலமாக இருந்த சென்னையில் இருக்கும் தமிழ்க் கைப்பிரதி நகலின் குறையே என்றும் எண்ண இடமிருக்கின்றது. இதைக் கீழே விளக்குவோம்.

1846ஆம் ஆண்டு வாக்கில், புதுவையில் ஆனந்தரங்கப்பிள்ளையின் தமிழ் நாட்குறிப்பு கண்டுபிடிக்கப்பட்ட போது, அங்கு பணிபுரிந்த அ. கலுவா மொம்பரன் (A Gallois Montrun) என்பவர் அந்நாட்குறிப்பின் நகல் ஒன்றை (A1) எடுத்து வைத்தார். இதிலிருந்து சில பகுதிகளைப் பிரெஞ்சு மொழியாக்கம் செய்து வெளியிட்ட போது, ஆங்கிலேயர், தங்களுடைய சொந்த வரலாற்றுக்கும், தென்னிந்திய வரலாற்றுக்கும் உபயோகமாக பல விபரங்கள் இந்நாட்குறிப்பின் பலவிடங்களில் இருப்பதைக் கண்டு இதன் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்தனர் என்பதை மேலே குறிப்பிட்டுள்ளோம். எனவே A1 நகலைப் பார்த்து அவர்கள் மற்றொரு நகலை B1 எடுக்க வைத்து, சென்னைக்குக் கொண்டு சென்றார்கள். அதன்பிறகு, புதுவை நகல் (A1) ஏதோ சில காரணங்களால் அழிவுற்றது. B1 நகலை மூலமாகக் கொண்டுதான், ஆங்கிலேயர் 1904–1928ம் ஆண்டுகளில் ஆங்கிலப்பதிப்பை 12 பாகங்களாக வெளியிட்டனர். பிறகு, இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து புதுவைப் பிரெஞ்சு அரசு, சென்னை நகலான B1 ஐப் பார்த்து புதிய நகல் (C1) எடுத்தது. ஆனால் எல்லா நகல்களுக்கும் முன்னோடியான மூல தினசரிதை என்னவாயிற்று என்பது தெரியவில்லை. ஆனந்தரங்கப்பிள்ளையின் சந்ததியாரின் கையிலோ, மற்றவிடங்களிலோ, அது இப்பொழுது இல்லை.

ஆனால் அ, கலுவா மொம்பரன் காலத்தில், புதுவையில் பணியாற்றிய பிரெஞ்சு அறிஞர் எதுவார் அரியேல் (Edouard Ariel) தன்னுடைய சொந்த

உபயோகத்துக்காகத் தானும் ஒரு நகல் (A2) அதே நேரத்தில் எடுக்க வைத்தார். இதை வைத்துக்கொண்டு அவர் பற்பல ஆராய்ச்சிகள் செய்திருக்கவேண்டும். இவர் தமிழ் மொழியையும் தமிழ் இலக்கியத்தையும் நன்கு கற்றுணர்ந்தவராகையால், மேலும் பல தமிழ் கைச்சுவடிகளையும், அக்கால தமிழ் நூல்களையும் சேர்த்து வைத்திருந்தார். இவருடைய மறைவுக்குப்பின், இவர் சேர்த்து வைத்திருந்தவைகள் அனைத்தையும் பிரெஞ்சு அரசு, பாரிசில் உள்ள தேசிய நூலகத்தின், கைப்பிரதிப் பிரிவில் கொண்டு வந்து வைத்துள்ளது. Oriental Manuscripts Department, Bibliotheque Nationale, எனவே, எ. அரியேலின் முதல் தரமான A2 நகல் இன்று பாரிசில் இருக்கின்றது.

இந்த A2 நகலைப் படித்து ஆராய்ந்தபோது, எ. அரியேல் தன்னுடைய குறிப்புகளையும் அந்நகலில் எழுதியிருப்பதைக் கண்டோம். சில விடங்களில் என்று Agm குறிப்பிட்டிருப்பது, அ. கலுவா மொம்பரனின் நகலையோ, அல்லது அவருடைய தமிழ்ப் புலவரையோ சுட்டுவதாக இருக்கலாம். இவ்விரண்டு நகல்களையும் அவர் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது பலவிடங்களில் பொருள் வேறுபாடுகள் இருப்பதைக் கவனித்திருக்கலாம். மேலும், தமிழ்ப்பதிப்பிலும் ஆங்கிலப்பதிப்பிலும் இல்லாத பல புதிய விபரங்களும் A2 நகலில் இருக்கின்றன. இந்த A2 நகல் புதுச்சேரி, தமிழ்நாடு உள்ளிட்ட தென்னிந்தியாவின் சமுதாய வாழ்வை ஆய்வு செய்வோருக்கு நற்களஞ்சியமாகத் திகழும் என்பது திண்ணம்.

இப்படியாக, பாரிசில் இருக்கும் மொத்த மூலப் பிரதிகள் 17. அவைகளாவன:

| | |
|---|---|
| Mss. Indien[3] 143 | Mss. Indien 152 |
| Mss. Indien 144 | Mss. Indien 153 |
| Mss. Indien 145 | Mss. Indien 154 |
| Mss. Indien 146 | Mss. Indien 154bis |
| Mss. Indien 147 | Mss. Indien 155 |
| Mss. Indien 148 | Mss. Indien 156 |
| Mss. Indien 149 | Mss. Indien 157 |
| Mss. Indien 150 | Mss. Indien 158 |
| Mss. Indien 151 | |

இவைகளில், முதலில் வருவதும் கடைசி ஐந்தும் ஆனந்தரங்கப்பிள்ளை எழுதிவைத்தவையல்ல. முதலில் வருகின்ற Mss. Indien 143 இல் மூன்றாம் திருவேங்கடப்பிள்ளையும் இரண்டாம் வீராநாய்க்கரும் எழுதியவையும் மற்ற சிலவும் இருக்கின்றன. பிறகு வருகின்ற 11 கோப்புகளை முற்றிலும் ஆனந்தரங்கப்பிள்ளை எழுதிவைத்தவைகளாகக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| ஆனந்தரங்கப்பிள்ளை 1 | Mss. Indien 144 |

| | |
|---|---|
| *ஆனந்தரங்கப்பிள்ளை 2* | Mss. Indien 145 |
| *ஆனந்தரங்கப்பிள்ளை 3* | Mss. Indien 146 |
| *ஆனந்தரங்கப்பிள்ளை 4* | Mss. Indien 147 |
| *ஆனந்தரங்கப்பிள்ளை 5* | Mss. Indien 148 |
| *ஆனந்தரங்கப்பிள்ளை 6* | Mss. Indien 149 |
| *ஆனந்தரங்கப்பிள்ளை 7* | Mss. Indien 150 |
| *ஆனந்தரங்கப்பிள்ளை 8* | Mss. Indien 151 |
| *ஆனந்தரங்கப்பிள்ளை 9* | Mss. Indien 152 |
| *ஆனந்தரங்கப்பிள்ளை 10* | Mss. Indien 153 |
| *ஆனந்தரங்கப்பிள்ளை 11* | Mss. Indien 154 |

Mss. Indien 154bis- *ன் பல பகுதிகளை ஆனந்தரங்கப்பிள்ளையின் தம்பி மகனார் மூன்றாம் திருவேங்கடப்பிள்ளை தான் எழுதியிருக்கவேண்டும் என்று நினைக்க இடமிருக்கின்றது. மீதி நிற்கின்றவைகளில்* Mss. Indien 155, Mss. Indien 156, Mss. Indien 157 *ஆகியவைகளை மூன்றாம் திருவேங்கடப்பிள்ளை (விஜய திருவேங்கடப்பிள்ளை) எழுதியிருக்கவேண்டும் என்பதற்குக் காரணங்கள் இருக்கின்றன. கடைசியில் வரும்* Mss. Indien 158 *பிரதியில் மூன்றாம் திருவேங்கடப்பிள்ளையும் நான்காம் திருவேங்கடப்பிள்ளையும் (முறையே விஜய திருவேங்கடப்பிள்ளை, முத்து விஜய திருவேங்கடப்பிள்ளை) எழுதிவைத்த குறிப்புகள் இருக்கின்றன.*

*ஆக,*

| | |
|---|---|
| *மூன்றாம் திருவேங்கடப்பிள்ளை கோப்பு 1* | Mss. Indien 155 |
| *மூன்றாம் திருவேங்கடப்பிள்ளை கோப்பு 2* | Mss. Indien 156 |
| *மூன்றாம் திருவேங்கடப்பிள்ளை கோப்பு 3* | Mss. Indien 157 |
| *மூன்றாம்– நான்காம் திருவேங்கடப்பிள்ளை 1* | Mss. Indien 158 |

*என்று கூறும்படி கடைசி நான்கு பிரதிக் கோப்புகளும் அமைந்திருக்கின்றன.*

*பாரிசில் உள்ள பிரதிக் கோப்புகளுக்கும் ஆங்கிலம் தமிழ்ப் பதிப்புகளுக்கும் உள்ள தொடர்பு முறை சுலபமானதல்ல. பதிப்பின் தொடக்கம் பிரதிக் கோப்பின் தொடக்கத்துக்குப் பொருந்தாமலும், பதிப்பின் முடிவு பிரதிக் கோப்பின் முடிவுக்குப் பொருந்தாமலும் இருக்கின்றன. ஆனந்தரங்கப்பிள்ளை எழுதிவைத்தவை பாரிசில் மொத்தமாக 11 கோப்புகளில் உள்ளனவாகவும் ஆங்கிலப்பதிப்பு நூல்கள் மொத்தம் 12–ஆக அமைந்துவிட்டதும் தற்செயலானதொன்றே.*

*பிற்காலத்தில், தன் பெரிய தகப்பனார் எழுதிவைத்துவிட்டுப் போன நாட்குறிப்புகளைச் சரி பார்த்தபின் மூன்றாம் திருவேங்கடப்பிள்ளை அவைகளின் அட்டவணையையும் எழுதிவைத்திருக்கின்றார். இதைக் கொண்டு பார்த்தால் அவர் காலத்தில் இப்பிரதிகளைப் மிகவும்*

பத்திரமாக வைத்திருந்த விதம் விளங்கும். இதன் காரணமாக, இவருடைய சந்ததியாரும் அப்பிரதிகளை 19ஆம் நூற்றாண்டுக் கடைசிவரையில் காப்பாற்றி வந்திருக்க வேண்டும். பிறகு, அப்பிரதிகளுக்கு முக்கியத்துவம் ஏற்பட்டு, சில புதிய சிக்கல்களும், அவைகளை அடைவதில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கு மிடையே சச்சரவு ஏற்பட்டிருக்குமோ என்று நினைக்கத் தோன்றிகிறகிறது. சீனிவாசாச்சாரி அவர்களின் ஆய்வுக் கட்டுரைகளும் அப்படியே எண்ணவைக்கின்றன.

இப்படியாக, Mss. Indien 158இல் 'தினசரி தஸ்திரம் அட்டவணை' என்ற தலைப்பில் 27 தஸ்திரங்களையும், 'நகல் தஸ்திரத்துக்கு வகை' என்ற தலைப்பில் 6 நகல் தஸ்திரங்களையும் குறிப்பிடுகின்றார். இப்படி, அவர் குறிப்பிடுவது மொத்தம் 33 தஸ்திரங்கள் (அல்லது சுவடிகள்) எனக் கொள்ளலாம்.

### தினசரி தஸ்திரம் அட்டவணை

1 நள ஆவணி 25 முதல் குரோதன அற்பசி 1 வரை
( 6 செப்தெம்புறு 1736 முதல் ஒயித்தேம்புறு 1745 வரை) தஸ்திரம் 1 Mss. Indien 144
2 குரோதன தை 27 முதல் அக்ஷய அற்பசி 17 வரை
(5 எப்ரேல் 1746 முதல் 30 ஒயித்தேம்புறு 1746 வரை) தஸ்திரம் 1 Mss. Indien 144
3 அக்ஷய அற்பசி 16 முதல் அக்ஷய பங்குனி 17 வரை
( 30 ஒயித்தேம்புறு 1746 முதல் மார்சு 1747 வரை) தஸ்திரம் 1 Mss. Indien 145
4 அக்ஷய மாசி 21 முதல் பிறபவ அற்பசி 13 வரை
(மார்சு 1747 முதல் 26 ஒயித்தேம்புறு 1747 வரை) தஸ்திரம் 1 Mss. Indien 145-146
5 பிறபவ அற்பசி 14 முதல் விபவ சித்திரை 18 வரை
(27 ஒயித்தேம்புறு 1747 முதல் 26 அபிரெல் 1748 வரை) தஸ்திரம் 1 Mss. Indien 146
6 விபவ சித்திரை 19 முதல் விபவ ஆவணி 19 வரை
(27 அபிரெல் 1748 முதல் 31 அகோஸ்து 1748 வரை) தஸ்திரம் 1 Mss. Indien 146
7 விபவ ஆவணி 20 முதல் விபவ காறதிகை 13 வரை
(செப்தெம்புறு 1748 முதல் 24 னொவெம்புறு 1748 வரை) தஸ்திரம் 1 Mss. Indien 147
8 சுக்கில ஆனி 15 முதல் பிறமோதூத சித்திரை 17 வரை
(25 சூனி 1749 முதல் 26 அபிரெல் 1750 வரை) தஸ்திரம் 1 Mss. Indien 147 -148
9 பிறமோதூத சித்திரை 19 முதல் பிறமோதூத அற்பசி 16 வரை
(28 அபிரெல் 1750 முதல் 29 ஒயித்தேம்புறு 1750 வரை) தஸ்திரம் 1 Mss. Indien 148
10 பிறசோறபதி சித்திரை 7 முதல் பிறசோற்பதி மாசி 27 வரை
(16 அபிரெல் 1751 முதல் 6 மார்சு 1752 வரை) தஸ்திரம் 1 Mss. Indien 148-149
11 ஆங்கீரச சித்திரை 16 முதல் ஆங்கீரச மாசி 16 வரை
(24 அபிரெல் 1752 முதல் 23 எபரெல் 1753 வரை) தஸ்திரம் 1 Mss. Indien 149-150
12 ஆங்கீரச மாசி 13 முதல் சிரீமுக காற்திகை 28 வரை
(20 எப்ரெல் 1753 முதல் 9 செத்தேம்புறு 1753 வரை) தஸ்திரம் 1 Mss. Indien 150
13 சிரீமுக மாசி முதல் பவ ஆவணி 7 வரை
(9 பிப்ரெல் 1754 முதல் 19 அகோஸ்து 1754 வரை) தஸ்திரம் 1
14 பவ ஆவணி 8 முதல் பவ காற்திகை 12 வரை
(20 அகோஸ்து 1754 முதல் 24 னொவெம்புறு 1754 வரை) தஸ்திரம் 1 Mss. Indien 151
15 பவ காறதிகை 13 முதல் பவ பங்குனி 19 வரை
(25 னொவெம்புறு 1754 முதல் 29 மார்சு 1755 வரை) தஸ்திரம் 1 Mss. Indien 151
16 பவ பங்குனி 15 முதல் யுவ அற்பசி 19 வரை
(25 மார்சு 1755 முதல் 1 னொவெம்புறு 1755 வரை) தஸ்திரம் 1 Mss. Indien 151-152

17 யுவ காற்திகை 1 முதல் தாது தை 29 வரை
(13 னொவெம்புறு 1755 முதல் 7 பிப்ரெல் 1757 வரை) தஸ்திரம் 1 Mss. Indien 152-153

18 தாது மாசி 1 முதல் வெகுதானிய புரட்டாசி 10 வரை
(8 எபரெல் 1757 முதல் 22 செத்தெம்புறு 1758 வரை) தஸ்திரம் 1 Mss. Indien 153-154

19 பிறமாதி சித்திரை முதல் பிறமாதி பங்குனி 30 வரை
(10 அபிரெல் 1759 முதல் 8 அபிரெல் 1760 வரை) தஸ்திரம் 1 Mss. Indien 154

20 விக்கிறம புரட்டாசி 5 முதல் விக்கறம புரட்டாசி 4 வரை
(9 அபிரெல் 1760 முதல் 16 செத்தெம்புறு 1760) தஸதிரம் 1 Mss. Indien 154bis

21 விக்கிறம புரட்டாசி 5 முதல் விக்கறம பங்குனி 30 வரை
(17 செத்தெம்புறு 1760 முதல் தஸ்திரம் 1 Mss. Indien 154bis

21. விக்கிறம தை 3 முதல்
(12 சனவரி 1761 முதல் எப்ரெல் 1761 வரை தஸ்திரம் 1 Mss. Indien 154bis

22 விஷு புரட்டாசி முதல் சித்திரபானு சித்திரை 5 வரை
(13 செத்தெம்புறு 1761 முதல் 14 அபிறெல் 1762 வரை) தஸ்திரம் 1

23 விஷு பங்குனி 31 முதல் சித்திரபானு அற்பசி 10 வரை
(9 அபிரெல் 1762 முதல் 23 ஒயித்தெம்புறு 1762 வரை) தஸ்திரம் 1 Mss. Indien 155

24 சித்திரபானு அற்பசி 11 முதல் சுபானு மார்கழி 11 வரை
(24 ஒயித்தேம்புறு 1762 முதல் 22 திசெம்புறு 1763 வரை) தஸ்திரம் 1 Mss. Indien 155

25 சுபானு மார்கழி 21 முதல் தாரண ஆடி 20 வரை
(1 செனெ 1764 31 சூலி 1764 ) தஸ்திரம் 1 Mss. Indien 155

26 ருதிறொக்காரி வையாசி 1 முதல்
முத்தியபிள்ளை அவர்கள் சரிததிரமும் வீரானாய்க்கர் சரித்திரமும் தஸ்திரம் 1 Mss. Indien 143

27 ருதிறொக்காரி மாசி 29 முதல்
சகுனம் பாத்து எழுதினதும்
சுவப்பனம் கண்டது கூட எழுதின தஸ்திரம் 1

29ஆவதோன்று இருந்தாவென்பது சரியாகக் குறிப்பிட்டுருக்கவில்லை !

***நகல் தஸ்திரத்துக்கு வகை***

| | |
|---|---|
| *ந–1 அக்ஷய சித்திரை 1* | *தஸ்திரம் 1* |
| *ந–2 விபவ சித்திரை முதல் பராசுமஹாளஷ்டகம்* | *தஸ்திரம் 1* |
| *ந–3 விபவ சித்திரை முதல் தெலுங்கு தமிழ்* | *தஸ்திரம் 1* |
| *ந–4 விபவ தையி 21 முதல் தெலுங்கு தமிழ்* | *தஸ்திரம் 1* |
| *ந–5 பிறசொற்பத்தி காற்த்திகை 1 முதல்* | *தஸ்திரம் 1* |
| *ந–6 விபவ காற்த்திகை 28 முதல்* | *தஸ்திரம் 1* |

This Table has been copied from the 1st folio of the Chronicle register from 21 Adi of year Taarana (1st april 1764) to 10 Vaiyaasi of year Viya (20 th may 1766).
Edouard Ariel has written himself the following note in french, meaning:
Copied by Rattinam, assembled by the same the Djagannada (june 1849) Signed: EA

*எதுவார் அறியேலின் பரிசோதனைப்படியும் 19ஆம் நூற்றாண்டு நடுவில் 33 கைப்பிரதிகள் இருந்திருக்கவேண்டும். அவைகளிற் சில இப்பொழுது கிடையா. வீரானாயக்கர் சரித்திரம் என்று குறிக்கப்படுவது நடக்குக் கிடைத்துள்ளது என்று கொண்டால் முத்திய பிள்ளை சரித்திரம் என்ற பிரதி இதுவரை கிடைக்கவில்லை.*

ஆனந்தரங்கப்பிள்ளையின் நாட்குறிப்புகளில் (தங்களுக்கு முக்கியமாகப் படாத காரணத்திலோ என்னமோ) பல பகுதிகள் குறைக்கப்பட்டு, மீதி மட்டும் 12 பாகங்களாக ஆங்கிலத்தில் வெளிவந்திருக்கின்றன.

தமிழ் நாட்டின் சமூக வரலாற்றைத் தெளிவாகத் தெரிந்துகொள்வதற்கு, ஆனந்தரங்கப்பிள்ளை நாட்குறிப்பிற் குறைகின்ற பகுதிகளையும், மற்றும் மூன்றாம் திருவேங்கடப்பிள்ளை, நான்காம் திருவேங்கடப்பிள்ளை ஆகியோரின் நாட்குறிப்புக்களையும் விரைவில் பதிப்பித்தால் சிறப்பாக இருக்கும்.

---

1. இக்கட்டுரையில் வரும் அனைத்து பெயர்களும் பிரெஞ்சு உச்சரிப்பில் கொடுக்கப்பட்டுள்ளன

2. 1998–இல் புதுவை அரசு தமிழ்ப் பதிப்புகளை மறுபடியும் அச்சடித்து வெளியிட்டுள்ளது.

3 ஆங்கிலத்தில் Indian என்பது பிரெஞ்சில் Indien என்று எழுதப்படும்

# 48. பார்வதிபுரம் தர்மசாலை ஆவணங்கள்

கோ. உத்திராடம், சென்னை.

இன்று வடலூரில் பெரும்புகழுடன் விளங்கும் அருட்பிரகாச இராமலிங்க இடிகளாரின் மடம் 19ஆம் நூற்றாண்டில் பார்வதிபுரம் ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்க சத்திய தருமச்சாலை என்று அழைக்கப்பட்டிருந்தது. இத்தருமச்சாலையைச் சேர்ந்த இரண்டு பதிவு ஆவணங்கள் தற்போது சென்னை செம்மஞ்சேரி ஆசியவியல் நிறுவன சுவடிப்பிரிவில் உள்ளன.

## 48:1

காலம் : 16.10.1893.

செய்தி : இவ்வாவணம் ஆறு இரண்டணா பத்திரத்தாள்களில் எழுதப்பட்ட நகலாகும். இவை நகல் முத்திரை தாள் ஆதலால் இதில் for Copy only என்று அச்சிடப்பட்டுள்ளது. நடுவில் இங்கிலாந்து இராணியாரின் மார்பளவு உருவமும் அதனைச் சுற்றி Indian two Annas என்று ஆங்கிலத்திலும் மறுபுறம் பாரசீக எழுத்திலும் அச்சிடப்பட்டுள்ளது. ஆறு பகுதிகளாக உள்ள ஆவணத்தின் முதல் பகுதி தர்மசாலைக்கு புதிய தர்மகர்த்தாவாக வேட்டவலம் ஜமீன்தார் கிருஷ்ண வாணாதிராயர் அப்பாசாமி பண்டாரம் நியமிக்கப்பட்டதைக் குறிக்கிறது. இதுவரை பட்டாதாரர்களாகவும், தருமசாலையின் ஏஜெண்டுகளாயிருந்தவர்கள் நிலப்பரப்பை புதிய தருமகர்த்தா பேரில் மாற்றித் தரும்படி விண்ணப்பித்துள்ளனர். பட்டா நிலத்தில் அடங்கிய 35 நிலங்களின் பரப்பும், தீர்வை விவரமும் அடங்கிய பட்டியல் இவ்விண்ணப்பத்தின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது. இரண்டாம் பகுதி ரெவன்யூ இன்ஸ்பெக்டர் சரிபார்த்து தன் ஒப்புதலைத் தெரிவித்த பகுதியாகும். மூன்றாம் பகுதியில் வேட்டவலம் ஜமீன்தார் தன் பேருக்கு பட்டா மாற்ற வேண்டியும் தீர்வைகட்ட சம்மதித்தும் எழுதிக் கொடுத்த உறுதி மொழிப்பத்திரமாகும். நான்காம் பகுதி பட்டாதாரர்கள் நால்வரில் இறந்து போன ஆறுமுக முதலியாரின் மனைவி தந்த ஒப்புதல்பத்திரம். ஐந்தாவது பகுதி கணக்கர் மற்றும் மணியக்காரர் பட்டாவை பெயர் மாற்றுவதில் எந்த விதத்தடையுமில்லை என்று குறிப்பிடும் ஒப்புதலாகும்.

*ஆறாவது பகுதி ரெவன்யூ இனஸ்பெக்டரின் உறுதிமொழி. இறுதியில் ஆவணம் நகலெடுக்கப்பட்ட குறிப்புகள் ஆங்கிலத்தில் உள்ளன.*

***பத்திரத்தாள்–1***

***பகுதி : 1***

1 மகாகனம் பொருந்திய சக்கிரவர்த்தினியவர்கள் ஆளுகைக்கு
2 கூடலூர் துக்குடி பார்வதிபுரம் கிராமம் 302 நம்பர் பட்டாதார்களான
3 வக்கீல் வெங்கிடேசய்யர்–1, சபாபதி குருக்கள்–2, நாராயண ரெட்டி
4 யார்–3, நாங்கள் எழுதிகொடுத்த மாத்தல் ராஜினமா
5 எங்கள் பேராலும் ஆறுமுகமுதலியாற் பேராலும் ஆய்வரும் மேற்படி
6 302ம் நம்பர் பட்டாவில் கண்ட நிலங்கள் மேற்படி பார்வதிபுரம் கிராமத்தி
7 லிருக்கிற ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்க சத்திய தருமச்சாலை
8 க்கு பாத்தியமானதாகையால் அதற்கு தலைவராயிருந்த சிதம்பரம்
9 ராமலிங்கப் பிள்ளை பேறாலாய் வந்த மேற்படி 302ம் நம்பர் பட்டாவை அவர்
10 ஆஜரில்லாத காரணத்தால் எங்களையும் மேற்படி ஆறுமுக முதலியாரையும்
11 மேற்படியாருக்கு ஏஜண்டுகளென்று குறித்து 1290ம் பசலியில் பட்டாசெ
12 ய்யப் பட்டியிருந்தாலும் இப்போது மேற்படி தருமச்சாலை அபிமானிகள்
13 மேற்படி தருமச்சாலைக்கு மகாகனம் பொருந்திய வேட்டவலம் ஜ
14 மீன்தாரவர்களாகிய அருணாசல வசந்தகிருஷ்ண வாணாதராய
15 அப்பாசாமி பண்டாரியாரவர்களை தர்மகர்த்தாவாக நியமித்திருப்ப
16 தினாலே மேற்படி 302ம் நம்பர் பட்டாவை மாத்தி மேற்படி ஜமீன் தாரவர்கள்
17 பேரால் பார்வதிபுரம் ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்க சத்திய தரு
18 மச்சாலை தருமகர்த்தா வேட்டவலம் ஜமீன்தார் அருணாசல வசந்த
19 கிருஷ்ணவாணாதராய் அப்பாசாமி பண்டாரியார் என்று கண்டு
20 பட்டா கொடுக்கும்படி உத்திரவு தயவு செய்ய வேணும் என்று
21 கோருகிறோம் மேற்படி ஆறுமுக முதலியார் இறந்து போய்விட்ட படியால்
22. மேற்படி தருமச்சாலை வேலை பார்த்து வந்த யேஜண்டுகளாகிய
23 நாங்கள் மட்டில் இந்த ராஜினாமா கொடுக்கலானோம்.

***பத்திரம் தாள் 2–3***

***(வரிகள் 24–65)***

*(பத்திரத்தாள்கள் 2,3ல் 302 எண்பட்டாவில் சேர்ந்த நிலங்களின்*

*நீண்டபட்டியல் தரப்பட்டுள்ளது. பட்டியலின் தலைப்பில் கிசும், து, நெ, காணி, தீர்வை ஆகியவை தரப்பட்டு நில எண்கள், நிலப்பரப்பு, நிலத்திற்கான தீர்வை தரப்பட்டுள்ளன. பட்டியலின் இறுதியில்*

1 1883 வருடம் ஜெனவரி மாதம் 26 தேதி
2 வெங்கடேசய்யர் கைஎழுத்தென்று
3 அ சபாபதி சிவாசாரி கைஎழுத்தென்று
4 சு. நாராயணரெட்டி என்று

***பத்திரத்தாள்–4***

***பகுதி :2***

66 1883 ஆண்டு ஜெனவரி மீ 26 விசாரணை
67 இந்த விண்ணப்பம் நாங்கள் கொடுத்தது தான் அதில் கண்ட படி
68 மேற்படி தர்மச்சாலைக்கு சொந்தமான மேல்கண்ட நிலங்களை
69 மேற்படி தர்மச்சாலைக்கு தர்மகர்த்தாவாகிய வேட்ட வலம் ஜமீன்
70 தார் அருணாசல வசந்தகிருஷ்ண வாணாதாராய அப்பா
71 சாமி பண்டாரியார் அவர்கள் பேரால் வருகிற 1293ம் பசலி
72 முதல் பட்டாசெய்ய வேணுமென்று கேட்டுக் கொள்ளு
73 கிறோம்
74 வெங்கிடேசய்யர் கைஎழுத்தென்று
75 அ. சபாபதி சிவாசாரியாற் கை எழுத்தென்று
76 சு. நாராயண ரெட்டி என்று
77 D. Subramanyaiyer - Revenue Inspector

***பகுதி : 4***

78 மேற்படி ஜமீன்தார் அருணாசல வசந்த கிருஷ்ணவாணாதராய
79 அப்பாசாமி பண்டாரியார் அவர்களை விசாரணை
80 விண்ணப்பத்தில் கண்ட நிலங்களை மேற்படி தர்மச்சாலைக்காக தர்மகர்
81 த்தாவாகிய யென் பேரால் பட்டா செய்ய வேணு மென்று
82 கேட்டுக் கொள்ளுகிறேன் மேற்படி நிலங்களின் தீர்வையை வருகிற
83 1283 ம் பசலி முதல் நான் செலுத்த உடன் பட்டிருக்கிறேன்.
84 பார்வதிபுரம் ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்க சத்திய தருமச்
85 சாலை தர்மகர்த்தா. வேட்டவலம் ஜமீன்தார் அருணாசல வசந்த
86 கிருஷ்ணவாணாதராய அப்பாசாமி பண்டாரியார் என்று
87 D. Subramaniya Iyer
88 Revenue Inspector

***பத்திரத்தாள் 5***

89 மேற்படி இறந்துபோன ஆறுமுகமுதலியார் பெண்ஜாதி
90 இந்த விண்ணபத்தில் கண்ட நிலங்கள் மேற்படி தர்மச்
91 சாலைக்காக யென் புருஷன் பேரில் பட்டாவாயிருந்து
92 தே தவிர அதில் யெனக்காவது யென் புருஷனு

93 க்காவது யாதொரு சம்மந்தமுமில்லை. மேற்படி நிலத்தை
94 மேற்படி தர்மகத்தாவாகி யிருக்கிற மேல்கண்ட அருணா
95 கல வசந்த கிருஷ்ண வாணாதராய அப்பாசாமி
96 பண்டாரியார் அவர்கள் பேரால் பட்டாசெய்ய நான்
97 சம்மதித்து யிருக்கிறேன்.
98 ச. சண்முகம்மாள் என்று
99 மருங்கூர் பருதேசி அறிவேன் என்று
100 D. Subramaniya Iyer
101 Revenue Inspector

***பகுதி : 5***

102 மேற்படி–மேற்படியூர் கணக்கு சாமராவ் விசாரணை
103 விண்ணப்பத்தில் கண்ட நிலத்தை 1293ம் பசலிக்கு மேற்படி
104 அருணாசல வசந்த கிருஷ்ண வாணாதராய அப்பாசாமி
105 பண்டாரியார் அவர்கள் பேரால் பட்டா செய்ய
106 ஆஷேபமில்லை மேற்படி நிலத்தின் பேரில் சன்வார்
107 பாக்கி கோர்டு ஜப்தி முதலானது யில்லை
108 ஆஜர்யிருக்கிற வெங்டேசய்யர் சபாபதி குரு
109 க்கள் நாராயண ரெட்டி இவர்களும் யெறந்து போன
110 ஆறுமுக முதலியாறுக்காவது மைத்தவர்களுக்காவது
111 மேற்படி நிலங்களில் யாதொரு பாத்தியமுமில்லை.

***பத்திரத்தாள் :5***

112 அவைகள் தர்மச்சாலைக்கு சம்பந்தமான நிலங்களாயும்
113 அதே காரணத்தினால் யேஜண்டாகிய அவர்கள் பேரில்
114 போத்தி ரூல்படி பட்டாவானதாயும் இருப்பதால்
115 மேற்படி நிலங்களை அருணாசல வசந்த கிருஷ்ண வாணாராய அப்பாசாமி பண்
116 தராய அப்பாசாமி பண்டாரியார் பேரால் பட்டா
117 செய்ய ஆஷேபமில்லை.
118 கணக்கு ஜெ.பெ. சாமராவ் என்று
119 மணியம் பால்பூகி என்று
120 D. Subramaniya Iyer
121 Revenue Inspector

***பகுதி : 6***

122 மேல்கண்ட நடவடிக்கைகளெல்லாம் நான் நேரில்
123 சுயமாய் நடத்தியதாய் உறுதியாய் சொல்லு
124 கிறேன்.
125 D. Subramaniya Iyer
126 Revenue Inspector
127 26.1.83

128 No of words 857 (True Extracts)
129 No of correctiosn .. Eight
130 Copied by
131 Compared by Vijayaraghavalu
132 16.10.93
133 for Tahsildar
134 16.10.93

**48:2**

*காலம்* : ***26.5.1914.***

*செய்தி* : ***திருச்சிராப்பள்ளி மாவட்டம் பெரம்பலூர் வட்டம் சிறுமருதை என்ற ஊரைச் சேர்ந்த இராமசாமி படையாச்சி என்பவர் வடலூர் தர்மசாலையில் பரதேசி அடிமையாக பலகாலம் இருந்த தனது தமையன் பேரில் இருந்த நிலங்கள் தனக்கு சொந்தமில்லை என்று உறுதி செய்து அவை தர்மசாலைக்கேயுரியவை என்று தர்மசாலை மானேஜர் சுப்பராய சாமியாருக்கு எழுதிக் கொடுத்த விடுதலைப்பத்திரம்.***

1 1914 ஆண்டு மே மாதம் 26 கூடலூர் தாலுக்கா பார்வதிபுரம் தர்மச்சாலை தற்காலம்
2 மானேஜராயிருக்கும் சுப்பராய சுவாமியாருக்கு திருச்சிராப்பள்ளி ஜில்லா
3 பெரம்பலூர் தாலுக்கா சிறுமருதை அல்லது தொங்கபுரம் கிராமத்திருக்கும் வன்னி
4 யர் பயிர் விஷ்ணு மதம் கருப்பு படையாச்சி மகன் இராமசாமி படையாச்சி மகன் எழுதிக் கொடுத்த
5 புதுநிலவிடுதலைப் பத்திரம் மேற்படி பார்வதிபுரத்திலுருக்கும் ஸ்ரீ இராமலிங்க சுவா
6 மிகள் தர்மசாலைக்கு அடிமையாயிருந்து இறந்த என் ஜனக தமயன் நாரா
7 யணசாமிப்பிள்ளை என்கிற பரதேசி பேரால் பட்டாவாயும் கிரயமாயும் மேற்படி
8 தருமச் சாலைக்கு அனுபோகத்திருந்த நிலங்களின் பட்டாவானது பௌத்திரவா
9 ரர்சின் படி என் பேரில் பட்டாவாக வேண்டியிருக்கிறது என் தமயன் மேற்படி நாராயண
10 சாமிபிள்ளை மேற்படி தர்மச்சாலையிலிருந்து சம்பாதித்த சொத்தான படியால் எ
11 னக்கும் இந்த சொத்துக்கு பாத்தியதையில்லை எனக்கு ஆக வேண்டிய பாத்திய

12 தையை ஆனுபோகம் செய்துவரும் மேற்படி தர்மச்சாலை தற்கால மானேஜர்

13 சுப்பராய சுவாமி பேருக்கு இதை விடுதலை செய்துவிட்டேன் இதன்மதிப்பு

14 ரூ.200 இறுநூறு ரூபாய் பொறுமானது இதை விடுதலை இந்தபடிக்கு என்

15 மனோராசியில் எழுதிக்கொடுத்த புதுநிலவிடுதலைப் பத்திரம் எனக்கும் இந்த சொ

16 த்துக்கும் வேறு எவ்வித பாத்தியமும் கிடையாது

17 இந்த சொத்தின் பேரில் அடமானமும் கிடையாது

18 சொத்து விவரம்

19 குறிஞ்சிபாடி சப்ரிஸ்டாரில் பர்க்கா பார்வதிபுரம் கிராமத்தில் என் தமயன் பே

20 ரால் பட்டாவாயும் கிரயமாயும் அனுபவித்த நிலமானது சர்க்கார் புது சர்வே

21 90 சி2 2–52க்கு தீர். 2–80புதுசர்வே 93 ஏ31:45 க்கு தீர் 1.70 சர்வே மேற்படி

22 3.55க்கு தீர் 3.90 சர்வே 94 பி1 1–86க்கு தீர்வை 1.14.0 பி 2–78க்கு தீர்

23 2–12–0–94 நெ.ஏ.1–7க்கு தீர்1–1–0 ஆக புக் 13.23க்கு தீர் 13–3–0.

24 ராமசாமி படையாச்சி கைஎழுத்து

25 இராமசாமி படையாச்சி அரிய்வேன்

26 கோ. சின்னபடையாச்சி அரிவேன்

27 எழுதியது... கர்ணம்...[2]

---

[1] 16,17,18 வரிகளின் இடையில் 4வது வரியில் மகன அடித்தல், '16வது வரியில் என என்பது அடித்தல்', 17வது வரியில் க்கு என்பது அடித்தல்' என்று எழுதப்பட்டுள்ளது.

[2] இந்த ஆவணம் 3 7.1933ல் ராமலிங்க சங்கம் என்ற நிறுவனத்திற்காக The Board of Commissioners for Hindu Religious Endownments Madras அலுவலகத்தில் சான்றாக ஏற்கப்பட்டுள்ளதைத் தெரிவிக்கும் முத்திரை இறுதியில்உள்ளது

# 49. பெண்ணைக் கரையில் சிந்துக்காசு

சுகவன முருகன், காவேரிப்பட்டினம்.

கம்பையநல்லூர் ஊருக்கருகில் உள்ள பெருங்கற்காலப் புதைகுழி ஒன்று சிதைக்கப்பட்ட பொழுது சுடுமண் பொம்மையும், மாவுக்கல் மணிகளும் டைபீரியஸ் நாணயம் ஒன்றும் கிரேக்க நாணயம்(?) என்று கருதப்பட்ட தரம் குறைந்த வெள்ளியிலான காசொன்றும் புது. பொ.வெங்கட்ராமன் அவர்களால் சேகரிக்கப்பட்டது. மேற்குறித்த கிரேக்க நாணயத்தைப் பற்றி இலண்டன் பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தை சேர்ந்த ஜோ. கிரிப் பின்வரும் விவரங்கள் தந்துதவினார். இந்நாணயமானது தற்போதைய பாகிஸ்தானில் உள்ள தட்சசீலம் பகுதியை கி.பி 30–40ல் ஆண்ட சக (இந்தோ–சித்திய) மன்னரான இரண்டாம் ஏஜஸின் கீழ் ஆளுநராகவும், ராணுவ ஆட்சியாளராகவும் விளங்கிய இந்திரவர்மன் என்பவரின் மகனான அஸ்பவர்மன் என்பவரால் வெளியிடப்பட்டதாகும். நாணயத்தின் பொறிப்புகள், முன்பக்கத்தில் கிரேக்க வரிவடிவத்திலும் மறுபக்கத்தில் பிராகிருத மொழியில் கரோஷ்டி வரிவடிவத்திலும் உள்ளன. குதிரையின் மீது அமர்ந்துள்ள 'ஏஜஸ்' வலப்புறமாக உள்ளது போன்று சித்தரிக்கும் பொறிப்புடன் SILENOENM என்றும் குதிரையின் முன் பகுதியின் VA என்ற அச்சுக் குறிப்பும் கரோஷ்டியில் உள்ளன. இதன் முழுமையான வாசகம் 'BASILEOS BASILEON MEGALOU AZOU' என்பதாகும். *அரசர்க்கு அரசன் மாபெரும் ஏஜஸ்* என்பது இதன் பொருள் ஆகும்.

நாணயத்தின் மறுபக்கம் நின்ற நிலையில் உள்ள பெண் *அதீனா* என்ற கிரேக்க தேவதையாகும். குத்தீட்டியும் கேடயமும் தலையில் கவசமும் அணிந்து இடப்பக்கம் நோக்கி காணப்படும் இவ்உருவத்தின் அருகில் கிரோக்க எழுத்தொன்றும் நந்திபாத குறியீடும் பொறிக்கப்பட்டுள்ளன. அவை அச்சகக் குறியீடுகளாகும். அவளைச் சுற்றி கரோஷ்டி வரி வடிவத்தில் Trasa Aspavarmasastra என்ற பிராகிருத வாசகத்தின் ஒரு பகுதி காணப்படுகிறது. இது Intravarama Putrasa Aspavarmasa Jayatasa என முழுமையாக பிற நாணயங்களில் உள்ளது. இது சிறிய நாணயம் என்பதால் மேற்கண்டவாறு சுருக்கமாக பொறிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட வாசகத்தின் பொருள் ''இந்திரவர்மனின் மகனான வெற்றி வீரன் அஸ்பவர்மன்'' என்பதாகும்.

இதே போன்ற நாணயங்கள் இலங்கையில் கண்டெடுக்கப்பட்டதாகவும் தமிழ்நாட்டில் இந்நாணயம் பற்றிய செய்தி இது தான் முதலானதாகும் என்றும் ஜோகிரிப் குறிப்பிடுகிறார்.



# 50. யவனர் பொற்காசு

ஐ. இராமசாமி, இக்கரை போளுவாம்பட்டி.

கோவை மாவட்டம், பேரூர் அருகிலுள்ள வெள்ளலூரில் கி.மு. *500* (?) காலத்தது என கருதத்தக்க கலப்பு உலோகத்தாலான இரண்டு பழங்காசுகள் வெள்ளலூரில் கிடைத்தன. இவற்றின் பின்பக்கங்களில் ஒரே மாதிரியான எழுத்துக்கள் உள்ளன. ஆனால் முன் பக்கங்கள் ஒன்றில் ஒரு தலை உருவம், மற்றொன்றில் தமிழகத்தில் கிடைக்கின்ற பச்சை நீலப் படிகம் ஒன்று பதிக்கப்பட்டுள்ளது. இதில் உள்ள தலை எகிப்திய மன்னன் தலை உருவமாக இருக்கலாம்.

கிரேக்க மன்னன் ஒருவன் தமிழ் மன்னர்களின் சின்னங்களான புலி, வில், மீன் பொறித்து, தமது சின்னமாகிய ஆந்தையையும் பொறித்து வெளியிட்ட ஒரு பொற்காசு கிடைத்துள்ளது. முன்பக்கம் புலி நீண்டு நிற்கின்றது இதுவரை வெளியான சோழர் காசுகளில் இதுபோன்ற புலி உருவம் காணப்படவில்லை. மேலே வில்லும், கீழே மீனும், புள்ளிகளால் உருவாக்கப்பட்டுள்ளன. காலத்தால் முற்பட்ட இது உருண்டைக் காசுகளின் வகையைச் சேர்ந்தது. பின்புறம் ஆந்தை உள்ளது. இதன் காலடியில் M என்ற கிரேக்க முதலெழுத்து உள்ளது. ஆந்தையும் இந்த எழுத்தும் இதை வெளியிட்டவர் கிரேக்கரே என்பதை அறியச் செய்கின்றன.

இது மண்கட்டி போல் இருந்த ஒன்றுக்குள் இருந்தது. சுத்தமான பொன்காசு சற்று வெள்ளி கலந்தது எனலாம். இதன் எடை: *4.100*கிராம். ஆந்தையின் வால்பகுதி சற்று உடைந்துள்ளது. கிரேக்க வரலாற்றாசிரியர் திரு. J.B. புரி என்பவர் தம் கிரேக்க நாட்டு வரலாற்றில் (Story of Greece 1913) நூற்றுக்கும் மேற்பட்ட சிற்றுருண்டைக் காசுகளைப் படங்களுடன் வெளியிட்டுள்ளார் அவற்றுள் புலி காணப்படவில்லை.



# 51. தமிழகக் காசுகள்- அண்மைக் காலக் கண்டுபிடிப்புகள்

ஆறுமுக சீதாராமன், தஞ்சாவூர்.

இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ள அனைத்து காசுகளும் அண்மைக் காலங்களில் என்னுடைய களப்பணியின் போது தமிழ் நாட்டின் பல பகுதிகளிலிருந்து சேகரிக்கப்பட்டவையாகும்.

**பாண்டியர் காசு:**

செப்புக் காசின் (படம்:1) எடை:1.5 கிராம். முன்பக்கத்தில் இடது பக்கம் நோக்கி நிற்கும் யானையும், பின் பக்கத்தில் சுந்தரபாண்டியன் என்று கி.பி.13-ஆம் நூற்றாண்டு தமிழ் எழுத்துகளில் எழுதப்பட்டு உள்ளது. எழுத்துகளின் கீழே இரண்டு மீன்களின் நடுவே செண்டு ஒன்று உள்ளது. இந்தக் காசு இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனால் (கி.பி.1238-1255) வெளியிட்டதாகக் கருதலாம். தமிழகத்தில் போசளர்கள் வெளியிட்ட காசுகளில் யானை, அங்குசம் உள்ளன. இதனால் இக்காசில் உள்ள யானை போசளர்களின் இலச்சினையாகக் கருதலாம். கி.பி1234-ல் வீரசோமேஸ்வரன் பாண்டிய நாட்டை ஆக்கிரமித்து சுமார் 20 ஆண்டு காலம் தனது ஆதிக்கத்தில் வைத்திருந்தான். பிறகு பாண்டியர்களுக்கும், போசளர்களுக்கும் இடையே நட்புறவு துவங்கியது. போசளர்களின் மேலாதிக்கத்தைப் பாண்டியர் ஏற்றனர். அந்தக் காலக் கட்டதில் தான் இந்தக் காசை பாண்டியமன்னன் வெளியிட்டிருக்க வேண்டும்.

**தென்காசி பராக்கிரம பாண்டியர் காசு (கி.பி1422-1463)**

தென்காசி பராக்கிரம பாண்டியன் வெளியிட்ட செப்புக் காசின் (படம்-2) எடை:3.4 கிராம். காசின் முன்பக்கத்தில் வலதுபக்கம் நோக்கி நிற்கும் மனித உருவமும், இடதுபக்கத்தில் குத்துவிளக்கு ஒன்றும் உள்ளன. பின்பக்கத்தில் மனிதனின் அமர்ந்த உருவமும், இடது கையின் கீழ் ஸ்ரீபராக்ரம என்று கி.பி.15ஆம் நூற்றாண்டு நந்திநாகரி எழுத்துகளில் எழுதப்பட்டுள்ளது.

**தமிழ் எண் காசு**

தமிழ் எண்கள் பொறிக்கப்பட்ட இச்செப்புக் காசின் (படம்:3) எடை:3.350கிராம். காசின் முன்பக்கத்தில் மனிதன் நிற்கும் உருவமும், வலதுபக்கத்தில் ஒரு குத்துவிளக்கும் காணப்படுகின்றன. பின்பக்கத்தில் விளிம்பின் மேலே சூரியன், சந்திரன் கீழே சயஉ(42) என்று தமிழ் எண்கள் (சுமார் 16ஆம் நூற்றாண்டு) பொறிக்கப்பட்டுள்ளன. இதுவரை கிடைத்துள்ள தமிழ் எண் காசுகளில் எண்களோடு மன்னர் பெயரும் காணப்படும். ஆனால் இக்காசில் மன்னன் பெயரோ, இலச்சினையோ

படம் 1



முன்பக்கம் பின்பக்கம்

படம் 2



முன்பக்கம் பின்பக்கம்

படம் 3



முன்பக்கம் பின்பக்கம்

படம் 4



முன்பக்கம் பின்பக்கம்

படம் 5



முன்பக்கம் பின்பக்கம்

படம் 6



முன்பக்கம் பின்பக்கம்

படம் 7



முன்பக்கம் பின்பக்கம்

படம் 8



முன்பக்கம் பின்பக்கம்

காணப்படவில்லை. இதை பிற்காலச் சேர மன்னர்கள் (வேணாடு) வெளியிட்டதாகக் கருதலாம்.

### கோனேரிராயன் காசு (கி.பி. 1486–1495)

கோனேரிராயனின் புதியவகை செப்புக் காசின் (படம்:4) எடை:3:1 கிராம். காசின் முன்பக்கத்தில் இடதுபக்கம் நோக்கி நிற்கும் காளையின் முன் குத்துவாளும், மேலே பிறை, குடை, பூவிதழ் காணப்படுகின்றன. பின்பக்கத்தில் மூன்று வரிகளில் 'கோனெரிராயன்' என்று பொறிக்கப்பட்டுள்ளது. கி.பி. 1486 முதல் 1495 வரை ஒன்பது ஆண்டு காலம் சோழமண்டலத்தில் எந்தப் பேரரசுக்கும் கட்டுப்படாத ஆட்சியாளனாக கோனேரிராயன் ஆண்டான் என்பது வரலாறு.

### செஞ்சி கிருஷ்ணப்ப நாயக்கர் காசு (கி.பி. 1541:44)

செப்புக் காசின் (படம்: 5) எடை: 1.4 கிராம், காசின் முன்பக்கத்தில் ராமர் நின்ற நிலையில் வலது கையில் அம்பு, இடதுகையில் வில்லுடன் காணப்படுகிறார். பின் பக்கத்தில் 'ஸ்ரீகிருஷ்ண' என்று தெலுங்கு எழுத்துகளில் இரண்டு வரிகளில் பொறிக்கப்பட்டுள்ளது.

### மதுரை விஸ்வநாத நாயக்கர் காசு (கி.பி. 1529–64)

செப்புக் காசின் (படம்:6) எடை:2.3 கிராம். முன்பக்கத்தில் புள்ளிகளால் ஆன வட்டத்திற்குள் 'வி' என்ற தமிழ் எழுத்து உள்ளது. பின்பக்கத்தில் 'ஸ்ரீவீர' என்று தெலுங்கு எழுத்துகள் உள்ளன. விஸ்வநாதன் என்ற பெயரின் சுருக்கமே காசில் 'வி' என்று பொறிக்கப்பட்டுள்ளது. விஜயநகர காசுகளில் மன்னனின் பெயருக்கு முன் 'ஸ்ரீவீர' என்று பொறிக்கப்பட்டிருக்கும். இவர்களை பின்பற்றி வந்த மதுரை நாயக்கர்களும் 'ஸ்ரீவீர' என்று பொறித்து பலவகையான காசுகளை தமிழகத்தில் வெளியிட்டுள்ளனர்.

### மதுரை விரப்ப நாயக்கர் காசு (கி.பி1572–1595)

செப்புக்காசின் (படம்:7) எடை: 2.6கிராம், காசின் முன்பக்கத்தில் மனிதன் நிற்கும் உருவம் உள்ளது. பின்பக்கத்தில் வலதுபக்கம் நோக்கி நிற்கும் காளையின் முன் சக்கரம் ஒன்றும், கீழே 'வீ' என்ற தெலுங்கு எழுத்தும், நடுவில் குத்துவாள் ஒன்றும் உள்ளது. வீரப்ப நாயக்கர் என்ற பெயரின் சுருக்கமே 'வீ என்று பொறிக்கப்பட்டுள்ளது.

### தஞ்சை நாயக்கர்

இராமராயரின் செப்புக் காசின் (படம்:8) எடை: 2.5கிராம். காசின் முன்பக்கத்தில் இடதுபக்கம் நோக்கி நிற்கும் காளை, காளையின்மேல் சூரியன், சந்திரன் உள்ளது. பின்பக்கத்தில் 'ராமராக(ய)' என்று இரண்டு வரிகளில் நாகரி எழுத்தில் உள்ளது. எழுத்துகளின் நடுவில் காம்பில் இலைகள், பூ காணப்படுகின்றன. தஞ்சை நாயக்க மன்னன் இரகுனாதன்

படம் 9



முன்பக்கம் பின்பக்கம்

படம் 10



முன்பக்கம் பின்பக்கம்

படம் 11



முன்பக்கம் பின்பக்கம்

படம் 12



முன்பக்கம் பின்பக்கம்

படம் 13



முன்பக்கம் பின்பக்கம்

படம் 14



முன்பக்கம் பின்பக்கம்

படம் 15



முன்பக்கம் பின்பக்கம்

படம் 16



முன்பக்கம் பின்பக்கம்

படம் 17



முன்பக்கம் பின்பக்கம்

படம் 18



முன்பக்கம் பின்பக்கம்

விஜயநகர மன்னன் இரண்டாம் ராமராயனுக்கு பகைவர்களால் ஏற்பட்ட இடையூறுகளை நீக்கிக் கும்பகோணத்தில் கி.பி.1614வாக்கில் முடிசூட்டினான். இதன் நினைவாக இந்தக் காசு வெளியிடப்பட்டது என்று கருதலாம்.

**தஞ்சை செவ்வப்பநாயக்கர் காசு கி.பி.1532–1580)**

*செப்புக்காசின் (படம்:9) எடை:2.7 கிராம். முன்பக்கம் இடதுபக்கத்தில் மன்னர் நிற்கும் உருவமும் வலது பக்கம் தலைகீழாக சங்கு ஒன்றும் உள்ளன. பின்பக்கத்தில் '(சி)'வபராய' என்று இரண்டு வரிகளில் நாகரி எழுத்தில் உள்ளது.*

**அஞ்சை அச்சுதப்ப நாயக்கர் (கி.பி. 1560–1614)**

*செப்புக்காசின் (படம்: 10) எடை: 3.3 கிராம். முன் பக்கத்தில் ராமர் நிற்கும் உருவம் உள்ளது. அவரது இடது கையில் வில்லும், வலது கையில் அம்பும் உள்ளது. பின் பக்கத்தில் 'அச்தப' என்று இரண்டு வரிகளில் தெலுங்கு எழுத்தில் உள்ளது.*

**தஞ்சை இரகுநாத நாயக்கர் (கி.பி.1600–1634)**

**வகை1:**

*செப்புக் காசின் (படம்–11) எடை: 3 கிராம். முன் பக்கத்தில் வலதுபக்கம் நோக்கி நிற்கும் பசு ஒன்று சிவலிங்கத்திற்கு பால் பொழியும் காட்சி காட்டப்பட்டுள்ளது. பின்பக்கத்தில் 'வி(ஸ)சயரகுனாத' என்று மூன்று வரிகளில் தமிழ் எழுத்தில் உள்ளது.*

**வகை2:**

*செப்புக் காசின் (படம்:12) எடை: 2.7கிராம். முன்பக்கத்தில் இடதுபக்கம் நோக்கி நிற்கும் காளையின் மேல் சிவன் உள்ளார் பின்பக்கத்தில் '(ரா)யரகுனாதன' என்று மூன்று வரிகளில் தமிழில் உள்ளது.*

**தஞ்சை விஜயராகவன் (கி.பி.1633–1674)**

**வகை1:**

*செப்புக்காசின் (படம்:13) எடை:1.7 கிராம். முன்பக்கத்தில் இடதுபக்கம் சங்கும், வலதுபக்கம் சக்கரம், நடுவில் செண்டு ஒன்று உள்ளது. (மன்னார்குடி ராஜகோபால சாமி கையில் வைத்திருக்கும் செண்டு) பின்பக்கத்தில் 'ஸ்ரீராகவ' என்று இரண்டு வரிகள் நாகரி எழுத்துகளில் உள்ளன.*

**வகை 2:**

*செப்புக்காசின் (படம்:14) எடை:1.3கிராம். முன்பக்கத்தில் கண்ட*

பேருண்ட பறவையும், பின்பக்கத்தில் 'ஸ்ரீராகவ' என்று இரண்டு வரிகள் நாகரி எழுத்துக்களின் உள்ளன.

**சந்தாசாயபு (கி.பி 1749–1752)**

செப்புக் காசின் (படம்:15) எடை:1.9 கிராம் முன்பக்கத்தில் செங்குத்தாக ஆமை ஒன்று உள்ளது. பின்பக்கத்தில் 'நவசாயபு'என்று மூன்று வரிகளில் தமிழில் உள்ளது. 'நவாபு சந்தாசாயபு' என்று பொறிப்பதற்குப்பதிலாக சுருக்கமாக 'நவசாயபு' என்று பொறித்துள்ளனர்.

**கான்சாயபு (கி.பி. 1759–1764)**

செப்புக் காசின் (படம்: 16) எடை:2.4 கிராம் முன்பக்கத்தில் சிங்கம் இடதுபக்கம் திரும்பியும், முன்காலை தூக்கிக் கொண்டும் நின்ற நிலையில் உள்ளது. பின் பக்கத்தில் 'கான் சாபு' என்று மூன்று வரிகளில் தமிழ் எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. எழுத்துகள் சரியாக பொறிக்கப்படவில்லை. இரண்டுமுறை அச்சு குத்தப்பட்டுள்ளது.

**ஆர்காடு நவாபு**

இருமொழியிலுள்ள இச்செப்புக் காசின் (படம்:17) எடை:1.1 கிராம். முன்பக்கத்தில் உருது எழுத்துகள் காணப்படுகின்றன. எழுத்துகளின் கீழே உருதில் எண்கள் உள்ளன. பின்பக்கத்தில் தமிழில் 3 வரிகளில் 'அமிருயிநரம்' என்று உள்ளதை 'அமிருதிநரம்' என்று படிக்கலாம். 'யி' என்ற எழுத்தை 'தி' என்று கிரந்த எழுத்தாகக் கொண்டு அமிருடைய காசு என்று பொருள் கொள்ளலாம்.

**முன்வர்கான் (கி.பி. 1752)**

செப்புக் காசின் (படம்:18) எடை 2.3 கிராம், முன் பக்கத்தில் இரண்டு இதழ்கள் கொண்ட மலர் உள்ளது. பின்பக்கத்தில் இரண்டு வரிகளில் 'முன்வா' என்று தமிழ் எழுத்துகளில் பொறிக்கப்பட்டுள்ளது. கர்நூலில் நவாபாக இருந்த முன்வர்கான் பெயரில் தமிழகத்தை ஆட்சி செய்த நவாபுகள் தமிழில் அவன் பெயரைப் பொறித்து தமிழகத்தில் வெளியிட்டிருக்கலாம்.

# 52. சங்ககாலக் காசுகளில் சின்னங்கள்

சு கணேசன், மதுரை.

சங்க காலக் காசுகளில் காணப்படும் சின்னங்களின் குறிப்பு நுட்பத்தை உணர சங்க இலக்கியம் துணை செய்கிறது. எல்லா மன்னர் காசுகளிலும் காணப்படும் வேலியிட்ட மரம் காவல் மரமாகும். ஒரு குலமரபுச் சின்னமான (totem) காவல் மரத்தை மன்னர்கள் போற்றி வந்தனர்[1].

காசுகளில் காணப்படும் சமயச் சின்னங்களாகுன சங்கு, சக்கரம், நந்திபாதம், ஸ்ரீவத்சம் போன்றவையும் மூன்றுக்கு மேல் முகடுகளை உடைய மலைச் சின்னமும் இவற்றில் அடங்கும். சில மலைச் சின்னங்களின் மேல் பிறை காணப்படுகிறது[2]. இதனால் பிறை கூடிய கயிலாய மலைத்தலைவனாம் சிவனையே எல்லா மலைச் சின்னங்களும் குறிக்கின்றன என்று கருதலாம். சிவனின் காளையையும் பல காசுகளில் காண்கிறோம். அறத்தின் வடிவாகிய ஏறு[3] காசுகளில் இடம் பெற்றதில் வியப்பில்லை.

யானை உருவம் பல காசுகளில் வருகிறது. பிணிமுகம் என்ற யானை முருகனின் வாகனமாகும் (புறம் 56). கருதியது முடிக்கும் திறனுக்காக முருகனைப் போற்றினர் (புறம் 56). எனவே யானை பல மன்னர் காசுகளில் காணப்படுகிறது. மயில் கொடியும் ஒரு சோழர் காசில் காணப்படுகிறது.[4] இந்திய இலக்கியத்தின் முதல் பெரும் பக்திக்க கவிதை[5]யான திருமுருகாற்றுப்படை இக்காலத்தே தான் இயற்றப்பட்டது.

பரசுராமரின் கோடரி சேர நாட்டு காசுகளில் காணப்படுகிறது. வாலியோன் என்ற பலராமரை சங்ககாலத்தில் வழிபட்டனர். 'அடர் வெம் நாஞ்சில் பனைக் கொடியோன்' என்று பலராமர் போற்றப்பட்டார் (புறம் 56). பனை சேரரின் குலமரபுச் சின்னம். சில காசுகளில் அங்குசம் என்று தவறாக வர்ணிக்கப்படும் சின்னம் உண்மையில் பலராமரின் நாஞ்சில் அல்லது கலப்பையையே குறிக்கிறது.

ஒரு பாண்டிய மன்னரின் காசில் [6] சிவனின் பிறையும் திருமாலின் சங்கு, சக்கரமும், சங்ககால மன்னர் வழிபட்ட வீர முரசும் இடம் பெற்றுள்ளன. மனுநீதிச் சோழனின் அறநெறி வழுவா மரபை நினைவுபடுத்தும் முறையில் சில சோழர் காசுகளில் தேர் இடம் பெற்றுள்ளது[7]. சூரிய குலத்தோராகிய சோழரின் காசுகள் சிலவற்றில் சூரியனையும் காணலாம்[8].

வேள்வியைக் குறிக்கும் பல சின்னங்கள் சில காசுகளில் காணப்படுகின்றன. அசுவமேதயாகத்தைக் குறிக்கும் வகையில் குதிரையும் யூபத்தம்பமும் காணப்படுகின்றன[9]. தொட்டியும், ஆமைகளும்

சில காசுகளில் காணப்படுகின்றன. ஆமையை வேள்வியில் பயன்படுத்தியதை 'அழலெழு தித்தியம் அடுத்தயாமை' என்று அகநானூறு (361) கூறுகிறது. 'தித்தியம்' என்பது வேள்விக்குண்டமாகும்.

சீவகசிந்தாமணி (2878)யிலும், நெடுமணி யூபத்திட்ட தவழ்நடை யாமை பற்றிக் குறிப்புள்ளது. வேள்வி பீடத்தின் நடுவில் ஒரு குழி தோண்டி உயிருடன் ஆமையும் அதற்கு உணவு வைக்கப்படும். வேள்வி முடிந்ததும் பீடம் அழிக்கப்படும்போது ஆமை உயிரோடிருந்தால் வேள்வி நிறைவு பெற்றதாகக் கருதினர்[10].

**அடிக்குறிப்புகள்**

1 *புறநானூறு* 23,36,57,162,336
2 R. Krishnamurthy, *Sangam Age Tamil Coins*, Garnet Publishers, Chennai, 1997, P. 34.
3 மயிலம் வே, சிவசுபபிரமணியன், பதி, *'அகநானூறு'*, உ.வே.சா.நூல்நிலையம், சென்னை, 1990, பக் 2
4 *Sangam Age Tamil Coins*, p. 126
5 A.K. Ramanujan, *Poems of Love and War*, Oxford, Delhi, 1985, p-311
6 *Sangam Age Tamil* coins, p.46
7 மேலது, பக் 114
8 மேலது, பக்.121
9 மேலது,பக்,26
10 பி.எல். சாமி, சங்க நுல்களில் ஆமை, செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு 66 பரல்:3, சென்னை, நவமபர் 1991, பக் 107

# 53. தண்டங்களில் நாணயங்கள்

மா. பவானி, தஞ்சாவூர்

அறச் செயல்களைச் செய்வதைக் காட்டிலும் அதனைப் பாதுகாப்பதில் நமது முன்னோர்கள் அதிக கவனம் செலுத்தியுள்ளனர். இடைக்கால கல்வெட்டுக்களின் முடிவில் ஓம்படைக்கிளவி என்ற பகுதி இடம்பெறுகின்றது. இதில் தர்ம காரியங்களைக் காப்பவர்கள் அடையும் புண்ணியங்களும், அவற்றுக்குக் கெடுதல் செய்பவர்கள் அடையும் பாவங்களும் குறிப்பிடப்பெற்றிருக்கும். மேலும் தீங்கு செய்வோருக்கும் தண்டனை அளிக்கப்பட்டுள்ள செய்திகள் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. ஆயினும், நாணயங்களாகப் பெறப்பட்ட தண்டங்கள் மட்டுமே இங்கு எடுத்துக் கொள்ளப் பெறுகின்றன (பார்க்க: அட்டவணை).

கல்வெட்டுக்களில் தண்டங்கள் விதிக்கப்பெறும் சூழலை காண்கையில் பெரும்பாலும் அவை வட்டித் தொகையை வைத்து தர்மத்தை காக்க மறுத்தாலோ வட்டித் தொகையை வசூலிக்க வருபவர்க்கு தினமும் இரண்டு வேளை உணவளிக்க மறுப்பின் கட்டப்பட வேண்டிய தண்டமாகவே உள்ளது (அட்டவணை.எண். 2,7,9,10). ஆயினும் ஒரு கல்வெட்டில் வட்டி வாங்கினால் தண்டமிடப் பட்டுள்ளது. 30 கழஞ்சு பொன்னை கொடையாக கொடுத்துள்ளனர். அது கொண்டு தினமும் 90 நாழி எண்ணெய் செலுத்த வேண்டும். பொலியூட்டு பெறக்கூடாது. அவ்வாறு பெற்றால் தண்டம் விதிக்கப்படுவதாக உள்ளது. எவ்வளவு காலம் எனக் குறிப்பிடப்படவில்லை (அ.எண்.16).

தண்டத்தொகை விதிப்பதில் காணம் என்ற நாணயவகை அதிகம் பயன்பட்டுள்ளது. வட்டியை வசூலிக்க வருபவர்க்கு உணவளிக்க மறுப்பின் தண்டம் 4½ முதல் 12 காணம் வரை விதிக்கப்பட்டுள்ளது. தண்டமானது குற்றத்திற்கு ஏற்ப ஒரே மாதிரியான தொகையில் விதிக்கப்பட்டதாக தெரியவில்லை. ஏனெனில் மேற்சுட்டிய குற்றத்திற்கே ஒரு கல்வெட்டில் 4½ காணம் என்றும் (அ.எ.10), 3 கல்வெட்டுக்களில் (அ.எ.2,7,9) 8½ காணம் என்றும் மற்றொருக் கல்வெட்டில் 12 காணம் என்றும் உள்ளது. இது வைப்புத் தொகையின் அடிப்படையிலும் விதிக்கப்படவில்லை என்பதை 15 கழஞ்சு பொன் வைப்பாக இருப்பதற்கு 8½ காணமும் (அ.எ.2) 30 கழஞ்சு பொன் வைப்பாக இருக்கையில் 4½ காணமும் தண்டம் இட்டிருப்பது கொண்டு அறியலாம் (அ.எ.10). கல்வெட்டுக்களில் இதுகுறித்த செய்திகள் சரிவர தெரிவிக்கப்படவில்லையாயினும் விகிதாச்சார அடிப்படையில் காண்கையில் தண்டம் விதிக்கப்பட்ட பேர்களின் எண்ணிக்கையை பொறுத்து தண்டத்தொகை ஒருவராயின் 4½ இருவராயின் 8½ என விதிக்கப்பட்டிருக்கலாம் என்று ஊகிக்கலாம்.

*அதுபோல் சாவா மூவாப் பேராடுகள் இடையர்களிடம் ஒப்படைக்கப்பட்டு தினமும் 4½ உழக்கு வழுவாத நாழியால் 3 உழக்கு நெய் வழங்கப் பணித்துள்ளனர். அவ்விதம் வழங்காத குற்றத்திற்காக 4 காணம் தண்டம் விதித்துள்ளனர். அதையும் செலுத்தாவிடில் தினமும் அன்றாள்கோவிற்கு மஞ்சாடி பொன் கொடுக்க வேண்டும் என்றுள்ளது. எவ்வளவு காலம் என்பது குறிப்பிடப் பெறவில்லை. இக்குற்றத்திற்கான தண்டம் கிடைக்கும் 2 கல்வெட்டுக்களிலுமே 4½ காணம் என்றே உள்ளது (அ.எ.16,17). சபையினர் கோயிலுக்கு தேவபோகமாக கொடுத்த நிலத்திற்கு கேடு செய்பவர்களுக்கும், தர்மசாசனத்தை தடுப்பவர்களுக்கும் 108 காணம் தண்டம் விதித்துள்ளனர். இதுவே காணம் நாணய வகையில் விதிக்கப்பட்ட அதிகத் தொகையாக தெரிகிறது (அ.எ. 8.14). தண்ணீரை முறைப்படுத்தி அதை முறையே பயன்படுத்தாதவர்களுக்கு 10 காசுகள் தண்டமாக விதிக்கப் பெறுற்றுள்ளது (அ.எ.1). ஸ்ரீரங்கம் கல்வெட்டு அவ்வூரைச் சேராதவர் யாரேனும் தேவதான பூந்தோட்டத்தை வைத்திருநதால் அவ்வூர் பெருஞ்சபை அவருக்கு 25 கழஞ்சுபொன் தண்டம் விதித்துள்ளதைக் கூறுகின்றது. அதுபோல் புதுக்கோட்டையிலும் கொடைக்கு அகுதம் செய்தவர்க்கு 25 கழஞ்சுபொன் தணடமிடப்பட்டுள்ளது (அ.எ.3).*

*இவ்வாறு இடப்படும் தண்டங்கள் அனைத்தும் நீதிநெறிமுறைகள் சார்ந்தவையாகவே உள்ளன. இந்த குற்றம் செய்தால் இந்த தண்டனை என்று குறிப்பிடும் கல்வெட்டுகளில் அவ்வாறு குற்றம் செய்து தண்டனையாக வசூலிக்கப்பட்ட தண்டத் தொகைகள் பற்றிய குறிப்புக்கள் பெரும்பாலும் இல்லை. கி.பி.1317 ஆம் ஆண்டைச் சேர்ந்த திருச்சி மாவட்டக் கல்வெட்டொன்றில் மட்டுமே தண்டத் தொகை வசூலிக்கப் பட்டச் செய்தி கிடைக்கின்றது. (அ.எ.20).*

*காணம் என்பது1/10 பொன் ஆகும் ஏறக்குறைய இன்றைய குன்றிமணி எடைக்குச் சமமானது. தண்டத் தொகையில் இடம் பெற்றிருக்கும் நாணயங்கள் சிறு அளவினதாகவே இருநதுள்ளது. எனவே தண்டத் தொகை அதிகம் எனக்கூற இயலாது. இதனால் தண்டத் தொகையில் நாணயப் புழக்கம் பெரிய அளவில் இருந்திருக்கவும் வாய்ப்பில்லை.*

| எண் | நோக்கீடு | ஆண்டு–அரசன் | தண்டத் தொகை | சூழல் |
|---|---|---|---|---|
| 1. | 14·78 தஞ்சாவூர் திருச்சாத்துரை | 860–861 ஸ்ரீவல்லப சடையன் மாறன் | 10 காசு | தண்ணீரைமுறைப்படுத்தி முறையேபயன்படுத்தாதவர்க்கு தண்டம் விதிக்கப்பட்டுள்ளது |

| | | | | |
|---|---|---|---|---|
| 2, | 12:99 செங்கல்பட்டு திருவொற்றியூர் | 875 கம்பவர்மன் | 8½ காணம் | 15 கழங்சு பொன் கொடை இதிலிருந்து வரும் வட்டியை வசூலிக்க வருபவர்க்கு 2 சோறு கொடுக்க வேண்டும் இதை மீறின் தண்டம் |
| 3. | 24:7 திருச்சி ஸ்ரீரங்கம் | 871–907 ஆதித்தன் | 25 கழஞ்சு, பொன் | ஸ்ரீரங்கத்துபெரும்சபைஇவ்வூரைச் சேராதவர் தேவதான நந்தோட்டத்தை பெற்றிருந்தால் தண்டம் விதித்துள்ளது. |
| 4. | 12:63 புதுக்கோட்டை குளத்தூர் | 875–76 நிருபதுங்கன் | 25 கழஞ்சு பொன் | கொடைக்கு அகுதம் செய்பவர்க்கு தண்டம் |
| 5. | 12:102 செங்கல்பட்டு சைதாப்பேட்டை | 878 கம்பவர்மண் | 48 காணம் | காலியூர் கோட்ட கீழ் புதூர் ஊரார் பெருமா சகடி அரையர் மகன் மஹா தேவர்க்கு கொடி உரிமையை விற்று பொன் பெற்று உள்ளனர். இதை எதிர்போர்க்கு தண்டம் |
| 6. | 12:70 செங்கல்பட்டு திருவொற்றியூர் | 887 | 4½ காணம் | உணவுக்கு 5 கழஞ்சுப் பொன் கொடை வழங்கப்பட்டு உள்ளது அதற்கான பொலியைக் கொண்டு பொருட்கள் வாங்க வேண்டும் மீறினால் தண்டம். |
| 7. | 12.88 செங்கல்பட்டு திருவொற்றியூர் | 899 பராந்தகன் | 8½ காணம் | 30 கழஞ்சு பொன்னை கொடை கொடுத்து அதிலிருந்து வரும் வட்டியை வசுலிகக வருபவர்க்கு நிசதம் 2 சோறு கொடுக்க வேண்டும் மீறினால் தண்டம். |
| 8. | 3:12 உக்கல் | 900.940 பராந்தகன் | 108 காணம் | சபையினர் கோவிலுக்கு தேவ போகமாக கொடுத்த நிலத்திற்கு கேடு செய்பவர்க்கு தண்டம் |
| 9. | 12:90 செங்கல்பட்டு திருவொற்றியூர் | 901 பராந்தகன் | 8¼ காணம் | நந்தாவிளக்கெரிக்க 60 கழஞ்சு பொன் கொடை அதிலிருந்து வரும் வட்டியை வசூலிக்க வருபவர்க்கு 2 சோறு கொடுக்க வேண்டும். மீறினால் தண்டம். |

| | | | | |
|---|---|---|---|---|
| 10. | 12:91<br>செங்கல்பட்டு<br>திருவெற்றியூர் | | 4½<br>காணம் | 30 கழஞ்சுபொன் நந்தாவிளக்கிற்கு . . கொடை அதை வசூலிக்க வருபவர்க்கு தினமும் 2 சோறு கொடுக்க வேண்டும் மீறினால் தண்டம். |
| 11. | 1.83<br>காஞ்சிபுரம் | 922<br>பராந்தகன் | 4½<br>கழஞ்சு<br>(தினம்<br>மஞ்சாடி) | விளக்கெரிக்க 270 சாவா மூவா பேராடு வழங்கப் பெற்றுள்ளது. இதுகொண்டு தினமும் 4 உழக்கு வழுவாத நாழியால் 3 உழக்கு நெய் வழங்கவேண்டும் இல்லையெனில் 4½ பொன் தண்டம் மீறின் அன்றாள் கோவிற்கு தினமும் மஞ்சாடி பொன். |
| 12. | 1:83<br>காஞ்சிபுரம் | 922<br>பராந்தகன் | 4½<br>பொன்<br>மஞ்சாடி<br>பொன் | சாவாமூவா பேராட்டை கொண்டு தினமும் 4 உழக்கு வழுவாத நாழியில் நெய் வழங்க மறுப்பின் தண்டம் அதையும் மீறின் அன்றாள் கோவிற்கு தினமும் மஞ்சாடிப் பொன். |
| 13 | 3:105<br>செங்கல்பட்டு<br>திருவொற்றியூர் | 937<br>பராந்தகன் | 12<br>காணம் | 60 கழஞ்சு பொன்னிற்கான பொலிசையை கடைக்கூட்ட வருவோர்க்கு 1 நாளிற்கு 2 வேளை சோறு வழங்க வேண்டும் அதை மீறின் தண்டம். |
| 14. | 3:7<br>வடஆற்காடு<br>உக்கல் | 956<br>கன்னர<br>தேவர் | 108<br>காணம் | சபையினர் செய்த தர்மசாசனத்தை தடுப்பவர்க்குத் தண்டம் |
| 15. | 14:91<br>இராமனாதபுரம்<br>ஸ்ரீவில்லிபுத்தூர் | 960–61<br>வீரபாண்டியன் | பொன் | சபையினர் புதிதாக கட்டிய சிற்றூரை விற்று சத்திரம் அமைப்பதற்கு பங்கம் விளைவிப்பவர்க்கு தண்டம். |
| 16. | 3:125<br>செங்கல்பட்டு<br>திருவிடந்தை | 976 | 4½<br>காணம் | 30 கழஞ்சு பொன்னை கொடையாக கொடுத்து பொலியூட்டு கொள்ளாமல் தினமும் 90 நாழி எண்ணெய் செலுத்த வேண்டும் மீறினால் தண்டம் |

| | | | |
|---|---|---|---|
| 17. 22:278<br>வடஆற்காடு<br>திருமால்புரம் | 985–1014 | 4½<br>காணம் | 25 கழஞ்சு பொன்னின் பொலிசையை ஊரார் சரியாக வசூலித்து கோயிலிற்கு கொடுக்க வேண்டும் மீறின் தண்டம் |
| 18. 2:90<br>தஞ்சாவூர் | 1014<br>ராஜேந்திரன் | ½<br>கழஞ்சு<br>பொன் | அரசனால் கோயிலிற்கு கொடை வழங்கப்பட்டு சில வரி நிபந்தனைகள் இடப்பட்டன அதை மீறின் தண்டம். |
| 19. 12:254<br>தென்னாற்காடு<br>சிதம்பரம் | 1243<br>கோப்பெருஞ்<br>சிங்கன் | காசு | குற்றம் செய்தவர்க்கு காசு தண்டனை (குற்றமும் காசின் தொகையும் தெரியவில்லை). |
| 20. 20:244<br>திருச்சி<br>ஸ்ரீரங்கம் | 1317<br>குலசேகர<br>பாண்டியன் | பணம்<br>1171 | வைகுந்தன் என்பவர் ஸ்ரீரங்கம் கோயில் பட்டர்களுக்கு பற்றுமுறி செய்துள்ளார். இதில் ஆசிரியரை தண்டம் நிச்சயித்து பணத்தின் பற்றின பணம் 1130 கைக்கோளர் பேரால் தண்டம் நிச்சயித்த பணத்தில் குலசேகரத்தாதர் தந்து பற்றின பணம் 41 ஆக பணம் 1171 என்றுள்ளது. (தண்டம் விதிக்கப்பெற்றதன் காரணம் தெரியவில்லை). |

# 54. இலங்கைப் பெருங்கற்படை மட்பாண்டங்களில் பீடத்துடன் கூடிய சுவஷ்திகா

ப. புஷ்பரட்ணம், இலங்கை.

தென்னாசியாவின் பண்டைக் கால மட்பாண்டங்கள், நாணயங்கள், முத்திரைகள் ஆகியவற்றில் காணப்படும் மங்கலச் சின்னங்களுள் சுவஷ்திகா சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இது சூரியனையும், அதிட்டம், நீண்ட ஆயுள் ஆகியவற்றையும் குறிப்பதாகக் கருதப்படுகிறது. ஆரம்ப காலம் தொட்டு இந்து மதத்துடன் தொடர்புடைய இச்சின்னம் காலப்போக்கில் பௌத்த, சமண மதங்களுக்குரிய சின்னமாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் தோற்றத்தை முதன் முதலாக சிந்துவெளி முத்திரைகளில் காணமுடிகிறது. இதன் பின்னர் தென்னிந்தியப் பெருங் கற்படைக்காலத்தைச் சார்ந்த சாணூர், கொடுமணல் போன்ற இடங்களில் கிடைத்த மட்பாண்டங்களில் பெறப்பட்ட சின்னங்கள் குறிப்பிடத்தக்கன (Seneviratne 1984, Rajan 1994). தொடர்ந்து வடஇந்திய முத்திரை, வார்ப்பு நாணயங்களிலும், சாதவாகன, சங்க கால நாணயங்களிலும், முத்திரைகளிலும் இது ஒரு முக்கிய மங்கலச் சின்னமாகக் காணப்படுகின்றது (Gupta 1969, Sharma 1990, Krishnamurthy 1977, சீதாராமன் 1994).

இலங்கையைப் பொறுத்தவரை இச்சின்னத்தின் தோற்றம் தென்னிந்தியப் பெருங்கற்படைக்காலப் பண்பாட்டுப் பரவலோடு ஏற்பட்டதெனக் கூறலாம். சிந்துவெளி தொட்டு பெருங்கற்படைக்காலப் பண்பாடுவரை பயன்பாட்டிலிருந்த சுவஷ்திகாவுக்குரிய அதே வடிவம் இலங்கையிலும் காணப்பட்டாலும் சில மட்பாண்டங்களில் பீடத்துடன் கூடிய சுவஷ்திகா காணப்படுவது இதன் சிறப்பம்சமாகும் (படம் 1).



பீடத்துடன் கூடிய சுவஷ்திகா சின்னத்தை இலங்கையைத் தவிர தென்னாசியாவில் வேறு எங்கும் இதுவரைக் காணமுடிவில்லை. இது, இலங்கைக்குரிய தனித்துவமான அம்சம் என உறுதியாகக் கூறலாம்.

பெருங்கற்கால மட்பாண்டங்களில் பெறப்பட்ட பீடத்துடன் கூடிய சுவஷ்திகாவை அப்பண்பாட்டு மையங்களை அண்டிக் காணப்படும் பிராமிக் கல்வெட்டுக்களிலும் காணமுடிகிறது (படம் 2). இதில் சுவஷ்திகாவும், பீடத்துடன் கூடிய சுவஷ்திகாவும் வேறு வேறு பொருளில் பயன்படுத்தப் பட்டிருக்கலாம் என்பதை அவையிரண்டும் ஒரே கல்வெட்டில் வருவதைக் கொண்டு உணரமுடிகிறது (Paranavithana 1970. No.34)



இதில் காணக்கூடியஇன்னொரு சிறப்பு பீடத்துடன் கூடிய சுவஷ்திகாவும் பெரும்பாலான கல்வெட்டுக்களில் மீன் கோட்டுருவமும் காணப்படுவதாகும். (Paranavithana 1970. Nos. 549, 550, 551, 557, 562, 564, 565, 567). வேறு சில கல்வெட்டுக்களில் பாண்டி நாட்டிலுள்ள அழகர் மலை, கொங்கர் புளியங்குளம் பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் கொக்கி போன்ற சின்னம் இங்குள்ள கல்வெட்டுக்களில் தனித்தும், பீடத்துடனும் காணப்படுகிறது (இராசகோபால் *1991: 1–8*). அத்துடன் சில கல்வெட்டுக்களில் தமிழில் மீன் அரசன் என்ற பொருளைக் குறிக்கும் மஜிம–ராஜா என்ற பிராகிருதப் பெயருடன் பீடத்துடன் கூடிய சுவஷ்திகா, மீன் போன்ற சின்னங்களும் (படம்–3) காணப்படுகிறன (Paranavithana 1970. No 406).



மெண்டிஸ் என்று புகழ் பெற்ற இலங்கை வரலாற்றறிஞர் மீன் சின்னமுடைய பிராமிக் கல்வெட்டுக்கள் முன்பொருகாலத்தில் இந்தியாவிலிருந்து வந்து குடியேறிய தமிழரைக் குறிப்பதாகவும்,

இவர்கள் சிங்கள மன்னர்களுக்கு கட்டுப்படாமல் சுதந்திரமாக ஆட்சி புரிந்தனர் எனவும் கூறியுள்ளமை இங்கு கவனிக்கத்தக்கது. (வேங்கடசாமி, 1983: 610). பீடத்துடன் கூடிய சுவஷ்திகா சமகால இலங்கை நாணயங்கள் பலவற்றிலும் இடம் பெற்றுள்ளன. முன்புறம் லக்ஷ்மி போன்ற உருவமும் பின்புறத்தில் பீடத்துடன் கூடிய சுவஷ்திகா சின்னமும் கொண்ட நீள்சதுர நாணயங்களும் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும் (படம்–4).



இவ்வகை நாணயங்கள் கி.மு.3ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து கி.பி5ஆம் நூற்றாண்டு வரை புழக்கத்திலிருந்ததற்கு உறுதியான சான்றுகள் கிடைத்துள்ளன. மேலும் இவை இலங்கையில் ஆட்சி புரிந்த தமிழ் மன்னர்களாலும், வர்த்தகர்களாலும் வெளியிடப்பட்டவை என்பதற்கு நாணயத்தில் உள்ள பிற சான்றாதாரங்கள் துணையாகவுள்ளன (புஷ்பரட்ணம் 2001:100). இவை இலங்கை–தமிழக வணிகத் தொடர்பால் தமிழத்திற்கும் சென்றிருக்கலாம் என்பதற்குச் சான்றாக அண்மையில் கரூரில் கிடைத்த ஒருசில நாணயங்களைக் கூறலாம் (Nagaswamy 1995). இந்நாணயத்தில் வரும் பீடத்துடன் கூடிய சுவஷ்திகாவை சமகாலத்தில் பௌத்த மதத்திற்கு தானமளித்த தனிநபர்களும், காலப் போக்கில் சிங்கள மன்னர்களும் தாம் வெளியிட்ட நாணயங்களில் பயன்படுத்திக் கொண்டனர். இதற்கு *திஸ, வேலியிடப்பட்டமரம்–சுவஷ்திகா* எனப் பெயரிடப்பட்ட நாணயங்களை உதாரணமாகக் குறிப்பிடலாம் (படம்–5).



ஆகவே மேற்கூறப்பட்டவற்றிலிருந்து பண்டைக் காலம் தொட்டு இலங்கையில் வடிவ மைப்பில் இரு வேறுபட்ட சுவஷ்திகா சின்னங்கள்

புழக்கத்திருந்தமை தெரிகிறது. ஆயினும் இச்சின்னங்களுடன் காணப்படும் பிற சான்றாதாரங்களை ஒப்பிடுகின்றபோது இவற்றின் வரலாற்று முக்கியத்துவத்தை ஓரளவுக்கு உணரமுடிகிறது. முதன்முதலில்பெருங்கற்கால மட்பாண்டங்களில் இச்சின்னம் காணப்படுவதால் இவை தென்னிந்தியத் தொடர்பால் இலங்கைக்கு அறிமுகமாகியதெனக் கூறலாம். லக்ஷ்மி உருவம் பொறித்த நாணயங்களில் வரும் பீடத்துடன் கூடிய சுவஷ்திகாவோடு நந்தி, நந்திபாதம், மயில், சேவல், சிவலிங்கம், சூலம், வேல், விளக்கு, பூரணகும்பம், ஸ்ரீவத்ஸம், தாமரை, யானை போன்ற சின்னங்களும் இடம்பெற்றுள்ளன. இவை இந்நாணயங்களை வெளியிட்டவர்கள் புராண வழிபாட்டில் நம்பிக்கை உடையவர்கள் என்பதைக் காட்டுகின்றன. இதனால் இலங்கையின் தொடக்ககால சுவஷ்திகா பீடத்துடன் கூடிய சுவஷ்திகா என்பன புராண வழிபாட்டுடன் தொடர்புடையதாக இருந்ததெனக் கூறலாம். இது காலப்போக்கில் பௌத்த மதத்திற்கும், சிங்கள மன்னர்களுக்கும் பொதுவாக மாறியதை பௌத்த வழிபாட்டிடங்கள், நாணயங்கள் என்பவற்றில் வரும் சுவஷ்திகா சின்னம் உறுதிப்படுத்துகிறது.

### அடிக்குறிப்பு

1 அண்மைக்காலங்களில் அநுராதபுரத்தில் பெறப்பட்ட பெருங்கற்கால மட்பாண்டங்களில் உள்ள சில குறியீடுகள், சின்னங்கள் சமகால தென்னிந்தியப் பெருங்கற்கால மட்பாண்டங்களில் இருந்து வேறுபட்டவை என்பதை முனைவர் இரகுபதி அடையாளம் கண்டுள்ளார்

### உசாத்துணை நூல்கள்

சீதாராமன், ஆறுமுக, 1994, *தமிழகத் தொல்லியல் சான்றுகள் அண்மைக்காலக் கண்டுபிடிப்புகள்,* தொகுதி–1 தனலக்ஷ்மி பதிப்பகம், தஞ்சாவூர்.

புஷ்பரட்ணம், ப., 2001, *இலங்கைத் தமிழரின் பண்டைய கால நாணயங்கள்,* பவானி பதிப்பகம், புத்தூர், யாழ்ப்பாணம்.

வேங்கடசாமி, மயிலை. சீனி., 1983, இலங்கையில் தமிழர், *தமிழ்நாட்டு வரலாறு சங்ககாலம் அரசியல்,* தமிழ்நாட்டு வரலாற்றுக்குழு, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை: 592–639

Gupta, P.L. 1969, *Coins*, National Book Trust India, New Delhi.

Krishnamurthy, R., 1997, *Sangam Age Tamil coins*, Garnet Publications, Madras.

Nagaswamy R., 1995, *Roman Karur*, Brahad Prakashan, Madras.

Paranavitana, S., 1970, *Inscription of Ceylon: Early Brahmi Inscriptions*, the Department of Archaeology Ceylon, Colombo, I.

Rajan, K., 1994, *Archaeology of Tamil Nadu*; (Kongu Country,) Book India Publishing Co, Delhi.

Seneviratne, s., 1984, The Archaeology of the Megalithic-Black and Red Ware Complex in Sri Lanka in Ancient Ceylon, Journl of the Archaeological Survery of Sri Lanka, 5:237-307/

Sharma, S., 1990, *Early Indian Symbols-Numismatic Evidence*, Agam Kala Prakashan, Delhi.

# 55. மகாபலிபுரம் அண்மைக்காலக் கண்டுபிடிப்பு- காலக் கணிப்பில் ஓர் மறு ஆய்வு

ப.தெ. பாலாஜி, சென்னை.

இந்தியத் தொல்லியல் அளவீட்டுத் துறை, மகாபலிபுரம் கடற்கரை கோயிலுக்கு வெளிப்புறம் வடக்குப் பிரகாரத்தை ஒட்டி அண்மையில் நடத்திய அகழாய்வில், ஒரே பாறையில் செதுக்கப்பட்ட வராகம், இதை அடுத்து சற்று வடக்கே ஓர் சிறிய விமானம் (Pavilion) போன்ற அமைப்பு, இதை அடுத்து ஒரு கிணறு ஆகியவற்றை வெளிப்படுத்தியது. வராகத்தின் பீடப்பகுதியில் அடிப் பகுதியில் பல்லவ கிரந்த எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட இராஜசிம்மன் காலத்தைச் சார்ந்த கல்வெட்டுகள் உள்ளன. இம்மன்னனின் கல்வெட்டு இருப்பதால் மேற்கண்ட பகுதிகள் இராஜசிம்மன் காலத்திற்கு முந்தைய காலத்தைச் (Pre- Rajasimha) சார்ந்தது எனக் கணிக்கப்பட்டுள்ளது.[1]

விமானம் (அட்டைப்படம்) போன்ற கட்டுமானம் முழுவதும் ஒரே பாறையில் செதுக்கப்பட்டதல்ல, மூன்று பாகங்களைக் கொண்டது. அதிஷ்டானம் வரை மட்டுமே அடிப்பாறையில் செதுக்கப்பட்டுள்ளது. நடுப்பாகம் (ஸ்தம்பம்) நீள் உருளை போன்று அமைந்து அதன் நடுவே செவ்வக குடைவரை சன்னதி அமைத்து, சிவபெருமான் வீணாதரமூர்த்தியாக அமர்ந்த நிலையில் ரிஷப வாகனத்தோடு காட்டப்பட்டுள்ளார். இக்குடைவரை சன்னதியின் வாயில் இருபுறமும் சிம்ம வாகினியை சித்திரிக்கும் சீறிப் பாயும் சிங்கஅமைப்புடைய சிறிய தூண்கள் காணப்படுகின்றன. இவ்வகைத் தூண்கள் பல்லவ மன்னன் இராஜசிம்மன் பாணியை நினைவுகூர்வதாக அமைந்துள்ளன[2].

விமானம் திராவிட சிகரத்தோடு காணப்படுகிறது. சிகரத்தின் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு ஆகிய திக்குகளில் வளைவான கூடுகள் செதுக்கப்பட்டு அதன் நடுவில் கணபதி லலிதாசனத்தில் நான்கு கைகளுடன் அமர்ந்துள்ளனர். அதேபோன்று விமானத்தின் கழுத்துப் பகுதியில் வடகிழக்கு, வடமேற்கு, தென்கிழக்கு, தென்மேற்கு ஆகிய திக்குகளில் கூடு அமைப்பு இல்லாமல் கணபதி (?) மட்டும் அமர்ந்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளார். கணபதியின் சிற்பங்கள் எவற்றிலும் கையிலுள்ள ஆயுதங்கள் சரிவர தெளிவாகத் தெரியவில்லை. இதே போன்ற சிற்ப அமைதியோடு கூடிய கணபதியின் உருவம் கொண்ட கூடுகள் மகாபலிபுரம் கடற்கரைக் கோயிலிலும், காஞ்சி கைலாசநாதர் கோயிலிலும் கபோதத்தின் மீது செதுக்கப்பட்டுள்ளன. இவ்விருகோயில்களும் பல்லவ மன்னன் இராஜசிம்மன் கட்டியவை[3].

இக்கோயில்களிலுள்ள சிற்பங்களின் புள்ளியியல் அடிப்படையிலான குறிப்புகளை ஒப்பிட்டு இக்கோயில்கள் இரண்டினையும் ஒரே குழுவைச் சார்ந்த சிற்பிகள் உருவாக்கியுள்ளனர் என்று எம். பகவான் தாஸ் பகர்கிறார்.[4]

கட்டுரை ஆசிரியர் மேற்கொண்ட பிறிதொரு ஆய்வில்[5] கணபதியின் சிற்பம் பல்லவ இராஜசிம்மன் காலத்திற்கு முன் பல்லவ குடைவரைகளில் தமிழ்நாட்டில் கிடைக்கப் பெறவில்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது. வல்லம் மற்றும் மேலச்சேரி (செஞ்சி வட்டம்) போன்ற இடங்களிலுள்ள பல்லவ குடைவரைக் கோயில்களில் செதுக்கப்பட்டுள்ள கணபதியின் சிற்பம் பிற்காலச் சேர்க்கையே ஆகும்[6]. பல்லவ மன்னன் இராஜசிம்மன் காலத்திற்கு முன் சிற்ப வேலைப்பாட்டில் கணபதி இருந்ததாக அறுதியிட்டு கூறுவதற்கான தடயங்கள் இதுவரை கிடைக்கப் பெறவில்லை.

மேலும் விமான அமைப்பினை இராஜசிம்மனுக்கு முந்தைய காலத்திற்கு வரையறுக்கப்பட்டால், அதே கால கட்டங்களில் மகாபலிபுரம் மற்றும் தொண்டை நாட்டின் பல்வேறு பாகங்களில் செதுக்கப்பட்ட குடைவரைக் கோயில்களில் கணபதியின் சிற்பம் இடம் பெறாமைக்கு விளக்கம் கூற கடமைப்பட்டுள்ளோம். ஆகவே, மேற்கூறிய காரணங்களினால், கடற்கரைக் கோயிலுக்கு அருகே அகழ்ந்தெடுக்கப்பட்ட விமானம் போன்ற அமைப்பு பல்லவ மன்னன் இராஜசிம்மனுக்கு முன் செதுக்கப்பட்டது என்ற கருத்து மறு ஆய்வுக்குரியதாகிறது.

**அடிக்குறிப்பு**

1. K.T. Narasimhan - "Recent- Discoveries made by Chennai Circle during this Decade". *Tamilnadu Archaeological Perspective*, (ed) K. Damodaran pp.158.
2. C. Minakshi, *Administration and Social Life under the Pallavas* p. 355.
3. C. Sivaramamurti, *The art of India* p.508 & p. 516.
4. M. Bagavandas in the Sankara Parvati Endowment-Lecture"on quantitative History" in the Dept. of Ancient History and Archaeologi on 27.3.2001 (Univ. of Mds)
5. P.D. Balaji, Origin and Development of Ganesa cult in Tamilnadu (unpublished Project Report)
6. K. R. Srinivasan, *Caves Temples of Pallavas* 64, 116&176.

# 56. தியாகதுர்கம் சமணச் சான்றுகள்

ஏ. ஏகாம்பரநாதன், சென்னை.

விழுப்புரம் மாவட்டத்தைச் சார்ந்த உளுந்தூர்ப்பேட்டையிலிருந்து 20 கி.மீ. தொலைவில் கள்ளக்குறிச்சி செல்லும் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது தியாகதுர்கம். இங்கிருந்து ஒரு கிலோமீட்டர் தெற்கில் உள்ள மலையின் அடிவாரத்திலும், நடுப்பகுதியிலும் சமணத்துறவியர் உறைந்த இரண்டு குகைப்பள்ளிகள் காணப்படுகின்றன இவற்றின் முகப்பில் மழைநீர் உட்பகுதியில் வடிவதைத் தவிர்க்கும் வகையில் நீண்டபள்ளம் வெட்டப்பட்டுள்ளது. முதலாவது குகை அண்மைக்காலத்தில் முனீஸ்வரன் கோயிலாக மாற்றம் பெற்றிருப்பதால், இதில் கற்படுக்கைகள், கல்வெட்டுக்கள் இடம் பெற்றிருந்தனவா என்பது பற்றி அறிவதற்கில்லை.

இரண்டாவது குகை ஏறத்தாழ 50 அடி நீளமும், 20 அடி அகலமும், 10 அடி உயருமும் கொண்டதாகும். இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் இக்குகையின் உட்பகுதி கற்களால் சமப்படுத்தப்பட்டு, சுவர்கள் எழுப்பி மலையம்மன் கோயிலாக ஆக்கப்பட்டிருக்கிறது. எனவே இதனுள்ளும் கற்படுக்கைகள், கல்வெட்டுக்கள் இருந்தனவா என அறிய இயலாமற் போய்விட்டது. உருமாற்றம் பெற்ற இந்தக் குகையினுள் கற்பலகைகளில் செதுக்கப்பட்ட மகாவீரர், இயக்கி, அம்பிகா ஆகியோரது சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. மகாவீரரது திருவடிவம் முக்கோண வடிவ கற்பலகையில் மூன்று சிங்கவடிவங்களைக் கொண்ட அரியணையில் தவக்கோலத்தில் காணப்படுகிறது. இதன் தலைக்கு மேலுள்ள முக்குடை தட்டை வடிவமாயுள்ளது.

அம்பிகை இயக்கியின் சிற்பம் கமுக மரத்தினருகில் திரிபங்கநிலையில் ஒயிலாக நின்றுள்ளது. இத்தேவியின் இருமருங்கிலும் இவளது இருகுழந்தைகள், பணிப்பெண், கணவன், சிங்க ஊர்தி ஆகியோரது சிற்றுருவங்கள் வடிக்கப்பட்டிருக்கின்றன. இவளது இடதுகை பணிப் பெண்ணின் தலையைத் தோட்டவாரும், வலதுகை மாங்கனிகள் அல்லது பூமொட்டுகளைப் பிடித்தவாறும் உள்ளன. தீர்த்தங்கரர், அம்பிகா இயக்கி ஆகிய இவ்விரு சிற்பங்களும் கி.பி. 8–ஆம் நூற்றாண்டைய கலைப்பாணியை உடையவை.

இந்த இரண்டு திருவுருவங்களும் கல்பலகையில் செதுக்கப்பட்ட தனி உருவங்களானமையில் இவ்விடத்தில் சமணக்கட்டிடக் கோயில் ஒன்று முன்பு இருந்திருக்கிறதென்பதும், இது அழிவுற்ற பின்னர் இப்படிவங்களைக் குகையினுள் கொணர்ந்து வைத்து முனிவர், மலையம்மன் எனக்கருதி வழிபடத் தொடங்கியிருக்கலாம்

# 57. தமிழ்க் கல்வெட்டுக்களில் அயல் மொழிச் சொற்கள்

**வீ. மாணிக்கம், புதுக்கோட்டை.**

தமிழ்க் கல்வெட்டுக்களில் குழுப் பெயராக இடம்பெற்றுள்ள சில அயல்மொழிச் சொற்களை இக்கட்டுரை விளக்க முயல்கிறது.

**மணிக்கிராமம்:** மணிக்கிராமம் எனும் குழுப்பெயர் இடைக்காலத்தில் தென்னகத்தில் இயங்கிய ஒரு வணிக அமைப்பென அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். மணிக்கிராமம் எனும் சொல் வணிக கிராமத்தின் தமிழ்வடிவமென்பதைச் சில கல்வெட்டுக்களில் மணிக்கிராமத்திற்கு மாற்றாக வணிக கிராமம் பயன்படுத்தப்பட்டுள்ளமை புலப்படுத்தும். அதாவது வணிகரின் (வடமொழி வணிக்)கிராமம் வணிக கிராமம் மணிக்கிராமம் என மாற்றம் பெற்றுள்ளது. இங்குக் கிராமம் எனும் சொல்லுக்குப் பொருள் கூறுகையில் அதன் தற்போதைய பொருளை மட்டுமல்லாமல், அதன் தொன்மையான வடிவையும் கருத்திற் கொள்ள வேண்டும். இனக்குழுச் சமுதாய நிலையில் நாடோடிகளாக மக்கள் கூட்டம் ஓரிடத்திருந்து பிறிதொரு இடத்திற்கு செல்கையில் நகரும் மக்கள் கூட்டமே வடமொழியில் கிராமம் எனப்பட்டு, பின்னர் அம்மக்கள் கூட்டம் நிலைத்து வாழுமிடத்தைப் பெற்ற பின்னர் அந்த நிலப்பரப்பும் கிராமம் (தற்போதைய 'ஊர்') என அறியப்பட்டதென கோசாம்பியும் (1992) சர்மாவும் (1993) குறிப்பிட்டுள்ளனர். ('கிராம' எனும் சொல் மக்கள் கூட்டத்தைச் சுட்டுமென வடமொழி அகராதியில் விளக்கம் பெறுவது குறிப்பிடத்தக்கது). எனவே, கூட்டமாக ஓரிடத்திலிருந்து பிறிதொரு இடத்திற்குச் செல்லும் பணியை மேற்கொண்டிருந்த வணிகரும் 'வணிக கிராம' என வடமொழியில் அறியப்பட்டு தமிழில் வணிக கிராமமாகி மணிக்கிராமம் எனத்தமிழ் வடிவாகியுள்ளதெனக் கொள்வதே பொருத்தமானதாகும். 'வணிக கிராம', 'வணிக கிராமம்', 'மணிக்கிராமம்' எனும் சொல்லாட்சி வடமொழி மற்றும் தமிழ்க் கல்வெட்டுக்களில் காணப்படுவது இதனை உறுதி செய்கின்றது.

**அஞ்சு வண்ணம்:** 'அஞ்சுவண்ணம்' என்னும் சொல் அஞ்சு (ஐந்து)+வண்ணம் (வர்ணம்) எனப் பிரிக்கப்பட்டு, ஐந்து பிரிவுகளைக் கொண்ட ஓர் அமைப்பெனத் தவறாக விளக்கமளிக்கப்பட்டுள்ளது. கேரளச் செப்பேடுகள், தமிழகம் மற்றும் ஆந்திரப் பகுதிக் கல்வெட்டுக்களில் 'அஞ்சுவண்ணம்' இடம்பெற்றுள்ள சூழலை நோக்கின் இது ஒரு வணிகர் குழுவெனப் புலப்படும். ஸ்தாணுஇரவிச் செப்பேடுகளில் அஞ்சுவண்ணத்தின் சார்பாக ஒப்பமிட்டுள்ளோர் பாரசீக (பஹ்லவி மொழி), இஸ்ரேல் (ஹீப்ரு மொழி), மற்றும் அரேபிய

(க்யூம்ஃபிக் மொழி)நாடுகளின் கிறித்தவ, யூத மற்றும் இஸ்லாமிய சமயங்களைச் சார்ந்த வணிகர்களென நாராயணன் (1972) கூறுகிறார். கர்நாடக கடற்கரைப் பகுதிக் கல்வெட்டுக்களை ஆய்வு செய்துள்ள காமத் (1978) 'அஞ்சு வண்ணம்' அயல்மொழிச் சொல்லான 'ஹஞ்சமன'வின் தமிழ்வடிவமேயெனவும், 'ஹஞ்சமன' அல்லது 'அஞ்சுமான்' என்பது ஒரு குழுப்பெயராக இஸ்லாமிய வணிகரைச் சுட்டுமெனவும் கூறுகிறார். 'ஹஞ்சமன' அல்லது 'அஞ்சுமான்' என்பது அஞ்சுவண்ணமெனத் தமிழ்வடிவம் பெற்றதெனவும், தொடக்கதில் நாராயணன் கருதுவது போன்று பல்வேறு நாடு, சமயம் மற்றும் மொழி சார்ந்த அயல்வணிகர் இவ்வமைப்பில் இடம்பெற்றிருக்கலாமெனவும், தக்காணத்தில் இஸ்லாமிய ஆதிக்கம் நிலைபெற்ற பின்னர் காமத் கூறுவதுபோன்று இஸ்லாமியர் மட்டுமே இவ்வமைப்பில் இடம் பெற்றிருக்கலாமெனவும் கருதலாம்.

**அத்திகோசத்தார்:** 'ஹஸ்தி' (யானை) என்பதன் தமிழ் வடிவே 'அத்தி', 'கோசம்', எனும் வடசொல் கருவூலம், வாளுறை, பாதுகாப்பரணின் ஒரு பகுதி என்றெல்லாம் விளக்கம் பெறும் (தமிழ் அகராதி 1171). ஹஸ்தி கோசம், அதாவது அத்திகோசத்தார் யானைப்படைப்பிரிவென இனங்காணப்பட்டுள்ளது (சங்கரநாராயணன்: 1977). பூலாங்குறிச்சி மற்றும் ஈரோடு மாவட்டம் நல்லூர் ஆகிய இடங்களிலுள்ள கல்வெட்டுக்களில் அறக்கொடைகளின் காப்பாளராக அத்திகோசத்தார் சுட்டப்படுகின்றனர். நல்லூர்க் கல்வெட்டில் புடைப்புச்சிற்பங்களாக யானையை மையமாகக் கொண்டு புனிதச்சின்னங்களும் படைக்கருவிகளும் பொறிக்கப் பட்டுள்ளன. இக்கல்வெட்டு அத்திகோசத்தார் யானைப்படைபிரிவெனப் புலப்படுத்தும். இதேபோன்ற கல்வெட்டுக்கள், ஆழியாற்றங்கரையில் வேப்பரையிலும் (பொள்ளாச்சி வட்டம்), திருச்சி, சேலம் நெடுஞ்சாலையில் துடையூரிலும் எழுத்துப் பகுதி அழிந்த நிலையில், காணப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுக்களின் அமைவிடத்தைக் கவனத்திற் கொண்டால், வணிகவழித் தடங்களில் வணிகரைக் காக்கும் பணியினை அத்திகோசத்தார் மேற்கொண்டனர் எனக்கருதலாம்.

## References


Kamath.S.U. 'Hanjamana'. *Journal of the Insitute of Indian Studies* (1). Bangalore, 1978.

Kosambi, D.D *The Culture and Civilisation of Ancient India in Historical Outline*, NewDelhi: Vikas (Reprint) 1992.

Narayanan. M.G.S., *The Cultural Symbiosis in Kerala*. Trivandrum: 'Kerala Historical Society, 1972.

Sankaranarayanan, S. *The Vishnukundins and their Times*, Delhi: Agam Prakashan, 1977.

திரு. சுப்பிரமணியன் அறக்கட்டளைச் சொற்பொழிவு

# 58. வட்டெழுத்து வரலாறு

நடன. காசிநாதன், சென்னை,

தமிழகத்திலும் அரப்பபண்பாட்டுக் கால உருவ எழுத்துக்கள் ஒரு சில இடங்களில்[1] கிடைத்திருக்கின்றன என்றாலும், பெருங்கற்காலக் குறியீடுகளோ அல்லது வளர்ச்சி பெற்ற கருத்து–ஒலி எழுத்துக்களோ[2] பெரும் அளவில் கிடைத்து வருகின்றன. இவ்வகை எழுத்துக்களின் காலத்தைச் சுமார் கி.மு. 1000லிருந்து கி.மு. 500 வரை என வரையறை செய்யலாம். அதற்குப் பிறகு இவ்வகை கருத்து–ஒலி எழுத்துக்களும் முற்றிலும் வளர்ச்சி பெற்ற ஒலியெழுத்துக்களான தமிழ் எழுத்தும் (நம் வசதிக்காகப் பண்டைத் தமிழ் எழுத்து என இனி வழங்கப்படும்) கலந்து சில இடங்களிலும், பின்னர் பண்டைத் தமிழ் எழுத்து மட்டும் எழுதப்பெற்று பல இடங்களிலும் காணப்பெற்றுள்ளன[3]. தமிழகத்தில் இவ்வெழுத்துக்கள் பாறைக் குடைவரைகளிலும், பானையோடுகள் மீதும், காசுகளிலும், சில தொல்பொருட்கள் மீதும் பரவலாக எழுதப் பெற்றிருப்பதால், தமிழகத்தின் பொற்காலம் என்று கருதப்பெறும் சங்க காலத்தில் இவ்வெழுத்துதான் ஆளப் பெற்றிருக்கும் என்று உறுதியாக நம்பலாம். சங்க காலத்துக்குப் பின்பு வட்டெழுத்து, தமிழகம் முழுவதும் கையாளப் பெற்றிருக்கிறது.

பண்டைத் தமிழ் எழுத்துக் கல்வெட்டுக்களும், பிற தொல்பொருட்களும் பெருமளவில் கிடைக்கப் பெறாத கால கட்டத்தில், வட்டெழுத்துக் கல்வெட்டுக்கள் ஒரு குறிப்பிட்ட அளவிலும், பிற்காலத் தமிழ் எழுத்துக் கல்வெட்டுக்கள் பெருமளவிலும் கண்டுபிடிக்கப்பட்டன. அதன் காரணமாக வட்டெழுத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி பற்றி அறிஞர்களிடையே பல்வேறு கருத்துக்கள் நிலவின.

டாக்டர் ஹரபிரசாத சாஸ்திரி வட்டெழுத்து கரோஷ்டி எழுத்திலிருந்து வளர்ந்து இந்தியாவில் நிலைத்துள்ள ஒரே எழுத்து என்று கூறியுள்ளார்[4]. பர்னல் என்பார் பினிஷிய அல்லது அராமிக் எழுத்திலிருந்து வட்டெழுத்து வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்றும், அசோகன் பிராமியிலிருந்து வேறானது என்றும், தமிழெழுத்தை விட மிகப் பழமையானதென்றும், நாளடைவில் தமிழெழுத்து வட்டெழுத்தின் செல்வாக்கைக் குறைத்துவிட்டது என்றும், திருக்குறளும் தொல்காப்பியமும் வட்டெழுத்தில்தான் எழுதப் பெற்றிருக்க வேண்டும் என்றும் கருதியுள்ளார்[5]. இவரது கருத்துக்கு முற்றிலும் மாறாக ப்யூலர் தம் கருத்தைத் தெரிவித்திருக்கிறார். தமிழ் எழுத்தின் வளைந்த வடிவமே வட்டெழுத்து என்றும், மராட்டிய வியாபாரிகள் எவ்வாறு மோடி

எழுத்தைத் தம் வணிகத்திற்குப் பயன்படுத்தினரோ அவ்வாறே தமிழ் வணிகர்கள் தம் வணிக நடவடிக்கைக்குப் பயன்படுத்திய எழுத்தாக இது இருந்தது என்றும் அவர் கூறியுள்ளார்[6].

ஆனால், டி.ஏ. கோபிநாதராவ், இந்தியாவின் மற்ற எழுத்துக்களான நாகரி, தமிழ், கிரந்தம், தெலுங்கு, கன்னட எழுத்துக்களைப் போன்றே வட்டெழுத்தும் அசோகன் பிராமியிலிருந்தே வளர்ச்சி பெற்றது என்று தெரிவித்திருக்கிறார்[7].

டாக்டர் மு. வரதராசனார், தம் *எழுத்தின் கதை – தமிழ் எழுத்துக்கள்* என்னும் நூலில் ''வட இந்தியாவில் பிராமி போல் தென்னிந்தியாவில் பழங்காலத்தில் இருந்த எழுத்தே பழைய தமிழ் எழுத்து. அவை வட்ட வடிவாக இருந்தன. அதனால் வட்டெழுத்துக்கள் என்று சொன்னார்கள்'' என்று எழுதிப் போந்தார்[8].

மேற்காணும் கருத்துக்கு அரண் சேர்ப்பது போன்று டி.வி. சதாசிவ பண்டாரத்தாரும் கூறியிருக்கிறார். ''பிராமி எழுத்துக்கள் தமிழகத்தில் தோன்றுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தமிழ் மொழிக்குரிய தனி எழுத்துக்கள் இருந்தன என்பது தொல்காப்பிய சூத்திரங்களால் பெறப்படுகின்றது. அவ்வெழுத்துக்கள் வட்டெழுத்துக்களே என்பது தேற்றம். எனவே, பிராமி எழுத்துக்களிலிருந்து வட்டெழுத்துக்கள் தோன்றியிருத்தல் வேண்டும் என்று கூறுவது சிறிதும் பொருந்தாது''. மேலும் பர்னலின் கருத்தான பினிஷிய அல்லது அராமிக் எழுத்திலிருந்து வட்டெழுத்து உருவாகியிருக்கலாம் என்ற கருத்தையும் ஆதாரங்காட்டி மறுத்துள்ளார். ''வலக்கைப் புறத்திலிருந்து இடக்கைப் புறமாக எழுதப்பட்ட பினிஷிய எழுத்துக்களிலிருந்து இடக்கைப் பக்கத்திலிருந்து வலக்கைப் பக்கமாக எழுதப்பட்ட வட்டெழுத்துக்கள் தோன்றியிருக்க முடியாது என்பது திண்ணம்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

வட்டெழுத்துக்கள் சிலப்பதிகாரத்தில் கூறப்பெறும் கண்ணெழுத்துக்களே என்று தெரிவித்துக் கீழ்காணும் மேற்கோள்களையும் காட்டியுள்ளார்.

''கண்ணெழுத்தாளர் காவல் வேந்தன்
மண்ணுடை முடங்கல் மன்னவர்க்களித்து'' *(சிலம்பு, கா. 26. 170–171)*

......... இருபதினாயிரம்
கண்ணெழுத்துப் படுத்தன கைபுனை சகடமும் *(சிலம்பு, கா. 26. 135–136)*

வம்ப மாக்கள் தம்பெயர் பொறித்து
கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பல்பொதி *(சிலம்பு, கா. 5, அடிகள் 11–12)*

வட்டெழுத்துக்கள் கண் போன்று இருந்ததால் கண்ணெழுத்துக்கள்

என்று வழங்கப்பட்டதாதல் வேண்டும் என்றும் இவ்வட்டெழுத்துக்களிலிருந்துதான் பல்லவர்கள், கிரந்த எழுத்துக்களையும், இக்காலத்துள்ள தமிழ் எழுத்துக்களுக்கு அடிப்படையாயுள்ள, பழைய தமிழ் எழுத்துக்களையும் அமைத்துக் கொண்டனர் என்றும் தெரிவித்திருக்கிறார்[9].

வட்டெழுத்து பற்றி மயிலை சீனி வேங்கடசாமி, ''வட்டெழுத்து ஒரு காலத்தில் தமிழகம் முழுவதும் வழங்கப்பட்டது[10]; தமிழ் மொழிக்கு வட்டெழுத்துக் காலத்துக்கு முன் ஒரு வகையான வடிவம் இருந்திருக்கலாம்'' என்று தெரிவிக்கிறார். ஆனால் அவ்வடிவம் அசோகன் பிராமியாக இருக்க முடியாது என்கிறார்[11].

கரந்தைக் கோவிந்தராசனார், தமிழகத்தில் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் தமிழ்மொழிக்குரிய வரிவடிவு வட்டெழுத்துக்கள் என்பது புலனாவதுடன் அவ்வெழுத்துக்கள் மேல் அரைவட்ட வளைவும் (கோடு) கீழ் அரைவட்ட வளைவும் நெடுங்கணக்கெழுத்துக்களுக்குப் பெற்றிருந்த நிலையில், கோட்டால் வரைந்து காட்டிய கண் போன்று தோற்றம் கொண்டதால் ''கண்ணெழுத்துக்கள்'' என்று பெயர் குறிக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்திருக்கிறார்[12].

சா. கணேசன், ''தமிழகத்தில் வழங்கிய எழுத்துக்குத் தமிழரல்லாதவர்கள் அவர்கள் மொழிமரபுக் கேற்ப ''தாமிழி'' என்று பெயர் கூறலாம். ஆனால் நாம் நம் மரபுக்கேற்ப, 'தமிழ் எழுத்து' என்று கூறுவதுதான் பொருத்தம் என்பதே என் அழுத்தமான கருத்து. கி.பி. 6-ஆம் நூற்றாண்டிலிருந்து தமிழ்மொழியை எழுத இரண்டு எழுத்துக்கள் உபயோகிக்கப்பட்டன. ஒன்று தமிழ்: மற்றது வட்டெழுத்து. அதே காலத்தில் தமிழகத்தில் சமஸ்கிருதத்தை எழுத கிரந்த எழுத்து உபயோகிக்கப்பட்டது. இம்மூன்று எழுத்துக்களும் முந்திய பழந்தமிழ் எழுத்துக்களிலிருந்தே தோன்றியவை என்றே புலப்படுகின்றது.'' என்று எழுதியிருக்கின்றார்.

டி.என். சுப்பரமணியன் ''வட்டெழுத்தானது தமிழகம் முழுதும் வழக்கிலிருந்த ஒரு பழைய எழுத்து என்றும் பல்லவர்களால் அறிமுகம் செய்யப்பெற்ற தமிழ் எழுத்து அதன் பயன்பாட்டைத் தடுத்துவிட்டது'' என்றும் விளக்கியுள்ளார்[13].

மேலும் வட்டெழுத்து பிராமி எழுத்திலிருந்துதான் வளர்ச்சி பெற்றது என்று தெரிவித்துள்ளார். ஆனால் பிராமி எழுத்தானது தொடக்கத்தில் ஒரு திராவிட மொழிக்காவே, பெரும்பாலும் தமிழுக்காகவே வடிவமைக்கப்பட்டதென்றும், பின்னர் அனைத்துத் திராவிட மொழிகளையும் ஒன்றாக்கி பிராகிருதம் உருவானபோதும், அம்மொழியே

அனைத்து இந்தியாவிலும் பயன்படுத்தப்பட்டபோதும் பிராமி எழுத்தைக் கையாண்டுகொண்டது என்றும் முடிவில் கூறயுள்ளார்[14].

மேற்காணும் பல்வேறுபட்ட கருத்துக்களிலிருந்து இரு முக்கியமான கருத்துக்கள் மேலோங்கி நிற்கின்றன. (1) வட்டெழுத்து, வெளிநாட்டு எழுத்து ஒன்றிலிருந்து வளர்ச்சி பெற்றது; அல்லது உள்நாட்டு கரோஷ்டி அல்லது பிராமியிலிருந்து வளர்ச்சி பெற்றது. (2) தமிழகத்தில் பண்டைய நாளிலிருந்து தமிழ் மொழிக்காகவே உருவாகி, தனித்து வளர்ச்சி பெற்ற எழுத்து.

மேற்காணும் குழப்பம் நிலவுவதற்குக் காரணம் தமிழகத்தில் காணப்பெறும் பண்டைய எழுத்து பற்றி நாம் இன்னமும் சரியானதொரு முடிவு எடுக்காத காரணத்தாலேயாகும். நாம் என்ன முடிவு எடுக்கவேண்டுமென்பதை அறிஞர் டி.என். சுப்பிரமணியன் கோடிட்டுக் காட்டியிருந்தாலும், சில அறிஞர்கள் இன்னமும் விடாப்பிடியாகத் தங்கள் பழைய கருத்தையே கூறிவருவது நோக்கத்தக்கது.

தமிழகத்தில் பரவலாகக் குடைவரைகளிலும், பானையோடுகளிலும், காசுகள், மோதிரம் போன்ற தொல்பொருள்களிலும் காணப்பெறும் எழுத்து நம் தமிழ் மொழிக்காகவே உருவாக்கபெற்ற எழுத்து என்றும், இது தனித்தே வளர்ச்சி பெற்றது என்றும், அசோகன் பிராமியிலிருந்து வளர்ச்சி பெறவில்லை என்றும் கொள்வதே சரியான முடிவாகும். இம்முடிவைச் சில ஆண்டுகளுக்கு முன்பாக எட்டமுடியவில்லை. காரணம், அப்பொழுது போதிய தொல்பொருள் சான்றுகள் கிடைக்கவில்லை. தற்பொழுது அனுராதபுரம் பானையோட்டு எழுத்துக்கள், கொற்கை, அழகன்குளம், கொடுமணல் ஆகியவற்றின் பானையோட்டு எழுத்துக்கள், காசுகளில், காணப்பெறும் எழுத்துக்கள் ஆகியவை, மக்களுக்கு அவ்வெழுத்து பண்டைக்காலம் தொட்டே நன்கு அறிமுகமான ஒன்று என்று தெரிவிப்பதால், அவ்வெழுத்து பண்டைத்தமிழ் எழுத்தே என்பது உறுதியாகிவிட்டது. எனவே, அவ்வெழுத்தின் வளர்ச்சியே வட்டெழுத்து என்று கூறுவதில் தவறேதும் இருக்க முடியாது.

அது தமிழ் எழுத்தே என்றாலும், 'தமிழி' என்றே அழைக்கலாம் என்று இரா. நாகசாமி கூறுகிறார். அதிலிருந்துதான் வட்டெழுத்து வளர்ச்சி பெற்றது என்பதற்கான கல்வெட்டு ஆதாரங்களைப் பட்டியலிட்டுக் காட்டியுள்ளார்[15]. ஐராவதம் மகாதேவனும் தமிழ் பிராமியிலிருந்துதான் வட்டெழுத்து வளர்ச்சி பெற்றது என்பதை ஒப்புக்கொள்கிறார்.[16] ஆனால், தமிழ் பிராமி அசோகன் பிராமியிலிருந்து வளர்ச்சி பெற்றது என்கிறார். இக்கருத்துக்கு மாறாக 1968–ல் கூறிய நாகசாமி, கி.மு. முதல் நூற்றாண்டில்தான் தமிழ்நாட்டில் அசோகன் பிராமி வழக்கத்துக்கு வந்தது என்றும், அதிலிருந்துதான் வட்டெழுத்து வளர்ச்சி பெற்றிருக்கும் என்றும் தம் கருத்தை மாற்றிக்கொண்டார்[17].

இக்கட்டுரையாசிரியர்[18] கே.வி. இரமேஷ்[19], கே.ஜி கிருஷ்ணன்[20], பி.ஆர், சீனிவாசன்[21], சு. இராசவேலு[22] ஆகியோர் தக்க ஆதாரங்களுடன் பண்டைத் தமிழ் எழுத்து அசோகன் பிராமியைவிட காலத்தால் முந்தையது என்று கூறியுள்ளனர். இவர்களது கருத்துத்தான் தற்போது மேலோங்கி நிற்கிறது.

வட்டெழுத்தில் மூன்று கால கட்ட வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. முதல் கால கட்டத்தில் ஏற்பட்ட எழுத்துக்களுக்கும் பண்டைத் தமிழ் எழுத்துக்களுக்கும் ஒவ்வொரு எழுத்திலும் சிறு வேறுபாடே காணப்பெறும். இவ்வெழுத்துக்களும் பண்டைத் தமிழ் எழுத்து போன்றே நேர்கோடுகளைப் பயன்படுத்தியே எழுதப் பெற்றவையாகும். இக்காலக் கட்ட எழுத்துக்களுக்குக் காட்டாக அறச்சலூர், ஈரெட்டிமலை, பூலாங்குறிச்சி, இருளப்பட்டி, தாமரைக்கரை, போளுவாம்பட்டி, எடக்கல், எழுத்துக்கல், திருநாதர்குன்று, கருநாடக மாநிலம் தமுட்டுக்கல், பிள்ளையார்பட்டி, அரசலாபுரம், இந்தளூர்க் கல்வெட்டுகள் மற்றும் சிம்மவர்மன் காலம் முதல் இரண்டாம் நரசிம்மவர்மன் காலம் முடிய உள்ள நடுகற்கள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். மேற்காணும் இடங்களிலிருந்து ஒன்றை அறியலாம். அதாவது, கேரள மாநிலத்தின் வடபகுதி, மைசூர் மாநிலத்தின் தமுட்டுக்கல், தமிழகத்தின் தென்பகுதி, வடபகுதி மற்றும் வடமேற்குப் பகுதி ஆகிய பகுதிகளில் வட்டெழுத்தின் தொடக்க நிலைக் கல்வெட்டுக்களைக் காண முடிகிறது. ஆனால் சோழ நாட்டிலும் கேரள மாநிலத்தின் தென் பகுதியிலும், காணப்பெறவில்லை. அது ஏன் என்பது புரியாத புதிராக உள்ளது. ஒருவேளை இருந்து முழுவதும் அழிந்து விட்டனவா அல்லது இன்னமும் கண்டுபிடிக்கப்படாமல் உள்ளனவா என்பது தெரியவில்லை.

முதன்முதலில் வட்டெழுத்தாக வளரும் உருவத்தை அறச்சலூர்க் கல்வெட்டில்தான் காணமுடிகிறது[23]. இக்கல்வெட்டை எழுத்துப் புணருத்தான் மசீவண்ணக்கன் என்றும் படிக்கலாம். அவ்வாறு படித்தல் பொருள் பொதிந்ததாகத் தெரிகிறது. இதில் உள்ள 'எ' 'ம' 'ன' 'ஞ' ஆகிய எழுத்துக்களில் அவ்வளர்ச்சி பளிச்சிடுகிறது. இதற்கடுத்த நிலையில் ஈரெட்டிமலைக் கல்வெட்டைக் குறிப்பிட வேண்டும்.[24] சங்க காலத்தையொட்டிய காலமான கி.பி. 2-3 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கூறலாம். ஏனெனில், பூலாங்குறிச்சிக் கல்வெட்டின் எழுத்தமைதியைவிடச் சற்று முந்தையதாகத் தெரிவதாலாகும். நெகனூர்ப்பட்டிக் கல்வெட்டிலும்[25] இக்கல்வெட்டிலும் காணப்பெறும் 'ள' எழுத்தும் வரிவடிவில் ஒன்றாகவே காணப்படுகின்றன. பூலாங்குறிச்சிக் கல்வெட்டை[26] அடுத்ததாகக் குறிப்பிடலாம். இக்கல்வெட்டின் நிழற்படம் இன்னமும் எந்த நூலிலும் இடம்பெறவில்லை. எழுத்து வளர்ச்சியை அறிவதற்கு அது பெரும் உதவியாக இருக்கும். மத்திய அரசு கல்வெட்டியல் துறையினர் வெளியிட்டுள்ளார்களோ என்பது எனக்குத் தெரியவில்லை.

பூலாங்குறிச்சியானது சோழநாட்டுத் தென்னெல்லைக்கு அருகில்தான் உள்ளது. ஆதலால், சோழ நாட்டிலும் இவ்வெழுத்து வழக்கத்திலிருந்திருக்கவேண்டும். ஒரு கல்வெட்டு கூட (கி.பி. 8–9–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சங்கு கல்வெட்டு தவிர) இதுவரை கிடைக்கப்பெறவில்லை. பூலாங்குறிச்சி கல்வெட்டின் காலத்தைக் கி.பி 270 என்று கொள்வதைத்தவிர, வேறுவழியில்லை. வட்டெழுத்து மற்றும் பண்டைத் தமிழ்க்கல்வெட்டுக்களின் காலத்தைக் கணக்கிட இக்கல்வெட்டு மிக மிக முக்கியமானதாகும். அதுமட்டுமல்லாமல் கி.பி. 3–ஆம் நூற்றாண்டளவில் வாழ்ந்த தமிழ்ச் சமுதாயத்தின் வாழ்க்கை முறை முன்னேற்றத்தைத் தெரிந்து கொள்ளவும் இதைவிட உண்மையான சான்று வேறில்லை. இக்கல்வெட்டின் கூற்றைக் கொண்டு இதற்கு முன்பு இருந்த சங்க காலச் சமுதாயம் பற்றி இலக்கியங்கள் இயம்பும் செய்தியும் சரியானதாகவே இருக்கும் என்று நாம் எண்ணுவதற்கும் மிக இன்றியமையாததாக இது விளங்குகிறது.

பூலாங்குறிச்சிக் கல்வெட்டுக் காலத்துக்குப் பிறகு, தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், இருளப்பட்டி (பாப்பம்பாடி) நடுகற்கள் குறிப்பிடப்படுதல் வேண்டும்[27]. இவ்விரண்டில் முதல் நடுகல் கோவிசைய விண்ணபருமற்கு நான்காவது என்று தொடங்குவதால், பல்லவ மன்னரில் ஒருவனான விண்ணவர்மனை – பெரும்பாலும் விஷ்ணுவர்மனைக் குறிப்பதாக இருக்கலாம்.[28] கல்வெட்டின் எழுத்தமைதியின்படி கி.பி. 4–5 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததெனலாம். அவ்வாறெனில், இவ்விஷ்ணுவர்மன், செப்பேட்டில் குறிக்கப்பெறும் விஷ்ணுகோபனாக இருக்கலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது. இம்மன்னன் காலத்தில் கங்கரைசரை எதிர்த்து வந்த படையோடு பொருது வாண பருமரைசரோ அல்லது அவரது சேவகரோ இறந்துவிட அவருக்கு எடுக்கப்பட்ட நடுகல்லாகத் தெரிகிறது.

அடுத்தது, முன்நடுகல்லில் குறிக்கப்பெறும் வாணபருமரைசரின் சேவகன் உழமுணகன் மகன் விசயமங்கலத்தை ஆட்சிசெய்த விண்ணபேரேனாதிக்கும், அவ்விண்ணபேரேனாதியின் சேவகன் கொற்றந்தை கோடனுக்கும் நடப்பட்ட நடுகல்லாகத் தோன்றுகிறது. ஆதலால், இருநடுகற்களும் ஒரே போரில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் குறிப்பதால், இரண்டும் கி.பி. 4–5 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை எனக் கொள்ளலாம். இக்கல்வெட்டில் 'விண்ணப்பேரேனாதி' என்ற பெயர் ஒரு போர் வீரனுக்குக் குறிக்கப்பெறுகிறது. இவ்வீரன் 'பெரு ஏனாதி' என்ற படத்தைப் பெற்றவன் போன்று அறிய முடிகிறது. இவர் தலைமைத் தளபதியாக இருந்திருக்கலாம்.

கி.பி. 5–6 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பல வட்டெழுத்துக் கல்வெட்டுக்கள் தற்பொழுது தெரியவந்துள்ளன. திருநாதர்குன்று, தாமரைக்கரை, எடக்கல், எழுத்துக்கல்லு, தமுட்டுக்கல், பிள்ளையார்பட்டி

ஆகிய இடங்களிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட வட்டெழுத்துக் கல்வெட்டுக்கள் இக்கால கட்டத்தைச் சேர்ந்தவையாகும். திருநாதர்குன்றுக் கல்வெட்டு[29] அறிஞர்களுக்கு முன்பே அறிமுகமான ஒன்று. இக்கல்வெட்டில்தான் வட்டெழுத்து உயிர் எழுத்துக்களில் ஒன்றான 'ஐ' யின் வடிவம் முதன் முதலில் காணப்பெறுகிறது. உண்ணாநோன்பிருந்து உயிர் நீத்த சமணத் துறவியின் 'நிசீதிகை' என்று இக்கல்வெட்டில் கூறப்பட்டிருக்கிறது. இவ்வகையில் இது ஈரெட்டிமலைக் கல்வெட்டுக்கு அடுத்ததாக உள்ளது. இதனைத் தொடர்ந்து அண்மையில் பறையன்பட்டு என்னுமிடத்திலுள்ள கல்வெட்டு ஒன்று, வச்சணந்தி ஆசாரியார் மாணாக்கர் ஆராதன் உண்ணாநோன்பிருந்து உயிர்நீத்த செய்தியைத் தெரிவிப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது[30]. மேலும் தாமரைக்கரை கல்வெட்டும் 'கருமிதச் சாத்தன்' என்பார்க்கு அமைக்கப்பெற்ற கல்லாகத் தெரிகிறது[31]. இவர் ஒரு வணிகராவும் சமண மதத்தைச் சார்ந்தவராகவும் இருக்கலாம். நடுகல்லில் காணப்பெறும் 'பட்டான்கல்' என்ற வாசகம் இல்லாமல் இன்னாரின் கல் அல்லது 'நிசீதிகை' என்று மட்டும் குறிக்கப்பெற்றிருப்பதால், இத்தகைய கற்கள் உண்ணாநோன்பிருந்து இறந்தாருக்காக அமையப்பெற்றவை என்று கொள்வதில் தவறேதுமில்லை.

அடுத்து, பிள்ளையார்பட்டிக் கல்வெட்டைக் குறிப்பிடலாம்[32]. இக்கல்வெட்டில் காணப்பெரும் 'எ' கரம் முக்கோணமாகவும் புள்ளி இல்லாமலும் உள்ளது. ஆனால், இதற்குக் காலத்தால் முந்தைய அறச்சலூர்க் கல்வெட்டில் 'எ' கரத்தில் புள்ளி காணப்பெறுகிறது. அத்தோடு முழு வட்டவடிவிலும் உள்ளது. இவ்வாறு காணப்பெறுவது பகுதி வேறுபாட்டின் (Regional Variation) காரணமாக இருக்கலாம். அடுத்ததாகச் சித்தன்னவாசல் மலையில் கண்டுபிடிக்கப்பெற்ற வட்டெழுத்துக் கல்வெட்டுக்களைக் குறிப்பிடலாம். கருநாடக மாநிலம் தமுட்டுக்கல் கல்வெட்டில் அக்கல்வெட்டைப் பொறித்த சிற்பியின் பெயர் 'ஏழூர் மோ நலஞ் சாத்தன்' என்று படிக்கப்பட்டிருக்கிறது[33]. இக்கல்வெட்டின் காலம் கி.பி. 6-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாக இருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டை இதுவரை மூன்று விதத்தில் படித்திருக்கின்றனர். இதையே 'கீழூர் தூ நலஞ் சாத்தன்' என்று படிக்கலாமோ என்று தோன்றுகிறது. முன்பு படித்தவர்கள் அனைவரும் ஒரு எழுத்தில்தான் வேறுபடுகின்றனர். அந்த எழுத்தைத் 'தூ' என்று படித்துள்ளளேன். நடுகற்களில் இவ்வெழுத்து இதே வடிவில்தான் காணப்பெறுகிறது. (தொரைப்பாடி மகேந்திரவர்மன் நடுகல்லில் 'எறிந்து' என்பதில் உள்ளது 'து' ; ஆண்டு குறிக்குமிடத்தில உள்ள 'ஆவது' என்பதில் உள்ள 'து'; மேல் புஞ்சை, கடலாடி, பெரிய கோளப்பாடி நடுகற்களில் 'ஆவது' என்பதில் உள்ள 'து' எழுத்து, 'து' விலிருந்து நெடிலைக் காண்பிக்க வளைவில் ஒரு படுக்கைக்கோடு

சேர்த்திருப்பதாகத் தெரிகிறது) தூ நலஞ் சாத்தன் என்றால் தூய நலமுடைய சாத்தன் என்று பொருள் கொள்ளலாம். ஆய்வாளர்கள் சிந்திக்க வேண்டுகிறேன். மோ என்பது இப்படித்தான் எழுதப்பெற்றிருத்தல்வேண்டும். கல்வெட்டில் அவ்வாறு இல்லை.

அடுத்தது, விழுப்புரம் மாவட்டம் அரசலாபுரம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம் இந்தளூர் ஆகிய இடங்களில் கிடைத்துள்ள கோழிக்கல்வெட்டுக்கள் நம் கவனத்தை ஈர்க்கக்கூடியவை. அரசலாபுரம் கல்வெட்டின் முடிவான வாசகமாக

''முகையுரு மேற்சே
ரி (க்) குயாடிக
ரு (க்) கிய கோழி''

என்று ஐ. மகாதேவன் படித்துள்ளார்[34]. இக்கல்வெட்டின் இரண்டாம் வரியிலுள்ள கடைசி எழுத்தில் குறுக்குக் கோட்டின் இடப்பக்கம் மேல்நோக்கி ஒரு நேர்கோடு செல்கிறது. அந்நேர்கோடு 'எ' கரத்தைக் குறிப்பதற்காக இடப்பட்டிருக்கலாம். அவ்வாறெனில், 'க' என்பதற்குப் பதிலாக, 'கெ' என்றுதான் எடுத்துக்கொள்ள வேண்டும். 'கருகிய' என்ற சொல் பேச்சு வழக்கில் 'கெருகிய' என்று மாற்றி உச்சரிக்கப்பட்டிருக்கும். அதையே சிற்பி பொறித்து விட்டார் போலும்.

இந்தளூர் கோழிக் கல்வெட்டை முதலில் படித்த இக்கட்டுரையாசிரியர்,

'கீழுச்சேரிக் கோழி பொ
டு கொத்த'

என்று வாசித்துள்ளார்[35]

இதனைத் திருத்தி,

''கீழ்ச்சேரிக் கோழிபொ
ற்கொற்றி''

என்று படித்தல் வேண்டும் என்று ஐ. மகாதேவன் தெரிவித்திருக்கிறார்[36]. இக்கல்வெட்டில் முதல் வரியில் உள்ள இரண்டாம் எழுத்தும், எட்டாம் எழுத்தும் 'ழ' கரத்தைத் தான் குறிக்கிறது என்றால், எட்டாம் எழுத்தான 'ழி' யும், இரண்டாம் எழுத்துப் போன்றே இறுதியில் ஒரு வளைவுக்கோடு சேர்த்து எழுதப்பெற்றிருத்தல் வேண்டும். ஆனால் அவ்வாறு எழுதப்பெறவில்லை. ஆதலால், இரண்டாம் எழுத்தை 'உ' கரம் ஏறிய 'ழ' என்று கொள்வதே சரியானதாகும். இரண்டாம் வரியின் முதல் எழுத்தை 'டு' என்பதற்குப் பதிலாக 'ற' என்றும்; மூன்று, நான்காம் எழுத்துக்களையும் முறையே 'ற' ஒற்றாகவும், அகரமேறிய றகரமாகவும் கொண்டிருக்கிறார். முதல் எழுத்தில் 'ட' வுக்குரிய பிறை

போன்று வளைவு மேலேயும் உகர ஒலிக்காக நீட்டியகோடு கீழேயும் தெளிவாக இருக்கிறது. மூன்று, நான்காம் எழுத்துக்கள் 'தத' என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன. மேலும், கடைசி எழத்தில் 'இ' கரத்துக்கான எந்தக் குறியீடும் காணப்பெறவில்லை. ஆதலால் முன்பு இவ்வாசிரியர் படித்த வாசகமே சரியானதாகும்.

கேரளமாநிலம், வயநாடு மாவட்டம் எடக்கல் மலையில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட இரு வட்டெழுத்துக் கல்வெட்டுக்களும், செருபுழாவில் கிடைத்துள்ள கல்வெட்டும் கேரள மாநிலத்தில் வட்டெழுத்துக் கல்வெட்டுக்கள் கி.பி. 5–6 ஆம் நூற்றாண்டிலிருந்தே வழக்கத்திலிருந்திருக்கின்றன என்பதை நிரூபிக்கின்றன. இக்கல்வெட்டுக்கள் பற்றி முதலில், இந்தியக் கல்வெட்டுக்குழுவின் 24–ஆம் ஆண்டுக் கருதரங்கில் ஐ. மகாதேவன் கட்டுரை ஆங்கிலத்தில் படித்தளித்துள்ளார்[37]. பின்பு ஆவணம் இதழில்[38] தமிழில் கட்டுரை எழுதியிருக்கிறார். அவரது கட்டுரையின் நகலை அவர் இக்கட்டுரையாசிரியருக்கு அன்போடு அனுப்பி வைத்ததைப் படித்த பின்னர் சில சிறு திருத்தங்களைச் செய்து தமிழ்நாடு அரசு தொல்லியல் துறைக் கல்வெட்டு காலாண்டிதழில் இக்கட்டுரை ஆசிரியரால் வெளியிடப்பட்டது[39]. அக்கட்டுரையின் குறுகிய பகுதி ஆவணம் இதழிலும்[40] வெளிவந்திருக்கிறது. 'பல்புலி தாத்தகாரி' என்ற ஒரு கல்வெட்டு வாசகத்தை 'வல் புலி தாத்காரி' என்று படித்தால் நான்றாக இருக்கும் என்றும், 'ஒ பனவிரஅ' என்று படிக்கப் பட்டிருப்பதை 'ஒகபனய்விரலீ' என்று படிப்பது சரியாக இருக்கும் என்றும், மேலும் நீலாம்பூர் காட்டுப்பகுதியில் செருபுழா ஆற்றங்கரையில் நீரில் மூழ்கியூள்ள ஒரு கல்லில் பொறிக்கப்பட்டிருக்கும், வட்டெழுத்துக் கல்வெட்டு 'மாசகோடு நீரணவாய்' என்று படிக்கபட்டிருந்ததையும் 'மாசதோடனீர்னாவாய்' என்று திருத்திப் படிப்பது சரியாக இருக்கும் என்றும் இக்கட்டுரை ஆசிரியரால் தெரிவிக்கப்பட்டிருந்தன. 'வெங்கோமலை கச்சவனு சத்தி' என்று மிகவும் சரியாக படிக்கப்பட்ட கல்வெட்டில் காணப்பெறும் வெங்கோமலை ஒரு இடப்பெயரென்றும் அது மங்களூர் செப்புப் பட்டயத்தில் குறிக்கப்பெறும் வெங்கோராஷ்ட்ரத்தில் இருந்திருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வெங்கோமலை நாஞ்சில் நாட்டில் அடங்கிய ஊர் என்பது திருநந்திக்கரை கல்வெட்டால் புலனாகிறது. (Travancore Archaeological Series, Vol. III, p. 206). மேற்காணும் கல்வெட்டுக்கள் கி.பி. 5–6 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை.

இதற்கடுத்து கோவை மாவட்டம் போளுவாம்பட்டியில் கண்டெடுக்கப்பெற்ற பாணையோட்டின் மீது எழுதப்பெற்றுள்ள

வட்டெழுத்துக் கல்வெட்டு குறிப்பிடப்படவேண்டியதாகும். பானையோட்டின் மீது வட்டெழுத்தால் எழுதப் பெற்றிருப்பது இதுவே முதலாவது ஆகும். இதில் எழுத்துக்கள் ஓரளவுக்கு வளர்ச்சியடைந்து காணப்படுகின்றன. இதில் உள்ள வாசகம் கீழ்வருமாறு ''ங்குப்பை வித்திகு (ஐ). ''உ'' கரம், 'ஐ' காரம், ஆகியவற்றுக்குள்ள கோடுகள் சிறிது வளைந்து காணப்பெறுகின்றன. 'இ' கரந்தைக் குறிக்கும் கோடு அளவுக்கதிகமாக நீண்டு உள்ளது. கடைசி எழுத்து 'ஐ' யாகவோ அல்லது 'உறி' யாகவோ இருக்கலாம். அவ்வெழுத்திலும் மேலே ஒரு கோடு சாய்ந்து காணப்படுகிறது. எழுத்தமைப்பைக் கொண்டு இக்கல்வெட்டு கி.பி. 6–7 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததெனக் கொள்ளலாம். இப்பானையோட்டின் வாசகம் இதுவரை யாராலும் வெளிப்படுத்தப்படவில்லை என்று நம்புகிறேன்[41].

அடுத்து, பெருமுக்கல் கீறல் உருவங்களுக்கிடையே பொறிக்கப்பட்டுள்ள சிறு கல்வெட்டு வட்டெழுத்தில் உள்ளது. இக்கல்வெட்டு வட்டெழுத்தில் காணப்படுகிறது என்பதையும் 'பொந்சரன்' என்று இக்கல்வெட்டைப் படிக்கலாம் என்றும் இக்கட்டுரையாசிரியரே முதன் முதலில் தெரிவித்தார்[42].

தமிழ்நாட்டில் திருவண்ணாமலை மாவட்டம், தருமபுரி மாவட்டம், விழுப்புரம் மாவட்டம், வேலூர் மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் கிடைத்திருக்கின்ற 200–க்கும் மேற்பட்ட நடுகல் கல்வெட்டுக்கள் வட்டெழுத்து வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றத்தை மிகத் தெளிவாகப் படம் பிடித்துக்காட்டுகின்றன. இக்கல்வெட்டுக்களில் பெரும்பாலானவற்றைத் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை செங்கம் கல்வெட்டுகள் என்ற நூலிலும் தருமபுரி கல்வெட்டுக்கள் என்ற நூலிலும் வெளியிட்டிருக்கிறது. விழுப்புரம் ஆசிரியர் வீரராகவன், மங்கை வீரராகவன் ஆகியோர் கண்டுபிடித்த நடுகல் கல்வெட்டுக்கள் ஆவணம் இதழ்களில் வெளிவந்துள்ளன.[43] நடுவண் அரசு தொல்லியல் துறையும் அதன் ஆண்டறிக்கையில் அத்துறை புதிதாகக் கண்டுபிடித்த நடுகல் கல்வெட்டுக்களையும், பிறர் கண்டுபிடித்த கல்வெட்டுக்களை மீண்டும் படியெடுத்தும் வெளியிட்டிருக்கிறது. இக்கட்டுரையாசிரியரும் தமிழ் நாட்டில் நடுகற்கள் (Hero-stones in Tamilnadu) என்னும் ஆங்கில நூலின் பின்னிணைப்பாக நடுகற்கல்வெட்டுக்களின் பட்டியலைச் சில நிழற்படங்களுடன் தந்திருக்கின்றார்.

பல்லவமன்னன் சிம்மவர்மன் காலம் முதல் இரண்டாம் நந்திவர்மன் காலம் முடிய வட்டெழுத்தில் நடுகல் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இம்மன்னர்களுக்கு இடைப்பட்ட காலத்திலிருந்த சில மன்னர்களின் காலத்திய வட்டெழுத்துக்கல்வெட்டுக்கள் கிடைக்கவில்லை. சிம்மவர்மன் காலத்திலிருந்து முதலாம் நரசிம்மவர்மன் காலம் முடிய உள்ள நடுகல் கல்வெட்டுகள் வட்டெழுத்து வளர்ச்சியின்

முதல் கால கட்டத்தைச் சார்ந்தவை, அதாவது எழுத்துக்கள் நேராக எழுதப் பெற்றிருப்பவை.

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், சாத்தனூர் (மல்லிகாபுரம்) இரண்டாம் நரசிம்மவர்மன் கல்வெட்டில் முதன்முதலில் எழுத்துக்கள் இடப்பக்கம் சற்று சாய்த்து எழுதும் முறையைக் காண முடிகிறது. மேலும், சில எழுத்துக்களில் எழுத்தின் தொடக்கத்தில் சிறு சுழி வளைவு இடப்பட்டிருக்கிறது. அத்தோடு 'அகர, 'ஆ' கார, 'உ' கர, 'ஊ' கார, 'ஒ' கர, 'ஓ' காரம் ஆகியவை நன்கு வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளன. இரண்டாம் நந்திவர்மன் காலம் முடிய, நடுகற்கள் காணப்பெறும் மேலே குறிக்கப்பெற்றுள்ள மாவட்டங்களில் வட்டெழுத்தில் சில சாதாரணக் கல்வெட்டுக்களும் எழுதப் பெற்றிருந்திருக்கும் என்பது அண்மைக் காலங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள தூம்புக் கல்வெட்டு[44] மற்றும் செக்குக் கல்வெட்டுக்களால்[45] உணர முடிகிறது.

தமிழகத்தின் வடபகுதியில் பல்லவர் ஆட்சி குன்றி சோழர் ஆட்சி மேலோங்கிய நாளிலிருந்து வட்டெழுத்தின் பயன்பாடு குறையத் தொடங்கிவிட்டது. தமிழ் எழுத்து செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்திருக்கிறது. தமிழகத்தில் தென் பகுதியில் பாண்டியர் ஆட்சியில் வட்டெழுத்தின் பயன்பாடு கி.பி. 8–ஆம் நூற்றாண்டு தொடங்கி செல்வாக்குப் பெற்று விளங்கியதென்பது தெரிய வருகிறது. ஆனால், இப்பகுதியில் வட்டெழுத்தின் முதல் கட்ட வளர்ச்சியில் பூலாங்குறிச்சி கல்வெட்டு மற்றும் பிள்ளையார்பட்டிக் கல்வெட்டு தவிர, வேறெதுவும் காணப்பெறவில்லை. ஆனால், முழுதும் சாய்ந்த நிலையில் அல்லது முழுதும் வளைந்த நிலையில் எழுதப்பெற்ற வட்டெழுத்துக் கல்வெட்டுக்களே பெரும்பாலும் காணப்பெறுகின்றன. ஆனைமலையிலுள்ள கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த வட்டெழுத்துக் கல்வெட்டு நேராக எழுதப்பெற்றிருந்தும் எழுத்துக்கள் வளைந்தே காணப்படுகின்றன. திருப்பரங்குன்றிலுள்ள அதே நூற்றாண்டைச் சேர்ந்த மற்றொரு கல்வெட்டு முழுதும் சாய்ந்தே எழுதப்பட்டிருக்கிறது.

இந்த நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட்டாக வேண்டும். கேரள மாநிலம் வடவெல்லையில் உள்ள எடக்கல், செருபுழா, கருநாடக மாநிலம் தமுட்டுக்கல் நீங்கலாக; குறிப்பாகக் கொங்கு மண்டலம், தொண்டை மண்டலம் ஆகிய பகுதியில், அறச்சலூர்க் கல்வெட்டில் காணப்பெறும் வட்டெழுத்தின் அடுத்த கட்ட வளர்ச்சியைத் தொடர்ந்து காணமுடிகையில், பாண்டி மண்டலத்திலும், கேரள மாநிலத்தின் பிற பகுதிகளிலும், அரச்சலூர்க் கல்வெட்டு வட்டெழுத்துக்களின் வளர்ச்சியைத் தொடர்ந்து காண இயலவில்லை. பூலாங்குறிச்சி கல்வெட்டுக்கு அடுத்து பிள்ளையார் பட்டி, (கி.பி. 4–5) வைகைக்கரை

(கி.பி 8ஆம் நூற்றாண்டின் தொடக்கம்) ஆனைமலை மற்றும் திருப்பரங்குன்றம் கல்வெட்டுக்களைத்தான் (கி.பி. 8ஆம் நூற்றாண்டின் பின்பகுதி) பார்க்க முடிகிறது. இடைப்பட்ட காலத்தில் கி.பி. 6–7 ஆம் நூற்றாண்டுக்களில் வேறு கல்வெட்டுக்களே பொறிக்கப்படவில்லையா? அல்லது பொறிக்கப்பெற்றிருந்தவை முழுதும் (கி.பி. 13–ஆம் நூற்றாண்டில் திருக்குற்றால வட்டெழுத்துக் கல்வெட்டுக்கு நிகழ்ந்தது போன்று) படிக்க இயலவில்லையென சிதைக்கபட்டுவிட்டனவா? தெரியவில்லை. ஆனால், கி.பி. எட்டாம் நூற்றாண்டு முதல் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டு முடிய இப்பகுதிகளில் வட்டெழுத்தின் ஆதிக்கம், சில நேரங்களில் உயர்ந்தும், சில நேரங்களில் தாழ்ந்தும் இருந்திருக்கிறது. இங்கு மற்றொன்றையும் பார்த்தல் வேண்டும். மலையடிக்குறிச்சிக் குடைவரைக் கோவிலில் முழுதும் தமிழ் எழுத்தால் எழுதப்பெற்ற கல்வெட்டைக் காண்கிறோம். அக்கல்வெட்டு கி.பி. 645–670ல் ஆட்சிபுரிந்த சேந்தன் காலத்துக் கல்வெட்டென்று கணிக்கப்பட்டுள்ளது. அவ்வாறெனில் கி.பி. 6–ஆம் நூற்றாண்டு தொடங்கி கி.பி. 7–ஆம் நூற்றாண்டின் இறுதி வரை தமிழ் எழுத்து செல்வாக்கு பெற்று விளங்கியதா? எதையும் தீர்மானமாகக் கூற முடியவில்லை.

பல்லவ மன்னன் காலத்திலிருந்து தொண்டை மண்டலத்தில் ஆட்சி முறையில் செல்வாக்கு பெற்று விளங்கிய தமிழ், கிரந்த எழுத்துக்கள் பாண்டி மண்டலத்திலும் கேரளத்திலும் செல்வாக்கு பெறத் தொடங்கியிருத்தல் வேண்டும். ஆதலால்தான் மலையடிக் குறிச்சியில் தமிழ் கல்வெட்டையும், திருமயம், குடுமியாமலையில் கிரந்த கல்வெட்டுகளையும், வைகைக் கரையில் முதலில் கிரந்த எழுத்தையும் பின்னர் வட்டெழுத்தையும் காணமுடிகிறதோ? என ஐயம் எழுகிறது. இத்தகைய ஒரு குழப்பமான நிலைக்கும் அப்போதைய அரசியல் நிலைமையும், களப்பிரர் இடையீடும்தான் காரணமா? மேலும் ஆராய வேண்டுவதும், மேலும் கல்வெட்டுகள் கண்டுபிடிக்க வேண்டுவதும் இன்றியமையாததாகிறது.

கி.பி. 8–ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் வட்டெழுத்தின் இரண்டாம் கட்ட வளர்ச்சியைக் காணமுடிகிறது. பாண்டியர்களது கல்வெட்டுக்களோடு, பாண்டியர்களது செப்பேடுகளிலும், வட்டெழுத்தே கி.பி. 10ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி முடிய பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், பல்லவர், சோழர் செப்பேடுகளில் வட்டெழுத்தையே காண முடியவில்லை. சோழர்களது கல்வெட்டுக்கள் சில தமிழகத்தின் தென்பகுதியில், வட்டெழுத்தில் எழுதப் பெற்றிருக்கின்றன. இக்கால வளர்ச்சியே இவ்வெழுத்துக்கு 'வட்டெழுத்து' என்ற பெயரைப் பெற்றுத் தந்திருக்கும். இந்த காலகட்டத்தில்தான் வட்டெழுத்தைச் செப்பேடுகளில் காண்கிறோம். செப்பேடுகளில் எழுதவேண்டிய செய்தியை முதலில்

ஓலைகளில் எழுதி வைத்துக்கொண்டு, பின்னர் செப்பேடுகளில் எழுதினார்களோ என்னவோ? அவ்வாறு ஓலைகளில் எழுத வேண்டிய நிலை ஏற்பட்டதால்தான் நேர் நேராக எழுதப்பெற்று வந்த எழுத்துக்கள் முதலில் சிறிது சாய்த்தும், பிறகு முழுதும் வளைத்தும், எழுதப்படலாயிற்றோ என்று ஊகிக்க வேண்டியுள்ளது.

இந்தக் கால கட்டத்துக் கல்வெட்டுக்களுக்கு எடுத்துக்காட்டுக்ககளாக வைகைக்கரை[46], ஏனாதி[46A], சிங்கம்பட்டி[47], ஆனைமலை[48], திருப்பரங்குன்றம் [49], கழுகுமலை நடுகல்[50], திருவனந்தபுரம் அருங்காட்சியகத்திலுள்ள மாறஞ்சடையன் கல்வெட்டு[51], வேள்விக்குடி, சீவரமங்கலம், தளவாய்புரம், சின்னமனூர், பெரிய மற்றும் சிறிய, சிவகாசிச் செப்பேடுகள்[52] மற்றும் ஹ¬சூர் அலுவலகச் செப்புப் பட்டயம்[53], கன்னியாகுமரி, பராந்தகச் சோழன் கல்வெட்டு[54], சுசீந்திரம் இராஜராஜன் கல்வெட்டு [55] திருநந்திக்கரை இராஜராஜன் கல்வெட்டு[56] பார்த்திபபுரம்[57], கவியூர்[58], கண்டியூர்[59] கல்வெட்டுக்களையும் குறிப்பிடலாம்.

இக்கால கட்டத்து எழுத்துக்களின் ஒவ்வொரு எழுத்தின் தொடக்கத்திலும் சிறு கோடு காணப்பெறும். இம்மாற்றம் ஒரு எழுத்தோடு மற்றொரு எழுத்தைச் சேர்த்து விரைவாக எழுதியதன் காரணமாக ஏற்பட்ட வளர்ச்சி எனலாம்.

முதற்கட்ட வளர்ச்சியில் நெடிலைக் குறிக்கவும், 'எகர', 'ஒ'கரத்தைக் குறிக்கவும் சேர்க்கப்பட்டிருந்த பக்கக் கோடுகள், 'ஐ' காரத்தைக் குறிக்க இடப்பட்டிருந்த எழுத்தின் இடதுபக்க இரு கோடுகள், இரண்டாம் கட்ட வளர்ச்சியில் வளைவுகளாக மாற்றம் பெற்றன.

ப,ம,வ,ய,ல ஆகிய உயிர் மெய் எழுத்துக்குள்ள வேற்றுமை, எழுத்தின் தொடக்கத்திலுள்ள சிறு வேறுபாட்டினால்தான் உணர முடிகிறது. அதே போன்று ண,த,ற ஆகிய உயிர்மெய் யெழுத்துக்களுக்குள்ள வேற்றுமையும் எழுத்தின் தொடக்க வேறுபாட்டினாலேயே உணர முடியும்[60].

மூன்றாம் கட்ட வளர்ச்சியை கி.பி. 14-15 ஆம் நூற்றாண்டளவிலேயே காணமுடிகிறது. இக்கால கட்டத்தில் எழுதப்பட்டுள்ள செப்பேடுகள் மற்றும் கல்வெட்டுக்களைப் படிப்பதென்பது மிகவும் கடினமான ஒன்று. இக்காலத்துக் கல்வெட்டுக்களுக்கு உதாரணங்களாகச் சிதரால் கல்வெட்டு, (கி.பி. 1373)[61] இராம மார்த்தாண்டவர்மனின் நவய்க்குளம் கல்வெட்டு (கி.பி. 1439)[62], பரூர் ரோமோ சிரியன் சர்ச் கல்வெட்டு (கி.பி. 1624)[63] போன்றவற்றைச் சுட்டலாம்.

இக்கால கட்ட வட்டெழுத்து வளர்ச்சியைக் காண்கையில் பெரும் குழப்பமே மிஞ்சும். ஏனெனில், சில எழுத்துக்களைப் பார்க்கும்போது அவையனைத்தும் ஒன்றுபோலவே தோன்றும், எடுத்துக்காட்டாக ண,த,ற ஆகிய எழுத்துக்களையும் ந,ப,ம,வ ஆகிய எழுத்துக்களையும் குறிப்பிடலாம்.

இரண்டாம் கட்ட வளர்ச்சியில் இருந்த சிறு சிறு வேற்றுமை கூட மூன்றாம் கட்ட வளர்ச்சியில் இல்லாமல் ஆகிவிட்டது. அக்கால கட்டத்தில் வாழ்ந்த மக்கள் வட்டெழுத்தில் நல்ல தேர்ச்சி பெற்றவர்களாக இருந்ததினால் அவர்களால் அவற்றைப் புரிந்துக்கொள்ள முடிந்திருக்கிறது.

சோழப் பேரரசன் முதலாம் இராசராசன் காலம் முடியத்தான் வட்டெழுத்தின் செல்வாக்கான நிலை தமிழகத்தில் இருந்திருப்பதாகத் தெரிகிறது. அதற்குப் பிறகு நாளாவட்டத்தில் குறையத் தொடங்கியிருக்கிறது. ஆனால், கேரள மாநிலத்தில் வட்டெழுத்தின் பயன்பாடு சற்றும் குறையாத நிலையில் கி.பி. 16–ஆம் நூற்றாண்டு முடிய இருந்திருக்கிறது. அதற்குப் பிறகு இவ்வெழுத்திலிருந்து படிப்படியாகக் கோலெழுத்துத் தோன்றியது. எழுதுகோலினால் எழுதப்பெற்றதால், கோலெழுத்து என்று பெயர் பெற்றதாகக் கூறுவர்.[64] இவ்வெழுத்து கொச்சியிலும், மலபாரிலும் பெருவழக்கிலிருந்து வந்தது. கோலெழுத்து போன்றே 'மலையாண்மம்' என்ற எழுத்தும்[65] வட்டெழுத்திலிருந்தே வளர்ச்சியடைந்தது. இதற்கும் வட்டெழுத்துக்கும் மிகச் சிறிய வேறுபாடே உண்டு. இவ்வெழுத்து திருவனந்தபுரத்துக்குத் தெற்கிலுள்ள பகுதியில் வழக்கிலிருந்தது. நாளாவட்டத்தில் வட்டெழுத்து, கோலெழுத்து, மலையாண்ம ஆகிய மூன்றெழுத்துக்களும் பயன்பாடு குன்றி கிரந்த எழுத்து கலந்த மலையாள எழுத்து வழக்கத்துக்கு வந்துவிட்டது[66].

தமிழகத்தைப் பொறுத்தவரையில், சோழர் காலத் தமிழ் எழுத்து, வட்டெழுத்தின் இரண்டாம் கட்ட வளர்ச்சிக்குப் பிறகு பெரும் செல்வாக்கு பெற்று அன்றிலிருந்து இன்றுவரை பயன்பாட்டில் இருந்து வருகிறது.

**அடிக்குறிப்புகள்**

1 கீழ்வாலைப் பாறை மீதும கொடுமணல், அழகன்குளம் ஆகிய இடங்களில் பானை ஓடுகள் மீதும் வரையப்படடுள்ளன.

2 அழகன்குளம அகழாயவில் பண்டைத்தமிழ் எழுத்துக்களுக்கு இடையில் காணப்பெறும் குறியீடு

3 I. Mahadevan, "Corpus of the Tamil Brahmi Inscriptions", *Seminar on Inscriptions*, ed. R. Nagaswamy (1966), PP. 57-73.

4. *JBORS*, Vol-I, p.58.
5. A.C.Burnell, *Elements of South Indian Palaeography*, (1894).
6. Buhler. G. 'Indian Palaeography', *Indian Antiquary,* Vol XXXIII, 1904, Appendix, p.75.
7. T.A.Gopinatha rao, "Specimens of Vatteluttu Inscriptions". Introduction, *T.A.S.* vol. XVI,Vol-I,p.395 (Reprinted 1988).
8 எஸ். இரத்தினசாமி, *தமிழ் எழுத்து வரிவடிவ வரலாறு,* (1988), பக்கம், 112–113
9 தி.வை. சதாசிவ பண்டாரத்தார், *கல்வெட்டுக்கள் கூறும் உண்மைகள்* (1977) பக்கங்கள் 30–31.
10 எஸ். இரத்தினசாமி, *தமிழ் எழுத்து வரிவடிவ வரலாறு,* (1988), பக்கம் 104.
11 மயிலை சீனி. வேங்கடசாமி, கொங்கு நாட்டு வரலாறு (பழங்காலம்–கி.பி. 250 வரையில்), 1974, பக்கம 209.
12 சி. கோவிந்தராசனார், *தமிழெழுத்தின் வரிவடிவம்,* (1993) பக்கம் 56.
13 T.N. Subramanian, *South Indian Temple Inscriptions*, Vol-III, Part II, (1957), p. 1562.
14 *Ibid*, p. 1609
15 இரா. நாகசாமி, தமிழ் எழுத்து, *கல்வெட்டியல்* (1972), பக்கம் –9.
16 I. Mahadevan, "Origin of the Tamil Script", *Origin, Evolution and Reform of the Tamil Script*. Seminar Papers (1983), Institute of Traditional Culture, Chennai - 5, pp. 12-13:
17 1968–ல் நடைபெற்ற இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் 'The Origin and Evolution of the Tamil, Vatteluttu and Gantha Scripts', என்னும் கட்டுரையில் பண்டைத்தமிழ் அசோகன் பிராமியிலிருந்து வளர்ச்சி பெறவில்லை அசோகன் பிராமியின் சமகாலத்திய மற்றொரு எழுத்து; இரு எழுத்துக்களும் வேறொரு மூல எழுத்திலிருந்து வளர்ச்சி பெற்றவை என்று எழுதியுள்ளார். ஆனால், 1979ல் வெளியிட்ட *The Origin of Brahmi Script* என்னும் நூலில் மேற்காணும் கருத்துக்கு முற்றிலும் மாறாக எழுதியுள்ளார் Roman Karur என்னும நூலிலும் (பக் – 95) கி.பி. முதல இரண்டாம் நூற்றாண்டில்தான் தமிழ்நாட்டில் எழுத்துக்கள் பயனபடுத்தப்பட்டன என்று கூறுகிறார்
18 Dr. Avvai Natarajan and Natana Kasinathan, *Art Panorama of Tamils*, 'Date of Tamil Brahmi Inscriptions, (1992), p.59.
19 Dr. K.V. Ramesh, On the Origin and Dissemination of the Brahmi Script, Paper presented at Seminar on Brahmi held at Thanjavur.
20 கே ஜி. கிருஷ்ணன், 'இந்தியக் கல்வெட்டியல் ஆய்வு நிலை', *ஆவணம்:9,* பக்கங்கள் 11–12.
21. பி.ஆர். சீனிவாசன், 'தமிழகத்தின் மிகப்பழைய கல்வெட்டுக்கள் ஒரு குறிப்பு, *தொல்லியல் நோக்கில் தமிழகம்* பக். 75–78.
22 இராசவேலு, 'தமிழ் எழுத்தின் தோற்றமும் காலமும்', *தொல்லியல் நோக்கில் தமிழகம்,* பக்கம் 86.
23 இரா நாகசாமி, 'வட்டெழுத்து' *கல்வெட்டியல்,* ஆசிரியர் நால்வர், 1972, பக். 27
24 நடன காசிநாதன், 'துறவிருந்து இறந்தார் கல்' *கல்வெட்டு* காலாண்டிதழ, எண் ·20.
25 சு இராசவேலு, நெகனூராப்பட்டி தமிழ – பிராமிக் கல்வெட்டு', ஆவணம், இதழ் – 6, பக்கஙகள் 7–8.
26 Dr. R. Nagaswamy, "An Outstanding Epigraph". *Proceedings of the Vth International Tamil Conference Seminar*, (1981).
27 இரா நாகசாமி, *தருமபுரி கல்வெட்டுகள்,* முதல் தொகுதி (1973) எண்கள் 1974/61, 1974/62.

28 இம்மன்னன் உருவப்பள்ளிச் செப்பேட்டை வெளியிட்ட பல்லவ யுவராஜன் விஷ்ணு கோபவர்மனாகவோ அல்லது கதம்ப மன்னன் விஷ்ணுவர்மனாகவோ இருக்கலாம் என்ற சந்தேகம் எழலாம கல்வெட்டு 'கோவிசைய' என்று தொடங்குவதால் பல்லவ மன்னன் என்று கொள்வதே சரியெனப்படுகிறது.

29 *T.A.S.* Vol-I (Reprinted 1988), Some Chola Inscriptions, p. 339.

30 ஐ மகாதேவன் அவர்களிடமிருந்து நேரில் விவரம் பெறப்பட்டது.

31 வெ வேதாசலம், 'தாமரைக் கரையில் ஒரு நடுகல்' *ஆவணம்* – 10, பக்கம் 4–5.

32 I. Mahadevan, *Corpus of Tamil Brahmi Inscriptions*, (1976), p.76.

33 ஐ மகாதேவன், சூ. சுவாமிநாதன், 'கர்நாடகத்தில் பண்டைய வட்டெழுத்துக் கல்வெட்டு' *ஆவணம்* – 7, பக்கங்கள் 9 –12

34 ஐ. மகாதேவன், 'தொண்டை மண்டலத்துக் கோழிக்கற்கள் – மீளாய்வு *ஆவணம்* 9, பக்கம் 142.

35 நடன. காசிநாதன், 'தொண்டைமண்டலத்தில் அண்மைக்காலக் கண்டுபிடிப்புகள்' சென்னை மாவட்டம் வரலாற்றுக் கருத்தரங்கு, பதிப்பாசிரியர், இரா. நாகசாமி (1978), பக்கம் 86–87.

36 ஐ மகாதேவன், 'தொண்டை மண்டலத்துக் கோழிககற்கள்', *ஆவணம்*, பக்கங்கள் 15–17.

37 I. Mahadevan, " The Earliest Inscriptions of Kerala", Presidentiad address delivered at the Conference, 15th May, 1998.

38 ஐராவதம் மகாதேவன், எடக்கல் குகைக் கல்வெட்டுகள், *ஆவணம்* 9. பக்கங்கள் 20–29.

39 *கல்வெட்டு* காலாண்டிதழ் எண். 52 (1999, சனவரித் திங்கள்) பக்கங்கள் 20–25.

40 ஆவணம் 10, பக்கம் 155

41 இப்பானையோட்டோடு மேலும் இரண்டு பானையோடுகளிலும் எழுத்துப் பொறிக்கப்பட்டு காணப்பெறுகின்றன, மூன்றும் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை கோவை அகழ்வைப்பகத்தில் காட்சியில் உளளன. இரண்டாம பானையோட்டின் மீது பண்டைத் தமிழ எழுத்தில 'ஸங்க (றெ) தூதை' என்னும் மூன்றாம் பானையோட்டில் 'ரப' என்ற எழுத்துக்கள் மட்டும் எழுதப்பட்டுள்ளன இவை கி.பி 3–4ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை கோவை மாவட்டம் ஒடக்கன் பானையத்திலிருந்து இவை கிடைத்துள்ளன.

42 ஆர் வசந்தகல்யாணி, 'பெருமுக்கல் கீறல் உருவகளின் காலம் –ஓர் ஆய்வு நோக்கு', *ஆவணம* 5, பக்கங்கள் 23–30.

43 *ஆவணம்* 8, பக்கங்கள் 20–22, *ஆவணம்* 10, பக்கங்கள் 6–7.

44 விழுப்புரம் வீரராகவனால் கண்டுபிடிக்கப்பட்டு, இக்கட்டுரை ஆசிரியரால் படித்துத் தரப்பெற்றது செய்தி வெளிவந்த நாள் 1.1.2000 தினமணி.

45 விழுப்புரம் திருமதி மற்றும் திரு. வீரராகவன் ஆகியோர் கண்டறிந்து இக்கட்டுரை ஆசிரியரால் படித்தளிக்கப்பட்டது. செய்தி வெளிவந்த நாள் தினமலர் 15.03.2000, தினமணி 20.03.2000

46 E.I. Vol, XXXVIII, Part-I, pp. 27-32, *கல்வெட்டு* காலாண்டிதழ்.9, பக்கங்கள், 1–11.

46A சு. இராசகோபால், வெ. வேதாசலம், 'சேந்தன்மாறன் அரிசகேசரியின் ஏனாதிக்கல்வெட்டு', *ஆவணம்*–7, பக்கங்கள் 13–14.

47 *S.I.I.* Vol, XIV, No.97

48 *ARE*, 453 of 1906

49 *T.A.S.* Vol - I, p. 399 (Reprinted 1988)

50 *ARE*, 43 of 1908- *S.I.I.* Vol - XIV, No.31

51 *T.A.S.* Vol, I, No. VII, (Reprinted 1988) pp.227 -235

52 *பாண்டியர் செப்பேடுகள் பத்து*, (1967), பக்கங்கள், 1–206.

53 *T.A.S.* Vol, II, Part III, pp. 131 - 207 (Reprinted 1988)

54 *Ibid*, Vol I, p. 237
55 *Ibid*, Vol II, pp. 6-7 (Reprinted 1988)
56 *Ibid*, Vol I, p. 292
57 *Ibid*, Vol I, (Reprinted 1988), pp. 403-404
58 *Ibid*, pp. 404-413
59 *Ibid*, pp. 414-416
60 நடன. காசிநாதன், *கல்லெழுத்துக்கலை* (1989), பக்கங்கள் 22-40.
61 *T.A.S.*, Vol I, (Reprinted 1988), pp.421-422
62 *Ibid*, pp. 423
63 *Ibid*, pp. 423-27
64 இதற்கு 'நானாமோனா' என்று வேறொரு பெயரும் உண்டு. குழந்தைகளுக்கு எழுத்துக்கள் கற்பிக்கும முன்னர் 'நமோஸ்து' என்று எழுதும்படி கூறுவார்கள். அந்த நமோஸ்து தான் நானா மோனா என்று சுருக்கி அழைக்கப்படலாயிறறு
65 இவ்வெழுத்துக்குத் 'தெக்கன் மலையாளம்' என்று ஒரு பெயரும் வழககத்திலிருந்தது.
66 பி.கே. பரமேச்வரன் நாயர், *மலையாள இலக்கிய வரலாறு* (1968), பக்கம் 9.

# 59. செய்தித் திரட்டு

## 59:1 குமரியில் ஜேஷ்டா, சதிக்கல் சிற்பங்கள்

குமரிமாவட்டம் கல்குளம் வட்டம் பத்மநாதபுரம் கோட்டைக்கு வெளியே மருந்துக் கோட்டை மலயடிவாரத்தில் அங்காளபரமேஸ்வரி கோயில் அருகேயுள்ள பாழடைந்த கோயிலில் 17–18 ஆம் நூற்றாண்டுச் ஜேஷ்டா சிற்பம் உள்ளது. நாகர்கோயில்–திருவனந்தபுரம் நெடுஞ்சாலை ஓரமாக புலியூர்குறிச்சியில் (தெரசர்) குளக்கரை அருகே ஆணும் பெண்ணும் அமர்ந்த நிலையில் ஒரு சதிக்கல் உள்ளது. இதன் காலம் கி.பி. 17ஆம் நூற்றாண்டாகலாம்.

**செந்தீ. நடராஜன், நாகர்கோயில்**

## 59:2 மலம் கழிக்கும் பூதகணம்

புதுச்சேரிக்குத் தெற்கே சுமார் 20 கி.மீ. தொலைவில் உள்ள பாகூர் திருமூலநாதர் கோயிலின் பிரஸ்தரப் பகுதியில் உள்ள பூதவரியில் இச்சிற்பம் உள்ளது. இக்கோயிலில் இராட்டிரகூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணன் (936–66) கல்வெட்டு காணப்படுவதால் அவன் காலத்திலோ அதற்கு முன்னரோ இச்சிற்பம் செதுக்கப்பட்டிருக்க வேண்டும். இச்சிற்பம் வடமேற்கு மூலையில் உத்தரத்தில் அமர்ந்துள்ளது போல் செதுக்கப்பட்டுள்ளது. மலம் வரும் ஆசானவாயை தம் வலது கையால் காட்டியவாறும், இடதுகையால் தும்பிக்கை உடைய யாளியைத் தொட்டவாறும் பூதம் உள்ளது முகம் முதுகுப்பக்கம் திரும்பிப்பார்க்க முயல்கிறது. தோளிலிருந்து கீழிறங்கும் முதுகுப்பட்டையும் மணிகளை உடைய அரைக்கச்சையும், மணிக்கட்டில் கட்கவளைகளும் காதில் குண்டலங்களும், கழுத்தில் சரப்பள்ளியும் பூதத்திற்கு அணி செய்கின்றன. கண்ணேறு (திருஷ்டி) கழிப்பதற்காக ஆண் பெண் உடலுறவுச் சிற்பங்களும், நிர்வாணப் பெண் சிற்பங்களும் கோயில் கருவறையின் வடமேற்கு மூலையில் வைப்பது சிற்பக்கலை மரபாகும். இதுபோல் இப்பூதச் சிற்பம் வைக்கப்பட்டிருக்கலாம்.

**ஆ. துரைரங்கம், புதுச்சேரி**

## 59:3 ஆரணி மகாவீரர் சிற்பங்கள்

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி நகரின் ஒருபகுதியான சைதாப்பேட்டை அனந்தபுரம் அனந்த நாதர் திருக்கோயில் வளாகத்தில் 10ஆம் நூற்றாண்டைச்சார்ந்த இரண்டு மகாவீரர் கற்சிலைகள் உள்ளன. ஒன்றின் முகம் சிதைந்துள்ளது.

**ம. காந்தி, வேலூர்**

## 59:4 என். தட்டக்கல் பாறை ஓவியம்

தர்மபுரிமாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், நாகரசம்பள்ளியை அடுத்துள்ள என். தட்டக்கல் கானப்பாறையின் மீதுள்ள செங்குத்தான பாறையின் கிழக்குப் பக்கத்தில் இவ்வோவியம் காணப்படுகின்றது. இவ்வோவியத்தில் நான்கு மனித உருவங்கள் நின்று – அமர்ந்த நிலையிலும் ஒரு உருவம் கிடந்த நிலையிலும் உள்ளன. இறந்தவரையும் அவரைச்சுற்றிய உறவினர்களையும் இவ்வோவியம் குறிப்பதாகலாம். இப்பாறையிலிருந்து கிழக்கே 100 மீட்டர் தொலைவில் ஒரு பெருங்கற்படைக்கால கல்திட்டையும் அமைந்துள்ளது. இக் கானப்பாறையைச் சுற்றியுள்ள நிலப்பரப்பில் சிறுசிறு கறுப்பு மற்றும் சிவப்பு நிறப் பானையோடுகள் காணப்படுகின்றன. தற்போது இப்பகுதியில் மக்கள் இவ்வோவியத்தில் காணப்படும் மனித உருவத்தினைப் போல் பெரிய அளவில் வெண்மை நிறத்தில் தங்கள் வயல்களை ஒட்டி அமைந்துள்ள பாறைச் சரிவுகளில் வரைந்துவருகிறார்கள். வயல்களில் உள்ள நெற்கதிர்களை பறவைகள் சேதப்படுத்தாமல் இருக்க அப்படிச் செய்கிறார்கள்.

**செ. கோவிந்தராஜ், உதகமண்டலம்**

## 59:5 திருக்கொடுங்குன்றப்பட்டி தாழி

சிவகங்கைமாவட்டம், திருப்பத்தூர் வட்டம், பிரான்மலை அருகிலுள்ள திருக்கொடுங்குன்றம்பட்டியில் தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியர் திரு சுப்பிரமணியன் கொடுத்த தகவலின்படி தாழி ஒன்று கண்டறியப்பட்டுள்ளது. தாழியினுள் சுடுமண்தட்டு, சிறு கிண்ணங்கள், விளக்கு முதலியனவிருந்தன.

**12.4.2000 தினமலரிலிருந்து சீ. இலட்சுமணன், சிங்கம்புணரி**

## 59:6 ஆமூரில் சங்ககால வாழ்விடம்

திருச்சி சேலம் நெடுங்சாலையில் காவிரியின் வடகரையில் திருச்சியிலிருந்து 24கி.மீ. தூரத்தில் அமைந்த ஆமூர் நத்தமேட்டுப்பகுதியில் சுமார் 4 மீ. ஆழத்தில் செங்கற்களால் கட்டப்பட்ட கட்டிடப் பகுதி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. செங்கற்கள் 36 x 17 x 6 செ.மீ அளவுடையவை. மேலும் மெருகூட்டப்பட்ட சிவப்பு வண்ண மட்கலக்குடுவை ஒன்றும், கருப்பு-சிவப்பு மட்கலத்துண்டுகளும் கிடைத்துள்ளன. இங்கு முதுமக்கட் தாழி ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

**நாக. கணேசன், கரூர்**

## 59:7 கரூரில் புதிய தொல்பொருட்கள்

சங்ககாலம் முதல் சேரர்களின் தலை நகரமாக விளங்கிய கரூரில் கடந்த பத்தாண்டுகளாக அரிய தொல்பொருட்கள் கிடைத்த வண்ணம் உள்ளன. தற்பொழுது வெள்ளியாலான கணையாழி ஒன்றும், வெண்கலத்தால் ஆன யானை உருவம் ஒன்றும் கிடைத்துள்ளது. வெள்ளி கணையாழியின் எடை 5 கிராம். இதில் *அந்திகான்* என்று எழுத்துக்கள் உள்ளன. இதனை *அந்திகன்* என்று கொள்ளலாம். எழுத்தமைதியின்படி இக்கணையாழி கி.மு. 1-2ஆம் நூற்றாண்டாகும். யானை உருவம் அமராவதி ஆற்றுப் படுகையில் கிடைத்ததாகும். இது 7.82 கிராம் எடையுள்ளது.

**செ. ராஜு, கரூர்**

## 59:8 பழங்கால உண்டியல்

கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி வட்டம் கரூரிலிருந்து 20 கி.மீ தூரத்தில் அமைந்துள்ள வெங்சமாக்கூடலூர் நத்தமேட்டுப் பகுதியில் ஒரு உண்டியல் கிடைத்துள்ளது. இதன் வாய்ப்பகுதி 5 செ.மீ விட்டமும் 25 செ.மீ வெளிச்சுற்றளவும் உடையது. கழுத்துப் பகுதியில் மூன்று நூல்கள் கட்டப்பட்டு ஒன்றில் 23 காசுகள் கோர்த்துத் தொங்கவிடப்பட்டுள்ளது போல வேலைப்பாடு உள்ளது. இதன் மூடி 11 இதழ்களும் நடுப்பகுதி மொட்டுமாக அமைந்து விரிந்த தாமரை அமைப்பில் காணப்படுகிறது. உண்டியலிலும் மூடிப்பகுதியிலும். கம்பி கோர்த்து இணைப்பதற்கேற்ப துளையுடன் கூடிய ஆறு வளையங்கள் உள்ளன. உண்டியலில் காசுகள் இல்லாததால் இதன் காலத்தைத் துல்லியமாகக் கூற இயலவில்லை. இவ்வுண்டியலுடன் கி.பி 14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கெண்டி, நீர் ஊற்றும் கலம் போன்றவை கிடைத்துள்ளதால் இதன் காலமும் கி.பி 14 ஆம் நூற்றாண்டு எனலாம்.

**நாக. கணேசன், கரூர்**

## 59:9 நெடுங்கூர் பெருங்கற்படைச் சின்னம்

கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி வட்டம் கரூர் கோவை தேசிய நெடுஞ்சாலையில் கரூரிலிருந்து சுமார் 25 கி.மீ தொலைவில் நெடுங்கூர் அமைந்துள்ளது. இவ்வூர்க் கிழக்குப்பகுதியில் சுமார் 20 ஏக்கர் பரப்பில் 53 பெருங்கற்படைச் சின்னங்கள் காணப்படுகின்றன. இவ்வூர் மக்கள் இவற்றை பாண்டியன் குழி, பாண்டியன் வீடு என்றும் இப்பகுதியை தோரணக்குழிக்காடு என்றும் அழைக்கின்றனர். இவற்றில் பெரியவை 25 அடி விட்டமும் 99 அடி சுற்றளவும்; சிறியவை 12 அடி விட்டமும் 45 அடி சுற்றளவும் கொண்ட கல்வட்டங்களாக உள்ளன.

**நாக. கணேசன், கரூர்**

## 59:10 கன்னட ஓவியக் கல்வெட்டுகள்

தர்மபுரி மாவட்டம் கிருஷ்ணகிரிக்கு அருகில் உள்ள கெங்கலேரி தேன் மலையில் உள்ள ஒரு குகையில் மூன்று வரிகளில் வரையப்பட்ட கன்னடக் கல்வெட்டு ஒன்றுள்ளது. இதன் காலம் சுமார் 15 ஆம் நூற்றாண்டாகும்.

1. ஸுரப்ப
2. ஹொம்நவப்பு
3. .....



சுகவன முருகன், காவேரிப்பட்டினம்.

## 59:11 துர்க்கை சிற்பங்கள்

காஞ்சிபுரம் மாவட்டம் மேன நல்லூர் அருகே கன்னி கிளிப்பைக்குப் போகும் சாலையில் சிவன்கோயிலின் வாயிலில் துர்க்கை சிற்பம் ஒன்றுள்ளது. இதன் காலம் கி.பி 9ஆம் நூற்றாண்டாகலாம். விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டம் கொரவநத்தல் என்ற ஊரில் பல்லவர் கால துர்க்கை சிற்பம் ஒன்று பலகைக் கல்லில் புடைப்புச் சிற்பமாக உள்ளது.

முத்து எத்திராசன், சென்னை.

## 59:12 திருவண்ணாமலைப் பகுதிச் சிற்பங்கள்

திருக்கோயிலூர் வட்டம் வி.புதூர் நடுநிலைப்பள்ளி அருகில் வழிபாட்டில் உள்ள துர்க்கை பல்லவர் காலக் கலைப்பாணியில் அமைந்துள்ளது. திருவண்ணாமலைவட்டம் வேட்டவலம் வரதராஜபெருமாள் கோயில் எதிரில் உள்ள அய்யதாத் தோப்புப் பாறையில் 13 ஆம் நூற்றாடு தீர்த்தங்கரர் உருவம் தனிப்பலகைககல்லில் புடைப்புச் சிற்ப மாகவுள்ளது. 13 ஆம் நூற்றண்டைச்சேர்ந்த மற்றொரு தீர்த்தங்கரர் சிற்பம் வீரபாண்டியில் உள்ளது. இவ்வூர் மக்கள் செட்டியார் சாமி என்று அழைக்கின்றனர். பள்ளிகொண்டாபட்டில் திருவண்ணாமலைச் சாலையில் கி.பி 13 ஆம் நூற்றாண்டுத் தீர்த்தங்கரர் சிற்பம் உள்ளது. வேட்டவலத்திலும் பள்ளிகொண்டாபட்டிலும் வீரர்களுக்கு எடுக்கப்பட்ட கி.பி. 15-16 ஆம் நூற்றாண்டு நடுகற்கள் உள்ளன. இச்சிற்பங்கள் எவற்றிலும் கல்வெட்டுகள் இல்லை.

இல. தியாகராஜன், அரியலூர்.

## 59:13 விழுப்புரம் பகுதியில் மூதேவிச் சிற்பங்கள்

விழுப்புரம் மாவட்டம் திருக்கோயிலூர் வட்டம் கிராமம், திருவெண்ணெய் நல்லூர், விழுப்புரம் வட்டம் ஆசூர் ஏரிக்கரை

மீன்பிடிப்புப் பகுதி, ஆகிய இடங்களில் கி.பி. 7-9 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மூதேவிச் சிற்பங்கள் உள்ளன.

**சி. வீரராகவன், விழுப்பரம்**

## 59:14 அப்புக்கல் புதையலில் கிடைத்தபோர் வாள்கள்

வேலூர் மாவட்டம் வேலூர் வட்டம் அனைக்கட்டு என்ற ஊரின் தெற்கில் சவ்வாது மலைச் சாரலில் அப்புக்கல் என்று ஊர் உள்ளது. இதன் தென் கிழக்கில் ஒரு சிறிய குன்று உள்ளது. 2000 ஆம் ஆண்டு மே திங்களில் அப்புக்கல் குன்றில் கல் உடைக்க வெடிவைத்தபொழுது பாறையின் பிளவில் இருந்து இரும்பினால் செய்யப்பட்டு செம்புமுலாம் பூசிய எட்டு போர்வாள்கள் கிடைத்தன. தற்போது அவை வேலூர் அரசு அருங்காட்சியகத்தில் உள்ளன.

**ம. காந்தி, வேலூர்.**





















# 60. புதிய வெளியீடுகள்

## 60.1

Rajan Gurukkal and M.R. Raghava Variar (ed), *Cultural History of Kerala.* Vol. 1, Dept of Cultural Publications, Govt. of Kerala, 1999, pp304,

கேரள மாநிலத்தின் பண்பாட்டு வரலாற்றினை வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொட்டு சங்ககககாலம் வரை நிரல்பட எடுத்தியம்பும் இந்நூல் கேரள வரலாற்றினை அறிந்துகொள்வதற்கு பேருதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. பல அறிஞர்களின் கட்டுரைகளைப் பெற்று அவற்றை அப்படியே வெளியிடாமல் அக்கட்டுரைகளில் காணப்படும் தரவுகளை உள்வாங்கிக் கொண்டு கால நிரக்கில் பண்பாட்டுக் கூறுகளை பற்றி பல்வேறு அறிஞர்கள் கூறும் கருத்துக்களை ஒருமுகப்படுத்தி செறிவாக இந்நூல் எழுதப்பட்டு உள்ளது. இவ்வகையில் இது ஒரு பதிய முயற்சியாகும்.

வரலாறு எதற்காக எழுதப்படுகிறது, குறிப்பாக கேரளப் பண்பாட்டு வரலாறு எந்த நோக்கத்திற்காக, யாருக்காக எழுதப்படுகிறது என்பதையும் அதில் காணப்படும் நிறை குறைகளையும் சுட்டிக்காட்டி வரலாற்று வரைவியலில் அண்மைக்காலமாகக் காணப்படும் போக்குகளைச் சுட்டிக்காட்டி அதில் கேரள நாட்டின் பண்பாட்டுக் கூறுகள் எங்கு நின்று நிலைக்கின்றன என்பதை வரலாறு, தொல்லியல், மானிடவியல், சமூகவியல் அடிப்படையில் எடுத்துச் சென்றுள்ளனர்.

தமிழகத்தின் ஒரு பகுதியாக விளங்கிய கேரளத்தின் சுற்றுப்புறச் சூழல், அதன் அமைவிடம், நிலப் பொதியியல், ஆற்றுப் போக்கு, கடற்கரை அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களை விரிவாக இந்நூல் வழங்குகிறது. இது அம்மாநிலத்தில் பிற்காலத்தில் பல்வகைப் பண்பாட்டுக் கூறுகள் குறிப்பாக வாழ்விடங்கள், துறைமுகங்கள், பெருவழிகள் போன்றவை எங்ஙனம் உருவாகின என்பதை அறிந்துகொள்ள பேருதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

வரலாற்றுக்கு முற்பட்ட காலம் கேரளாவில் இல்லை என்று கருதுகின்ற காலம் மாறி அவை இந்தியாவின் பிற இடங்களைப் போன்று பழங்கற்காலம், நுண் கற்கருவிக் காலம் உண்டு என்பதையும் அக்காலங்களுடன் தொடர்புடைய பாறைக்கீறல்களையும், ஓவியங்களையும் முதன்முதலாக விரிவாக இந்நூல் ஆய்கிறது.

அதேபோன்று இரும்புக்கால பெருங்கற்படைச் சின்னங்கள் பற்றியும் அவற்றிற்கிடையேயான அமைப்பு முறையிலான தொடர்புகள்,

வேறுபாடுகள் பற்றியும் இந்நூல் விளக்குகிறது. இப்பண்பாட்டினைப் பற்றி முழுவதுமான ஒரு வரலாற்றினை அறிந்துகொள்ளாமைக்குக் காரணம் இக்காலப் பண்பாட்டின் வாழ்விடங்களில் அகழாய்வு செய்யப்படாமையே என்பதை அறுதியிட்டுக் கூறியுள்ளனர்.

வேந்தர், வேளிர், சீறூர் மன்னர், குடிகள் ஆகியோரின் தோற்றம், சமூகப் படிநிலை ஆகியவற்றை சங்க இலக்கியத்தில் காணப்படுகின்ற திணைக் கோட்பாட்டின் பின்புலத்தின் கீழ் ஆய்ந்து அவற்றின் வளர்ச்சி நிலையை எடுத்து இயம்புகிறது. கேரள நாட்டின் கனிவளம் அதனால் ஏற்பட்ட அயல்நாட்டு வாணிபத் தொடர்பு ஆகியவற்றை அக்காலகட்டத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப வளர்ச்சியின் பின்னணியில் அரசு, சமூகம் அடைந்த மாற்றங்களை விளக்கிச் சென்றுள்ளனர்.

கேரள வரலாற்றினை அண்மைக்கால ஆய்வுகளின் அடிப்படையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் இன்றைய நாள் வரை நிரல் பட எடுத்துக்கூற வேண்டும் என்ற அடிப்படையில் சங்க காலம் வரை கிடைக்கின்ற தரவுகளைத் திரட்டி முதல் தொகுதியாக வெளிவந்திருக்கும் இந்நூல் கேரளத்தின் தொடக்க கால வரலாற்றினை அறிந்துகொள்ள பேருதவியாக இருக்கும் என்பதை மறுப்பதற்கில்லை. இனி வெளிவர இருக்கும் தொகுதிகளும் அம்மாநிலத்தின் வரலாற்றிற்கு மெருகூட்டும் எனலாம்.

**கா. ராஜன், தஞ்சாவூர்**

## 60:2

V. Vedachalam, G. Sethuraman & Madhuca Krishnan, *Virudhunagar District - An Archaeological Source book*, Virudhunagar 2000, pp.108.

இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு எட்டு வட்டங்களை உள்ளடக்கி புதிய மாவட்டமாக 1985 இல் உருவாக்கப்பட்ட இவ்விருதுநகர் மாவட்டத்தில் காணப்படும் தொல்லியல் மற்றும் வரலாற்றுச் சான்றுகளை ஒருமுகப்படுத்தி பல ஆண்டுகளாக இம்மாவட்டப் பகுதியில் களப்பணியில் ஈடுபட்டிருக்கும் அறிஞர்களின் கூட்டுமுயற்சியாக இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. அண்மையில் உருவாக்கப்பட்ட மாவட்டங்களில் இம்மாவட்டம் மட்டுமே இச்சிறப்பு பெற்றுள்ளது. நுண்ணிய கற்காலம்தொட்டு வரலாற்றுக்காலம் வரை கிடைக்கின்ற சான்றுகளை ஊர்வாரியாக இந்நூல் விளக்கிச் சென்றுள்ளது. அர்ச்சுனா, வைப்பார் ஆகிய ஆற்றுப் பள்ளதாக்கில் காணப்படும் நுண்ணிய கற்கருவிகள் சாயபுரத்தில் கிடைத்த நுண்கருவிகளைவிட நேர்த்தியாகச் செய்யப்பட்டுள்ளன. பெருங்கற்படைக்காலத்தைச் சார்ந்த முதுமக்கள் தாழிகளைக் கொண்ட தொல்லியல் எச்சங்கள் ஐம்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டு உள்ளன. இதைத் தவிர வரலாற்றுக் காலத்தைச் சார்ந்த வட்டெழுத்துக்

கல்வெட்டுக்களின் அடிப்படையில் இப்பகுதியில் காணப்படும் நாட்டுப்பிரிவுகள், நிருவாகச் சொற்கள், சமுகப் பொருளாதார நிலை, கட்டடக்கலை, சமயம், நாணயங்கள் ஆகியவற்றின் சிறப்புத் தன்மையைச் சுருங்கச் சொல்லி இந்நூலை எடுத்துச் சென்றுள்ளமை பாராட்டுக்குரியது. நுண்கற்கருவிகள், இரும்புக்கால பொருட்கள், முதுமக்கள் தாழி, குமிழி, கோயில்கள், நாணயங்கள், கற்சிலைகள், செம்பொன் சிலைகள் போன்றவை ஒளிப்படங்களாக அளிக்கப்பட்டுள்ளமை இந்நூலின் நம்பகத்தன்மையை மேலும் உறுதிப்படுத்துகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக இந்நூலின் வடிவ அமைப்பு, ஒளிப்படங்கள், வரைபடம் முதலியன இம்மாவட்டத்தை பற்றி ஆய்வு செய்ய முனைபவருக்கு இந்நூல் அடிப்படை நூலாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

**கா. ராஜன், தஞ்சாவூர்**

## 60:3

வெ. வேதாசலம், *எண்பெருங்குன்றம் (சமணம் வளர்த்த குன்றங்கள்)*, சாஸ்தா பப்ளிகேஷன்ஸ், மதுரை, பக். 87, விலை ரூ. 60/-

தமிழக வரலாற்றில் குறிப்பாக சங்ககாலத்தில் பெரும் பங்காற்றிய சமயம் சமணசமயம் ஆகும். இச்சமண சமயம் இடைக்காலத்தில் பெண்ணை நதிக்கரையில் குறிப்பாக தென்னாற்காடு மாவட்டத்திலும், மதுரையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் மையங்கள் அமைத்து இச்சமயத்தை வளர்த்ததுடன் தமிழ் இலக்கியப் பணிகளையும் மேற்கொண்டுள்ளது. சமணர்களின் உறைவிடமாகவும், வழிபாட்டுத் தலமாகவும், கல்விபேணும் இடமாகவும் திகழ்ந்த இடங்களில் எண்பெருங்குன்றம் என்ற எட்டு இடங்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை. இவை சைவ சமய தாக்கத்திற்கு பின்பும் நின்று நீடித்தவை. இவ்வெண்பெருங்குன்றம் எவை என்பதை கல்வெட்டு, தொல்லியல், சிற்பம், இலக்கியச் சான்றுகள் அடிப்படையில் விளக்கிச் சொல்வதுடன் இவற்றை கால முறைக்கும் இந்நூலாசிரியர் உட்படுத்தியிருக்கிறார். கி.மு. முதல் நூற்றாண்டு முதல் கி.பி.13ஆம் நூற்றாண்டு வரை பாண்டி நாட்டில் சமண சமயம் தொடர்ந்து நிலைத்து நின்றுள்ளது என்பதை கல்வெட்டின் வாயிலாக ஆணித்தரமாக நிறுவியுள்ளார். இத்துடன் திருவுருவகம் என்று பெயர்பெற்று சமணமலையில் செயல்பட்டு வந்த மாதேவிப் பெரும்பள்ளி பற்றிய புதிய வரலாற்றுக் கருத்துக்களை தாம் கண்டுபிடித்த கல்வெட்டுக்களின் அடிப்படையில் மீளாய்வு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. இந்நூலாசிரியர் குறிப்பிடுவதுபோல் அவர் வெளியிடவிருக்கும் பாண்டிய நாட்டில் சமயம் என்ற நூலுக்கு முன்னுரையாக இந்நூல் வந்துள்ளது.

**கா. ராஜன், தஞ்சாவூர்**

பரமு. புஷ்பரட்ணம், *தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு*, குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை, 2000, ப. 240 விலை ரு.100.

நாணயம், கல்வெட்டு அகழ்வாய்வு மற்றும் மேற்பரப்பாய்வு ஆகியவற்றில் கிடைக்கும் தொல்பொருட்களின் அடிப்படையில் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் குறிப்பாக வடஇலங்கைக்கும் தமிழகத்திற்கும் இடையில் காணப்படும் தொடர்பினை இந்நூல் வெளிப்படுத்துகிறது. ஒரு தொடர்ச்சியான காலவரை முறைப்பட்ட கட்டுரையின் தொகுப்பாக இல்லாதிருப்பினும் வரலாற்றில் நிரப்பப்படாத இடங்களை இனங்கண்டு அவற்றை முதன்மைச் சான்றுகள் மூலம் நிறைவு செய்ய முயன்றிருக்கும் விதம் பாராட்டுக்குரியது.

எந்தவொரு நாட்டின் வரலாற்றும் ஒரு குறிப்பிட்ட தன்மையதான சான்றின் அடிப்படையில் மட்டுமே எழுதப்படுவதை தவிர்க்க வேண்டும். இது இலங்கை வரலாற்றுக்கும் பொருந்தும். புத்த மதச் சார்பான கல்வெட்டுக்கள், பாளி இலக்கியங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் மட்டுமே எழுதப்பட்ட வரலாற்றினைக் குறிப்பிடலாம். இம்முரண்பட்ட நிலையினை மனதில் நிறுத்தி இந்நூல் ஆசிரியர் அண்மைக்காலங்களில் கிடைத்த நாணயங்கள். மட்பாண்டக் கீறல்கள், எழுத்துக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் வரலாற்றின் போக்கினை ஈடுசெய்ய முயற்சிக்கிறார். இம்முயற்சிக்குப் பரந்துபட்ட கள ஆய்வும். செறிவான அகழாய்வும் தேவை என்பதை இவரது ஆய்வுகள் உணர்த்துகின்றன.

பெருங்கற்படைக் காலத்தில் தமிழகத்திற்கும் இலங்கைக்கும் இடையே காணப்பட்ட பண்பாட்டுத் தொடர்பு எங்ஙனம் வேளிர் எழுச்சிக்கும். அரசு உருவாக்கத்திற்கும் அடிகோலியது என அவர் வாதிட்டாலும் இவை கருதுகோள் என்ற நிலையிலேயே நின்றுவிடுகிறது. இக்கருத்தை வலுவூட்ட எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கள ஆய்வு முடிவுகளும், நிலவியல் அடிப்படையிலான பதிவுகளுமே நிலைநிறுத்தும் பரதவர் பற்றிய ஆய்வில் அனைவரும் தமிழர்களே என்ற கண்ணோட்டத்தில் மட்டும் அணுகாது காலங்காலமாக கடற்கரையோரங்களில் மீன்பிடித்தொழிலும் பின்னர் முத்து. குதிரை வியாபாரத்திலும் ஈடுபட்ட தொன்மைக் குடிகளான இவர்கள் மொழி, மதத்தின் அடிப்படையில் சிங்களவர், தமிழர் எனப் பிரிந்து இனங்காணப்பட்டதை வரலாற்றுரீதியாக இவர் வலியுறுத்துகிறார். பதின்மூன்றாம் நூற்றாண்டில் தமிழக அரசு தொடர்புடன் யாழ்ப்பாணத்தில் நிலையான அரசு உருவாவதற்கு முன்பே பத்தாம் நூற்றாண்டளவில் வடஇலங்கையில் இரு அரசுகள் இருந்தன என்பதற்கான சான்றுகளை முன்வைத்துள்ளார்.

**ப. ஜெயக்குமார், தஞ்சாவூர்**

## 60:5

*பரமு. புஷ்பரட்ணம், இலங்கைத் தமிழரின் பண்டைய கால நாணயங்கள், பவானி பதிப்பகம், யாழ்ப்பாணம். 2001, ப. 219,*

இந்நூல் இந்தியநாணயங்களும் இலங்கைத் தமிழர்களும்; பிராமி எழுத்துப் பொறித்த தமிழர் நாணயங்கள்; பண்டைய காலத்தில் தமிழ் மன்னர்கள் வெளியிட்ட நாணயங்கள்; நல்லூர் இராசதானி கால நாணயங்கள்; நாணயங்களும் தமிழர் வரலாறும் என்ற தலைப்புகளில் இலங்கைத்தமிழர் நாணயங்களை ஆய்வு செய்கிறது. நாணயங்களின் படங்கள், வரைபடங்கள், பட்டியல்கள் முதலியவை வேண்டிய இடங்களில் தரப்பட்டுள்ளன. ஒப்பாய்வுக்காக இலங்கை பிராமி கல்வெட்டுகளின் படங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் கிடைக்கும் தமிழ் நாணயங்கள் இந்திய அரசுகளால் வெளியிடப்பட்டவை என்று நிலவும் பொதுவான கருத்து தவறானது என்பதை இலங்கையிலேயே கிடைக்கும் நாணயங்கள் வார்க்கும் சுடுமண் அச்சுக்களைச் சுட்டி இந்நூல் விளக்குகிறது. வடஇலங்கையில் தமிழரசு ஒன்றிருந்தது. *சேது, கந், ஆ* என்று எழுத்துப் பொறிக்கப்பட்ட காசுகள் அதனால் வெளியிடப்பட்டது, இலங்கையில் கிடைக்கும் மீன் உருவமுள்ள காசுகள் பாண்டியர் காசுகளல்ல, மீனவன் என்ற பொருளில் மஜிமகாராஜர் என்ற பெயரில் இருந்த இலங்கை அரசர்களின் காசுகள் என்று இந்நூல் விளக்குகின்றது. பிராமி எழுத்துப் பொறித்த காசுகள் தமிழ்மொழியில் இலங்கையிலேயே வெளியிடப்பட்டவை. தொடக்கத்தில் தமிழும் பிராகிருதமுமே இலங்கை மொழிகளாக இருந்தன. சிங்களபிராமி என்று தொடக்ககால எழுத்துக்களுக்கு ஆய்வாளர்கள் பெயர் சூட்டி அழைப்பது சரியல்ல. சிங்களமொழி மற்றும் இலக்கியங்கள் மலையாளம், கன்னடம் போன்ற மொழிகளைப் போல காலத்தால் பிற்பட்டது என்று இந்நூல் சுட்டுவதும் கவனிக்கத்தக்கது. *உரக* என்று எழுத்துப் பொறித்த நாணயங்கள் இராசராசனால் வெளியிடப்பட்டவை அல்ல. அவனுக்கு முன்னதாகவே மதிரையும் ஈழமும் கொண்ட பரகேசரியான பராந்தகனால் வெளியிடப்பட்டவை என்று சோழர் காசியலுக்கு புதிய தரவுகளை இந்நூல் காட்டுகின்றது. குடுமியான் மலை போன்ற இடங்களில் கிடைத்துள்ள இலங்கை வரலாற்றிற்கான தரவுகளையும் நூலாசிரியர் பயன்படுத்தியுள்ளார். இலங்கை நாணயவியலுக்குத் தமிழில் வெளிவந்துள்ள ஒரு மூலநூலாக இதனை ஏற்கலாம்.

**சு. இராசகோபால், சென்னை.**

## 60:6

S. Gurumurthy. *Deciphering the Indus Script* (From Graffiti on Ancient Indian Pottery) University of Madras, Chennai, 1999 pp.341, Table ix, fig. 60, Plate xv,

1881ம் ஆண்டு பிரான்பில் அவர்களால் தொடங்கப்பட்டு இ.எச். ஹண்ட், ஜி. யஜ்தானி, பி.கே. தாபர், பி.பி.லால், எஸ். ஆர். ராவ் போன்ற ஆய்வாளர்களால் லரளவு நெறிப்படுத்தப்பட்ட இக்குறியீடுகள் பற்றிய ஆய்வு அண்மைக்காலமாக பலரின் கவனத்தை ஈர்த்து வருகிறது. அந்த வகையில் இந்நூலாசிரியர் பல்வேறு பண்பாட்டுத் தளங்களில் கிடைத்த குறியீடுகளை ஒருமுகப்படுத்தி, அதனை புள்ளியியல் அடிப்படையில் ஆய்ந்து சில முடிவுகளை ஆணித்தரமாக வெளியிட்டுள்ளார். பல்வேறு காலத்திற்குட்பட்ட 108 ஊர்களின் பண்பாட்டு எச்சங்களில் காணப்படும் 3056 குறியீடுகளை திரட்டி அவற்றில் 2288 தனிக்குறியீடுகள் எனவும், 72 குறியீடுகள் பிராமி வடிவத்தை ஒத்தவை என்றும் மீதம் உள்ள 768 குறியீடுகள் கூட்டுக் குறியீடுகள் என்றும் வகைப்படுத்தி இவற்றில் அதிகமாகப் புழக்கத்தில் இருந்தவையாக 513 குறியீடுகளை இனங்கண்டுள்ளார்.

இக்குறியீடுகளின் அடிப்படையில் முக்கிய கருதுகோள்களாக சிலவற்றை முன்வைத்து ஆய்வினை மேற்கொண்டுள்ளார். அவையாவன: 1) அரப்பா பண்பாட்டில் காணப்படும் சித்திரக் குறியீடுகள் படிப்படியாக செப்புக் காலப் பண்பாட்டின் ஊடே நின்று நிலவி பின் இரும்புப் பண்பாட்டில் தொடர்ந்து வழங்கி வந்தன. 2) இவை வலமிருந்து இடமாக எழுதப்பட்டன. 3) இக்குறியீடுகள் திராவிட மொழியில் குறிப்பாக தமிழில் எழுதப்பட்டன.

சிந்து சமவெளி நாகரிகத்தில் கிடைக்கும் குறியீடுகளுக்கும் இரும்புப் பண்பாட்டுக் காலத்தில் கிடைப்பவற்றிற்கும் இடையே காணப்படும் ஒற்றுமையை சுட்டிக்காட்டி இவை அரப்பா பண்பாட்டிலிருந்து வந்தவைதான் என்று கருதுகிறார். இக்கருத்திற்கு வலுவூட்ட அவ்விரு பண்பாட்டிற்குமிடையே காணப்படும் கால, தூர இடைவெளியை குறைக்க முற்படுகிறார் (ப. 15-16). இரும்புக் கால பண்பாட்டில் பல்வேறு இனமக்கள் வாழ்நதனர் எனவும், கோவைப் பகுதியில் கிடைத்த வண்ணம் தீட்டப்பட்ட பானை ஓடுகள் ஈரானில் கிடைத்த பானை ஓடுகள் போன்று உள்ளதால் சிலர் ஈரான் போன்ற பகுதிகளிலிருந்து வந்தனர் என்றும் ஆனால் பெரும்பாலானோர் புதிய கற்கால பண்பாட்டிலிருந்து வந்தனர் என்பதால் இரும்புக்கால மக்களின் மூதாதையர் புதிய கற்கால மக்களே என்றும் இவர்களே தென்னிந்தியாவிலிருந்து பிற பகுதிகளுக்கு பரவினர் என்றும் கூறுகிறார் (ப.13-14). கர்நாடக மாநிலத்தில் உள்ள ஹல்லூர் (Hallur) என்ற இடத்தில் கிடைத்த தரவுகளின் அடிப்படையில் இரும்புக் காலத்தை கி.மு. 1200க்கு இட்டுச் செல்கிறார். எனவே, இரும்புப் பண்பாட்டுத் தளத்தில் கிடைக்கும் பானை ஓடுகளில் காணப்படும் குறியீடுகளின் காலத்தை கி.மு. 1200க்கு எடுத்துச் செல்லலாம் (ப.15) என வாதிடுகிறார். தமிழகத்தில் கிடைத்த குறியீடுகளையே இவர் பெரும்பாலும் பயன்படுத்தியுள்ளதால் காலத்தால் பிந்திய இக்குறியீடுகளை

அக்காலக்கட்டத்திற்கு எப்படி எடுத்துச் செல்வது என்பதை விளக்க முற்படவில்லை. தமிழகத்தில் கிடைத்த இரும்புக்கால பண்பாட்டை கி.மு. 1200க்கு எடுத்துச் செல்வதில் உள்ள இடர்ப்பாடுகளை களையாமலே தமிழகத்தில் மேற்கொண்ட அகழாய்வுகளான திருக்காம்புலியூர், அழகரை, கொடுமணல், கரூர், உறையூர் போன்ற இடங்களில் இரும்புக் காலத்திற்கு முற்பட்ட பண்பாட்டுக் கூறுகள் இருந்திருக்க வேண்டும் என்றும் (ப.11) வாதிடுகிறார்.

கொடுமணலைப் பொறுத்தவரை இக்கருத்தை ஏற்றுக்கொள்ள இயலாது. கொடுமணலில் இயற்கை மண்ணின் மீது (on natural soil) தான் இரும்பு மற்றும் எஃகு உருக்க பயன்படும் உலைகள் உருவாக்கப்பட்டிருந்தன. எனவே, எந்நிலையிலும் கொடுமணல் பண்பாட்டுக் கூறுகளை இரும்புக் காலத்திற்கு முன்பாக இட்டுச் செல்ல இயலாது என்பது இங்கு மனங்கொள்ளத்தக்கது. மேலும் இந்நூலாசிரியர் பெரும்பாலான குறியீடுகள் இரும்புகளுடன் கூடிய பெருங்கற்படைச் சின்னங்களில் கிடைத்தபோதிலும் கொடுமணலிலும், சாணூரிலும் இரும்புப் பொருட்கள் இல்லாத பெருங்கற்படைச் சின்னங்கள் இருப்பதாகவும் அவற்றில் குறியீடுகள் இருப்பதாகவும் குறிப்பிடுகிறார் (ப.31). இதன் மூலம் இரும்பு பயன்பாட்டிற்கு முந்திய நிலைக்கு எடுத்துச் செல்ல முனைகிறார். கொடுமணலில் இதுவரை அகழாய்வு செய்யப்பட்டு குறியீடுகளுடன் கிடைத்த அத்துணை பெருங்கற்படைச் சின்னங்களிலும் இரும்பு கிடைத்துள்ளது. இது இவர் வைக்கும் கருதுகோளுக்கு முரண்பாடாக உள்ளது.

இரும்புக்கால மக்கள் அரப்பா மக்களின் வழி வந்தவர்களே என்றும் கூறும் இந்நூலாசிரியர் (ப. 128) சுந்தரா அவர்கள் செப்புப் பண்பாட்டில் காணப்படும் குறியீடுகள் பெருங்கற்கால பண்பாட்டிற்குச் சென்றிருக்க கூடும் என்பதை மறுத்து குஜராத் மாநிலத்தில் சிந்துவெளி பண்பாட்டுக் காலத்தைச் சார்ந்த ரங்பூர் என்ற இடத்தில் காணப்படும் குறியீட்டுப் பாரம்பரியம், செல்வாக்கு தமிழகப் பானை செய்பவர் மீது ஏற்பட்டிருக்கலாம் என்ற புதிய கருத்தை முன் வைக்கிறார் (ப. 28). ஆனால் இரு பண்பாட்டு கூறுகளுக்கு இடையே எவ்வித நேரடித் தொடர்பும் இல்லையெனவும், இவ்விரு பண்பாடும் காலத்தாலும், இடத்தாலும் மிகவும் தள்ளி உள்ளன என்று தாம் முன்பு கொண்ட கருத்துக்கு முரண்பட்டு நிற்கிறார்.

அடுத்து, குறியீடுகளின் தன்மை பற்றி கூறும்பொழுது முற்றிலும் ஒரு மாறுபட்ட நிலையைக் கொள்கிறார். அதாவது, எழுதப்பட வேண்டிய குறியீடுகளின் தன்மைக்கு அல்லது அளவிற்கு ஏற்ப பானை ஓடுகள் தேர்வு செய்யப்பட்டு பின் அவற்றின் விளிம்புகள் தேய்க்கப்பட்டு ஒழுங்குப்படுத்தப்படுவதாகவும், அகழாய்வுகளில் கிடைக்கும் உடைந்த பானை ஓடுகளில் காணப்படும் குறியீடுகள் எதிர்பாராதவிதமாக

முழுப்பானையிலிருந்து உடைந்த பகுதிகள் அல்ல என்றும், இவை அம்மக்களால் மிகவும் கவனத்துடன் தேர்வு செய்யப்பட்டு எழுதப்பட்டவை என்றும், இக்குறியீடுகள் கொண்ட பானை ஓடுகள் முத்திரைகள் போன்று பொருளாதார பண்டமாற்றத்திற்கு(economic transactions) பயன்பட்டுள்ளன என்று சொல்கிறார். இதுவரை கிடைத்துள்ள தரவுகளுக்கு மாறான கருத்து இது. முழுப் பானையில் குறியீடுகள் இருப்பதும் குறியீடுகளைக் கொண்ட உடைந்த பானை ஓடுகளின் விளிம்புகள் தேய்க்கப்படாது அவைகள் இயற்கையாகவே உடைந்தவையாக இருப்பதும் இவரின் கருத்துக்கு மாறாக உள்ளன.

சிந்து எழுத்துக்களுடன் கூடிய கூட்டுக் குறியீடுகள் மட்டும் வலமிருந்து இடமாகவே எழுதப் பட்டுள்ளன என்றும் மற்றக் குறியீடுகளை வலமிருந்து இடமாகவோ அல்லது இடமிருந்து வலமாகவோ இடத்திற்கு தக்கவாறு அறிவுபூர்வமான பொருள் பெறும் வகையிலும் படிக்கலாம் என்றும் இந்நூலாசிரியர் கூறுகிறார் (ப. 129). ஒரே கால கட்டத்தைச் சார்ந்த ஒரே ஊரில் வாழ்ந்த மக்கள் இரு வேறுவகையான எழுதும் முறையை பயன்படுத்தினர் என எடுத்துக் கொள்வதா? அல்லது கிடைக்கும் குறியீடுகளில் காணப்படும் ஒன்றின்மேல் (overlapping) கீறப்பட்ட முறையை வைத்து அதன் எழுதும் முறையை தீர்மானிப்பதா? என்பதைக் கூறவில்லை. பொதுவாக கொடுமணலில் கிடைத்த குறியீடுகள் எழுதப்பட்ட முறையைப் பார்க்கும்பொழுதும், அவை தமிழ் பிராமி எழுத்துக்களுடன் வரும் இடத்தை வைத்தும் இவை இடமிருந்து வலமாகவே எழுதப்பட்டிருக்கவேண்டும். கூட்டுக் குறியீடுகளை வலமிருந்து இடமாகப் படித்த இவர் ஆனைக் கோட்டை முத்திரையில் கிடைத்த குறியீட்டை அதற்கு மாறாக படித்து பொருள் கொள்கிறார். எனவே ஒரு குறியீட்டை எந்த முறையில் படிக்க வேண்டும் என்பதற்கான வழி முறையைக் குறிப்பிடவில்லை.

நூலாசிரியரால் கண்டுபிடிக்கப்பட்ட 513 முக்கிய குறியீடுகளில் 84 சிந்து எழுத்துக்கள் போன்று இருப்பதாகவும் அவற்றில் 32 செம்புக் காலத்தைச் சார்ந்ததாகவும் 52 தென்னிந்தியாவில் கிடைப்பதாகவும் கூறும் இவர் இத்தகைய சிந்து எழுத்து பொறிக்கப்பட்ட பானை ஓடுகளை முதன் முதலில் தாம் கண்டிபிடித்ததாகக் கூறுகிறார் (ப. 125). இதன் மூலம் அரப்பா பண்பாடு மகாராஷ்டிரத்தில் உள்ள தைமாபாத் (Daimabad) என்ற இடத்திலிருந்து தெற்கே காவிரிப் பள்ளதாக்கிற்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக கூறுகிறார். இந்நூலாசிரியர் கூறும் கருத்தை ஏற்றுக் கொண்டால் தமிழகத்தில் சிந்து எழுத்துக்களுடன் கூடிய பானைப் பொறிப்புகள் உள்ளன என்பதுடன் அவற்றை முழுமையாகப் படித்த பெருமையும் இந்நூலாசிரியரையே சேரும்.

மேற்கண்ட குறியீடுகளைப் பின்வருமாறு வகைப்படுத்துகிறார். சிந்து எழுத்துக்களைக் கொண்டவை, சிந்து எழுத்துக்களுடன் கூடிய குறியீடுகள், பிராமி வரிவடிவத்துடன் கூடிய குறியீடுகள், சிந்து எழுத்து, பிராமி வரிவடிவம் இணைந்த குறியீடுகள், வெறும் குறியீடுகள் (ப.127) என்று வகைப்படுத்தி இவை சித்திரக் குறியீடுகளாகவும் (pictograph) கருத்துக் குறியீடுகளாகவும் (ideograph), சொற்குறியீடுகளாகவும் (logograph) அல்லது இவை மூன்றும் இணைந்த நிலையாகவும் கொள்ளலாம் (ப.129) என்று கூறுமிடத்தில் இவர் எதைச் சொல்ல வருகிறார் என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஒரே காலகட்டத்தில் கிடைக்கும் குறியீடுகளை இவர் எப்படி எடுத்துக் கொண்டார் என்பதையும் அறிய முடியவில்லை.

குறியீடுகளைப் பற்றி அறிந்துகொள்வதற்கு அக்குறியீடுகளைப் பயன்படுத்திய மக்களின் பழக்க வழக்கம், சுற்றுப்புறச் சூழல் அனைத்தையும் அறிந்திருக்க வேண்டும் எனக் கூறும் இந்நூலாசிரியர் குறியீடுகளுக்கு பொருள் கொடுப்பதிலும் பல்வேறு நிலைப்பாடுகளை எடுத்துள்ளார். எடுத்துக்காட்டாக கொடுமணல் பெருங்கற்படைச் சின்னத்தில் கிடைத்த விசாகி என்ற தமிழ்–பிராமி பெயர் பொறிக்கப்பட்ட பானை ஓடு அச்சவக்குழியின் சொந்தக்காரரைக் குறிப்பதாகவும், எனவே அக்குழியில் கிடைக்கும் குறியீடும் அப்பொருளையே அதாவது விசாகி என்ற பெயரையே குறிப்பதாக எடுத்துக் கொள்ளலாம் என்று கூறுகிறார் (ப.32–33). ஆனால் அதேமாதிரியான அதே வாழ்விடத்தில் கிடைத்த குறியீட்டிற்கு நான்கு எனப் பொருள் கொள்வதும் (ப.138), மற்ற பெருங்கற்படை சின்னத்தில் கிடைத்த குறியீடுகளுக்கு ஆட்பெயரை வழங்காது மலை, இருமலை, இருநீர்மலை எனப் பொருள் கொள்வதும் (ப.140) ஏன் என விளக்கவில்லை.

நான்மீன், எண்மீன் என்று படிக்குமிடத்தில் முதல் குறியீட்டுத் தொடரை இடமிருந்து வலமாகவும், இரண்டாவது குறியீட்டுத் தொடரை அதற்கு நேர்மாறாகவும் படிக்கிறார் (ப. 155). நாண்மீன் என்று படித்த அதே குறியீட்டை வேறொரு இடத்தில் மீன் ஆள், பறக்கும் நட்சத்திரம் எனப் பொருள் கொள்கிறார் (ப.31). அதேபோல் பல்வேறு இடத்தில் வேல் என்று பொருள் கொண்ட குறியீடு (ப.132) இலங்கையில் ஆனைக்கோட்டை என்ற இடத்தில் கிடைத்த முத்திரையின் மேல்வரியில் அடுத்தடுத்து வருகிறது. இதேபோல் அடுத்தடுத்து வந்த குறியீட்டை மேற்குறிப்பிட்ட இடத்தில் வேல், வேல் என்று எடுத்துக் கொள்கிறார் (ப. 132). ஆனால் ஆனைக்கோட்டையில் 'ய' என்ற வரிவடிவமாக எடுத்துக் கொண்டு இரு 'ய' வருவதால் இதை 'யா' எனக் கொண்டு அம்முத்திரையில் உள்ள குறியீடு, தமிழ் பிராமி வரிவடிவம் ஆகிய இரண்டையும் குறியீடாகவே எடுத்துக்கொண்டு யாம் கோவேத அதாவது நான் மிகப்பெரிய சக்கரவர்த்தி எனப் பொருள் கொள்கிறார். இத்தகைய மாறுபாடான கருத்துக்களை புரிந்து கொள்வது கடினமாக உள்ளது.

எப்படியிருப்பினும், சிந்து சமவெளி நாகரிகம், செப்புக்கால பண்பாடு, இரும்புக்கால பண்பாடு, ஓவியம், முத்திரைக்காசு என்ற பல்வேறுபட்ட பண்பாட்டுத் தளங்களில் கிடைத்த குறியீடுகளை ஒன்று திரட்டி அவற்றிற்குப் புள்ளியியல் அமைப்பிலான அட்டவணையை அளித்து எதிர்கால சந்ததியினர் அத்தரவுகளின் அடிப்படையில் இவரது கருதுகோள்களை மறுக்கவும், ஏற்றுக்கொள்ளவும், மேலும் நெறிப்படுத்தவும் வழிவகை செய்துள்ளார் என்ற நிலையில் அரும்பாடுபட்டு திரட்டிய இக் குறியீடுகள் தொடர்பான தரவுகளுக்காக இந்நூலாசிரியரைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

***கா. ராஜன், தஞ்சாவூர்***

## 60:7

*ச. கிருஷ்ணமூர்த்தி, துர்க்கை வழிபாடும் சிற்பங்களும் மணிவாசகர் பதிப்பகம், சென்னை 2001, பக். 206*

இந் நூல் தமிழகத்திலுள்ள பல கோயில்களிலும், அருங்காட்சியகத்திலும் உள்ள துர்க்கைச் சிற்பங்களைப் பற்றி எழுதப்பட்டுள்ளது. துர்க்கை அம்மனின் பல வடிவங்களைப் பற்றியும் அவ்வடிவங்களின் பெயர் பற்றியும், ஆய்வு செய்துள்ளார் (ப.43–59).

பல்லவர் – சோழர் கால சிற்பங்களைப்பற்றி ஆங்காங்கே எழுதியுள்ளார். சிற்ப அமைதி, கல்வெட்டுக்கள், இலக்கியங்கள் வாயிலாக சிற்பங்களின் காலத்தை அறிமுகப்படுத்தியுள்ளார். இவைகள் காலவரிசைப்படி அமைக்கப்பட்டிருந்தால் ஆய்வாளர்களுக்கு மேலும் பயனுள்ளதாக இருந்திருக்கும் (ப. 109–112) என்று கருதலாம். தாராசுரம் ஐராவதேசுவரர் கோயில் இராச கம்பீரன் மண்டபத்தில் உள்ள பெண்தெய்வ வடிவம் அன்னபூரணி அல்ல என்றும் ஆகரி துர்க்கை வடிவம்தான் என்று புதிய கோணத்தில் பார்க்கின்றார் (ப.51). வடக்கு தேவகோட்டங்களில் காணப்படுகிற துர்க்கை கதிராமங்கலத்தில் மட்டும் கிழக்கு நோக்கி பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது என்கிற புதிய செய்தியை முன்வைக்கிறார் (ப.120). சிற்பங்களில் காளி அமர்ந்தபடி இருப்பாள் என்றும் துர்க்கை நின்ற வடிவினள் என்றும் கூறுகிறார் (ப.24). இக்கூற்று துர்க்கைக்கு ஏற்புடையதே. இரண்டு வடிவங்களுமே அசுரர்களை அழிக்கும் போர்த்தெய்வங்களாகவே கொள்ளப்படுவன. இதனால் வீற்றிருந்த நிலையில் படிமங்கள் அரிதாகவே கிடைத்திருக்கின்றன என்றும் பள்ளிகொண்ட துர்க்கை திருநெல்வேலி மாவட்டம் கங்கைகொண்டான் என்ற ஊருக்கு அருகில் பராஞ்சேரி என்ற தலத்தில் உள்ளதையும் குறிப்பிட்டுள்ளார் (ப.155). இதைப் பற்றிய செய்தியை மேலும் விரிவாக விளக்கியிருக்கலாம்.

நூலில் போதிய அளவு அடிக்குறிப்புகள் இல்லை. குறிப்பாக வடமொழி இலக்கியச் சான்றுகளைக் குறித்திருக்கலாம்(ப. 27,36,41,49,119).

ஆய்வு ஏடுகளில் ஆசிரியர் பெயர்களைக் குறிப்பிடுகையில் அவர்கள் பெற்ற பட்டங்களை குறிக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. சில இடங்களில் பக்தி கண்ணோட்டத்துடன் ஆன்மீகத்தை வளர்க்கும் பாங்கில் அணுகப்பட்ட முறையைத் தவிர்த்திருக்கலாம் (ப. 117).

மேற்கண்ட சில குறைபாடுகளைத் தவிர்த்து பார்க்கையில் வளரும் ஆய்வாளர்களுக்கு பயன்படும் வகையில் எழுதப்பட்ட நல்லதோர் நூல்.

**த. சந்திரகுமார், தஞ்சாவூர்**

## 60:8

ஆ. இரா. வேங்கடசலபதி, *அந்த காலத்தில் காப்பி இல்லை*, காலச்சுவடு பதிப்பகம், சென்னை, 2000, பக் 229, விலை. 100 ரூபாய்.

புத்தகத்தின் தலைப்பு, '*அந்தகாலத்தில் காப்பி இல்லை*', என்பது தொல்லியல் பார்வையாளர்களிடையே ஒரு வினாக் குறியை எழுப்பக்கூடும். ஆனால் இந்த நூல் காகித ஆவணங்களை எப்படி கையாளுவது, அதிலுள்ள செய்திகளை எப்படி வரலாறாக மாற்றுவது என்பதைத் திறம்படக் காட்டியுள்ளது. பத்திரிகை இதழ் ஆவணங்களை வரலாற்று ஆசிரியர்கள் ஒரு ஒப்புக்காகவே இதுவரை பயன்படுத்திவந்தனர். உப்பும் உறைப்புமில்லாத சில செய்திகளைச் சுட்டிக் காட்டவே பத்திரிகை இதழ் ஆவணங்களை அவர்கள் மேற்கோள் காட்டி வந்தனர். ஆனால் அந்த பத்திரிகை இதழ் ஆவணங்களிலும் இவ்வளவு வரலாற்றுச் செய்திகளா என்று வியக்கும் வண்ணம் ஆவணங்களைக் கையாண்டுள்ளார் இந்நூல் ஆசிரியர்.

வரலாற்றிற்கு மக்கள் பலவகை ஆவணங்களை விட்டுச் சென்றுள்ளனர். ஆனால் அந்த ஆவணங்களைத் திரட்டித் தொகுப்பது என்பது எவ்வளவு கடினமான பணி என்பதை கல்வெட்டாய் வாளர்களும் நாணயவியல் ஆய்வாளர்களும் நன்கு அறிவார்கள். அப்படிப்பட்ட ஆவணத் திரட்டலின் போது ஏற்பட்ட தன்னுடைய சொந்த அனுபவங்களையே பதின்மூன்று கட்டுரைகளாகத் தந்துள்ளார் ஆசிரியர். அவைகளில் இரண்டு கல்வெட்டியலோடு தொடர்புடையது.

மூலபாடங்களில் கூடுமானவரை எந்த மாற்றங்களும் செய்யப்படவில்லை. சந்தி, ஒருமை, பன்மை, நிறுத்தற்குறியீடுகள் முதலியனவற்றில் புதுமைப் பித்தனின், பயன்பாடுகள் பேணப் பட்டுள்ளன. கல்வெட்டுக்கள் பொதுவாக தானம் பற்றிய செய்திகளைத்தான் கொண்டுள்ளன என்றாலும் ஒவ்வொரு கல்வெட்டும் ஒரு பயன்பாட்டை வெளியிட்டு இருக்கத்தான் செய்யும். அப் பயன்பாட்டை நம்முடைய ஆய்வுகள் வெளிக்கொணர்ந்திருக்கின்றனவா என்று கேட்கும் நிலை உள்ளது என்கிறார்.

மறுபதிப்பின் முக்கியத்துவம் பேசப்படுகிறது. உதாரணமாக பேராசிரியர் சுப்பாராயலு எழுதிய The Political Geography of the Chola country, என்ற நூல் தற்சமயம் ஆய்வாளர்களுக்கு கிடைப்பதேயில்லை என்பதைச் சுட்டிக்காட்டி (பக்கம் 185–188) பழைய புத்தகத்தின் வரியை மாற்றாமல் அச்சடிப்பதோடு விலையையும் அதிகம் உயர்த்தாமல் பார்த்துக்கொள்வதோடு மறு பதிப்பு போடும்போது, நூல் முதலில் வெளியான ஆண்டுக்கும், மறுபதிப்பு ஆண்டுக்கும் இடையில் அந்த நூலால் வெளியான கட்டுரைகளைத் தொகுத்து பட்டியலும் தரவேண்டும் என்று கூறுகிறார். மைசூர் கல்வெட்டுத் துறையினர் 1907ல் ஓரிடத்தில் கல்வெட்டை படி எடுக்கின்றனர். ஆனால் அது 2000த்தில் தான் தொகுதியாக வெளிவருகிறது. ஆனால் அதற்குள் அவர்கள் படி எடுத்த பாடத்தை ஒட்டியும், வெட்டியும் பலபாடங்களை பல அறிஞர்கள் எழுதிவிடுகின்றனர். பூலாங்குறிச்சிக் கல்வெட்டுப் பாடம் பல வெளியாகி உள்ளதை கல்வெட்டாய்வாளர்கள் அறிவார்கள். ஆனால் 2000த்தில் வெளியாகும் கல்வெட்டு, 1907–ல் எப்படி பாடமாக எடுக்கப்பட்டதோ அதே பாடத்தில் தான் அச்சில் வருகிறது. இடையில் வெளியான பல பாடங்களை அடிக்குறிப்பலோ அல்லது முன்னுரையிலோ அரசு துறையினர் சொல்லாமல் விட்டு விடுகின்றனர். இதனால் பிற ஆய்வாளர்களின் கருத்துக்களைப் புதிதாகப் படிப்பவர்கள் அறிந்து கொள்ள முடியாத நிலையை ஏற்படுத்துகிறது. இவைகளையெல்லாம் மாற்ற வேண்டிய அவசியத்தைத்தான் இந்த நூல் நமக்குச் சிந்தனையாகத் தருகிறது. இதுபோன்ற பல சிந்தனைகளுக்கு இந்த நூல் வழிவகுக்கிறது.

ஆசிரியர் இந்த நூலில் சொல்லும் பல உத்திகள் மூலபாடம் எடுப்பவர்களுக்கும் அதை வெளியிடுபவர்களுக்கும் அதைப் படிப்பவர்களுக்கும் மறுபதிப்புச் செய்பவர்களுக்கும் பலவகையில் உதவி புரிபவைகளாக உள்ளன. இருப்பினும் இந்நூல் எளிய நடையில் இல்லாமல் சற்று கடினமான உரைநடையைக் கொண்டுள்ளது.

**பு. சந்திரசேகரன், இராஜபாளையம்**

## 60:9

Rajesh Kochchar, '*The Vedic People. Their History and Geography*', Sangam Books, London, 2000, pp.255.

ஆசிரியர் வானியற்பியல் வல்லுநர், வாணியற்பியல், புவியியல், தாவரவியல், மொழியியல், இலக்கியம், தொல்லியல் சான்றுகளுடன் இந்திய வரலாற்றை அணுகும் முயற்சியாக இந்நூல் அமைந்துள்ளது. இது இந்திய வரலாற்று உணர்வுகளைத் தூண்டக் கூடியதாக ஆரிய – திராவிட மாயைகள் பற்றிய மாறுபட்டக் கருத்துகளை விருப்பு வெறுப்பின்றி அறிவியல் துணை கொண்டு களைய முற்பட்டுள்ளது.

சோம பானம் வழங்கும் தாவரம் ஆப்கானிஸ்தானில் காணப்படுகிறது; இந்தியாவில் காணப்படவில்லை. சரயூ, சரசுவதி போன்ற ஆறுகளின் பெயர்களும் ஆப்கானிஸ்தானில்தான் முதலில் காணப்பட்டன. வேத மக்கள் இந்தியா வந்த போது தங்கள் ஆப்கானிஸ்தான் வாழ்வு நினைவுகளையும், ஊர், ஆறு பெயர்களையும் இந்தியாவுக்குக் கொண்டு வந்தனர் என்ற கருத்துப்படி வேதகாலமக்களின் தோற்றம் ஆப்கானிஸ்தானில் இருந்துதான் என்கிறார் ஆசிரியர்.

ஆரியர் என்பதிலிருந்துதான் ஈரான் பெயரே வந்தது. கிழக்கு துருக்கியில் கிடைக்கும் தொல்லியல் சான்றுகளில் வேதக் கடவுளர் பெயர்கள் காணப்படுகின்றன. மகாபாரதப் போரின் போது ஏற்பட்ட முழு சூரியகிரகணம் கி.மு. 4.10.955 அல்லது கி.மு. 4.7.857ல் ஏற்பட்டிருக்கலாம். கிருஷ்ணர் காலம் கி.மு. 900 இராமர் காலம் கி.மு. 1250 போன்ற கருத்துக்கள் வைக்கப்பட்டுள்ளன. அறிவியல் சான்றுகளுடன் வரலாற்றைக் கணிக்க முயன்ற அரிய முயற்சி இந்நூல்.

**சு. கணேசன், மதுரை.**

## 60:10

R. Krishnamurthy. *Non-Roman Ancient Foreign Coins from Karur in India,* Garnet Publishers, Chennai, 2000, pp.145

தினமலர் ஆசிரியர் திரு. கிருஷ்ணமூர்த்தி தமிழ்நாட்டு வரலாற்றை நாணயச்சான்றுகள் மூலம் இந்நூலில் நிறுவியுள்ளார். சங்ககால மன்னர்கள் குறித்த கருத்துக்கள் இலக்கியக் கற்பனையல்ல என்ற கருத்து பெருவழுதி, மாக்கோதை, இரும்பொறை நாணயங்கள் மூலம் ஆசிரியரால் வலியுறுத்தப்பட்டுள்ளது. சங்ககால நாணயங்கள் பற்றியும் ரோமர் நாணயங்கள் பற்றியும் ஆங்கில நூல்கள் எழுதியுள்ள இவ்வாசிரியரின் தற்போதைய வெளியீடு ரோமரல்லாத நாணயங்களைப் பற்றியதாகும். தமிழரின் பண்டைய வணிகத்தைப்பற்றிய இலக்கியக் குறிப்புகளுக்குச் சான்றாக இந்நூலில் காட்டப்பட்டுள்ள நாணயங்கள் துணை நிற்கின்றன.

'கிரேக்கர்கள் தமிழகத்துடன் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதற்கு இலக்கியச் சான்றுகளைத் தவிர வேறு சான்றுகள் இல்லை' என்று 1987-ல் ஆசிரியர் தன் 'பாண்டியர் பெருவழுதி நாணயங்கள்' என்ற நூலில் (பக.81) கூறியுள்ளார். இந்த ஆங்கில நூலிலோ கிரேக்க வணிகச் சான்றுகளை நாணயங்கள் மூலம் நிறுவுகிறார். அவருக்கு கிடைத்த நாணயங்கள் அவருடைய கருத்தின் மாற்றத்திற்குக் காரணமாக அமைந்துள்ளன எனலாம்.

விருப்பு வெறுப்பின்றி இந்நூல் எழுதப்பட்டுள்ளது. மாறுபட்ட கருத்துக்களும் வைக்கப்படுகின்றன. காலத்தால் முற்பட்ட நாணயங்கள்

பின்வந்த வணிகர் கொண்டு வந்தவை என்று பிற நூலாசிரியர்கள் கூறுவதையும் குறிப்பிடுகிறார். இந்நூலில் குறிப்பிடப்படும் நாணயச் சான்றுகள் பழந்தமிழ் வணிகத்தின் பரப்பையும் விரிவையும் கால எல்லையையும் கோடிட்டுக் காட்டுகின்றன. சங்க இலக்கியம் 'யவனர்' என்று மட்டும் தான் குறிப்பிடுகின்றது. இந்நூலிலோ தமிழர் வணிகம் கிரேக்கம், இத்தாலி, இஸ்ரேல், அரேபியா, ஆப்பிரிக்க நாடுகள் என்றெல்லாம் பரவியிருந்த பெருமையை மறுக்க முடியாத நாணயச் சான்றுகளுடன் நிறுவப்பட்டுள்ளது. தமிழக வரலாற்றின் மறைந்த பக்கங்களை நம்முன் நிறுத்தும் இந்நூல் ஒரு நல்ல படைப்பு. ஆசிரியரின் தளரா முயற்சியையும் உண்மையான வரலாற்றை வெளிக்கொணர வேண்டும் என்ற வேட்கையையும் இந்நூலில் காணமுடிகிறது.

**சு. கணேசன், மதுரை**

## 60:11

சி.க. சிற்றம்பலம், *பண்டைய ஈழத்தில் தமிழர் – ஒரு பன்முகப் பார்வை* (பேரா. சு. வித்யானந்தன் நினைவுப் பேருரை) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், 2000, ப.73.

இலங்கையில் இன்று நிலவி வரும் அசாதாரண சூழ்நிலை அந்நாட்டு தொல்லியல் மற்றும் வரலாற்று சான்றுகள் அறிவியல் கண்ணோட்டத்துடன் விருப்பு வெறுப்பின்றி ஆய்வுக்கு உட்படுத்தப் படாததே காரணம் என்பதை வரலாற்று ஆசிரியர்கள் ஏற்றுக் கொண்ட நிலையில் பண்டைய ஈழத்தில் தமிழர்களின் நிலைப்பாட்டினை விளக்கும் வகையில் இந்நூலாசிரியர் ஆற்றிய பேருரை தற்போது நூல்வடிவம் பெற்று வந்துள்ளது. இந்நூலில் ஆசிரியர் ஈழ வரலாற்றை வரலாற்றுக்கு முற்பட்ட காலம், வரலாற்றுதைய காலம், வரலாற்றுக் காலம் என்ற மூன்று பிரிவுகளாகப் பிரித்து அவற்றில் குறிப்பாக வரலாற்றுதைய காலத்தில் நடைபெற்ற பண்பாட்டுப் பரிமாற்றங்களைப் பற்றி பின்னர் வந்த வரலாற்று ஆசிரியர்களால் எங்ஙனம் எடுத்தாளப்பட்டது என்பதையும் அதனால் இலங்கை வரலாற்றில் ஏற்பட்ட பெரும் தாக்கத்தையும், பக்க விளைவுகளையும் தொல்லியல், நாணயம், இலக்கியம், மொழியியல், சமூகவியல், மானிடவியல், மரபணுவியல் சான்றுகளைக் கொண்டு நிறுவியுள்ளார்.

வரலாற்றுதைய காலத்தில் பெருங்கற்படை பண்பாட்டைச் சார்ந்த மக்கள் இலங்கையில் குடியேறி அதன் வரலாற்று நிலவியலில் பெரும் மாற்றத்தினை ஏற்படுத்தினர் என்றும், இவர்களே ஈழத்தில் முழுதும் பரவியிருந்தனர் என்றும், இவர்கள் தென்னிந்தியாவிலிருந்து வந்து குடியேறியவர்கள் என்றும், பாளி நூல்களான மகாவம்சம் தீபவம்சம் குறிப்பிடுவது போன்று இந்தியாவின் வடமேற்கு வடகிழக்கு பகுதியிலிருந்து வந்து குடியேறியவர்கள் அல்ல என்றும், விஜயன் கதை

ஓர் கட்டுக்கதை என்றும், தற்போது உள்ள இலங்கை மக்களுக்கும், இந்தியாவின் வடகிழக்கு பகுதிகளில் உள்ள மக்களுக்கும் மரபணுக்களின் அடிப்படையில் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் கூறி பெருங்கற்கால மக்களே இலங்கையில் குடியேறிய ஆதி திராவிடக் குடிகள் என்று தொல்லியல் சான்றுகள் கொண்டு நிறுவியுள்ளார். இரத்த உறவில் ஒரே தன்மையுள்ளதாக காணப்படும் தமிழர். சிங்கள சமூகம் பெருங்கற்படை பண்பாட்டு மக்களே என்பதையே காட்டுவதாக சுட்டிக்காட்டி இவர்களே பின்னர் பௌத்த மதத்திற்கு மாறினர் என்றும் அம்மதத்தால் ஏற்பட்ட தாக்கத்தின் காரணமாக மொழியாலும், மதத்தாலும், அரசு சூழல் காரணமாகவும் வெவ்வேறு துருவங்களுக்கு தள்ளப்பட்டுவிட்டனர் என்பதை எடுத்துக்கூறியிருக்கும் விதம் இலங்கை வரலாற்றை அறிந்துகொள்ள பேருதவியாக இருக்கும்.

சிங்கள மொழி பிராகிருத மொழியின் வளர்ச்சியன்று. ஏற்கனவே ஈழத்தில் நிலவி வந்த *எலு* என்ற மொழியே இதன் மூலமொழி என்றும், இது தமிழ் கிளை மொழிகளில் ஒன்றாகும் என்று கூறி வடமொழிக்கும் சிங்கள மொழிக்கும் இடையே வாக்கிய அமைப்பில் இருக்கும் வேறுபாட்டை எடுத்துக்கூறி ஏழ, ஈழ, எல ஆகியவற்றிற்கு இடையே காணப்படும் ஒற்றுமையை விளக்கியுள்ளார். எல என்ற சொல் எங்ஙனம் கெல, கல ஆக உருமாற்றம் பெற்று இத்துடன் திரு எனப் பொருள்படும் சிறீ என்ற சமஸ்கிருத வடிவத்தின் பிராகிருத வடிவமாகிய சீ யை இணைக்க இது சீகள என வடிவமாற்றம் பெற்றதை மொழியியல் அடிப்படையில் ஆய்ந்துள்ளார். இலங்கை பிராமிக் கல்வெட்டுக்களிலும், நாணயங்களிலும் காணப்படும் தவறான வாசிப்புக்கள் மறு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு அவற்றில் காணப்படும் திராவிடச் சொற்களான பருமக, வேள், ஆய், பரத, பண்டு, உதிய, சுள போன்றவற்றின் வரலாற்றுப் பின்னணியை விளக்கியுள்ள விதம் பாராட்டத்தக்கது.

இங்ஙனம் இந்நூலாசிரியர் பன்முகத் தரவுகளை ஒருங்கிணைத்து வரலாற்றுதைய காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட பண்பாட்டுப் பரிமாற்றங்களை எடுத்துக்கூறியுள்ள விதம் சிறப்பிற்கு உரியது. அந்த வகையில் அளிக்கப்பட்ட தரவுகள் குறைவாக இருப்பினும் அவை தேர்ந்தெடுக்கப்பட்ட தரவுகளைக் கொண்டு இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளதால் இலங்கை வரலாற்றின் பரிணாம வளர்ச்சியை புரிந்துகொள்வதற்கு இந்நூல் பெரிதும் துணை புரியும் எனலாம்.

**கா. ராஜன், தஞ்சாவூர்**

# 61. தமிழகத் தொல்லியல்கழக கருத்தரங்கு - அறிக்கை

தமிழகத்தொல்லியல் கழகத்தின் பத்தாம் ஆண்டு நிறைவுவிழா மற்றும் கருத்தரங்கம் 2000 ஆகஸ்ட் மாதம் 19, 20 ஆகிய இரு நாட்களில் தமிழ்ப் பல்கலைக்கழக கல்வெட்டியல் துறையின் சார்பாக தஞ்சாவூரில் நடைபெற்றது. இக்கருத்தரங்கின் உள்ளூர்ச் செயலராக கழகச் செயலர் க. ராஜன் செயல்பட்டார். 19.8.2000 அன்று காலை 10.30 மணிக்கு தமிழ்ப் பல்கலைக்கத்தின் பேரவைக்கூடத்தில் கழகத்தின் பத்தாவது ஆண்டு நிறைவுவிழா மற்றும் கருத்தரங்கத் தொடக்கவிழா நடைபெற்றது. தொடக்கவிழாவினை கழகத்தலைவர் முனைவர் கொடுமுடி ச. சண்முகம் தலைமையேற்று நடத்திக்கொடுத்தார். வரவேற்புரையை கழகச் செயலர் நல்க சிறப்புரையினை முனைவர் இராம.சுந்தரம் வழங்கினார். இச்சிறப்புரையில் வரலாற்றுக்கும் மொழியியலுக்கும் இடையே காணப்படும் ஒற்றுமையை கோடிட்டுக் காட்டி இவ்விருதுறையும் ஒருங்கிணைந்து பணியாற்றும் பொழுது வெளிப்படும் நன்மையினை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கினார். டாக்டர். மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையத்தின் தலைவர் முனைவர். இரா. கலைக்கோவன் ஆவணம் இதழை (11) வெளியிட அதனை திருமுடிஆதீனத்தின் தலைவர் திருமுடி ந.சேது அசோக்குமார் பெற்றுக்கொண்டார். வாழ்த்துரை நல்கிய முனைவர் இரா. கலைக்கோவன் கடந்த 10 ஆண்டுகளாக ஆவணம் தமிழக வரலாற்றுக்கு அளித்துள்ள பங்களிப்பைப் பாராட்டினார். கழகத்தின் இணைச்செயலர் திரு.சு. இராசவேலு அவர்கள் நன்றியுரையாற்றினார்.

இவ்வாண்டின் திரு. தி. நா. சுப்பிரமணியன் அறக்கட்டளைச் சொற்பொழிவினை யாற்றிய தமிழ்நாடு தொல்லியல் ஆய்வுத்துறையின் முன்னாள் இயக்குநர் திரு. நடன காசிநாதன் வட்டெழுத்தின் தோற்றம், வளர்ச்சி பற்றி விளக்கினார். இக்கருத்தரங்கத்தில் 6 அமர்வுகளில் 31 கட்டுரைகள் வழங்கப்பட்டன.

**அமர்வு: 1**

தலைவர் : முனைவர் வெ. வேதாசலம். நாள் 19.8.2000 நேரம் 11.45-13.30

1. இரா.கு. ஆல்துரை - *திருமறைக்காடு கல்வெட்டு.*

திருமறைக்காடு வேதாரண்யேச்வரர் கோயில் கல்வெட்டில் (இ.க. 1917 : 541) காணப்படும் அடிமைவிற்பனை, கல்வெட்டின் மொழிநடை மற்றும் திருமறைக்காடு வேதாரண்யம் என பெயர்மாற்றம் பெற்றதின் பொருத்தமின்மையை விளக்குகிறது.

*2. ச. இராவி – *விளாங்குறிச்சி நீர்ப்பாசன கல்வெட்டு.*

3. முத்து. எத்திராசன் – *மதுரை மருதனிள நாகனாரும் நடுகல்லும்* போரில் வீரமரணம் அடைந்த வீரர்களின் நினைவாக எழுப்பப்பட்ட நடுகற்கள் பற்றி மதுரை மருதனிளநாகனார் கூறிய செய்திகளைச் சுட்டிக்காட்டி இத்தகைய நடுகற்கள் அண்மைக்காலங்களில் பாண்டி நாட்டில் கிடைத்துள்ளமையை விளக்கியுள்ளது.

*4. கோ. கிருட்டிணமூர்த்தி– *மேல்பட்டாம்பாக்கம் கல்வெட்டு.*

*5. கொடுமுடி ச. சண்முகம் – தொன்றுதொட்டுத் தமிழ். சிந்துசமவெளி எழுத்துக்களுடன் ஒத்த வடிவினைக்கொண்ட வரிவடிவங்கள் மோதிரம், கல்வெட்டு, ஓவியம், ஈமப்பேழைகள் போன்றவற்றில் கிடைப்பதுகொண்டும். தொல்காப்பியத்தில் காணப்படும் செய்திகளைக் கொண்டும் வரிவடிவ சீர்திருத்தத்தின் முக்கியத்துவத்தை விளக்குகிறது.

6. த.த. தவசிமுத்து – ஆறுமுகநேரிக் கல்வெட்டு.
ஆறுமுகநேரியில் கிடைத்த நாயக்கர் காலத்திய கல்வெட்டு கொண்டு அசுபநாட்டு கணக்குப்பிள்ளைக்கு தானமாக விடப்பட்ட நிலக்கொடையை அறிந்து கொள்ள முடிகிறது.

**அமர்வு: 2**

தலைவர் : முனைவர் து. தயாளன் நாள் 19.8.2000 நேரம் 14.30–16.00

*1. ம.காந்தி– *அப்புக்கல் புதையல் வாள்கள்.*

2. கி. குமார்– *திருப்பெரும்புதூர் வட்டத்தில் தொல்லியல் கண்டுபிடிப்புகள்.*

3. சாத்தூர் சேகரன்– *அகழ்வாய்வில் புதிய கண்டுபிடிப்புகளும் விரிந்த சிந்தனைகளும்.* கடந்த 40 ஆண்டுகளுக்குள் கள ஆய்விலும் அகழ்வாராய்ச்சியிலும் கண்டுபிடிக்கப்பட்ட சான்றுகளைக் கொண்டு தமிழர் பண்பாடு பிறநாடுகளில் பரவியுள்ளமையை எடுத்தியம்புகிறது.

4. தி. செல்வநாயகி– *பண்டைய உறையூரின் தொழிற்கூடங்களும் கைவினைப்பொருட்களும்.* சங்க காலத்தில் சோழரின் தலைநகராக விளங்கிய உறையூர் பன்னாட்டு வணிகத்திலும் கைவினைப் பொருட்களிலும் சிறப்புற்று விளங்கியதை அங்குக் கிடைத்த சான்றுகள் அடிப்படையில் விளக்குகிறது.

5. ப. சண்முகம் – *காஞ்சிபுரம் மாவட்டத்தில் தொல்லியல் கண்டிபிடிப்புகள்.* தொல்பழங்காலந் தொட்டு வரலாற்றுக் காலம் வரை காஞ்சிபுரம் மாவட்டத்தில் கிடைத்த தொல்லியல் சான்றுகள் அடிப்படையில் அப்பகுதியின் தொன்மை முக்கியத்துவத்தை இக்கட்டுரை எடுத்துக் கூறுகிறது.

6. டி. மனோன்மணி– *கொங்கு நாட்டில் பெண்கள்.* கொங்கு நாட்டில் கரைவழி நாட்டில் சோழமாதேவி என்ற ஊரில் கிடைத்த கல்வெட்டில் காணப்படும் செய்தியின் அடிப்படையில் இப்பகுதியில் இருந்த ஸ்ரீதனம் பற்றிய செய்திகளை இலக்கியச் சான்றுகளுடன் ஒப்பிட்டு விளக்குகிறது.

திரு. தி.ந. சுப்பரமணியன் அறக்கட்டளைச் சொற்பொழிவு
நாள் *19.8.2000* நேரம் *16.00–17.00*

தலைவர் : முனைவர் கோ. விஜயவேணுகோபால். சொற்பொழிவாளர் * திரு நடன காசிநாதன். தலைப்பு – *தமிழகத்தில் வட்டெழுத்து வளர்ச்சி.*

**அமர்வு: 3**

தலைவர் : முனைவர் ஏ. ஏகாம்பரநாதன் நாள் 20.8.2000 நேரம் 9.30 – 11.00

1. மி.ஜனா. இளங்கோவன் – *ஒண்ணுபுரம் கிராமத்தில் கிடைத்த கற்பலகை சிற்பங்கள்.* ஒண்ணாபுரம் கிராமத்தில் அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலயத்தில் அமைந்துள்ள பல்லவர் காலத்து துர்கை சிலையையும், இக்கிராமத்தின் கல்லறைத் தோட்டத்தில் கிடைத்த விஜயநகர கால நடுகல் பற்றியும் இக்கட்டுரை குறிப்பிடுகிறது.

*2. ஏ. ஏகாம்பரநாதன் – *தியாகதுர்க்கம் சமணச் சான்றுகள்.*

3. செ. கோவிந்தராஜ் –*சிந்துசமவெளி நாகரிகம் தமிழர்களுடையது ஓர் கட்டிடக்கலை ஆதாரம்.* குஜராத் மாநிலத்தில் கட்ச் பகுதியில் தோலா வீரா என்ற இடத்தில் அண்மையில் நடைபெற்ற அகழாய்வில் கிடைத்த கட்டிடப்பகுதியின் சான்றினை வைத்துக்கொண்டு இலக்கியச் சான்றுகளுடன் ஒப்பிட்டு சிந்துசமவெளி நாகரிகம் தமிழர் நாகரிகமே என்று கூறுகிறது

4. ப.தெ.பாலாஜி – *சாமரதாரிகள் சிற்பங்கள்.* காஞ்சிபுரம் மாவட்டம் திருப்பெரும்புதூர் வட்டம் மணிமங்கலம் என்ற இடத்தில் கிடைத்த பல்லவர் காலத்தைச் சார்ந்த நான்கு சாமரதாரிகள் சிற்பங்களைப் பற்றி ஆராய்கிறது.

5. செந்தீ. நடராசன் – *இராசராசனின் உள்ளெரி கொளுவிய உதகை.* இராசராசனின் மெய்க்கீர்த்திகளில் வரும் உதகை பற்றி இக்கட்டுரை ஆய்ந்து வட கேரள மலபார் பகுதியில் அது இருந்தது என்று சொல்கிறது.

6. தே. கோபாலன் – *உரப்பன விளை கல்வெட்டு. பெருவழிப்பாதை மற்றும் சந்தி வழிபாடு.* உரப்பன விளை கல்வெட்டில் கிடைக்கும் செய்திகளைக் கொண்டு கன்னியாகுமரி மாவட்டப் பகுதியில் அமைந்துள்ள பெருவழிப் பாதையைப் பற்றியும் இவ்வழியில் அமைந்துள்ள குறிப்பிடத்தக்க வரலாற்று இடங்களைப் பற்றியும் எடுத்துக்

கூறுகிறது.

7. சி. வீரராகவன் – *அ. கடம்பூர் முதலாம் பராந்தகன் கால கல்வெட்டு. ஆ. கொட்டப்பாக்கத்து வேலி ஊரிருக்கைப்பகுதி.* முதல் கட்டுரை கடம்பூரில் கிடைத்த முதலாம் பராந்தகனின் கல்வெட்டைப் பற்றியும் இரண்டாவது கட்டுரை கொட்டப்பாக்கத்து வேலி வாழ்விடத்தில் கிடைத்த தொல்லியல் சான்றுகள் அடிப்படையில் தொல்லியல் முக்கியத்துவத்தையும் வரலாற்றுப் பின்னணியையும் விளக்குகிறது.

**அமர்வு: 4**

தலைவர்: முனைவர் இல. தியாகராஜன் நாள் 20.8.2000 நேரம்: காலை 11.156–100

1. கரு. இராசேந்திரன் – *பொன்னமராவதி வரலாற்றில் நிசதராஜர்கள்.* புதுக்கோட்டை மாவட்டம் பொன் அமராவதியிலும் அதனைச் சுற்றியுள்ள ஊர்களிலுமுள்ள 13–15ஆம் நூற்றாண்டு காலக் கல்வெட்டுக்களில் காணப்படும் நிசதராஜன் என்ற அதிகாரியைப்பற்றியும் இவர்கள் பிற்காலச் சோழ பாண்டியர்களின் கீழ் அரசியல் அதிகாரிகளாக இருந்ததையும் கல்வெட்டுக்கள் மூலம் விவரிக்கிறது.

3. ஜெ. இராஜாமுகமது– *செப்பேடுகளில் கடல் வாணிபச் செய்திகள்.* 17,18 ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பியருடன் கொண்டிருந்த கடல் வாணிகத் தொடர்பினை செப்பேடுகள் மூலம் குறிப்பாக சேதுபதி மன்னர்கள் வெளியிட்ட செப்பேடுகள் முலம் ஆய்வு செய்கிறது.

3. பு. சந்திரசேகரன் – *பிற்கால பாண்டியர் அரசு.* பிற்காலப் பாண்டியர்கள் வெளியிட்ட கல்வெட்டுகள் மூலம் அரசிற்கும் குடிமக்களுக்குமிடையே காணப்படுகின்ற அரசுதொடர்பான உறவுகளை கூறுகிறது.

4. க.ஆ. திருஞானசம்பந்தம் – *இராமடங்கா.* இராமடங்கா என்பது பட்டாபிஷேக இராமர். சீதை, இலட்சுமணர், அனுமர் உருவங்கள் பொறிக்கப்பட்ட பதக்கம் ஆகும். இது தொடர்பான முதல் ஆதாரம் கி.பி.1318 ஆம் ஆண்டு ''திரவ்விய பரீக்ஷா'' என்ற நூலில் காணப்படுகிறது. இப்பதக்கத்தின் எடை, அச்சடிப்புமுறை, உலோகம், வடிவம் ஆகியவற்றைக்கொண்டு இதன் முக்கியத்துவத்தை இக்கட்டுரை விளக்குகிறது.

5. நாக. கணேசன் – *காவேரிக்கரையில் வணிகக் குழுக்கல்வெட்டுகள்.* அண்மையில் கரூருக்கு அருகில் காவேரிக்கரை வழியே சென்ற பெருவழிகளில் கிடைத்த வணிகக்குழுக்கள், குறிப்பாக ஐநூற்றுவர் கல்வெட்டுக்களைப் பற்றி இக்கட்டுரை கூறிகிறது.

6. க. பன்னீர்ச் செல்வம் - *மேற்கா நாட்டுப் பெயராய்வு.*

*7. சுகவன முருகன் - *பெண்ணைக்கரையில் சிந்து காசு.*

**அமர்வு: 5**

தலைவர் : முனைவர் ஜி. சேதுராமன். நாள் 20.8.2000 நேரம் 14.00–16.00

1. ப.புஷ்பரட்ணம் - *இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் மருமகனைக் குறிக்கும் உறவுப் பெயர்கள் ஒருமொழியியல் பார்வை.* இலங்கையில் கிடைத்துள்ள 2000க்கும் மேற்பட்ட பிராமி எழுத்துப்பொறிப்புக்கொண்ட கல்வெட்டுக்களில் வரும் மருமக, பெருமக என்ற சொற்றொடர்களுக்கிடையே இழையோடி இருக்கும் உறவுகளைப் பற்றி இக்கட்டுரை கூறுகிறது.

2. செ. இராசு- *கொங்குநாட்டில் புதிய கல்வெட்டுக்கள்.* கொங்குநாட்டில் கொடிவேரி, சதுமுகை, கூத்தம் பூண்டி போன்ற இடங்களில் கிடைத்தக் கல்வெட்டுக்களைக் கொண்டு கொங்குநாட்டு வரலாற்றுச் செய்திகளை இக்கட்டுரை விளக்குகிறது.

*3. கோ. விஜய வேணுகோபால் - *திருவரசிலி ஆளுடையார் கோயில் கல்வெட்டுகள்.*

4. வில்லியனூர் நா. வேங்கடேசன் - *புதிய கல்வெட்டுக்கள்.* விழுப்புரம் மாவட்டம் ஆழியூர் ஐயனார் கோயிலில் கிடைத்த கல்வெட்டுக்களைப் பற்றி விளக்குகிறது.

**அமர்வு: 6**

தலைவர் : திரு. சு. இராசவேலு. நாள் 20.8.2000 நேரம் 16.00–17.00

*1. சுகவன முருகன் - *15 ஆம் நூற்றாண்டு கன்னட ஓவியக் கல்வெட்டுக்கள்.*

**கா. ராஜன், தஞ்சாவூர்.**

---

* உடுக்குறியிட்ட கட்டுரையின் திருத்தப்பட்ட வடிவம் இவ்விதழில் வெளியிடப்பட்டுள்ளது

# கட்டுரையாளர்கள்

*திரு. ஆறுமுக சீதாராமன்,*
*12, ராஜராஜன்நகர்,*
*மானோஜிபட்டி (தெற்கு)*
*தஞ்சாவூர்.*

முனைவர். ச. இரவி,
தமிழ் விரிவுரையாளர் பூ.சா.கோ.
கலை அறிவியல் கல்லூரி
கோயம்பத்தூர் – 641 014.

முனைவர் சு. இராசகோபால்,
ராஜாஜி இல்லம்,
8, முதல் தெரு,
வெங்கடேஷ்வரா நகர்,
அடையாறு, சென்னை–600 020.

திரு சு. இராசவேலு,
முதுநிலைக் கல்வெட்டாய்வாளர்,
தென்மண்டலக் கல்வெட்டியல்
பிரிவு, இந்திய தொல்லியல்
அளவீட்டுத்துறை, கோட்டை,
சென்னை – 600 009.

முனைவர் செ. இராசு,
கல்வெட்டு மற்றும் தொல்லியல்
துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர் – 613 005.

திரு. கரு. இராசேந்திரன்,
ஆசிரியர்,
மேலப்பனையூர் அ.நி.,
விராச்சிலை வழி – 622 420.

பொ. இராசேந்திரன்,
கல்வெட்டாய்வாளர்,
த.அரசு தொல்லியல்துறை,
திருமலை நாயக்கர் அரண்மனை
மதுரை – 625 001.

திரு. சீ. இலட்சுமணன்,
உலகத்தமிழ்க் கல்வி இயக்கம்
தமிழூர்,
அடைக்கலப்பட்டணம்,
திருநெல்வேலி – 627 808.

திரு. க. ஈஸ்வரன்,
தொல்லியல் துறை,
சி.பி.டி. வளாகம்,
தரமணி, சென்னை – 600 113.

திரு. கோ. உத்திராடம்,
ஆசியவியல் கழகம்,
செம்மணஞ்சேரி,
சென்னை – 600 119

திரு. முத்து. எத்திராசன்,
128, காமராஜர் குடியிருப்பு,
தெற்கு உஸ்மான் சாலை,
தியாகராஜநகர்,
சென்னை – 600 017.

முனைவர். ஏ. ஏகாம்பரநாதன்,
தொல் வரலாறு–தொல்லியல் துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை.

திரு. சு. கணேசன்,
மதுரை.

திரு. நாக. கணேசன்,
காப்பாட்சியர்,
தொல்லியல்துறை அகழ்வைப்பகம்,
ஜவஹர்பஜார்,
கரூர் – 639 001.

திரு. நடன. காசிநாதன்,
136, 5வது தெரு, மல்லீஸ்வரிநகர்,
சேலையூர்,
சென்னை ; 600 073.

திரு. ம. காந்தி,
காப்பாட்சியர்,
அரசு அருங்காட்சியகம், கோட்டை,
வேலூர்.

திரு ச. கிருஷ்ணமூர்த்தி,
தொல்லியல் அலுவலர்,
த. அரசு தொல்லியல்துறை,
ஓ. எஸ். தீன் லாட்ஜ்,
சிதம்பரம்-608 001.

திரு. கோ. கிருஷ்ணமூர்த்தி,
அனந்தபுரம்.

திரு. தே. கோபாலன்,
தொல்லியல் அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலக
வளாகம்,
நாகர் கோயில்,

திரு ஓர்சே.மா.
கோபாலகிருஷ்ணன்,
பிரான்சு.

திரு. செ. கோவிந்தராஜ்,
காப்பாட்சியர்,
அரசு அருங்காட்சியகம்,
பாலி இல்லம், மைசூர் சாலை,
உதகமண்டலம் 643 001.

முனைவர். கி. இரா. சங்கரன்,
ஆய்வாளர், கல்வெட்டியல் துறை,
தமிழ்ப்பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் - 613 005.

முனைவர் கொடுமுடி சண்முகன்,
16, பி 2ஆம் நிழற்சாலை,
இந்திராநகர்,
அடையாறு,
சென்னை - 600 020.

முனைவர். த. சந்திரகுமார்
பேராசிரியர்,
சிற்பத்துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் - 613 005.

முனைவர். பு. சந்திரசேகரன்,
வரலாற்றுத்துறை,
ராஜுக்கள்கல்லூரி,
இராசபாளையம்

திரு. மா சந்திரமூர்த்தி,
பதிவு அலுவலர்,
த. அரசு தொல்லியல்துறை,
3வது குறுக்குத் தெரு,
சி.பி.டி. வளாகம், தரமணி,
சென்னை 600 113.

திரு. சொ. சந்திரவாணன்,
காப்பாட்சியர்,
தொல்லியல்துறை அகழ்வைப்பகம்,
சன்னதி தெரு,
குற்றாலம்.

திரு. சொ. சாந்தலிங்கம்,
தொல்லியல் அலுவலர்,
திருமலை நாயக்கர் அரண்மனை,
மதுரை - 625 001.

திரு. சுகவனமுருகன்,
பெண்ணையாறு தொல்லியல் சங்கம்,
காவேரிப்பட்டிணம் - 635 112.

முனைவர் சு. சுவாமிநாதன்,
உதவி கல்வெட்டியல்
கண்காணிப்பாளர்,
இயக்குநர் (கல்வெட்டியல்)
அலுவலகம்,இந்தியத் தொல்லியல்
அளவீட்டுத்துறை,
மைசூர் - 570 005.

முனைவர் மா. செந்தில்
செல்வக்குமரன்,
தொல்லியல் அலுவலர்,
த.அரசு தொல்லியல்துறை,
பாளையங்கோட்டை

முனைவர். வி. செல்வக்குமார்,
ஆய்வாளர்,
தொல்லியல் துறை,
தெக்கணக் கல்லூரி,
புணெ – 410 006.

திரு. ச.செல்வராஜ்,
தொல்லியல் அலுவலர்,
த. அரசு தொல்லியல் துறை,
தருமபுரி.

திரு. த. த. தவசி முத்து,
ஓவியர்,
36, பூவரசூர் மெயின் ரோடு,
ஆறுமுகநேரி – 628 202.

திரு. இல. தியாகராஜன்,
பேராசிரியர்,
வரலாற்றுத்துறை,
அரசு கலைக் கல்லூரி,
அரியலூர் – 621 704.

திரு. வெ. இரா. துரைசாமி,
வெல்லக்கல்பட்டி,
நாமகிரிப்பேட்டை வழி,
இராசிபுரம்வட்டம்,
நாமக்கல்மாவட்டம் – 637 406.

திரு. ஆ. துரைரங்கம்,
தேர்வுநிலை விரிவுரையாளர்,
தாகூர் கலைக் கல்லூரி,
புதுச்சேரி.

திரு. து. துளசிராமன்,
காப்பாட்சியர்,
தொல்லியல்துறை
அகழ்வைப்பகம்,
ஆர்க்காடு – 632 503.

திரு. செந்தீ. நடராஜன்,
நாகர் கோயில்.

முனைவர். ஆ. பத்மாவதி,
கல்வெட்டாய்வாளர்,
தொல்லியல்துறை,
சி.பி.டி. வளாகம்,
சென்னை – 113.

புலவர் அ. பழனியப்பன்,
95, பழனியாண்டவர் கோயில் தெரு,
சம்பை – 638 312.

திரு க. பன்னீர்செல்வம்,
உதவி கல்வெட்டாய்வாளர்,
இயக்குநர் (கல்வெட்டியல்)
அலுவலகம், இந்தியத் தொல்லியல்
அளவீட்டுத் துறை,
மைசூர் – 570 005.

செல்வி. மா. பவாணி,
ஆய்வாளர்,
கல்வெட்டியல், தொல்லியல்துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் – 613 005.

முனைவர். ப. தெ. பாலாஜி
தொல்வரலாறு–தொல்லியல் துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை.

திரு ப. புஷ்பரட்ணம்,
வரலாற்றுத் துறை,
யாழ்பானப் பல்கலைக் கழகம்,
இலங்கை.

திரு. ப. பூபாலன்,
9, பாட்டைத் தெரு,
நவல்பூர்,
இராணிப்பேட்டை - 632 402.

முனைவர். வி. மாணிக்கம்,
எச்.2,வீட்டு வசதிவாரியக் குடியிருப்பு,
சத்ய மூர்த்தி சாலை,
புதுக்கோட்டை - 622 001.

திரு. ஐ. ராமசாமி,
இக்கரை போளுவாம்பட்டி,
கொண்டாமுத்தூர் வழி
கோவை - 641 109.

முனைவர். கா. ராஜன்,
இணைப் பேராசிரியர்,
கல்வெட்டியல் - தொல்லியல் துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் - 613 005.

திரு. வெ. ராஜு,
ஓவியர்,
18, வஞ்சியம்மன் கோயில் தெரு,
கரூர் - 639 001.

முனைவர். நா. வள்ளி,
பேராசிரியை,
இராமசாமி தமிழ்க் கல்லூரி,
காரைக்குடி.

முனைவர். கோ. விசயவேணு
கோபால்,
வரலாற்றுத்துறை,
பிரெஞ்சு இந்திய பண்பாட்டுக் கழகம்,
புதுச்சேரி.

திரு. சி. வீரராகவன்,
66, முத்துவேல் லே அவுட்,
கே.கே. சாலை,
விழுப்புரம் - 605 606.

திரு ப. வெங்கடேசன்,
3/178, கம்பன் தெரு,
பெல்லியப்பா நகர்,
வாலாஜாப் பேட்டை - 632 513.

முனைவர். வெ. வேதாசலம்,
கல்வெட்டாய்வாளர்,
திருமலை நாயக்கர் அரண்மனை,
மதுரை - 625 001.

திரு. பா. ஜெயக்குமார்,
கல்வெட்டியல்துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் - 613 005.

திரு. கி. ஸ்ரீதரன்,
9ஏ,மேல் அடையவிளஞ்சான்வீதி,
திருவரங்கம்,
திருச்சிராப்பள்ளி.

தமிழகத் தொல்லியல் கழகம்
(கணக்கு தணிக்கை அறிக்கை)

## TAMIL NADU ARCHEAOLOGICAL SOCIETY, THANJAVUR

### Receipts and Payments Accounts for the Year Ended 31.03.2001

| | | | |
|---|---|---|---|
| To Opening Balance | | By Bank FD | 85,000.00 |
| " Cash in hand | 409.59 | " Printing | 20,540.00 |
| " Cash at Bank | | " Xerox stationery | 887.00 |
| Indian Bank Thanjavur | 728.00 | " Audit Fees | 450.00 |
| " SBI. Thanjavur | 22,097.82 | " Salary | 500.00 |
| " Bank FD | 75,000.00 | " Honorarium | 2,000.00 |
| " Sale of books | 3,195.00 | " Postage | 2,332.00 |
| " Membership Fees | 15,245.00 | " Bank Charges | 176.00 |
| " Donation | 10,000.00 | " Freight | 320.00 |
| " Interest | 11,315.50 | " General Expenses | 770.00 |
| | | Closing Balance | |
| | | SBI TNJ | 23,797.32 |
| | | Indian Bank, TNJ | 758.00 |
| | | Cash in hand | 460.59 |
| | 1,37,990.91 | | 1,37,990.91 |

**Balance Sheet as on 31.03.2001.**

| Liabilities | | Assets | |
|---|---|---|---|
| Fund Account | | | |
| OpeningBalance | 1,43,235.41 | Fixed Depost | 1,30,000.00 |
| Add: Excess of | | Cash at Bank | |
| Indian over | | Indian Bank | |
| Expenditure | 11,780.50 | Thanjavur | 758.00 |
| | | SBI, TNJ | 23,797.32 |
| | | Cash in hand | 460.59 |
| | 1,55,015.91 | | 1,55,015.91 |

**Income and Expenditure Account for the year ended 31.03.2001.**

| | | | |
|---|---|---|---|
| To Printing Charges | 20,540.00 | By Sales of books | 3,195.00 |
| " Xerox & Stationery | 887.00 | " Membership Fees | 15,245.00 |
| " Audit Fees | 450.00 | " Interest | 11,315.50 |
| " Salary | 500.00 | " Donation | 10,000.00 |
| " Honorarium | 2,000.00 | | |
| " Postage | 2,332.00 | | |
| " Transport (Freight) | 320.00 | | |
| " Bank Charges | 176.00 | | |
| " General Expenses | 770.00 | | |
| " Excess of Income over Expenditure | 11,780.50 | | |
| | 39,755.50 | | 39,755.50 |

(Sd) V. Ramasamy, B.Com., ACA
Chartered Accountant
1137, East Main Road,
Thanjavur.

# ஆவணம்

## தமிழகத் தொல்லியல் கழகத்தின் ஆண்டு இதழ்

ஆவணம் தமிழக வரலாற்றை வளப்படுத்தும் எல்லா அடிப்படைச் சான்றுகளையும் வெளியிடும் நோக்கம் கொண்டது. இதுவரை வெளியிடப்படாத கல்வெட்டுகள், செப்பேடுகள், ஓலைச்சுவடிகள், காகித ஆவணங்கள், தொல்பொருள்கள், காசுகள், கலைப்பொருள்கள் ஆகியவற்றைப் பற்றிய செய்திகளையும், கட்டுரைகளையும் ஏந்தி வருகிறது. இது தமிழக வரலாற்றில் ஈடுபாடுடைய யாவருடைய நூலகங்களுக்கும் இன்றியமையாத வரலாற்றுக் கருவூலம்.

| | |
|---|---|
| ஆவணம் 1,2 | இருப்பு இல்லை |
| ஆவணம் 3–11 | ரூ 100.00 (இதழ் ஒன்றுக்கு) |
| நொபொரு கராஷிமா, வரலாற்றுப் போக்கில் தென்னகச் சமூகம் (சோழர் காலம்) | ரூ 100.00 |

தமிழகத் தொல்லியல் கழக இதழ்களைப் பெற விழைவோர். சரியான தொகையை வரைவோலையாகவோ காசோலையாகவோ பொருளாளர், தமிழகத் தொல்லியல் கழகம் மே/பா. கல்வெட்டியல் துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், *613 005* என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். வரைவோலை, காசோலைகள், தமிழகத் தொல்லியல் கழகம் என்ற பெயரில் இருத்தல் வேண்டும் காசோலையாக இருந்தால் மேற்கண்ட தொகையுடன் ரூ *20*ஐச் சேர்த்து அனுப்பவும்

பிற தகவல்களுக்கு செயலர், தமிழகத் தொல்லியல் கழகம், மே/பா கல்வெட்டியல்துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் *613 005* என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

**உறுப்பினர் கட்டணம்**

தமிழகத் தொல்லியல் கழக வாழ்நாள் உறுப்பினர் கட்டணத்தை (ரூ. *600*) பொருளாளர், தமிழகத் தொல்லியல் கழகம், மே/பா. கல்வெட்டியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், *613 005* என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். காசோலை வரைவோலைகள், தமிழகத் தொல்லியல் கழகம் என்ற பெயரில் இருத்தல் வேண்டும்.

For Further Information:

Secretary, Tamilzakat Tolliyal Kazakam,
(Tamil Nadu Archaeological Society),
C/o, Department of Epigraphy and Archaeology,
Tamil University, Thanjavur - 613 005.